[illegible]

[illegible]

892N.MP3
M83
11712

...WODYAR BAHADUR'S HINDU THEATRE
BANGALORE.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

All rights Reserved.

[illegible]

DEDICATED

TO

HIS HIGHNESS

**CHAMARAJENDRA WUDAYAR BAHADUR**

*THE MAHA RAJAH OF MYSORE.*

By H. H. Most Obedient and Humble Servant

THE AUTHOR

# விளம்பரம்.

இதனை யாவருக்கும் அறிவிப்பதியாதெனில், இப்புத்தகம் வேண்டியவர்கள் பெங்களூர் தண்டில் ஹிந்து இராஜசேகர வீதியிலிருக்கும் வா-பாலகிருஷ்ண முதலியார் அவர்களிடத்திலும், நாராயணபிள்ளை வீதியிலிருக்கும் வே-லோ-திருவரங்க முதலியார் அவர்களிடத்திலும், சென்னப்பட்டணத்தைச்சார்ந்த புதுப்பாக்கத்தில் பெருமாள்முதலியார் வீதியில் 34-36-வது தெவிலக்கமுள்ள கிரகத்திலிருக்கும் ஆ-சு-பாலசுந்தர முதலியாரிடத்திலும் இதனடியிற்கண்ட விலைக்கு முன் பணம் (மணி ஆர்டர்) அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

| | ரு. | அ. | பை. |
|---|---|---|---|
| புத்தகம் க-க்கு விலை ... | 2 | 0 | 0 |
| டிo தபால் செலவு ... | 0 | 4 | 0 |

☞ *N. B.* பத்து புஸ்தகத்திற்கு மேல்பட்டு வாங்குகிறவர்கள் மேற்கண்டவர்களுக்கு எழுதி டிஸ்கவுண்டு பெற்றுக்கொள்ளலாம்.

சிவமயம்.

# முகவுரை.

(க) இவ்வரிச்சந்திரன் சரிதையை யிதற்குமுன் னனேகமகா கவிஞர்களாற் பலவாறெனினாடகங்களாயும், விலாசங்களாயும், வாசாப்புகளாயுங், கீர்த்தனங்களாயு மியற்றியிருக்க வடியேனச் சரித்திரத்தையே யோர்விலாசமா யியற்றியகருத்தியாதெனின்.

(உ) தற்காலத்திலனேகசங்கீத வித்வாம்சர்கள் பற்பலநூதன விராகதாள மடங்கியவர்ணமெட்டுகளை யேற்படுத்தியவைகளுக்குரிய தருக்களைப்பாடிக்-குறவஞ்சி-டம்பாச்சாரி-மார்க்கண்டன்- முதலான நாடகங்களினமைத்திருப்பதைப் பாடவுமாடவுங் கண்டு கேட்டபிரஜைகளில்யான் மேற்காட்டிய புண்ணியசரிதையி னாடகத்திற் கேவலம் விருப்பமற்றவர்களா யிருப்பதைக்கண்டுங் கேள்விப்பட்டு மிப்பூமியின்கண் ஜனித்த மானிடரிருக்கத்தக்க நிலை, மாதர்க ளநுட்டிக்கத்தக்க நெறி, மைந்தர்களறியத்தக்கவிதி, அடிமைகளெஜமான் விடயத்தினடந்துக்கொள்ளத்தக்க வொழுக்கத்தையும் புகட்டவத்தாட்சியா யிருக்குமிச்சரிதையையு மவ்வாறே பலருங்கருதும்பொருட்டு, தற்கால வுசிதமானவிராகதாளமுள்ள வர்ணமெட்டுகளிற்றருக்கள்-ஓரடிகள்-பதங்கள் ஜாவளிகள்-கியால்-கெத்-நாமக்-கிருதி - கஜல்-ரங்-தில்லானா-டப்பா-லாவணி-கோட்டின்னம்பலவாறுன்னவைகளையமைத்துஞ்சரித்திரத்தைக்குறைவின்றிக் கோர்வையாய்க் காட்டும்பொருட்டு காவியாதிகளிற் செப்பியவாறுடன் சமையோசிதங்களுங் கொள்ளும்படியா யவசியமானசங்கதிகளைப் புதிதாயக்கங்கிணைத்து தொடர்ச்சியாகவுங் கேட்பவர்களுக்கினிப்பாகவு மிதுவுண்மையான சரித்திர மென்பதற்குகந்த பாவனையாயு மிதமாபோர்விளைவத்தக்க சந்தேகங்களைக்களைந்து மிக்காலத்திற் கநுபொருந்திய வாக்கிலேயே துணைத்தனத்தார்களி னதிமேன்பாடான முயற்சியினாற்றிளைதினே யபிவிர்த்தியாகிக் கொண்டேவரும்பலபாலியா பாடசாலையிற் கல்விகற்கு மலநுதற்றுணர்ந்தசி

த்தேயமாதர்க ளிவ்விலாசத்தை வாசிக்கின் றங்களுக்குரிய வொழுங், குடை., நகைகளும், கற்பன்றி நிலவலவென்று அச்சற் பென்பதிவ்வாறுண்டென்று மதைய நுட்டிப்பதால்வரும் பயனிவ்விதமான தெனக் குறிப்பாய்க்காட்டப்பட்டிருப்பதா லிதைவாசித்துணரும் பெண்கணுணமடமச்சம் பயிர்ப்பெனு நான்கையுமடைந்து மங்கையர்க்குரியவநுகுணங்களையும் பொருந்தித்தங்களை மணந்த கணவர்களினெண்ணத்தில்லறமேநல்லறமெனப் புகட்டவரி ளுங்கிளைகட்குச் சற்றேனும் வாழ்விலுந்தாழ்விலுமேறு மாறுகடவாமற் பத்தாவிற்கேற்றவர்களாயிருந்து பதிவிரதையெனும் பாவையற்குரிய பட்டப்பெயரையடைவதற் கியாதொரு சந்தேகங்களிராதென முழுநம்பிக்கை யுடையவனாயிதிற் சந்திரமதிபாகத்தைவிரிவாகக்காட்டி யிருக்கின்றேன்.

(௩) அன்றியுமிக் கிரந்தத்தைவாசிக்குமலது கேட்குமாதர்கட்கிதின்பய னெளி[illegible]ரியக்கூடும்பொருட்டா யென்னாற் கூடிய பிரயாசையிட்டு வழக்கச[illegible]ற்களாலேயும் வெண் மொழிகளாலேயுமியற்றலாயினேன்.

(௪) இக்கற்பெனும் நிலையைப்பற்றி வனேகபுத்திவான்கள்பலவாறுன கிரந்தங்களிற்பேசியிருக்க வடியேனிவ்விலாசத்திலதைவிவரிக்கமுயன்ற தேதெனின் மாதர்களிலறிவிற் சிறந்தவர்களு மறிவிற்குறைந்தவர்களுந் தாங்கள் வசிக்கும் நாட்டிலிவ் விலாசமாடுவதாய்த்தெரிவர்களாயின் றங்கள் வீண்பொழுதைச் சரித்திரக்கேள்வியிற்போக்கக்கருதி பெரும்பாலும் வருவதியல்பாயிருப்பதா னவ்விடத்திது மக்கற்புவிதியை விவரித்துப்பேசி யதிகப்பிரயோசனத்தை விளைவிக்குமெனத்துணிந்ததேயாம்.

(௫) அவ்வாறேயிந்தப்படிக்கு மெனதன்புக்குரிய நேசர்கட்குக்குறைவிலாக குணங்களையீந்து குடிவாழ்க்கையினெறிகளிற் போந்து குருவருணடைந்து ஞானபான பூஜாவிதிகளிற்சிறந்து யில்லாளைப்போக்க வல்லாண்மையபேதவோர்களி னேசத்தைவிட்டுப் புலைபுன்கொலையென்பவைகளைச்சுட்டு வினையால்வந்தவுடலின்ப துன்பங்களுக்கிருப்பிடமெனவறிந் தெக்காலுமினு மவனருட்கோரியவன்றெழில்புரிந் தவனடிபெற்றினு மநுக்கிரகமடையச்செயுங் கருவி நன்னிலை



யென்று மன்னிலையே சத்தியஞ்சத்தியமென்பதுண்மை யவ்வுண்மையிலொழுகுதலுற்ற மத்திலுற்றமமென் றுளங்கனிந்து சீலத்தொழுகிச் சீரடைவரெனவெண்ணி யரிச்சந்திரன்பாகத்தை விரிவித்திருக்கின்றேனன்றியுந்தங்களைப்போஷிக்கு மெஜமான்களின் சிரிலுஞ்சிறுமையிலுமொற்றுடன்பட்டொடுங்கி யிருத்த லதிமேன்மையைத் தருமெனநாட்டவே மந்திரிபாகத்தை விரிவாய்க்காட்டியிருக்கின்றேன்.

(௬) தவிர விப்புவியின்மாந்தர்களடையும் பொருளிரண்டேயாகுமதாவன செல்வப்பொருள் கல்விப்பொருள் செல்வப்பொருணடைந்தோர் சிலவிடாமற் சிறுமையையருந்தியதைப்போஷித்து வரினவாளுக்குக்கீழ்ப்பட்டவர்களால் முன்பிற்பூஷிகளையும் பின்றூஷணைவருவதியல்பாயிருக்கின்றது. கல்விப்பொருணடைந்தோற்கோவெனினிங்குமவ ரெங்கேகினுஞ் சிறப்படைவதுட னெங்கும் பெருமானுக் குகந்தவர்களா யிருப்பரவர்கற்றகல்வியைச் சிலவிடச் சிலவிடப் பெருமையுவிருத்தியுமடைவர். பூர்வபுண்ணியத்தா லிவையிரண்டு மடைந்திருக்குமெனதன்பர்க ளறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடியெனும், நாற்குணங்களைக்கைக்கொண்டு தன்னைப்போ லிதரரையும் பாவித்து துற்குணங்களாகிய பேருண்டி, நெடுந்துயில், சோம்பல். நீதிவழுவல், ஒழுக்கம் விடுதல், வஞ்சம், மாதி, டம்பமுதலானவைகட்குத் தாயகமாயியத்தானெனு மாங்காரத்தைச் சற்றேனுந்தலைகாட்டாம னொடிக்கித்தருமங்கல்விதானம் ஞான மருள்மோனமுதலானவைகளை யளிக்கத்தக்க நற்றுணையாகிய சாந்தமெனின் ஒடுக்கமுயர் குணமெனும் பழமொழிக்கிணங்கத்தாழ்மையைக் கைக்கொண்டிங்குமங்கும் புகழுடையவர்களாயிருப்பரெனக்கருதி வதிட்டன்பாகத்தையுந் தங்களுக்குப் பூர்வகன்மத்தானுதிக்குமவ்வாங்காரத்தினாற் பெருமையடைவோமெனப்பாராட்டிவருபவற்கிப் பூமியின்கண்பெருத்தவபகீர்த்தியுங் கவலைதைக் குறைவுஞ்சித்திக்கச் செயுமெனச்சுட்டிக்காட்ட விஸ்வாமித்திரன்பாகத்தையும் விரிவாய்ச்செய்பியிருக்கின்றேன்.

(௭) இவ்விலாசத்தை யெந்நாட்டி னவர்களாயினுஞ் சேர்ந்தன்றுட்டோரதியப் பிரசாரஞ்செய்விக்கக்கூடுமக்கூட்டத்திற்குமொரேபொதுப்பெயராய்விளங்கக்கருதி விநோதசபையெனவமைக்கலாயினே னிப்பெயரை குணவான்களியாவரு மங்கீகரிப்பதுட னிக்கிரந்தத்திலேதாகினுந் திருத்தத்தக்க பாகம்பதமுதலானவைகளைக்காணும் விவேகவான்களன்புகூர்ந் தடியேனுக்கறிவிக்கி னவ்வாறே யிரண்டாம்பதிப்பிற்றிருத்தப்பூர்ண வெண்ணமுடையவனாயிருக்கின்றேன்.

(அ) சென்ற ௧௮௱௮௰ வருடம் பெங்களூரில்ஸ்தாபிக்கப்பட்டவிநோத சபையை மைசூர்மகாராஜரவர்களுடைய வநுமதாஸ்ரயத்தின்பேரி லுத்திரவடைந்து H. H. The. Maha Rajah Chamarajandra Woodyar Bahadoor's HinduTheatre யெனப்பட்டப் பெயரிட்டழைக்கப்பட்டிருக்கின்றது,

(௯) இவ்விலாசத்திலடங்கிய பலவிதநூதன வர்ணமெட்டமைக்க வெனைத்தூண்டின நம்பொருந்திய திருவாவினன்குடி-சுப்பராயதேசிகருக்கும்,மவைகளுக்குச் சமயோசிதமான விராகதாளங்களமைப்பதி லெனக்குதவியாயிருந்த - ம-௱-௱-ஸ்ரீ. சென்னை தாயுமான் முதலியார். மு - சுப்பராயாசாரி யவர்கட்கு முதிய வா-ஆம் வார்முதலியா ரிவர்களுக்கும் நான்வந்தனமுடையவனாயிருக்கின்றேன்.

## ஆசிரிய - விருத்தம்.

பார்புகழ்வண்கல்யாணபுரியதனிலமைந்திலகு
பாக்குபெறுவிநோதசபையிற்
பலவிசையிற்பற்பாவிசைந்தநற்குணமுறும்
பரிதிமரபரிச்சந்திரன்
சீர்மருவிஞ்சரிதைபலர்கேட்கவன்பினிலவச்
செவிசுகற்றினிமையோடு
செப்பியுருமாறிநவரசமிணைத்துமவை
சிந்தைமகிழவாற்நடித்த
பேர்வளருமாறிகடனிர்மையுநிறைந்து
பெருகிடுஞ்சென்னைவாழ்ந்து
பிறைருடிதன்னருட்கொண்டசற்குணமார்த்த
பெயர்கொண்முனியப்பனீன்ற
தேரறிவமைந்திடநடராஜனைப்பணியுந்
திவ்யகவிசுப்பிரராயன்
தெற்கொடுவடக்கினுங்கீழ்மேலென்றுமெலையுந்
திகழ்பாவலாநியனரோ.

தி - அப்பாவுப்பிள்ளை.



## ம-௱-௱-ஸ்ரீ, பூரசை, இயற்றமிழாசிரியர் அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்களியற்றிய

### நிலைமண்டில-ஆசிரியப்பா.

முரலிசைவண்டின மூசும்பொதும்பர்ப்
பாங்கரொப்புடையினும் பன்மணங்கமழ
அஞ்சிறைப்பைங்கிளி யகங்களிதுளும்பப்
பேட்டுடனினிதிருஉம் யார்ப்பிணைநோக்கா
இமையாநாட்ட மிமைக்குந்தோகை
பச்சொளிகதுவ விரித்துப்பசுமயில்
நாடகநவிற்றப் பேடைமஞ்ஞையுமுன்
மேகமேற்செறிவின் விதானித்தமைய
பொன்னியம்பெருக்கெழு மின்னியக்கறங்க
வார்திணைதண்பனி நீருறைவழங்கும்
நீளிடையந்தி நெடிதுபயக்கும்
சோணாட்டகத்துத் தங்கவானளவும்
சிகரநெடுவரைத் திருக்கோயில்கொண்டு
வீற்றிருந்துமையொடு போற்றுநர்க்கருளும்
தாயுமான தயாநிதியிறைகொளும்
சிராப்பளியென்னுந் திருத்தகுநகரினன்
அருந்தவப்பயனென வமைதரவுதித்த
செந்தமிழ்ப்புலமை முந்தியதிறலோன்
முத்துச்சாமி யுத்தமனினிது
வாய்மையீதெனவு மற்றதைக்காப்ப
தெங்ஙனமென்னி னிங்ஙனமெனவும்
அன்னதைக்காத்த வரசருண்மிக்க
சீரியனின்றே னெனவுந்தேற்றிய
கோசலநாட்டுக் கொற்றவர்க்குரியது
பகைஞரால்வெறற் கரிதெனும்பரிசால்
அயோத்தியென்னப் பேர்பெறுநகரில்
தன்குலமுதல்வ னென்றுணாசெஞ்சுடர்
இரவிபுனைய விருந்தழிபிருந்தாங்

காணைத்திகிரி யாண்டுஞ்செல்லக்
கோமுடிகவித்து மாநிலம்புரந்த
அரிச்சந்திரன்புக ழடைவுறுசரிதையின்
விவாககாண்ட மாதியாவிளம்பும்
தவாநிலைமுற்றுந் தனியாராய்ந்து
நாடகத்தமிழி னன்குறத்தொடுத்துப்
பண்ணுமிசையும் பலவியல்வண்ணமும்
நண்ணுகந்தருவ நன்னூலறிஞர்
முதலியோர்கேட்டுள முன்னினர்வியப்ப
நிலவுறவியற்றி நீடுலகுள்ளோர்
பலர்க்குமின்பு பதியப்பதித்து
கலியாவச்சி லெல்லினனென்ப
மேற்றிசையெந்நாட் டினுமேன்மைத்தெனச்
சாற்றுமாண்பு தணவரலமைத்த
சாலிவாகன தராபதியாசியல்
வேலியெனையா வளையுமிக்கோம்பும்
நலனிறையும்பதி நஞ்கண்டசன்
கருணையோவாத் திருவநீண்மாட
மைசூரன்பிய வரியளிகாமரம்
பாடிக்கூட்டுணைப் பயில்வுறுமதுமலர்
பொதுளியதண்ணிழற் பொங்கர்மீமிசைத்
திங்களுலாவும் பெங்குளூரகத்தே.

சென்னைச்சருவகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலவர்
ம-ள-ள-ஸ்ரீ, கோமளபுரம்.

## இராசகோபாலபிள்ளையவர்க ளியற்றிய

### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமறைசொன் முறைமைவழாத்திறத்தநின்று
 செய்யவழன் மும்மையுநன்கினிதினோம்பும்
தெருமால்செய்சிறுகலியின் றிறலெருக்குந்
 தெய்வவாலறிஞர்தொகுசிறப்பிற்றுகிச்
செருமலிவெங்கோடையெனுந்தெவ்வுப்பாறத்
 தெழிகுரற்காவிரிப்பாங்கர்ச்செலவிற்றுகிப்



பருவாலெலம்மருக்குமந்திறப்படர்தலில்லாப்
 பண்புடைத்தாந்திரிசிரமாபதியின்மேலான்.

நிலவுகால்வெண்முத்தநிரையினுன்று
 நீடுதிரைக்கங்கைகுலக்கொடிதைந்தாலச்
சுலவுநீண்மனமொருக்கித்துய்துறந்துந்
 தொகுமாதவப்பேறுத்தோன்றுதோன்றல்
பலவுமாமுறைப்பதெனுபானிலாமே
 பயன்படுநல்லொழுக்கமெலாம்பரிவுயதற்கண்
செலவுமாண்குணமுடையான்றென்சொலாதிச்
 செப்புபலமொழிப்புலமைசிறந்தான்மாதோ.

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எழுவனையதிணிதோளினிதழ்விரிசெங்குவளையந்தா
 ரிலம்பகத்தான்
தொழுதகையசதுமறைபிறெண்மூராறுந்தொல்சமயந்
 துறந்தபொல்லா
இழுதையரெண்கடகரியுள்வெரீஇபிரியல்போக்கிமதர்த்
 தெழுவெஞ்சியம்
முழுதுணர்மெய்யறிஞரடிமுளரிமுடி
 மிசைபுனைமுதறிஞனம்மா.

கடலைபுரிநவிலமுதநாண்முகக்குப்புலவா
 னல்லோரின்னல்
விடலையுறப்பொய்ம்மைநிலைபுடைபெயரமெய்ம்மைநிலை
 விறயாணர்த்
தொடலைபுரிசிறுமியருந்தோலாதகற்பிதெனத்
 துனைந்துதேறக்
கடலையில்பெருமுனைவன்கடுப்பவருநுண்ணுணர்வு
 கதழ்ந்தவண்ணல்.

மொய்த்தகனிபெருஞ்சீர்த்திமுத்துச்சாமிப்பெயர்கொண்
டுமகக்கோன்பார்
கைத்தலத்தநெல்லிருங்கனியெனவுண்மைநிலை
காணுமாறு
மெய்த்தகவைமுதிர்கிள்ளிவிகலமின்றிவிழுப்பநடை
மேய்நடப்ப
வித்தகனல்லரிச்சந்திரபுராணமதைவிலாசமதாய்
விரித்தான்மன்னே.

ம-ா-ா-ஸ்ரீ, காஞ்சீபுரம், வித்துவான்

## இராமசாமிநாயுடவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொலங்குலவுசிரபுரவாழ்வுவந்தவருணாசலப்பேர்ப்
புனிதன்மேனாள்
சலங்குலவுமைந்தடக்கியுஞற்றுதவப்பயனெனவித்
தானியேத்த
நலங்குலவுமொருமகவாய்வந்தமுத்துச்சாமியெனு
நவைதீர்நாமன்
புலங்குலவுதமிழ்மும்மைச்சலதிநிலைகண்டுணர்ந்த
புலவரேறே.

வாய்மைமொழிக்கிலக்காகவயங்கரிச்சந்திரன்சரிதை
மண்மீதென்றும்
தூய்மைதிகழ்விலாசமதாநிலவுறச்செய்திவணடைந்த
துகளில்சீர்த்திச்
செய்மையினையேத்தெடுத்தலெம்மனோர்க்கிவைவதன்றாற்
றேரிற்பன்னூல்
ஆய்மையிலாக்காட்சியினல்லறிஞர்புகழ்குறுமுனிவற்
கன்றியாதோ.



பெங்களூர், சதுர்வேதசித்தாந்த சபா பாடசாலை

ம-ா-ா-ஸ்ரீ, தமிழ்த்தலைமைப்புலமை

திரு - அடியண்ணாமலை

## முருகப்பிள்ளையவர்களியற்றிய

### நிலைமண்டில ஆசிரியப்பா.

திகழ்பெறுகமலா - சனந்திறைசிருட்டி
நிகழுறுமாநில - நீள்பெரும்வைப்பின்
மநுமுறையானே - மன்னுயிரெல்லாம்
தனிநிலைபெற்றுத் - தான்றழைத்தெங்குக்
கண்ணுமாவியுங் - காதலித்தோங்க
விண்ணவர்முனிவர் - வியந்திடவேள்விக
ணெண்ணிலாதென்ன - மாணவியற்றி
கண்ணகன்ஞாலங் - காதல்கொண்டோங்க
அறம்பொருளென்கு - மருந்துணையாகத்
திறமொடுசெங்கோ - றிசைகளிற்செல்லப்
பருவரனீக்கிப் - பாதுகாத்தன்மைப்
பருமொழியானே - பரிந்துலகேற
நல்வளம்பெருகு - நாடெனுமயோத்தி
பல்வகைப்படையுடை - பகரிச்சந்திர
னாடகமதனை - நாவலரனேகர்
பாடகம்பெறமுன் - பகர்ந்தனர்நிற்க
கனமருவினைதச் - சபையுளார்கேட்கவிற்
பனமுடனுள்ளம் - பரிந்தினிதாய்ந்து
கற்றவரனேகர் - கலாதவரனேகர்

இற்றிறமுடைய - வாடவர்மடவார்
சித்தமதுணர்ந்து - சிறுநெறிசெல்லா
நித்தியமொன்றே - நிணைறித்துணையா
வில்லறந்துறவற - விருவகையறமா
நல்லறமனைத்து - நாடொறுநடக்க
பழையனகழிதலும் - புதியனபுகுதலும்
விழைவுறுவிதியால் - விளங்கிடவிவற்றை
புதியனவென்று - புகன்றிடார்பெரியோர்
விதியுளவென்றே - விரும்பிடத்தகுமிச்
சத்தியபாஷை - வரிச்சந்திரவிலாசம்
புத்தியாற்புகன்றவிப் - புலவனைப்புகலில்
தென்றிசைச்சோழர் - தன்குடைநீழற்
றன்றியசிராப்பளித் - தூய்பதியதநு
ளுழுதொழில்வேளா - ளுயர்குலத்துண்மை
வழுவிலாவருணை - சலத்தவப்புதல்வன்
சிறந்திடுஞ்சதுர்மறை - சித்தாந்தசபா
வுறழ்ந்திகழ்பள்ளியி லுணர்வுறக்கல்வியைப்
பயின்றனனுடிப் - பண்பினர்பலர்பா
னயந்திடுகேள்வியு - ளோடோறுஞ்சிறந்து
திருக்குடமூக்கிற் - சரவணமூர்த்திப்
பெருக்கிடுஞ்சைவத் - தேசிகப்பெரியோ
னன்மொழிகடவா - நற்றவச்சீடருண்
முன்மொழியாக - மொழிந்திடவல்லோன்
றிறலுடையப்பா - வெனும்பெயரன்றிப்
பெறுமுத்துச்சாமிப் - பெருந்தகையோனே.



பங்களூர் இந்துபாலிகாபாட்சாலை தலைமைப் புலமை
ம-ா-ா-ஸ்ரீ, தஞ்சை
அதிமதுரக்கவி
## துரைநாயகஞ்செட்டியாரவர்களியற்றிய
அறுசீர் ஆசிரியவிருத்தம்.

குளகம்.

செய்யகும்பகோணசரவணமூர்த்திச்சரண்பணிநற்
சீடனானேன்
வெய்யநெறியொன்றுமிலா தோங்குசைவமதமனுதி
விளங்குமேலோன்
துய்யவரநதிமாபோல்சிராப்பளியோனழல்வனாயோங்
சுகப்பேறுற்றோன்
உய்யவருட்சுதன்முத்துச் சாமியெனுமப்பாவு
வொப்பிலோன்மால்.
வியனுளகல்யாணபுர மோங்கிவளர்விநோதசபை
மேலோரன்பாய்
நயனுளமேயரிச்சந்திரன் சரிதைதமிழ்நாடகமாய்
நவின்றோர்முக்யப்
பயனுளதாய்சிறப்புளதாய் விளங்குசிலதீஞ்சரிதை
பகராதாலே
மயனுளதாயவைகளைநீ விரிவாகச்சேர்த்தமைத்து
வழுவிலாதே.
இன்புகொடுபலவிசையாய்ப் பலபாவாய்விளைவுவந்து
மிதயம்போல
முன்புகொடுகளிப்போடு பாடியருளெனவுரைக்க
மொழிந்தவிந்நூல்
பண்புகொடுபயிலவும்வாய் மணக்குதலையோர்க்குமல
பனுவலாய்ந்தோர்
அன்புகொடுவற்புறுத்தி நோக்கிவியப்பார்ந்துவிழி
யணைத்தாரம்மா.

## மைசூர் மஹாராஜாவை வாழ்த்துதல்.

தரு-இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

இராஜன் - மைசூர் - ராஜன்மஹா - ராஜன் - வாழ்கவே *
தேச - மதில் - மும்மாரிதான் - செழிக்க - வீழ்கவே *
கிஷ்ண - ராஜ - பூப - தியின் - கீர்த்தி - பொங்கவே *
அஷ்டலக்ஷ்மி - யர - சனு - ளன்பாய்த் - தங்கவே *
சாம - ராஜன் - புகழ் - கீர்த்தி - தரணி - பேசவே *
காம - ஜிவ - ழைகைக் - கண்டு - கண்கள் - கூசவே *
அறுகுணங்கள் - பெருகி - யெங்க - ளரசி - வாழ்கவே *
தரும - பத்னி - கெர்ப்ப - மது - தழைத்து - நீளகவே *
மக்கள் - பதி - னாறும் - பெற்று - மன்ன - னோங்கவே *
திக்கு - திக்கு - களிற் - கீர்த்தி - ஜெயமா - யோங்கவே *
கீர்த்தி - யானைக் - தனுய் - ராஜ - நீதி - தருகவே *
சத்தி - சிவ - சாமுண் - டியின் - றயைபெருகவே *
சத்ரு - பய - மின்றி - வேந்தன் - தரணி - காக்கவே *
மித்ரு - வாகி - பசவும் - வேங்கை - மேன்மை - நோக்கவே *
புஜ - பலமும் - நால் - வகையும் - பொருந்திவாழவே *
விஜய லக்ஷ்மி ஆட் - துட்டர் மெலிந்து தாழவே *
வானம் பூமி நீறு - முள்ள வரையில் ஆளவே *
தான மீயும் - மன்னன் கீர்த்தி தழைத்து நீளவே *
அந்த ணர்மு னிவரெக்ய மனைத்து மோங்கவே *
இந்த சாம ராஜன் புகழ் யெங்குந் தங்கவே *
காட்டி ஸ்மருங் குடிக ளுக்கே நலந் தருகவே *
மேட்டி சாம ராஜ பஹதூர் மேன்மைபெருகவே *
கரோ நிதி யெங்கள் ராஜன் கர்வம் பெருகவே *
விநோத சபை தழைக்க யன்பு மிகத் தருகவே *

---

சிவமயம்.

சத்தியபாஷா.

# அரிச்சந்திர விலாசம்.

### விநாயகர் துதி.

வெண்பா.

ஓராரிரவிகுலச் செம்மலரிச் சந்திரன்றன்
பேரார்சரித்திரத்தைப் பேசுதற்கே—ஏரார்
செஞ்சடையிற் கங்கையுடன் திங்களணி யெம்பெருமான்
கொஞ்சுமகி ழைங்கரனைக் கோரு.

தரு - இராகம், எமுனகல்யாணி. தாளம், ஆதி.

பல்லவி.

வேலாயுதன்முன்வந்த லோலா அருள்செய்பாலா.

அநுபல்லவி.

சீலா மூஷிகமேறுங் காலா சதங்கைகொஞ்சுஞ்
சிவமேயெனக்கருள் செயுமனோகரனே
அபயம்பயமெனை யாளைங்கரனே. (வே.)

சரணங்கள்.

வேதாகமமுறை விமலவிலயரி பூரண சுதி
நாதாஞானவிநோத சகலகலா காரண
வாதாயென்முன்வரப்போ காதா துதிக்கைகொளும்
பாதாவிமலர்கள் பணிசேவகனே
தாதாநின்னடி துதி காவலனே. (வே.)
ஏகாக்ஷரமுடி யிடையடிதங்கிய தேவனே-சர்வ
லோகாத்மமெலாந் துதியருளோங்கியபாவனே

நாகா வரமருள் தியாகா உனைப்பணிந்தேன்
நாகாபணிகிர் தாரணிபாகா
வாகாவல்லவை மகிழுறுபோகா. (வே.)

நிராயென்றுயரோடிட யின்றுடனியே-வாந்
தாராயிருவினை யகன்றிடவேவருவாயே
சேராய் நின்னன்பருடன் பாரா யருட்கண்ணாலே
காராய்திருமுத்து சுவாமியையினோ
வாராயவனுள காடியலோலா. (வே.)

## பரமன்துதி.

விருத்தம்.

ஆதியாய்ப்பரமாய்நேச ரன்பனுய்முடியின்மீதிற்
பாதியாங்திங்களோடு மகிரதிமேவத்தாங்கி
வேதியாயும்பரோற்ற வெண்விடையோங்கியெங்குஞ்
ஜோதியாயிலகுந்திவ்ய சுந்தரனைப்பணிவாய்நெஞ்சே.

## திருமால்துதி.

வெண்பா.

சங்குடனே சக்கரமுந் தாங்கிகதை கோதண்டம்
பங்கயனைத் தானளித்த பாவனுங் - துங்கமுகில்
வண்ணன் வைகுந்தன் மாய னெனைக்காத்த
கண்ணனடி யைத்தொழுதேன் காண்.

## முருகன்துதி.

வெண்பா.

வள்ளிதெய்வயானை வளர் விருபுறமும்
புள்ளிமயி லேறிவரும் புண்ணியனே - கள்ளி
பெற்றெடுத்தபாலா பெருமையுட னன்பர்கடம்
நற்றுயரம் போக்கமனாடு.

## உமையவள்துதி.

கலித்துறை.

சுந்தரிநீலி தாரந்தரிமாதவி துய்யவொளி
விந்தரிபார்வதி விமலிவாராகிவிரும்புதிரி



மந்தரிவாலையம் மாயாசொருபி மனோன்மணியாம்
பந்தந்துலக்கு முமையாள்பதத்தைப் பணிநெஞ்சமே.

## சரஸ்வதிதுதி.

விருத்தம்.

அயனதுதாலமேவு மம்பிகாமணியேதேவி
நயமுடன்வெண்பட்டாடை நாடுங்கமலநேத்ரி
ஜெயம்பெறச்சித்தர்யோகர் தினந்தினங்களிகொண்டாடுந்
தயவுறுவாணிபாதந் தாளிணைபணிகுவேனே.

## குருவணக்கம்.

விருந்தம்.

நன்மைதீதறியாக்காலே நாடியேயெனையடைந்து
உன்னியேகலைகளோது முத்தமனெழுத்தையீந்து
என்மனநாட்டுதற்கே யீதெனக்காட்டவந்த
இன்புறுசாவணைய னெழிலடியேற்றுவேனே.

## அரிச்சந்திரன் வணக்கம்.

விருத்தம்.

சத்தியம்வழுவுறாத தனியரிச்சந்திரனுரான்
பத்தியிலுயர்ந்தயோத்தி பாலித்தோன்தேவிபால
னத்தியதுயரைநீக்கி நற்கதியடைந்தோன்றன்னை
எத்திசையினிலுங்காக்க வெழிலடிபோற்றினேனே.

## சபாவணக்கம்.

விருத்தம்.

வேதமாமறைகள்நாலும் விளங்குசாத்திரங்களாறு
மோதருபுராணமற்று முள்ளதுமுணர்ந்தேயிந்தத்
திதிலாவிலாசம்பார்க்கத் தென்புடன்வந்திருக்குங்
கோதிலாச்சபையார்பாதங் கும்பிட்டுவணங்கினேனே.

## அவையடக்கம்.

ஆசிரியவிருத்தம்.

பார்புகழுகயோண புரியதனிலோங்கிவளர்
பண்புளவிநோதசபையார்

பக்ஷமுடனென்னையே கோரினானதால்
பரிதிகுலதிலகனை
சீர்பெறுமயோத்திகாண்ட திரிசங்கீன்ற
செல்வனற்சரிதையதனைச்
செப்பருவிலாசமாய்ப் பாடவேசிங்கார
சேவலங்கொடிவேலவன்
பேர்தனைத்தொழுதுமே யென்னுளியன்றதைப்
பேணிகமலாக்ஷியருளால்
பேசினேனிசைதனைசொல்பிசகாயிருக்கினும்
பெரியோர்கள்கனிவுகூர்ந்தே
சார்புறுவிலக்கணயிலக்கியமுமறியாத
தனையனைச்சிட்டனாகத்
தாங்கிப்பெருங்கருணை புரிவீர்களெனவுங்கள்
தாளடிபணிந்தனனரோ.

---

## தோடையம்.

தரு - இராகம்-நாட்டை. தாளம்-திரிபுடை.

சகலலோகமுங்கீர்த்தியோங்கிய தனியரிச்சந்திரன்சரிதையை
தரும்விலாசமதாகநானுமே தமிழினுவிசைபன்னவே ஆ-ஆ
அகிலபுவனத்துளமரர்முனிவர்க ளனைவருமடிபணிந்திடு
மகரகுண்டலவைங்கரனருள்வைத்துமென்றனைக்காக்கவே. (ஜெய)

பெருமைபெற்றிடவறுமையுற்றதோர்தருமனரிச்சந்திரன்காதையை
அருமைதங்கியபொருளமைத்துமேயான்விலாசமாய்ப்பாடவே-ஆ
வருந்துந்தேவர்கள் சிறையறுத்திட வந்தேசூரனைவாட்டிய
முருகவேலவன்கருணையென்னுளமோங்கிநாளுமேகாக்கவே(ஜெ)

சுந்தரமுளசந்திரமதி சொல்லொணாப்பத்தினிசரிதையை
இந்நாட்டுளோர்வந்துபார்க்கவேயிவ்விலாசநான்பாடவே - ஆ
கந்தவேளினையந்நாளினிற்கரிமுகன்பின்னளித்ததோர்
பந்தபாசத்தைவிலக்கியாளுமென்பரமனருள்காக்கவே. (ஜெய.)



தந்தைவாக்கியம்பிந்திடாமலே வந்தலோகிதன்காதையை
விந்தையாங்கவிவாணரின்பதம்வேண்டிநான் தமிழ்பாடவே-ஆ-ஆ
கந்தைபோற்றியதோழனையன்று கருதியாண்டவென்கண்ணனை
எந்தையினருளென்னுளோங்கியேயடியகன்றிடக்காக்கவே. (ஜெய)

நிலையுளோன்புகழ்கலையுளோனன் னெறியுளமந்திரிகாதையைப்
புலையிலாருளங்களிக்கவேநான் புகழ்விலாசமாய்ப்பேசவே-ஆ-ஆ
தலைமைதங்கியேதாணியங்குள சகலநூல்களுக்காதியாங்
கலைமகளருளென்னுளோங்கியெக்காலமுமெனைக்காக்கவே. (ஜெய)

கள்ளமுஞ்சூதுங்கபடுநீக்கிய கனனரிச்சந்திரன்காதையை
வள்ளலென்குருபாதம்போற்றியேவாயினுற்றமிழ்பாடவே - ஆ-ஆ
வெள்ளைக்காலையன்வேணுகோபாலன் விமலிகணபதிமுருகனு
முள்ளம்வைத்துவினோதசபையோ ரோங்கிவாழ்ந்திடவருளவே.
(ஜெய ஜெயா.)

---

## வினோதசபையார்வாழ்த்து.

இராகம், காம்போதி - தாளம், ஆதி.

பல்லவி.

வினோதசபையோரிவர்வாழ்கவே - வெற்றி
வேலனருளளித்தே காக்கவே - நித்தம். (

அநுபல்லவி.

கனமுள அரிச்சந்திரன் கதையைவிலாசமாக
காவியமதுசெய்வித்த கலியாணபுரிவாழும். (வி.)

சரணங்கள்.

திருவள்ளூர்நாடுறைந்த செல்வனருணாசலன்
செய்தவத்திலுதித்த தீரனுதாரன்மாரன்
இருவினையணுகாத இன்மன் இராஜரத்னம்
இச்சபைக்கோர்நாயகன் இவனுக்குநிகரியாரோ

தருமகுணவான்கல்வி சார்ந்தோனவ்வேலகர்
தாவும்லோகனுதன்றன் தனயன் திருவரங்கம்
அருமைமிச்சபைவிருத்தி ஆக்கியகுணசீலன்
அன்பனிவனிளையோன்அரிபுகழ்வாசுதேவன்
ஆதிமூலத்தைப்பணி ஐயன்வீராசாமிதான்
அளித்தயோகவான்சீலன் அன்பன் சிவகுரு தர்மி. (வி.)
வேதமுறைக்குஞ்சிவவேடந்தரித்தோன்புநு
வேண்டிப்பாலாயுசாடுவிளங்கும்சாடுறைவாழ்வோன்
நாதகீதங்களுநு நண்பன் சுப்பராயனுல்
நாட்டில்வந்தவர்களில் நற்குணன்கிராமிகன்
பாதகம்புரியாதபண்புளோன்பாலசுந்திரன்
பாரிலிச்சபையோர்க்கபணிகளைநடத்திடுறான்
நீதமுடையோன்ஹரி கிலையுளாதிகேசவன்
நிகழ்ந்தபுத்திரர்களில் நேயன்குணவானன்பன்
கிருஷ்யன்கனவந்தன் நீடிக்குங்கீர்த்திவான்
நியநிவாலேகர்கேமன் ஸ்ரீபாலகிருஷ்ணன். (வி.)
இச்சபைதிரவியத்திற் கிவ்விருவர்தலைவர்
யென்றும்வைகுத்தம்வாழு மீசன்மாயிலுற்றேன்
மெச்சும்நடக்கையுளான் மெய்யன்திதிவேமி
வீராசாமியளித்த விற்பனன் பி. யல். எனும்
நிச்சயகுணன்பக்தி நேமி அப்பாய்செட்டி
நீடுலகினிற்கவி பாடுவோர்க்களிகரன்,
அச்சுதனடிதொழும்அன்பன்கொண்டல்ராயுடு
அளித்த பி.சபாபதியித்திரன்மகிழ்யோகன்
ஆகயிவர்கள்கூடி யேகமனதாய்நாடி
யோகன்சரிதைதனை போகமாய்நடத்திய.(வி.)

---



## பொது கலித்துறை.

அத்திக்கணபதி ஆதிக்கணபதி அல்பர்தாதி
சித்திக்கணபதி செல்வக்கணபதி சிப்புறதாய்
பத்திக்கணபதி பாலக்கணபதி பாக்கியமருள்
வெத்திக்கணபதி விநோதசபையில் விளங்கினனே.

---

விநாயகர் தரு இராகம்- மோகனம். தாளம்-ரூபகம்.

பல்லவி.

சித்திவிநாயகன் முனிதோரவந்தான் - வெற்றியளிக்க
சித்திவிநாயகன் முனிதோரவந்தான்.

அநுபல்லவி.

எத்திசைபுகழும் கல்யாணபுரியி
லுத்தம வேளாளர்கருதும் செதியில்
தித்தித்தோமென்றுதித்தித்தோமென்று
தேசங்கள்கொண்டாடவாசகங்கள்பாட. (சித்தி.)

சரணம்.

அன்னையுமையருளங்குச 'பாசன்-கருணாகரன்
ஆதிமூலமாய்வரும் விசுவாசன்.
என்னையடிமை கொண்டிட்ட நேசன்-தொழுபவர்க
ளிடுக்கம்போக்கி யாண்டிடுமீசன்
முன்னைவினையைக் களையும்நாதன்
மோனநிலையைத் தரும்விநோதன்
தன்னையண்டினோர்க் கருளும்பாதன்
சாயுஜ்யமடையச் சாற்றிடும்போதன்
சற்குணதீரன் வல்லபை
நற்குணமாரன் பலகலை
அற்புதவீரன் தேவர்க
ளொப்பியசூரன் நாட்டில்
சாற்றிடும் நால்வகை
ஏற்றிடும் பலதுகை

ஓட்டிடுக் குயரதை
விற்றிடும் பாமதை

தாங்கி ஐங்காத்துட ரேங்கி
சரனெனவென்னிரு கரமதைத்தூக்கிட
வரமதுயளித்துமே பிரபலஞ் செய்திடுந். (சித்தி.)

---

மதிதயராஜன் சபை.

போது விருத்தம்.

புவிதனிற்கீர்த்திவோங்கப் புண்ணியந்தனில்மிகுந்தே
கவியுரைவாணர்மெச்சுங் கையறுமுனிவர்கட்கே
தவிழின்வியாகமேற்றத் தனமளித்திடுவோன்திவ்விய
மவினர்கள்மகிழுமந்த மதிதயன் கட்டியன்வாரான்.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, கன்னமாபுரியை அரசாக்ஷிசெய்யு மதிதய மஹாராஜன் ஆசாரவாசற்காக்குங் கட்டியக்காரன்வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

கட்டியன் தரு இராகம்-பந்துவராளி. தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டியக்காரன்வந்தான் இதோ இதோ பாரும்.

அநுபல்லவி.

மட்டில்லாமதிதயன் மகபதியடிநாளும்
வாழ்த்திப்புகழையென்று மேத்திப்படிக்கும்வீர. (கட்டி.)

சரணம்.

நெத்தியில்முத்திழைத்த நிகழ்குச்சுக் கொண்டைதொட்டு
கேர்விழியிரண்டிற்கும் மைகரிலாமையுமிட்டு
சுத்திக்கச்சையுடனே சொகுசாயங்கியுமிட்டு
சொல்லொணுடால்விருது ஜொலிக்குங் கத்தியுந்தொட்டு



சூரனெனவேவெகு வீரனெனவேபலர்
சொல்லப்பயந்தொதுங்கி செல்லவரசன்புகழ்
மெல்லசர்வத்திலும் நல்லகுணமுடைய. (கட்டி.)

---

பொது விருத்தம்.

நீதியும்பொறுமைசத்யம் நிலைகளும் பிசகாவண்ணம்
ஆதியைமனதில்காரு மன்புடன் பணிந்தேயேற்றி
வேதியர்பலவாய்வாழ்த்த வெண்குடை மனையும்வீச
வோதிடுமதிதயேந்திர வுத்தமனிதோவாரானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, கன்னமாபுரியை யாளும் மதிதயமஹாராஜன் கொலுவிற்கு வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

மதிதயன் தரு இராகம், தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

சூரனதியுலாச வீரன்மதிதயேந்திர
தீரனிதோவந்தான் கொலுவிருக்க
தீரனிதோவந்தான்.

அநுபல்லவி.

மாரனிவனைக்கண்டால் வணங்கியோடிமழகன்
மானபூஷணன்சர்வ கியானமுள்ளவாசவன்
மன்னிய நீதியுளோன்
அன்னிய நெறியுளோன்
பன்னவர் புகழுளோன்
இன்னகர் மகிழ்கொளுஞ். (சூரன்.)

சரணம்.

சுந்தரவஞ்சியர்க ளாடப்பதமும்பாட
சொல்லிமறைமொழியைத் தூயவேதியர்காட
மந்திரிபிரதானிகள் வளர்ந்திருபுறங்கூட
வாய்கூசாக்கட்டியனுரை வாக்கால்ஜனங்களோட

அந்துயிபேரிகை சொல்லுஞ்சல்லரிநாளந்
தொந்தோந்தோமெனத்து வலிக்கக்கொம்புகளூத

ஜொலிக்க நவமணி
பளிக்க முடிதனிற்
களிக்கப் பலர்மனம்
கெளிக்கப் பகைவருந்

தொண்டரெனவே யெதிர்
கொண்டே வணங்கிவர
அண்டமெலாம் புகழும்
மண்டலாதிப ரான. (சூர.)

## மதிதயன் போற்றி விருத்தம்.

என்னெறியோங்கிவாழ்க இனியதோர் மறைகள்வாழ்க
நன்னெறிக்குடிகள்வாழ்க நாட்டினில் முனிவர்வாழ்க
இன்னகர்செழித்துவாழ்க எங்குமென்புகழ்விளங்கத்
துன்னவானகலைவாழுந் தூயனேயருள்வாய்போற்றி.

## மந்திரி போற்றி விருத்தம்.

மன்னர்கள் மன்னர்கற்று மண்டலாதிபர்கள் யோகர்
துன்னவிரிஷிகள்சித்தர் ஆயனன்னெறியோர்வீரர்
பன்னவர்வர்க்கமெல்லாம் பரவியேபுகழக்கீர்த்தி
கன்னமாபுரியையாளுங் கர்த்தனேயின்றருள்போற்றி.

## மதிதயன் தேசவிசாரணை.

மந்திரியென்னாட்டில் மாதமும்மாரிதான்
மகிழ்வுடன் பொழிகின்றதா ?

மந்திரி.

மகிபனே தடையின்றி காலத்தில்வருஷங்கள்
மாறுதபொழி கின்றதே.

மதிதயன்.

என்றனதுநாட்டினி லாலயப்பூஜைக
ளினிவாய்நடக் கின்றதா ?



மந்திரி.

எந்தையேதடையின்றி பூஜைகள்விதிப்படி
யெங்கணும்நடக் கின்றதே.

மதிதயன்.

வந்திடும்பகுதிகள் பாளையக்காரர்தான்
வணங்கியேகொடுக் கிறாரா ?

மந்திரி.

மன்னனேயவரவர்கள் தடையின்றிகப்பங்கள்
மகிழ்வுடன்கட்டு றார்கள்.

மதிதயன்.

நந்திதான்வேங்கையின் றுயரின்றிசேஷமமாய்
நாட்டினில்வாழ் கின்றதா ?

மந்திரி.

நாதனேகோவின மியாதுமொருதுயரின்றி
நலமுடன்வாழ் கின்றதே.

## கட்டியன் கட்டியம்.

சூரனேசகலகுண வீரனேயெனையாளுந்
தூயனேவெகுபராக்கு
சொல்லொணுநீதியை வழுத்துவோய்சத்யநெறி
தோன்றலேவெகுபராக்கு
தீரனேபகைஞர்மனம் வாடிடவேயம்புதொடு
செய்யனேவெகுபராக்கு
செப்பரியவோமங்க ளைக்கியம்வளர்ந்தோங்க
செயுமரசே வெகுபராக்கு.

## மதிதயன் விருத்தம்.

புத்தியிலுயர்ந்தமந்திரி புவிதனையின்றுள்மட்டும்
வித்தியாசங்களின்றி வெகுநீதிசெலுத்திநாட்டில்
சத்தியபேருங்கீர்த்தி நான்கொண்டுங்குலம்விளங்க
பத்தினிகெர்ப்பமோங்காப் பாவமேதுரைசெய்வாயே.

வசனம்.

அப்பா மந்திரீ, நான் என் தந்தையினுடைய செங்கோலைக்கையிற்றாங் கியதுமுதலிதுவரைக்கும் நீதிமானென்றுலகெங்குங் கீர்த்திபெற்றேன்; என் குலம்விளங்க புத்திரபாக்கியமில்லாமலிருக்க என்னபாவஞ் செய்தேனோ தெரியாது இதற்கொரு யோசனைசொல்லுவாயப்பா மந்திரீ.

மந்திரி வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் சுவாமீ.

## மந்திரி விருத்தம்.

அண்ணலேயாசேகேளீ ரவனியிலுள்ளதெல்லா
மண்ணலேயதற்கீடாமோ அரன்பதந்துதிப்பீராகி
லண்ணலேயருளிப்பா ரம்மணிகெர்ப்பந்தன்னி
லண்ணலேகுலம்விளங்க அடைகுவீர்பலனைத்தானே.

வசனம்.

கேளும் ஆண்டவனே, இப்போது நீரடைந்திருக்கும்படியான சகல சம்பத்தும் புத்திரசம்பத்திற்கீடானதல்ல நீர் பரமசிவத்தைக்குறித்துத் தவஞ் செய்தால் சந்தானமடைவீர் வேந்தனே.

மதிதயன் வசனம்.

அப்படியே செய்கின்றேனப்பா மதிமந்திரீ. இந்தச்சங்கதி யென்னுடைய தேவிக்குத் தெரியப்படுத்தச் செய்வாயப்பா.

மந்திரி வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே தெரிவிக்கின்றேன் சுவாமீ.

## மந்திரி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா வன்னையின்றன்பாற்சென்று
கூறடாவேந்தன்றனுங் குமாரனைப்பெறவேவேண்டிச்
சீரதாயடவிகிட்டிச் சிவன்பதந்துதிக்கவின்று
போரதுதெரியச்சொல்லிப் பொட்டெனவழைத்துவாராய்.

வசனம்.

அடா கட்டியனே, நமது ராஜன் புத்திரபாக்கியம் பெறவேண்டி பரமனைக்குறித்துத் தவஞ்செய்யக் காட்டுக்குப்போகிறாரென்று தேவியாருக்குத் தெரிவித்து ஜாக்கிரதையுடனழைத்துக்கொண்டுவருவாயடா கட்டியனே.



கட்டியன் வசனம்.

அப்படியே தெரிவித்து அழைத்துக்கொண்டு வருகின்றேன் சுவாமீ.

---

## பொது விருத்தம்.

கொலுமுகத்தில் நடந்தவகை குறைகளின்றிக்
கொப்பெனவே தேவியர்க்குக் கூறவேண்டி
வலுமைபெறு கட்டியனும்ராணிமுன்னே
வழுத்துவான் மந்திரிமுறை செலுத்துவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மந்திரி சொன்ன வாக்கின்படி கட்டியன் சுந்தரரோகையம்மன்முன் தோன்றி நடந்த சங்கதி தெரிவிக்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

## கட்டியன் விருத்தம்.

தோழிநீகேளாயிங்கு தோன்றலும்விடநான்வந்தேன்
தாளிணைகாணத்தேவி தன்பரமறிவிப்பாயே.

வசனம்.

கேளாய் தோழிமந்திரவாகையே, கொலுமுகமிருந்து காணவேண்டி நான் வந்திருக்கிறேனென்று தேவியாருக்குத் தெரிவிப்பாயம்மா.

தோழி வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேனப்பா கட்டியனே.

## தோழி விருத்தம்.

அன்னையேமதிதயேந்திர னன்புறுதேவியம்மா
உன்னையேகாணவேண்டி யுத்தமன்விட்டதாக
மன்னவன்கொலுவைவிட்டே வந்துகட்டியனுந்தாயே
இன்னிமையறிவிக்கத்தா னியம்பினனருள்செய்வாயே.

வசனம்.

கேளாயம்மா, அரசன் யாதோ காரியமாய் விட்டதாக கட்டியக்காரன் வந்திருக்கின்றான் தாயே.

சுந்தரரேகை வசனம்.

வரச்சொல்லுவாயம்மா மந்திரவாகையே.

## கட்டியன் விருத்தம்.

அன்னையேபோற்றி யரசியேபோற்றி
உன்னதிருணமுள வுத்தமிபோற்றி
என்னையாள்தேவி யிறைவியேபோற்றி
மன்னவன்மருவே மலரடிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யென்தாயே நின்னடிக்கேபோற்றி.

## சுந்தரரேகை விருத்தம்.

வாழிநீகட்டியனே வந்தவாறதனைத்
தாழ்வின்றியிங்ஙனே சாற்றிடுவாயே.

வசனம்.

வாழிவாழி நீ வந்தகாரியந் தெரியச்சொல்லுமப்பா கட்டியனே.

கட்டியன் வசனம்.

நல்லது அம்மணி மஹாபாக்கியம்.

## கட்டியன் அகவல்.

அன்னையேதாயே அம்மணிகேளாய்
மன்னவன்புத்திரவாஞ்சையால்மீறி
சுரமதிற்கேகிச் சுந்தரனைப்பணிந்து
வரமதுபெற்று மைந்தனைப்பெறுக
என்னமுங்கொண்டா ரெந்தையுமின்று
வண்ணமாயுனைவர வழைக்கவேயென்னை
பொட்டெனவுரைக்கப் புனிதனுமந்திரி
விட்டனர்வந்தேன் மெய்யடிபோற்றி.

சுந்தரரேகை வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியேவருகிறேனப்பா கட்டியனே.



சுந்தரரேகை தரு. இராகம். தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

மதிதயன்மாதுவந்தாள் சுந்தரரேகை
மதிதயன் மாதுவந்தாள்.

அநுபல்லவி.

பதிமொழிமீறுத பண்புளோர்ளறமெலாம்
பாரில்சரிநடத்தத் தேவிவிதிதெரிந்த. (மதி.)

சரணம்.

அன்னப்பேடினைப்போல வசைந்தநடைநடந்து
அரசன்கொலுவைநாடி யந்தப்பணியணிந்து
சின்னயிடையுமாடச் செருக்காய்மனைகடந்து
செப்பொனுவாசத்தேமல்திரோகமதிற்படர்ந்து
தன்னுளாந்திரியத்தின் தலைமைமுடியவென்று
எண்ணமனதில்நாட்டி யீசன்பதந்துதித்து
ஏத்தி கணவன்பதம்
போற்றி யருளால்துய
ரோட்டி மாதர்களின்
மேட்டி யெனப்புகழ
யின்புறுநினைவுட னினிச்சுகம்பெருகவே
அன்புடனரசனு மழைத்ததைத்தெரிகவே. (மதி.)

## சுந்தரரேகை விருத்தம்.

இன்னிலம்புகழ்கொண்டோங்க யிமையவர்மகிழ்வுபெய்ய
உன்னதயாகமெத்திய மோங்கிடநிதியளித்து
கன்னமாபுரியையாளுங் கர்த்தனேயுலகோரேற்ற
நன்னிலையூண்டபிராண நாதனேநின்றுள்போற்றி.

## மதிதயன் விருத்தம்.

என்னருங்கிளியேமானே யிச்சென்மக்குறையீடேற
அன்னரும்புத்ரபாக்கிய மடைந்திடவேண்டிநாம்நான்
சொன்னமாஞ்சுரத்திற்கேகிச் சுந்தரனைப்பணியவேண்டும்
அன்னமேயென்றன்கூட அடைவுடன்வருகுவாயே.

வசனம்.

கேளாய்பெண்ணே, நமது குலம் விளங்கச் சந்தானம் பெறுவதற்காகப் பரமசிவனைக்குறித்து தவஞ்செய்யக் காட்டிற்குப் போகின்றே னீயுங்கூட வருவாயடி யென்கண்ணே.

சுந்தரரோகை - வசனம்.

மஹாபாக்கிய மப்படியேவருகின்றே னென்பிராணநாதா.

## சுந்தரரோகை விருத்தம்.

கணவரோயிந்நாள்மட்டுங் கருதியவென்றனென்னைக்
கணவரோகூடுங்காலங் கைலைவாழீசன்றானுங்
கணவரோயின்றேயும்முட் காட்டினுன்றயரம்விட்டேன்
கணவரோவுரியுடுத்திக் கடிகிகான்வருகுவேனே.

வசனம்.

கேளுங்கஸ்வாமீ, யிந்நாள்வரையி லடியாள் மனதிற் கொண்டிருந்த கவலை நீங்க இன்றுதான் பரமன் தங்கள் மனதிலுதித்தார் அடியாளும் மரவுரிதரித்துக்கொண்டு வருகின்றேன் பிராணநாதா.

## மதிதயன் விருத்தம்.

அப்பனேநீதரன்சொன்ன அருமையாம்பரத்தைக்கோரி
அப்பனேயடவிபுக்கி ஐந்தெழுத்துருவையோதி
அப்பனேய்புத்ரனென்னு மபக்யாதிதன்னைநீக்கி
அப்பனேசடுதிவாறே னரசதைக்காத்திடாயே.

வசனம்.

கேளாயப்பா மந்திரீ, நீசொன்னவாறே நானு மென்பத்தினியு மரவுரியுடுத்திகாடுறைந்து பரமனைக்குறித்து தவஞ்செய்து மலடனெனும்பேரை மாற்றிக்கொண்டுவருகிறேன். நீயென் செங்கோலைத்தாங்கி நீதிக்குறைவின்றி நடத்திவருவாயப்பா மந்திரீ.

மந்திரி வசனம்.

மஹாபாக்கிய மப்படியே நடத்திவருகின்றேன்: தாங்கள் நற்றவம் புரிந்து கோரிக்கையை யீடேற்றிக்கொண்டு வருவீரென்றுண்டவனே.



மதிதயன் - தரு. இராகம். காம்போதி. தாளம்-சாப்பு.

பல்லவி.

வருவாயடிமானே வனத்திற்கேகி
வணங்குவோம் பெருமானை

அநுபல்லவி.

திருநீறணிவோன்றன் சேவடியைத்துதித்து
தருகபுத்திரபாக்கியம்பெருகவென்னுடன்கூட. (வரு.)

சரணங்கள்.

மக்களில்லார்க்குமே நற்பதவி வாழக்கிட்டாதாமே
இக்கனம்பழுதாமே யடைந்ததா லென்னபலனுமே
அக்காலனை யுதைத்தோ னடியைப் பணிந்துநான்
சிக்காப்பொருட்புத்ரன் சீராகப்பெறுவேன். (வரு.)

சம்பத்திற்கெல்லாமேலாந் தாணியிற் றனயனேயதிசீலாம்
உம்பனுலேயுடையலாம் எனமந்திரி யுரைத்தனன்போகலாஞ்
சம்போசிவமென்று சதாசிவாவாவென்று
அன்பாய்த்தவசில்நின்று அடையமகனையின்று. (வரு.)

என்றன்செங்கோலைத்தாங்கி யுலகினி லேற்றநீதியிலோங்கி
உன்றன்கொப்பத்திற்பாங்கி நற்குணபாலனுதிக்கவரம்வாங்கி
சந்ததம்புகழ்பெறத் தாணியோர்மகிழ்வுற
இந்தமலடரெனு மிழிவுமின்றோடற. (வரு.)

---

## பொது விருத்தம்.

மன்னவனுமங்கையருமிவ்வாறுக
மனமொத்துவுரியுடுத்தி மகிழ்வுகொண்டே
தன்னகரைக்கடந்தடவி சேர்ந்துமங்கே
சார்வின்றிநற்சாலை தானுங்கட்டி
உன்னதமாங்கம்பம்நட்டு சுவாலையேற்றி
யொருமனமாய்த்தானேறி மாலைதாங்கி
கொன்றைமலர்முடிப்பவனை மனதிலெண்ணிக்
கொண்டிட்டான் கால்தூக்கி நின்றிட்டானே.

### வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, இவ்விதமாக மதிதயராஜனுஞ் சுந்தரேசையு மரவுரிதரித்து காடடைந்து பர்ணசாலையியற்றி பஞ்சாக்கினி மத்தியில் ஸ்தம்பம் நாட்டி யோர் நிலையில் மனதைநிறுத்தி ருத்திராக்ஷமாலை தாங்கி பரமனை நினைத்துத் தவஞ்செய்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

## மதிதயன் தபசுசெய்கிற.

### அகவல்.

ஓம்நமசிவாயமே உம்பர்கள் துதிக்கும்
வாமசிய னே வருகுவீர் சரணம்
நித்திய நிராமய நிர்மல ரூபா
சத்திய வேதஞ் சாற்றிடும் நாபா
அரியயன் காணு அருமையாம் பாதா
சரிதனை யுரித்த கபாலனே நீதா
சுட்டிலை லாடிய சுந்தர மணியே
இடைபிங்கலை நுனி யிருந்திடுந் த்வனியே
அஞ்செழுத்தான ஆதியே பரமே
வஞ்சக இயமனை வாட்டிய தவமே
ஓங்கார ரூபனே வொளியுள மதியே
ரீங்கார காட்டிய் யியற்றிய பதியே
முத்தியின் முதலே மூலத்தின் பொருளே
சத்திபார் வதியாள் தான்மகிழ் தெருளே
மழுவதைத் தாங்கு மகரருண் டலனே
பழுதத்தனை யாப் பாங்கி மனுளனே
உடுக்கையைத்தாங்கிய வுருத்ரனேவிண்ணோர்
நடுக்கத்தைக் கொய்த நாதனே மண்ணோர்
ஏற்றிடுஞ் சோவே யென்மனக் குறையை
ஓட்டிட வாவே ஓம்நமசி வாயமே
நற்கதி சேர நாதனே வருவாய்
முற்பதிக் காசே மோனனே வருவாய்



ஆதி சொருபமே அன்பனே வருவாய்
ஜோதிச் சுடரோ தூயனே வருவாய்
மூலமே முதலே முத்தனே வருவாய்
ஆலம துண்ட ஐயனே வருவாய்
அமரரைக் காத்த அண்ணலேவருவாய்
சமரசம் போன்ற சம்புவே வருவாய்
சத்தினிற் சித்தே தயாபரா வருவாய்
வித்தினில் முத்தே மெய்யனே வருவாய்
ஈசனே வருவாய் இறைவனே வருவாய்
நேசனே வருவாய் நித்தனே வருவாய்
தத்துவ நிலையின் ருணுவே வருவாய்
முத்து சுவாமிப்பணி முதல்வனேவருவாய்
ஏற்றினே னுன்னை யிங்ஙனே வருவாய்
போற்றினேனுன்பதம் புனிதனேவருவாய்.

### பரமன் விருத்தம்.

அன்பனேமதிதயேந்திரா அரசனேயெனைநீகோரி
யின்பமாயழைத்தவெண்ண மியம்புவாயியம்புவாயே.

### வசனம்.

அப்பனேமதிதயா, நீ யென்னைவருந்தியழைத்தகாரியந் தெரியச்சொல்லுவாயாசனே.

### மதிதயன் விருத்தம்.

சம்புவேபோற்றி சங்கராபோற்றி
அம்புலிதரித்த அண்ணலேபோற்றி
நம்பினேனுன்பதம் நாயகிவயிற்றில்
தெம்புறுபாக்கியஞ் சித்திக்கவருள்வாய்.

### வசனம்.

ஆண்டவனே, என்குலம் விளங்க என்பத்தினிவயிற்றில் புத்திரசந்தானம் பாலிக்கவேண்டும் பரமசிவமே.

### பரமன் வெண்பா.

உன்றுதிக்கே யான்மகிழ்ந்தே னுன்பத் தினிவயிற்றில்
மன்மதனுங் கண்டொடுங்க மாதொன்று—ஜெனிப்பாள்

தாலியுடனேகண்டாய் சற்குணனே கண்டவர்க்கே
பாலிப்பாய் பெண்டெனவே பார்.

### வசனம்.

அப்பாராஜனே, உன்பத்தினிவயிற்றில் சூரியப்பிரகாசம்போன்றவொரு பெண் தாலியுடன் பிறப்பாள் அதைக்கண்டு சொன்னவனுக்கு அந்தப்பெண்ணை விவாகஞ் செய்துகொடுப்பாய் இந்தவார்த்தையை ரகசியமாய்வைப்பாயப்பா மன்னனே.

### மதிதயன் விருத்தம்.

மான்மழுதரித்தோய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி
நான்மிகக்களித்தேனுன்ற
னல்லடிபோற்றிபோற்றி.

### வசனம்.

அடியேன்பாக்கியமே பாக்கியம் என்கோரிக்கை யீடேறிற்று தன்னியனானேன் பரமசிவமே.

### பரமன் விருத்தம்.

தொண்டனேவாழி
தோகையேவாழி
எண்டிசைபுகழ
இருக்கநீவாழி.

### வசனம்.

வாழி வாழி மதிதயா, நீ சுபமாயிருக்கவாழி.

### மதிதயன் விருத்தம்.

அன்னத்தைப்பழிக்குந்திவ்ய வழகுறுமயிலேகேளாய்
பன்னகம்பூண்டஜோதிப் பரமனுமனமகிழ்ந்தே
இன்னருள்ளோர்மற்றே ரியம்பிடும்வசையைநீக்க
வுன்னருங்கெர்ப்பமோங்க வுரைத்தனன்போவோம்வாராய்.

### வசனம்.

கேளாயடி பெண்ணே யுனதுகெர்ப்பத்தில் பாக்கியமாகும்படி பரமனருள்செய்தானினிநமதுதேசம் போவோம் வருவாயடி கண்ணே.



### சுந்தரரேகை வசனம்.

மஹா சந்தோஷ மென் பிராணநாதா.

---

### மதிதயன் தரு இராகம். சுருட்டி. தாளம்-சாப்பு.

பல்லவி.

அடியென்மயிலே வாராய் நாட்டிற்கேபோவோம்
அடியென்மயிலே வாராய்.

அநுபல்லவி.

புடவியிற்பழியின்று போக்காம்வரம்பெற்றோம். (அடி.)

சரணங்கள்.

புத்திரபாக்கியமிலார்க்கு புண்ணியங்கிட்டாதென்றிடுஞ்
சித்திரவாசகமொழிச் செருக்கைத்துடைத்தோமினி. (அடி.)

ஆருமெளிதிற்காணு அரனடிதெரிசித்தோஞ்
சீருமடைந்தோங்குணச்செல்விபெறுவோமினி. (அடி.)

கொண்டகருத்தீடேறக் கோமான்தன்னருள் பெற்றோம்
அண்டம்புகழுமுன்ற னமரிக்கையோங்குமினி. (அடி.)

### மதிதயன் விருத்தம்.

அடிமானேசுரங்கடந்தே யழகுறுநமதுநாட்டின்
அடிமானேயெல்லைவந்தோ மைங்கரன்கோயிற்கண்டோம்
அடிமானேயுள்ளேபுக்கி யாதிமூலத்தைப்போற்றி
அடிமானேவிடுதிசேர்வோ மன்புடன்வருகுவாயே.

### வசனம்.

கேளா யென்பிராண நாயகி, நாம் காட்டைவிட்டு நமது நாட்டெல்லைக்குள் வந்தோமிதோதோன்றுங் கணபதியை தெரிசிப்போம் வருவாயடியென்கண்ணே.

### சுந்தரரேகை வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே வருகின்றே னென்பிராணநாதா.

## மதிதயான் விருத்தம்.

அந்தமுமாதியான ஐங்கரத்தோனேபோற்றி
சுந்தரமூர்த்தியின்ற நாயனேநின்றாள்போற்றி
கந்தவேள்முன்னுதித்த கஜமுகாபரனேபோற்றி
சந்ததமெனையாட்கொள்ளுந் தாருவேபோற்றிபோற்றி.

---

## பொது விருத்தம்.

மன்னவனுந் தேவியரு மூலநாதன்
வளர்கோயிற் புகுந்தவுடன் கண்டநம்பி
நன்னகரை யாள்வேந்தன் வரவைச்செப்ப
நாடியே தூதவிட வமைச்சன்கேட்டே
அன்னவரை யலங்கரித்தே நால்பதாதி
யனுப்பியே ரதத்துடனே தானும்வந்தே
இன்னவன்ற னடிதொழவே யரசன்றானுஞ்
சொல்லுவா னவன்சரிதை மெல்லுவானே.

### வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மதிதயராஜனுந்தேவியுங்கோயிற்குள் வரக் கண்டகுருக்கள் தன் தூதனால் தெரிவிக்கக்கேட்ட மதிமந்திரி ரதமுதல் நால்வகைச்சேனையுடன் வந்தரசனைக்கண்டு தொழுதுநிற்க அரசன் வனத்திலடைந்ததைச்சொல்லுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

## மதி மந்திரி விருத்தம்.

வேந்தனேநின்றாள்போற்றி மெல்லியென்றாயேபோற்றி
காந்தனேதவசின்நேர்மை கடையனுக்குரைப்பீர்போற்றி.

### வசனம்.

ஆண்டவனே, தாங்களியற்றிய தவத்தாலடைந்த பலத்தை யெனக்குத் தெரியச் சொல்லவேண்டுஞ் சுவாமி.

### மதிதயன் வசனம்.

அப்படியே சொல்லுகிறேனப்பா மதிமந்திரி.



மதிதயன்-தரு. இராகம் கலியாணி. தாளம், சாப்பு

### பல்லவி.

அமைச்சனேசொல்லக்கேளாய்-அடவிசேர்ந்தே
அடைந்தபலனைக் கேளாய்.

### அநுபல்லவி.

நிமைக்குள்நீசெப்பிய நேர்நிலைதனைநாடி
நித்தன்பதத்தைநான் நத்தித்தொழுதவாறு. (அமை.)

### சரணங்கள்.

பஞ்சாக்கினிநடு நின்றே-கம்பத்தின்மேலோர்
பாதத்தைத்தூக்கிக்கொண்டே
நெஞ்சாலரனை விண்டே-ஐந்தெழுத்தோதி
நிர்மலாவா வென்றே

கொஞ்சுங்கிளிமொழியாள் கூப்பிக்கையேந்திநிற்க
அஞ்சுமொன்றாயமைத்தே அரனையறைந்தவாறு.(அமை.)

ஆதிபரம் பொருளை-யெவ்வுயிர்களின்
அங்கத்தில்வாழ் தெருளை
ஜோதிச் சுடரருளை-அடியார்க்குத்
தோன்றாப்பெரு மிருளை

கோதிலாமனத்தோனை குமரனையீன்றோனை
பாதிமதிபுனைந்த பரனைநினைத்தவாறு. (அமை.)

மான்மழு விடையேறி-முறைக்கிரங்கி
வந்தானென் முன்தோன்றி
நான்தொழவே கோரி-மங்கைசேர்ப்பத்
நங்கைபிறக் கத்தேறி [தில்

காணுறுத்தாலியுடன் கண்டவர்க்கேயவனை
பாணிக்ராணமாயிய பரமனுரைத்தவாறு. (அமை.)

### மந்திரி விருத்தம்.

என்னருங்கோவேதேவே யிசனைக்கண்டுபெற்ற
வன்மையாம்வரத்தைக்கேட்டேன்மனமதுகுளிர்ந்ததையா
உன்னருங்குமரியாலே யுலகெலாங்கீர்த்திகொள்வீர்
மன்னவாஇனிநடத்தும் வாறெனக்கருள்வீர்வேந்தே.

### வசனம்.

சுவாமி, பரமனருளால் தாங்களடையுங் குமாரத்தியால் உலகமெங்குங் கீர்த்திபெறுவீர் இனிநடத்துங்காரியந் தெரிவிக்கவேண்டும் மஹாராஜனே.

### மதிதயன் விருத்தம்.

அப்பனேமதிமிகுத்த அமைச்சனேசொல்லக்கேளாய்
கற்பதிகன்னிதேசம் நாமினிச்சேரவேண்டும்
ஒப்பவேதளத்தையெல்லா மொழுங்கதாய்நிறுத்திபேரி
செப்பவேயறைவாய்நானுஞ் சீக்கிரமுடுத்திக்கொள்வேன்.

### வசனம்.

கேளுமப்பா மந்திரி, நாம் காட்டிற்குள் போகவேண்டும் சேனைகளைச் சீராகநிறுத்தி சகலவாத்தியங்களு முழக்கச்செய்வாய் நான் உடுத்திக்கொண்டு வந்தேனப்பாமந்திரி.

### மந்திரி வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.

### மந்திரி விருத்தம்.

இங்குமுன்னிற்குங்கட்டியா இயம்புவேன் நீதான்சென்று
கங்குல்வந்தணுகாமுன்னங் கடிகியேசேனைதன்னைப்
பொங்குடனணிவகுத்துப் பூரியெக்காளங்கொம்பு
எங்குமேயதிரப்பேச இனிவுடனறைவிப்பாயே.

### வசனம்.

அடா கட்டியனே, சேனைகளை யணிவகுத்து சகலவித மேளவாத்தியங்களுமுழங்கச் செய்வாயப்பா.

### கட்டியன் வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.



### மதிதயன் விருத்தம்.

மாதேநாமுடுத்திவந்த மாவுரிநீக்கிநாளு
மாதேகாந்தொடுஞ்சிங்கார மதிப்புள்வாடைபூண்டு
மாதேகாம்ரதத்தின்மீது மகிழ்வுடனேறியின்று
மாதேநம்மனைக்கிச்செல்வோ மனக்களிப்புடனேவாராய்.

### வசனம்.

கேளாயென் பிராணநாயகி, நாமணிந்திருக்கு மாவுரியை நீக்கி ராஜபணி பூண்டு ரதமேறி நமதரண்மனை சேருவோம் வருவாயடி கண்ணே.

### சுந்தரரோகை வசனம்.

அப்படியே நானு முடுத்திக்கொண்டுவருகின்றே னென்பிராணவல்லபா.

---

### போது விருத்தம்.

அன்னமெனு மன்னவனுந் தேவியாரு
மன்புடனே யிரதமேறி யமைச்சரோடு
விண்ணவரு மலர்பெய்ய சுரங்கள்மேளம்
வெகுவாகத் தானொலிக்க நடனமாதர்
எண்ணறுமுத் தாலாத்தி பவளக்கும்ப
மெடுத்தேற்ற மறையவர்கள் வேதமோத
நண்ணவரா முனிவர்களு மாகிகூற
நாயகனு மரண்மனைக்குள் நாடினானே.

### வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மதிதயராஜனுந்தேவியும் ரதமேறிவர நாட்டியப்பெண்கள் முத்தாலாத்தி பவளாலாத்தி யெடுக்க வேதமோத முனிவர்களாசிகூற அரண்மனை சேர்ந்தார்களென் றறிவீர்கள் கனவான்களே.

### தோழி விருத்தம்.

ஓதுமறை நான்குபுக ழுருத்திரன்றனு
முனைத்தவன்னைங் கருதரித்தே வுமதுநல்ல
மாதுபத்னி படிப்படியாய் மாதம்பத்தும்
மகிழ்வுடனே தான்கழித்தே மன்னனின்மீது

நிகரொன்று மில்லாம லழகின்மிக்க
திவ்யமகள் தனைப்பெற்றா ளின்றுதானே
பாருகாத்திடு மரசே அடியாள்தானும்
பண்புடனே யிங்குவந்தேன் பகரத்தானே.

வசனம்.

மகரும்மஹாராஜனே, உமதுதேவி பத்துமாதமுங் கழித்து திவ்ய ரூபம் போன்ற பெண்ணைப் பெற்றாளின்று; அதுசேதியறிவிக்க வந்தேன் சுவாமி

மதிதயன் விருத்தம்.

மந்திரியெனக்கோரின்று மகள்தானும் பிறந்ததாலே
மந்திரியெனதெல்லா மகிழ்வுடன்தான மீவாய்
மந்திரிபுத்திரிக்கே வழங்கிடப்பேரைக்கேட்க
மந்திரிசாஸ்திரிதன்னை வரச்செய்வாயிவ்வாய்த்தானே.

வசனம்.

அப்பா மந்திரி, பரமனளித்த வரத்தின்படி யெனக்கு மகள்பிறந்ததால் வேண்[illegible]ங்கள் கொடுப்பாய் நாமகரணஞ்செய்ய சாஸ்திரியை வர வழைப்பாய் மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.

பொது விருத்தம்.

சாஸ்திரியை யழைக்கவென்று வேந்தன்கூறுஞ்
சாற்றிடவு மசரீரி தோன்றியங்கே
நேத்தியுள்ள மகள்தனக்கே பலருங்கேட்க
நிகழுவாள் பேரதனைப் புகழுவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, ராஜன்றனக்குப்பிறந்த குழந்தைக்குப் பேரிட சாஸ்திரியை யழைக்கச் சொன்னவுடன் ஆகாயவாணி அசரீரியாய்ச் சொல்லுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

ஆகாயவாணி விருத்தம்.

அப்பனேமதிதயேந்திரா அன்பனேயுரைக்கக்கேளாய்
இப்போதியருள்சிவத்தா லின்றாற்புத்திரிக்கேதான்



செப்பவேயுலகோரெல்லாந் திகழ்பெறக்களிகொண்டோங்க
ஒப்பசந்திரவதியென் றுகந்துபேரிடுவாயமன்னே.

வசனம்.

கேளாய் மதிதயனே, நான் ஆகாயவாணி யுன்மகளுக்கு உலகத்தாரெல் லாம் புகழும்படியாக சந்திரவதி யென்று பேரிட்டழைப்பாய் வேந்தனே.

மதிதயன் வசனம்.

அம்மா ஆகாயவாணித்தாயே, மஹாபாக்கியமப்படியே பேரிட்டழைக்கி ன்றேன் போற்றி போற்றி அம்மணீ.

மதிதயன் விருத்தம்.

மந்திரியாகாயவாணி வழுத்தியவாறுபோல
எந்தனல்மகள்தனக்கே யிதுமுதலுரைக்கக்கேளாய்
சந்திரவதியாளென்று சாற்றியே யழைக்கவேண்டும்
இந்தநன்முகத்திற்கே யென்மனங்களித்தேனப்பா.

வசனம்.

அப்பாமந்திரி, யின்றுமுதல் லெனது புத்திரிக்கு சந்திரவதியம்மாளென்று பெயரிட்டழைக்கச் செய்வாயப்பா மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் மஹாராஜனே.

---

பொது விருத்தம்.

இந்தவிதம்பெயரிட்டே யழைக்கமாது
இரவிமதிபோற்ஜொலித்து நாட்குநாளாய்
சுந்தரத்திலதிகரித்தே யறிவிலோங்கிச்
சொல்லொணாதிறமை யனைத்துமோதி
மந்திரமாம்வேதநெறி தானும்பார்த்தே
வாழ்க்கையினுள்நுட்பமெலா மடங்கக்கற்று
சந்திரவதிபருவமது அடையக்காலந்
தான்கொண்டா ளிவிச்சரிதை நான்சொல்வேனே.

**வசனம்.**

கேளுங்கள் சபையோர்களே, சந்திரவதி அம்மன் நாளொருமேனி பொழுதொருவண்ணமாய் வளர்ந்து சகல நீதி நெறி யொழுக்கமுங் கற்று பருவமடையுங்காலங் கொண்டாளென் றறிவீர்கள் கனவான்களே.

## மதிதயன் விருத்தம்.

என்னிடமகள்தானிப்போ வெய்திடப்பருவகாலம்
நன்மையாய்க்கிடைக்கும்போல நான்கண்டேனுனதாலே
இன்னகர்சில்ப்பிமாரை யீக்ஷணமழைப்பித்தேதான்
கன்னியமாடமொன்றைக் கடிதினில்முடிப்பிப்பாயே.

**வசனம்.**

கேளாயப்பாமந்திரி, யென் மகளாகிய சந்திரவதியம்மன் பருவமடையக்கூலமானதால் சில்ப்பியையழைத்து ஒருதிவ்ய அரண்மனை முடிப்பிப்பாய்மந்திரி.

**மந்திரி வசனம்.**

அப்படியே செய்விக்கின்றேன் மஹாராஜனே.

## மந்திரி விருத்தம்.

கட்டியக்காராநீதான் கடிகியேசென்றுமாடங்
கெட்டியாயிருக்கவிந்த கெடிதலமதனிலெங்குங்
கிட்டிடாதிருக்கும்வாறு கிரமமாய்முடிக்கவேண்டி
பொட்டெனச்சுப்பாச்சாரி புகிதனையழைத்துவாராய்.

**வசனம்.**

அடாகட்டியனே, நமதுராஜாவின் குமாரத்தி வசிக்கவேண்டி கன்னிகாமாடங்கட்ட சில்ப்பியாகியசுப்பாச்சாரியை அழைத்துவருவாயடாகட்டியனே.

**கட்டியன் வசனம்.**

அப்படியேயழைத்துக்கொண்டு வருகின்றேன் சுவாமி.

## கட்டியன் விருத்தம்.

க்ஷேத்திரமியற்றுமார்க்கத்
திறமையினுயர்ந்தசுப்பா
சாத்திரியாரேவேந்தன்
தானழைத்திட்டார்வாரீர்.



**வசனம்.**

ஐயா சுப்பாசாச்சாரியாரே, யும்மையெங்க ளரசனழைத்தனர் வரும் சில்ப்பியே.

**சில்ப்பி வசனம்**

அப்படியேவருகின்றேனப்பாகட்டியனே.

---

**சில்ப்பி தரு. இராகம்-மோகனம், தாளம்-ஆதி.**

பல்லவி.

சுப்பாச்சாரிவந்தான் சில்ப்பியெனுஞ்
சுப்பாச்சாரிவந்தான்.

அநுபல்லவி.

இப்பாருலகினி லிணையொருவ னெனக்கு
இல்லையெனவேசாத்திர சொல்லைவாயால்படிக்குஞ். (சுப்.)

சரணம்.

பிஜகணிதமறி — வோன்-பாதாளமட்டும்
பெருகும்வஸ்த்துக்கள் — தெரிவோன்
சாஜமென்பது — மறிவோன்-சிருட்டிக்கமனை
தாழ்வுமுவிடமுந் — தெரிவோன்
நேசமாய்க்குடிபோவோர் — நீடூழிகாலம்வாழ
நிகழ்கிரகநிலையோக — நேர்மைப்படியியற்றி
நித்தமுமானந்த — மெத்தவுமோங்கிட
வுத்தமனிவுடன் — சுத்தமாமாளிகை
நீட்டி — அக்கினிவள
மோட்டி — உதயபாரு
காட்டி — வடவளவை
வாட்டி — கதிரோனேட்டம்
பெருகவே — சுகமது
வருகவே — சகலமுந்
தருகவே — பகைவரு
மருகவே — மனைகோலுஞ். (சுப்.)

## சில்ப்பி விருத்தம்.

கன்னமாபுரியையாளுங் கையனேயதியல்லாச
வுன்னதருணனேதான முதவிடும்பரனேயென்னை
மன்னனேயழைத்தவாறு வழுவறவுரைத்தால்நானே
யின்னகர்மதிக்கச்செய்வே னெந்தையேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி தேவனே, அடியேனை யழைத்த காரியந் தெரிவிக்கவேண்டுஞ் சுவாமி.

## மதிதயன் விருத்தம்.

கன்மழுஞ்சுதும்வாதுங் கடுமனம்படைத்தோர்காணு
அன்பனும்விடைவெண்ணேங்கு மானருளதனால்வந்த
என்மகள்பருவங்கொள்ள இசைந்தனளவள்வசிக்க
நன்மையாமாடமொன்று நலமுடன்முடித்திடாயே.

வசனம்.

கேளையப்பாசில்ப்பாச்சாரி, யெனதருமைமகளிருக்கவேண்டி யொரு திவ்வியமான கன்னிகாமாடங் கட்டி முடிப்பாயப்பா சில்ப்பியே.

சில்ப்பி வசனம்.

மஹாபாக்கியம் அப்படியேமுடிக்கின்றேன் வேந்தனே.

## சில்ப்பி விருத்தம்.

அரசரேநீர்தான்சொன்ன ஆக்கினைப்படியேயானும்
அரசரேயுமதுபுத்ரி அன்புடன்வாழவேண்டி
அரசரேதிவ்யமான அரண்மனை முடிவுசெய்தேன்
அரசரேயினிமேலென்னுலாவதையுரைசெய்வீரே.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா, வுமது மகள் வாசஞ்செய்ய திவ்விய அரண்மனை கட்டி முடித்தேனினிமே லென்னாலாகவேண்டியதை அருள்செய்வீர் வேந்தனே.

மதிதயன் வசனம்.

மஹாசந்தோஷமப்பாசுப்பாச்சாரி மந்திரி, சில்ப்பி நமதுத்திரவின்படி கட்டிமுடித்த அரண்மனையைப் பார்த்து வருவோம் வருவாயப்பா.



மந்திரி வசனம்.

அப்படியே வருகின்றேன் சுவாமி.

மதிதயன் வசனம்.

அப்பா சில்ப்பியே, நீகட்டியிருக்கு மாண்மனையினுடைய வளப்பத்தை விபரமாகச் சொல்லிக்காட்டுவாயப்பா.

சில்ப்பி வசனம்.

அப்படியே யென்னாண்டவனே.

சில்ப்பி தரு. இராகம், இந்துஸ்தான்சேஞ்சுருட்டி தாளம்- ஆதி.

பல்லவி.

கட்டினேனே பாராய் மன்னா மனை கட்டினேனேபாராய்.

அநுபல்லவி.

இட்டமுடனெனக்கு இயம்பியவாறு போல. (கட்டி.)

சரணங்கள்.

குட்டிக்கரணம்போட்டுக் கொண்டாலும்வேறொருவர்
குணத்திற்கமையாதெனக் கொள்வோர் பெரியோர்வேந்தே(க.)

சிங்காரவளவதுந் சாசெயுமாளிகையும்
மங்களமாய்நீராடும் மடமுங்குயிற்கூடமும். (கட்.)

சாதிவளவுங்கன்னி தானருந்துமறையுந்
ஜோதிவெளியாய்மின்னுஞ் சொல்லோலூஞ்சாரமும். (கட்.)

வண்டகசாலையும் மலர்வாவிதோட்டமுங்
கண்டவர்நினைவாட கனத்தமேல்மாடமும். (கட்.)

காலையுபாதிபோக்கக் கரும்புருச்சிற்றறையும்
வேலையொத்தவிழியாள் விளையாடகல்மனையும். (கட்.)

தந்தைதாய்வந்திடிற் றங்கிடமாளிகையுங்
கந்தகஸ்தூரிபூசக் கதம்பச்சாவடியிங்கே. (கட்.)

## மதிதயன் விருத்தம்.

மந்திரிசில்ப்பிதானு மகிழ்பெறமகள்வசிக்கச்
சுந்தரமனைதானென்று சொகுசுடனமைத்ததற்காய்

சந்ததமனங்களிக்கச் சாற்றுறேனுப்பொன்பட்டாடை
தந்தனுப்பிடுவாய்நீயுந் தாமதமின்றியப்பா.

வசனம்.

அப்பா மந்திரி, யென் புத்திரிக்காக திவ்வியமான மாளிகை கட்டிமுடித்த கப்பாச்சாரிக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்பு கின்றேன் சுவாமி.

## சில்ப்பி விருத்தம்.

வேந்தனேமந்திரிதானு மிகவிலைவுயர்ந்தவாடை
வேந்தனேபணியும்ரத்ன மிகுதியாயளிக்கப்பெற்றேன்
வேந்தனேயுனைப்போல்தியாகி வேறுண்டோவுலகில்காதா
வேந்தனேநீயுஞ்செங்கோல் விநோதமிச்சபையும்வாழி.

வசனம்.

கேளும் மஹாராஜனே, மந்திரி யடியேனுக்கு விலையுயர்ந்த பட்டாடைகள் பொன்பணிகள் நவரத்தினங்களுங் கொடுக்கப் பெற்றுக்கொண்டேன் நீரும் உமது செங்கோலும் இந்த விநோதசபையுஞ் சதாவாழிவாழி தேவனே.

## மதிதயன் விருத்தம்.

மதிதனிலுயர்ந்தவென்றன் மந்திரியுரைக்கக்கேளாய்
நதியணியுமையாள்பாகன் நல்கியவரத்தாற்பெற்ற
விதிமுறையுணர்ந்தபுத்ரி வீற்றிடமனையுமாச்சிப்
பதியினிலாரோசொல்வாய்ப் பாங்கியாயமைக்கத்தானே.

வசனம்.

அப்பா மந்திரி, யெனது புத்திரிக்காக திவ்விய அரண்மனையுங் கட்டிமுடிவாச்சுது இனி சந்திரவதிக்கு யாரைத் தோழியாக நேமிப்பது யோசித்துச் சொல்லுவாய் மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் மஹாராஜனே.

## மந்திரி விருத்தம்.

ஐயனேயரசேயென்னை யாண்டிடுங்கோவேநீதி
மெய்யனேமந்திரவாகை மேவியீன்றெடுத்தமாது



ஐயநன்னடையொழுக்கநு கருதிகோறிவுபுத்தி
பெய்யதாமுறையாள்சந்திர பூவைக்கேதோழிசெய்வீர்.

வசனம்.

கேளும் மஹாராஜனே, தோழி மந்திரவாகையின் புத்திரியாகிய சவுந்தரவல்லி மெத்தவும் புத்தியுடையவள் நல்ல நடக்கையாள் விவேகி நீதியறிந்தவள். ஆதலால் சந்திரவதியம்மனுக்குத் தோழியாக அமைப்பது நலமென்றுண்டவனே.

## மதிதயன் விருத்தம்.

மந்திரிசுந்த்ரதேவி மகிழுறுதோழியான
மந்திரவாகைதன்னை வரச்செய்வாய்சீரவிற்றுனே.

வசனம்.

அப்படியானால் எனதுதேவியின்தோழியாகிய மந்திரவாகையையிங்குவரவழைப்பாய் மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே வரச்செய்கின்றேன் வேந்தனே.

## மந்திரி விருத்தம்.

கட்டியக்காராநீதான் கடிதிப்போய்தேவிதோழி
யிட்டிங்குவருவாயப்பா இறைவன்சொற்படிக்குத்தானே.

வசனம்.

அடா கட்டியனே, விரைவாய்ச்சென்று மஹாராஜாத்தியின்தோழியாகிய மந்திரவாகையைக் கூட்டிக்கொண்டுவருவாயடா கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியேயழைத்துக்கொண்டுவருகின்றேன் சுவாமி.

## கட்டியன் விருத்தம்.

மந்திரவாகையம்மா மன்னனுமுன்னேயிப்போ
வந்திடவழைத்தார்நீயும் வருகுவாய்கடுகிற்றுனே.

வசனம்.

கேளாயம்மா மந்திரவாகையே, உன்னை அரசனழைத்துக்கொண்டுவரச் சொன்னார் வருவாயம்மா.

மந்திரவாகை வசனம்.

அப்படியே வருகின்றேனப்பா கட்டியனே.

---

மந்திரவாகை தரு. இராகம்-சுருட்டி-தாளம், ஆதி.

பல்லவி.

மந்திரவாகைவந்தாள்-மதிதயன்றேவியி னுமிமகிழ்தங்கிய.

அநுபல்லவி.

அந்தியிருளையெங்கு மகற்றுங்குளமுடைய
சந்திரனொளிபோலத் தான்முகக்காந்திகொண்ட. (மந்.)

சரணம்.

தேசங்கள்களிப்புற செங்கோல் கரத்திற்றாங்கி
திவ்வியவோமயெக்கியந் திசைகளில்வளர்ந்தோங்கி
நேசனுப்பரமந்தி னெறியையமனதில்காளும்
நினைந்தேநீதிசெலுத்திகொராய்ப்புவியையாளும்
நிருபனழைத்தசேதி தெரியவணங்கிமனப்
பெருமையுடனேராஜன்பேணுங்கொலுவைநாடி. (மந்.)

## மந்திரவாகை விருத்தம்.

மன்னனேபோற்றி மகிபனேபோற்றி
யென்னையேயழைத்தவா றியம்புவீர்போற்றி.

வசனம்.

போற்றி போற்றி மஹாராஜனே, யென்னையழைத்த காரியந் தெரியப்படுத்தவேண்டுஞ் சுவாமி.

## மதிதயன் விருத்தம்.

பாக்கியேயுரைக்கக்கேளாய் பத்தினியின்றபுத்ரி
பாக்கியேபருவகாலம் பண்புடனடைந்ததாலே
பாக்கியேயுனதுதிவ்விய பாவையைத்தோழியாகப்
பாக்கியேயமைக்கவேண்டி யுற்றிரானழைத்தேன்காண்பாய்.



வசனம்.

கேளாய் பெண்ணே மந்திரவாகை, யெனது புத்திரியாகிய சந்திரமதியம்மாள் பருவமடையுங்காலமானதால் அக்கன்னியாமாடத்தி லிருக்கப்போகிறபடியால் உன்மகளைத் தோழியாகவமைக்கக் கருதியழைத்தே னறிவாய்மாதே.

மந்திரவாகை வசனம்.

மஹாபாக்கியம், என்கோரிக்கையும் அதுதான் சுவாமி சித்தத்தின்படி நடத்த அடியாள் தடைசெய்வதுமுண்டோ யென்றாண்டவனே.

## மதிதயன் விருத்தம்.

தோழியுமிசைந்தாளின்று சுபதினமானதாலே
நாழிகைகடவாமுன்னம் நல்மனைபுகவேவேண்டும்
காழியோன்றனையளித்த கயிலைவாழ்கடவுள்பாதம்
வாழியென்றடுத்தேபெற்ற வரபுத்ரிவரச்செய்வாயே.

வசனம்.

கேளாயப்பா மந்திரி, இன்றையதினஞ் சுபதினமானபடியால் புதிதாய்க்கட்டிய அரண்மனைக்கு யென்மகளை யனுப்பித்துக்கொடுக்கவேண்டும் ஆகையால் காலம்போகாமுன்னஞ் சந்திரவதியை வரவழைப்பாயப்பாமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே வரவழைக்கின்றேன் ஆண்டவனே.

---

## பொது விருத்தம்.

மன்னவனும் வரவிட்ட சேதிகேட்ட
மாதுசுந்தர ரேகையரு மகளைநல்ல
உன்னதமாய்த் தானுடுத்திப் பணிகளிட்டு
உம்பர்களு மன்னர்களு மகிழ்கொள்ள
சின்னமுடன் பலமேள மொலிக்கமுத்துச்
சிவிகையினிற் றானேற்றிச் சிலவுமீயத்
துன்னவன்வாழ் நற்சபையிற் சந்திரவதி
சொகுசுடனே வந்திறங்கித் தோன்றுவாளே,

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, இராஜனழைத்தசேதி கேட்டவுடன் தாயாருஞ் சந்திரவதியைச் சிங்காரித்து முத்துச்சிவிகையிலேற்றி பறப்ப சகலவாத்தியத்தொனியுடன் ராஜசபைக்கு வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

---

பாலசந்திரவதி தரு இங்கிலிஷ்நோட்.

வாலைசந்திரவதியிதோ — வந்தாள்பாடியே
சாலமனமகிழ்வுடன் — சாரத்தேடியே.

முகமோசந்திரபிம்பந்தலை — முடிகருமேகம்
ஜகமயங்கும்விழிகயல்போற் — றுவிடமேபோகம். (வா.)

நாசிகுமிழ்மாற்றுங்கொங்கை நாடுமேயிம்பை
ராசிதுடையடிவாழை — நாணவேரம்பை. (வா.)

மூன்றாம்பிறைபோலநெத்தி — முத்தெனத்தந்தம்
காணுக்குயிலொலிவுடல் — காட்டுமேயந்தம். (வா.)

மாதோவன்னப்பேடுநடை மயிலேயேவாட்டும்
யேதோயிவளெனப்பேச இருகைகள்காட்டும். (வா.)

காயாம்பயிர்விரல்புரி — கழுத்துமேவோங்க
வாயாமிதழ்கோவைமலர் — வாசனைவாங்க. (வா.)

சந்திரவதி விருத்தம்.

எந்தையேபோற்றிபோற்றி யீசனூர்தன்பத்தை
விந்தையாய்ப்பணிந்தேயென்னை வேண்டியீன்றெடுத்தநல்ல
தந்தையேயடியாடன்னைத் தானிங்குவழைத்தவாறைச்
சிந்தைநீர்குளிர்ந்தெனக்கே செப்புவீர்நின்றுள்போற்றி.

வசனம்.

அருந்தவஞ்செய்து என்னைப்பெற்ற தந்தையே, யென்னை யழைத்த காரியந்தெரிய்யசொல்லவேண்டும் பிதாவே.

மதிதயன் விருத்தம்.

அன்னமே யரன்றவத்தாற் பெற்றெடுத்த
அற்புதமே செழுந்தேனே கதலிமாவே



சொன்னமே செண்பகமே மருக்கொழுந்தே
சொல்லவொணாக் கற்பகமே கனிர்தமானே
நன்மையுள நீதிமொழி யறிந்தகாந்த
ரூபகமே விலைமதியா நாகரத்ன
என்மகளே திவ்வியமனையுனக் கிணைந்தே
னேகுவாய் தோழியுடன் வாழ்குவாயே.

வசனம்.

கேளாயம்மா யென்னருந்தவப்பொருளே, யுனக்காகவொருசொகுசுள்ள மாளிகை கட்டிமுடிந்தது. இன்று சுபதின மானதாற் றோழியுடன் சென்று சுகமாய்வசிப்பாயம்மா கண்மணியே.

சந்திரவதி வசனம்.

அப்படியே போய் வசிக்கின்றே னென்பிதாவே.

மதிதயன் விருத்தம்.

மந்திரியென்மகட்காய் மஹாவிந்தையாய்முடித்த
சுந்தரமாளிகைக்கே சொகுசுறுகிள்ளையோடு
பந்துவும்மானைரங்கம் பலகைக்காயெலாமமைத்தே
யிந்தநற்கடிகைதோழி யிங்குமேவரச்செய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி, யென்மகளுக்காகக் கட்டிய அரண்மனையில் கிளி, பந்து அம்மானை, சதுரங்கம், பல்லாங்குழிமணைகாய்கள் முதலானதை அமைத்து சீக்கிரத்தில் மந்திரவாளையின் மகளையு மழைப்பிப்பாயப்பா மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே செய்கின்றேன் மஹாராஜனே.

மந்திரி விருத்தம்.

கட்டியக்காரா பொட்டெனவோடி
கிட்டியேதோழியை யிட்டுநீவருவாய்.

வசனம்.

அடாகட்டியனே, சீக்கிரம்போய் தோழி மந்திரவாளைமகளாகிய சவுந்தரவல்லியை யழைத்து வருவாயப்பா வீரனே.

### கட்டியன் வசனம்.

அப்படியே யழைத்து வருகின்றேன் சுவாமி.

### கட்டியன் விருத்தம்.

ராணியின்றோழியான நற்குணமந்திரவாகா
பூணியுன்மகளொராஜன் பொட்டெனவழைத்ததாலே
வீணிலேகாலந்தன்னை மேவியேகழிக்கப்போகா
ஈணிலம்புகழவென்பின் னினிவுடனனுப்புவாயே.

### வசனம்.

அம்மா மந்திரவாகை, யுன்மகளை மகாராஜன் சீக்கிர மழைத்துக்கொண்டு வரச்சொன்னு ரனுப்புவா யம்மா.

### மந்திரவாகை வசனம்.

அப்படியே யனுப்பித்துக் கொடுக்கிறேனப்பாகட்டியனே.

### மந்திரவாகையின் விருத்தம்.

என்னருமகளேயுன்னை யிறைவனுந்தன்மகட்கே
உன்னருந்தோழியாக வுகந்துமேஅழைப்பதாலே
அன்னமேநீதான்சென்றே யகமகிழ்ந்துபுகழ்கொண்டாட
அன்னவன்சொற்படிக்கே சோர்வின்றிநடப்பாய்கண்ணே.

### வசனம்.

அம்மா யென்னருமை மகளாகிய சவுந்தரவல்லி, ராஜன்மகள் சந்திரவதி யம்மாளுக்குன்னைத் தோழியாக நேமிக்க மது வேந்தனழைப்பதால் நீயிசைந்து அரசனுக்கினைப்படி நடந்து கீர்த்தி பெறுவா யென்கண்மணியே.

---

சவுந்தரவல்லி தரு. இராகம், சாரங்கா. தாளம்-அதி.

பல்லவி.

சாதிசவுந்திரவல்லிவந்தாள் - சந்திரவதி
தாள்பணிநடப்பேனென்றே.

அநுபல்லவி.

பேதியாமனத்துடனே வோதிடுமொழிப்படிக்கே
பாதுகாத்தரசன்மகள் பணிவிடைசெய்வேனென்று. (தா.)



சரணம்.

கோடிமதிகள்கும்பாய்க் கூடிவந்தவாறுபோல்
குளிர்ந்தமுகமுமேனி கோரில்கிட்டாவழகுந்
தேடிவருந்திடினுஞ் சிக்காதசற்குணமுந்
தேஜசுநடக்கையுந் திகழ்நீதிமுறைமையும்

பாடிப்படிப்பதிலும் பண்புறுகுணவந்தி
பத்தினிமார்க்கேற்ற பணிசெய்விதரணமு
நாடி ரசன்கொலு நங்கைமந்திரவாகை
நலமுடனீன்றெடுத்த பலகலையுணர்மாது

நண்புடன் நன்மனத்
தென்புடன் வேந்தனுக்
கின்புட னடந்திட
அன்புட னிதோயிதோ

நாயகிதன்னையே தாயகம்போலவே
தாயந்தனில்நினைந் துபாயவழிதெரிந்த. (தா.)

### சவுந்தரவல்லி விருத்தம்.

வேந்தனே நின்றுள்போற்றி
விமலனேயெனை யழைத்த
சாந்தனே சேதிதன்னைச்
சாற்றுவீர் போற்றிபோற்றி.

### வசனம்.

போற்றி போற்றி ஆண்டவனே, யெனையழைத்தகாரியந் தெரியச்சொல்லவேண்டுஞ் சுவாமி.

### மதிதயன் விருத்தம்.

மந்திரவாகைபெற்ற மகிழுறுமாதேகேளாய்
எந்தனன்மகளுக்குன்னை யிதுமுதற்றோழியாக
சந்திரவதியாளோடு தான்சேர்ந்துமாளிகைக்கே
வந்திடாதேதுந்தோஷம் வகையுடன்காப்பாய்தானே.

**வசனம்.**

கேளாய் சவுந்தரவல்லி, யென்னருமை மகளாகிய சந்திரவதியம்மாளுக்கு த்தோழியாயிருந்து இப்போது கட்டிய புதிய அரண்மனைசேர்ந்து யாதொரு தோஷம் நேரிடாமல் பாதுகாத்து வருவாய் சவுந்தரவல்லியே.

## சவுந்தரவல்லி விருத்தம்.

எங்களாண்டவரேநீர்தா னியம்பியவாக்குயிநேன்
எங்களாண்டவரேயாதுமிழியின்றிநடந்துகொள்வேன்
எங்களாண்டவரேதாங்க ளீன்றபுத்திரியைக்காப்பேன்
எங்களாண்டவரேதோகை யிணையடிபணிசெய்வேனே.

**வசனம்.**

சுவாமி, தங்களாக்கினைமீறேன், சந்திரவதியம்மாளுக்கு யாதொருகுறைவுநேரிடாமல்காத்து அந்த அம்மாள்பணிவிடையைப்புரிந்து வருவேனாண்டவனே.

**மதிதயன் வசனம்.**

மெத்தசந்தோஷம் என்மகளை யழைத்துக்கொண்டு புதிய அரண்மனைக் கிப்போவாய் பெண்ணே சவுந்தரவல்லி.

**சவுந்திரவல்லி வசனம்.**

அப்படியே யழைத்துக்கொண்டு போகின்றேன் சுவாமி.

---

**சவுந்தரவல்லி தரு. இராகம்- காம்போதி. தாளம்-ரூபகம்.**

பல்லவி.

போவோம்வருவா யன்னமே - அரண்மனைக்கே
புகழ்பெருகுஞ் சொர்னமே - சந்திரவதியே

அநுபல்லவி.

காவலன்தவஞ்செய்ய கைலையனருள்தர
கருவாயுதித்துவந்த மருவேமரிக்கொழுந்தே. (போ.)

சரணம்.

நற்குணநிறை வாவியே - மாதர்களில்
சற்குணமுடைய தேவியே



அற்புதவொளிவார் நீவியே - எளிதிற்கிட்டா
கற்பகசன்மன ரூபியே
சர்ப்பசயனன்காணு சுவாமிகொடுக்கவந்த
தாயேயென்னுடனிப்போவாயேநாம்வாழ்மனைக்கிச்
சார வுலகநடை
தேற நல்லொழுக்கத்தில்
மீற தேசத்தோருனைக்
கூற வுத்தமியென்று
செப்பநூலிவிதி தினந்தினமோதுவோம்
ஒப்பவேபலவகை யுவந்துநாமாடுவோம். (போ.)

## பொது விருத்தம்.

வேந்தனுமுரைக்கக்கேட்டே விந்தையாய்சவுந்தரவல்லி
சாந்தமாங்குணத்தைப்பூண்ட சந்திரவதியாளோடே
காந்தமாந்தோழியாகக் கடிகியேமாளிகைக்குள்
வாய்ந்தனளினிநடக்கும் வகையறிவீர்கள்தாமே.

**வசனம்.**

கேளுங்கள் சபையோர்களே, சந்திரவதியும் தோழிசவுந்தரவல்லியும் புதியஅரண்மனைசேர்ந்தார்கள் இனிநடக்கும்வாறறிவீர்கள்கனவான்களே.

## சவுந்தரவல்லி விருத்தம்.

கருமணற்குழலியான கண்மணியுமதுபுத்ரி
பருவமதாளுளின்று பாலைபோய்மங்கையென்றே
சருவருமழைக்கலாளுள் சற்குணபதியேநாதா
தருமனேசடங்குசெய்யுந் தானறிவிக்கவந்தேன்,

**வசனம்.**

கேளுமஹாராஜனே, யுமது திவ்வியபுத்திரி யின்று புஷ்பவதியானாள் சடங்குகள் நடத்தவேண்டுமாதலால் தெரிவிக்கவந்தேனாண்டவனே.

**மதிதயன் வசனம்.**

சந்தோஷஞ் சந்தோஷம் அப்படியேநடப்பிக்கின்றேன், பாவாய்.

## மந்திரியன் விருத்தம்.

மந்திரிதோழிசொன்ன வாறுநீயறிந்தாலே
மந்திரியசுஷமொன்று மகாசடங்கதையியற்ற
மந்திரிவேணதெல்லா மட்டின்றியமைத்தேயப்பா
மந்திரியணாநொடிக்குள் மகிழுடனனுப்புவாயே.

வசனம்.

அப்பாமந்திரி, என்னருமைமகன் புஷ்ப்பவதியானதிற்காக சடங்குகள் நடத்தவேண்டியவைகளைச் சேகரித்தனுப்புவாயப்பா.

மந்திரி வசனம்.

அப்படியே சேகரித்தனுப்புகின்றேன் சுவாமி.

## மந்திரி விருத்தம்.

கோவேநீருரைத்தவாறு கொப்பெனக்களபம்புஷ்பங்
கோவேகேளிலையடைக்காய் குரும்பைநீர்க்காயும்வாழை
கோவேசர்க்கரையுஞ்சீனி கூடவேமற்றதெல்லாங்
கோவேநான்சேகரித்தே கொப்பெனவனுப்பினேனே.

வசனம்.

சுவாமி, சடங்கிற்காகவேண்டியவஸ்துக்களையெல்லாஞ்சேகரித்தனுப்பிவைத்தேனுண்டவனே.

சுந்தரரோகை வசனம்.

அடியம்மாசவுந்தரவல்லி, என்மகளைச்சீராகச்சிங்காரித்தழைத்துவருவாயடி தோழியே.

சவுந்தரவல்லி வசனம்.

அப்படியே சிங்காரித்தழைத்து வருகின்றேனென்தாயே.

---

சவுந்தரவல்லி தரு, இராகம் எழனுகல்யாணி-தாளம் ஆதி.

பல்லவி.

ஜோடினைசெய்குவேனே சுந்தரரோகையின் சந்திரவதிக்கே.

அநுபல்லவி.

நாடதனிலேயுள்ள நாயகிமார்களும்
நாணஇவள்சிங்காரம் பூணப்புனிதமென. (ஜோ.)



சரணங்கள்.

கூந்தலிதோ வாரினேன் - கோதினைநீக்கிக்
கோன்றுச்சடையும் பாவினேன்
காந்தலங்காரம் பூட்டினேன் - குச்சுந்தொட்டு
கல்லின்றுக்கடி சூட்டினேன்
சந்திரபிறைசூரியன் தன்பிறைநெற்றிச்சுட்டி
சாத்தினேன்முகஜம்புல் தகதகவெனயிதோ. (ஜோ.)

பிறைநுதல் நிறணிந்தேன் - குங்குமச்சாந்து
பேணிமைவிழிக் கணிந்தேன்
உறைமேற் புருவந்திட்டினேன் - நாசிக்கிதோ
வொளிபணி மூன்றுமாட்டினேன்
நிறைசெவிக்கிரண்டிற்கும் நிகழ்கம்மல்சுமிக்கியும்
நிறமதிமுருகுடன் சேர்ந்ததொங்கலுமிட்டே. (ஜோ.)

முத்துமோகனம் பூட்டினேன் - கழுத்திற்கே
மொழிசந்திரஹாரஞ் சூட்டினேன்
பத்துமோதிரந் திட்டினேன் - விரல்களுக்கே
பணிகைக்கடகம் மாட்டினேன்
எத்துங்கரத்திற்கிதோ இரத்தினவங்கியுமரி
யெழிலுறுபாஜிபந்து இணைபுஜகிரிதிஇட்டே. (ஜோ.)

இடையிலொட்டியாணம் பூட்டி - ரத்தினமிழைத்த
இருகால்சிலம்புந் திட்டி
நடைபொற்கொலுசு மாட்டி - சதங்கையுநா
நல்லசரங்கள் நாட்டி
படைமுகம்புகழ்மன்னர் பார்த்துமயங்கநல்ல
பட்டுச்சரிகையாடை பாங்காயிடையிற்கட்டி. (ஜோ.)

சவுந்தரவல்லி வசனம்.

தாயே, பெண்ணைச்சிங்காரித்தாச்சுது அம்மணி.

சுந்தரரோகை - வசனம்.

அடிபாங்கி, என்மகளையழைத்துவந்து இந்நவரத்தினமுக்காலியின் பேரில் இழக்குமுகமா யுட்காரவைப்பாய் சவுந்தரவல்லியே.

சவுந்தரவல்லிவசனம்.

அப்படியே யழைத்துவருகின்றேனம்மணி.

சவுந்தரவல்லிவசனம்.

அம்மாசந்திரவதியே யிந்த முக்காலியின்பேரில் ஜெங்குமாமாய்த்திரும்பி வுட்காருமம்மா.

## பொது விருத்தம்.

புஷ்பவதியானமகள் தனையிருத்திப்
பூவுடனேகஸ்தூரி புனுகணிந்து
மிஷ்க்கபடவேந்தர்களின் தேவிமார்கள்
நின்றுலஞ்சுத்தும்வகை நீர்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, சந்திரவதிக்கி ராஜர்களின் தேவிமார்கள் ஆலமெடுக்கும்வகைகாண்பீர்கள் கனவான்களே.

லாலி இராகம். நவறேஜ் தாளம், ஜம்பை.

லாலிசுந்தரமூர்த்தி லாலிசுந்தரர்தேவி
லாலிமழுதரித்தவற்கு லாலிசுப லாலி. (லாலி.)

சுந்த்ரரோகையும்வேந்தன் சுரத்திலருந்தவம்புரிய
வந்தவழகுருபாவை வாழ்கசுபம் லாலி. (லாலி.)

ஆதிபரம்பொருளான அண்ணலருளாலுதித்த
ஜோதிவடிவுளபாவை சுபம்வாழ்க லாலி. (லாலி.)

திங்களணியெம்பெருமான் சித்தமகிழ்ந்தேகொடுத்த
மங்கைசந்திரவதியும் வாழ்கசுபம் லாலி. (லாலி.)

சற்குணமும்பொறிவுஞ் சத்தியமும்நீதிநெறி
அற்புதமாய்ப்பூண்டவளை அடையசுபம் லாலி. (லாலி.)

பதிவிரதம்பண்பொழுக்கம் பாரிலுளதானமெலாம்
அதிகமுடன்றனடத்தி வாழ்கசுபம் லாலி. (லாலி.)



சுதபாக்கியசம்பத்துஞ் சேர்டசமுந்தானடைந்து
வதனவதிறக்கதியில் வாழ்கசுபம் லாலி. (லாலி.)

ஐம்பத்தாறுதேசமன்ன ரடிபணியஇருந்துதினம்
இன்பமுடனரசியென இருக்கசுபம் லாலி. (லாலி.)

கழல்முருகனடிபணிந்து கைகூப்புமன்பர்களாம்
அழகுளவிநோதசபை அனுதினமும் வாழி. (லாலி.)

## பொது விருத்தம்.

மன்னவனற் றவமிழைத்த தாலேவந்த
மகளான சந்திரவதி மங்கைபாதி
தன்னுவமை யில்லாத பாங்கியான
சவுந்தரவல்லி தன்னுடனே சுகமாய்வாழ
நன்னகரான் அயோத்திபனுந் திரிசங்கின்ற
நற்குணமுஞ் சத்தியநிலை நாளுமோங்கு
மன்னவனு மரிச்சந்திரன் கொலுமுகத்தே
வருகின்ற னீதிநிலை தருகின்றனே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, சந்திரவதியும் தோழி சவுந்தரவல்லியுங் கன்னியாமடத்தில் இவ்வாறுசுகமாயிருக்கஅயோத்தியாபுரியையாளுகின்ற அரிச்சந்திரமகாராஜன் கொலுவிற்குவருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதியுற்பவப்படலமுற்றிற்று.



உ

சிவமயம்.

சத்தியபாஷா.

# அரிச்சந்திரபடலம்.

## கட்டியன் விருத்தம்.

அட்டமாசித்தியாலே அழலவன்குலம்விளங்க
இட்ட அந்தரசொர்க்கத்தி லிலங்கிய திரிசங்கின்ற
கிட்டியவினைகளைந்த னரிச்சந்திரன்வாசல்
கட்டியக்காரன்தானும் களிப்புடன்தோன்றினானே.

கட்டியன்-தரு இராகம்-பந்துவராளி. தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தான் வந்தானிதோ
கனனரிச்சந்திரன் மனமதுமகிழ்ந்திடும். (கட்டி.)

சரணங்கள்.

எட்டுதிசைகளெங்கும் இறைவன்புகழ்கொண்டோங்கி
யிட்டிவலயங்கத்தி யிடிக்கிக்காத்திற்றுங்கி
கெட்டுப்பகைவரெலாம் கிலிபிடித்துப் பின்வாங்கி
கிளரொணுவுக்கிரமும் கிருபைமன்னைநீங்கி
கிடுகிடுத்திட நடுநடுத்திட
வெடுவெடுத்திட படபடத்திட
கிட்டி ராஜன்வரவை
ஒட்டி ஜனத்திரளை
கெட்டி சமர்த்ததனில்
கெட்டி யிவனேயென
கிளறிட்டுட்டர்கள் அலறிடவாயது
குளறிடமனமது தளறிடஇதோயிதோ. (கட்டி.)



## கட்டியன் விருத்தம்.

ஜெகமதில்அறம்விளங்க திரிசங்குரான்றமைந்தன்
திகழ்பெறச்சத்தியந்தன்னை தினையளவழுவாவேந்தன்
புகம்பலவேற்றிநீதி யும்பரும்புகழப்பெய்வோன்
அகமதில்கீர்த்திபூண்ட அரிச்சந்திரதீரன்வாறார்.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, புவனத்திலியாவரும் புகழத்தக்ககீர்த்திபுனைந்து அயோத்தியில் நீதிவழுவாமல் அரசுசெய்கின்ற ராஜாதிராஜனரிச்சந்திரமஹாராஜன்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க.

## அரிச்சந்திரன் வருகிற தரு.

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

தேசதேசங்களெல்லாம் திகழ்கொண்ட அரிச்சந்திர
ஜெயவீரராஜன் வந்தான் - கொலுவிருக்க

அநுபல்லவி.

வாசவன் அயன்காணு மலர்ப்பதன் திருத்தாளை
வணங்கிமனதில்நாளும்இணங்கியிருக்குந்திவ்விய
வாணிபுகழுந் தீரன் ராஜர்
பேணிப்பணியுஞ் சூரன் ஜெக
வல்லவர் நல்லவர் கல்லவர் சொல்லவர்
வாழ்த்த முடியதனைத் தாழ்த்த இருபுறமும்
ஏத்த குடிகள்தனைக் காத்தபுகழுடைய. (தேச.)

சரணங்கள்.

முத்துக்குடைநிகழ்த்த ரத்தினமுடிதரித்து
மோகனமாலையுடன் வாருசெங்கோல்பிடித்து
சுற்றும் அமைச்சர்வர சொருசாய் நாட்டியநடித்து
சொல்லொணுமறையொலி தூயர்மிகப்படித்து

ஞூழ பகைவரெல்லாம்
தாழ நீதியாய்லோகம்
வாழ நாட்டினில்சூது
யாழ வெகுவிநோத

நாயகனுகவே தாயகம்போலவே
காயந்தனைமறந்து நேயர்கள்சூழ்ந்திட

நாடி விருதுகட்டியம்
பாடி மிடியர்வரத்
தேடி கலியைப்போக்கி
ஆடி தருமமாதை

வேண்டிவளர்க்குந்திரன் நவகண்டம்
தாண்டிப்புகழுஞ்சூரன் மெய்மை
பூண்டில கிடுமாரன் அயோத்திநகர்
ஆண்டிடு மதிகாரன் சுகம்

எச்சிடகண்டவர் மெச்சிடமகிழ்வுடன்
இருந்தேசிம்மாசனத்தில் பரிந்தேநீதிசெலுத்த.(தே.)

## அரிச்சந்திரன் விருத்தம்.

சதுர்மறைவிளங்கவென்றன் தனிச்செங்கோல்விதிகளோங்க
கதிர்குலந்தழைக்கநாளுங் கருதியமுனிவரோங்க
நிதியதுபெருகநாட்டில் நீடித்தென்குடிகள்பொங்க
நதிபுனைகைலைவாசா நாட்டுநின்னருளேபோற்றி.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

விரிச்சிறகறுத்தகோனும் விண்சுரர்பன்னவாசர்
கரிச்சரமெடுத்தோன்மற்றோர் காவியர்முனிவர்யோகர்
சரிச்சொலாவும்பர்வேந்தர் தரையினோர்புகழப்பெய்யும்
அரிச்சந்திரமகிபாவுன்ற னழகடிபணிந்தேன்போற்றி.

### வசனம்.

மஹாராஜராஜபூஜிதராஜகெம்பீர ராஜமார்த்தாண்டராஜாதிராஜஅரிச்சந்திரமகாராஜனே போற்றி.



## கட்டியன் விருத்தம்.

தீரனேபகைவரை மீறுதொடிக்கிய செம்மலேவெகுபராக்கு [க்கு
செப்பரியநால்வேதம் ஒப்பியருள்பாதனைத் தினந்துதிப்போய்பரா
வீரனேசத்தியமும் தருமமும்நீதியும் விளக்கும்வித்தேபராக்கு
வேந்தனேஅண்டினோர்மகிழ்வுறச்செய்திடுமெய்யனேவெகுபராக்கு.

## தேச விசாரணை.

### ராஜ.

ஜகமதிற்குறைவின்றிமாதமும்மாரிதான்செழிக்கவேபெய்கின்றதா?

### மந்திரி.

செம்மலேகாலமுறைதவறாமல்வருஷங்கள்தேசத்தில்பொழிகின்றதே.

### ராஜ.

அகமதில்மன்னர்கள் கட்டிடும்பகுதிதான் அன்பாயளிக்கிறாரா?

### மந்திரி.

அண்ணலேராஜர்கள்தடையின்றிபகுதியைஅடங்கியேகட்டிவாரார்.

### ராஜ.

உகம்புகழுமாலயந்தனில்பூஜைபிசகாமல்ஒழுக்கமாய்நடந்துவருதா?

### மந்திரி.

உம்பனேதேவதா பூஜைகள்குறைவின்றி யுலகினில்நடந்தேறுதே.

### ராஜ.

அகிலக்காரர்கள்படிநிறைவுகுறையாமல்அன்புடன்அளக்கிறாரா?

### மந்திரி.

ஐயனேவாணிபர்கள் நிறைகுறைக்காமலே அளவாயளக்கிறார்கள்.

## கட்டியன் விருத்தம்.

மன்னவன்கொலுமுன்
உன்னதநாட்டியம்
பன்னவேமாதும்
உன்னிவந்தனளே

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, மஹாராஜாகொலுமுன் நாட்டியஞ்செய்ய நடனப்பெண்வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

## நடனப்பெண் வருகிற தரு.

இராகம் தோடி ; தாளம் ஆதி.

பல்லவி.

வாராளே வனிதையும் வானத்தின்ரதிபோல

அநுபல்லவி.

நேராய்விழிசுழற்றிக்காட்டி நிகர்ந்தருசங்கள்அசைய.ஆட்டி
மாரனுடனேதேவர்களும் மனம்வாடிடவேமுன்னம்.(வா.).

சரணங்கள்.

மின்னற்கொடியோவென வெண்ணிமனமுருக
சின்னஇடையுமேரு வென்னஇருஸ்தனமும்
அன்னப்பேடையொற்ற அசைந்தநடைநடந்து
அன்புடன்பாதத்தின் அம்சம்தனைப்பிடித்து

சா சநிதபமா கமகமிதநி
கா கதமரிகா கமம கநிசதபா
தீம்திடதஜெனு ததிங்கிணத்தோமென
தீம் திடதஜெனு தித்தில்லாமென. (வா.)

## நடனப்பெண் விருத்தம்.

அண்ணலேயோற்றி அயோத்திநாடாளும்
செண்ணலேவுன்றன் திருவடிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மஹாராஜனே போற்றிபோற்றி.



நடனப்பெண் தரு இராகம் உசேனி ; தாளம் ரூபகம்.

பல்லவி.

இன்னமோடிசெய்வதேனையா அரிச்சந்திரராஜே

அநுபல்லவி.

மன்னவா என்றன் மையல்தீர்க்க
மனங்கனையா தேதோகாணேன். (இன்ன.)

சரணம்.

நீரனா திவ்வியரூபனே - இதோயிதோ
தேடிவந்தேன் பாருந்தாபனே
மாரன்பாவி கணையைத்தாங்கி
மடக்கிருன் இனித் தாளேன்வேந்தே. (இன்ன.)

சுந்தரமாலைபூண்டமெய்யனே - என்றன்பேரில்
இந்தகோபம் ஏனேஐயனே
கந்தமாமலர் தாக்கிரேகம்
கசிந்துகளையு மீறுதையோமோகம். (இன்ன.)

பாதமும்பணி கின்றேன் சீலனே - உமக்குயேது
பாதகஞ்செய்தேன் நானும்லோலனே
மாதரசம் பெருகிமெத்த
மனமுஞ்சோப மாகுதையனே. (இன்ன.)

## அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அன்பனேகொலுவின்முன்னே
அப்பனேநடனஞ்செய்த ஆரிழைமனங்களிக்க
அப்பனேபொன்பட்டாடை அனைத்தையுமளித்தேநீதான்
அப்பனேவிடுதியேக அனுமதிபுரிகுவாயே.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி, இந்த நாட்டியப்பெண்ணிற்கு வேண்டிய வெகுமதிகொடுத்தனுப்புவாய் மந்திரி.

## கட்டியக்காரன் விருத்தம்.

அயோத்தியன் வளைவகரு
அவனியில் வெகுதீர்த்தங்கள்
வியோத்திகளான யாத்திரை
வேதியர் வருகின்றுரோ.

### வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, அரிச்சந்திரமஹாராஜனுடைய திருக்கொலுவிற்கு உத்தமயாத்திரைப்பிராமணுள் வருகிறவிதங்காண்க.

---

யாத்திரைபிராமணுள் வருகிற தரு இராகம்–தனியாசி. தாளம்–அதி.

பல்லவி.

யாத்திரைவேதியர் வந்தார் – அயோத்திநாடி
யாத்திரைவேதியர் வந்தார்.

அநுபல்லவி.

மாத்திரைப்பொழுதாகிலும்வேற்றுமைசெய்யாமல்மனம்
ஏத்தியேசிவஸ்தலங்கள் நேத்தியாய்தெரிசித்திடும். (யா.)

சரணங்கள்.

உலகிலுள்ளபல உசிததீர்த்தங்களாடி
உம்பர்மகிழும்வெகு உன்னதக்ஷேத்திரங்தேடி
கலைக்கியானஅருள்பாடி கருதிபிரம்மத்தைநாடி
காலனணுகாமலே சாலவேஅருள்பெற்ற. (யா.)

வேதமென்பதிலுள்ள மேன்மைதன்னைப்படித்து
விண்ணோர்மகிழும்தீர்த்தம்வெகுவாய்ஆடிமுடித்து
காதசதினைவனைதக் கருதாமலேஅடித்து
கயவர்கள்நேசமதை கண்பாராமல்கடித்து. (யா.)

தேசதேசாதிமன்னர் திகழ்கொலுமுகங்கண்டே
தீர்க்காயுசாய்வாழச் செப்பிஆசிகள்விண்டே
ஆசனவிதிமுறை அனைத்தையுங்கைக்கொண்டே
அயோத்தியன்மகிழ அன்புடன்காணவென்றே. (யா.)



## அரிச்சந்திரன் விருத்தம்.

நதிபுனைநீலகண்டன் நாட்டினிலமைத்தவேத
விதிமுறையுணர்ந்தேதிவ்விய வேள்விசெய்பவரேபோற்றி
கதியெனக்களிக்கவேண்டி கருதியிங்குற்றிருங்கள்
பதியேதோ அடியேன்காணப் பகருவீர்பாதம்போற்றி.

### வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே, என்குலஞ்செய்தபுண்ணியத்தினால் இங்குவந்திர்கள்தாங்களிருக்கும் திவ்வியதேசமெதுவோ அருள்புரியவேண்டுமெசுவாமிகளே.

## யாத்திரைப்பிராமணுள் விருத்தம்.

பருதியின்மரபில்வந்த பண்பனேஆசீர்வாதம்
தருமத்தைக்குறைவில்லாமல்தழைப்பிப்போய்ஆசீர்வாதம்
பெருமையாய்லோகமன்னர் பேணிடும்பதியேயுன்றன்
அருமையாஞ்செங்கோலோங்க அரிச்சந்திராஆசீர்வாதம்;

### வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம், மஹாராஜனே.

## யாத்திரைப்பிராமணுள் விருத்தம்.

அதிபதிஅயோத்தியாண்ட அன்பரும்திரிசங்கின்ற
மதிபுனைஅரன்பதத்தை மறவாமல்செங்கோல்தாங்கி
கதிபெறபிதுர்க்களெல்லாம் கனமுடன்அரசுசெய்யும்
பதிஅரிச்சந்திரனை பண்பனேவாழிவாழி.

### வசனம்.

வாழிவாழிஅரிச்சந்திரமஹாராஜனே வாழி.

### அரிச்சந்திரன் வசனம்.

இந்ததிவ்விய ஆசனங்களின்மேல் வீற்றிருக்கப்பிரார்த்திக்கின்றேன் சுவாமிகளே.

### யாத்திரைப்பிராமணர் வசனம்.

சந்தோஷமப்பா அப்படியேயிருக்கின்றோம் மஹாராஜனே.

### யாத்திரைப்பிராமணர் விருத்தம்.

எந்தவூரென்றுகேட்ட இறைவனே அயோத்திமன்னு
சுந்தரமுடைய அந்த சொல்லுகாம்பிலிவாழ்வோர்
வந்தோர்கருமம்நீங்க வகையுளயாத்திரைவந்தோம்
உந்தனற்கீர்த்திகேட்டே உனைக்காணவந்தோம்வேந்தே.

### வசனம்.

அரசனே, நாமிருப்பது காம்பிலிதேசம் புண்ணியதீர்த்தங்களாடவந்தோம் உனதுபெருமையைக்கேட்டு கண்டுபோகவந்தோம் அரிச்சந்திரமஹாராஜனே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

இன்னிலந்தனிலேயுள்ள எழிலுறுஸ்தலங்கள்தீர்த்தம்
வன்மையாயாடிதேச வளப்பமுமுணர்ந்தேவந்தீர்
என்னதோரதிசயங்கள் எங்கெங்குமேதுகண்டீர்
பன்னவேயடியேன்கேழ்க்கப் பண்புடன்பகருவீரே.

### வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே, நீங்கள் யாத்திரைசெய்த விடங்களில் யேதாகிலும் அதிசயங்கண்டிருந்தால் தெரிவிக்கவேண்டும் சுவாமிகளே.

### யாத்திரைப்பிராமணர் விருத்தம்.

காசிதொட்டிதற்குத்தெற்கே கன்னியாகுமரிமட்டும்
பூசிததீர்த்தமாடிப் புகழ்பெறுஸ்தலஞ்சேவித்தோம்
மாசிலாமதிதயேந்திரன் மாதவஞ்செய்துபெற்ற
நேசியினழகைக்கண்டோம் நிகழ்த்தவுமாகாதப்பா.

### வசனம்.

கேளும் மஹாராஜனே, காசிமுதல் கன்னியாகுமரியளவுமுள்ள ஸ்தலம் தீர்த்தமெல்லாம் ஆடிவந்தோம் ஆனால் மதிதயன்பெற்ற மகளுடைய அழகைப்போல எங்குங்கண்டறியோம் வேந்தனே.



### அரிச்சந்திரன் விருத்தம்.

மாதொன்றுகண்டோமென்றீர் மறையோரே அவள்பேரென்ன
மாதுவின்ரூபமென்ன மணமுண்டோவில்லையோமற்றும்
மாதுவின்தந்தையாரோ வண்ணமாயெனக்குரைத்தோற்ற
மாதுவின்குணத்தையெல்லாம் வகையுடனுரைசெய்வீரே.

### வசனம்.

சுவாமிகளே, நீங்கள் சொன்னபெண்ணிற்கு மணமாய்விட்டதா? அவளுடையபெயரும் ரூபமும் நடக்கையும் அவள்தந்தையின்பெயரும்விளங்கத்தெரிவிக்கவேண்டும் சுவாமிகளே.

### யாத்திரைப்பிராமணர் வசனம்.

அப்படியானால் எங்களுக்குத்தோன்றிய மட்டும் சொல்லுகிறோம் கேளும் ராஜனே.

---

### யாத்திரைப்பிராமணர் அகவல்.

சொல்லுவோங்கேளாய் துரைமதிதயேந்திரன்
கல்லுருகிடவே கைலையன்பதத்தை
நாடியேபெருந்தவம் நலமுடனியற்ற
ஓடியேவந்தவன் உளமதுகளிக்க
மாததுபிறக்க வரமதுஅளித்தான்
ஓதவுமெங்களால் ஒக்குமோஅரசே
சந்திரனைப்பழிக்கும் தனித்திருமுகமும்
தந்தமோமுத்தைத் தானொடுக்கிடுமே
கண்களோகெண்டையைக் கருதியேபழிக்கும்
விண்ணொளிவில்லென விளங்கிடும்புருவமும்
நாசியோகுமிழை நலமுடன்மாற்றும்
வாசனைமொழியோ வளர்குயிலொக்கும்
கூந்தலால்மேகங் குறைவெனக்காட்டும்
சாந்தனேகுணமோ சாற்றவும்போகா
கழுத்ததுவலம்புரி கைப்பிடியிடையினுள்
வழுத்தவுயாமோ மதனனுமயங்கிட

பொற்கிண்ணமொத்த பூவையின்குசங்கள்
விற்பனுகண்டவர் மெய்குலைவயரே
நடையதுஅன்னம் நாணிடுங்கண்டால்
துடையடிவாழை சொல்லுவோமன்று
வேதமுறைமையும் வெகுவெகுநீதியும்
ஓதருபுராணமும் உணர்ந்தவள்கண்டாய்.
மன்னரிலவளை மணர்வனேசகல
புண்ணியவானுகும் புனிதனேவேந்தே
சந்திரவதியெனத் தனிப்பெயருடையவள்
சுந்தராஅவள்நிலை சொல்லவும்போமோ
எங்களாலியன்றதை இயம்பினேமன்றி
மங்களாவதியின் வடிவதைச்செப்ப
வல்லவாஆயிரம் வளருநாவுடையவன்
சொல்லவும்அரிதெனத் தோணுவாய்அரசே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தணமாரேநீங்கள் அறிவித்தமாதின்பேரில்
அந்தணமாரேநானும் அளவிலாமோகங்கொண்டேன்
அந்தணமாரேதீர்க்க அடியனும்மாறுகாணேன்
அந்தணமாரேநெஞ்சம் அனல்மெழுகானேன்கண்டீர்.

### வசனம்.

கேளுங்கள் ஐயமாரே, அந்தசந்திரவதியின்பேரில் மெத்தஆவலானேன் மனமுருகுகின்றது நீருமார்க்கமேதோ அறியேன் சுவாமிகளே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

மன்னனேநாங்கள்சொன்ன மாதின்மேலுனக்கேகாதல்
மன்னனேபெருகுமாகில் வருத்துவாய்சங்கையின்றி
மன்னனேநாங்கள்சென்றே மதிதயனுடனேபேசி
மன்னனேவுனக்கேசந்திர மதிமாலைசூட்டச்செய்வோம்.

### வசனம்.

கேளும்ராஜனே, உனக்கு அவ்வளவு ஆவல்பெருகுமாகில் நாங்கள்சென்று மதிதயனுக்குபோதித்து சந்திரமதி உன்னை விவாகம்செய்யும்படிக்கி முடிவுசெய்வோம் மஹாராஜனே.



## அரிச்சந்திரன் விருத்தம்.

செப்பவேசொன்னீரென்னை திகழ்பெறுஐயமாரே
எப்படிசகிப்பேன்மோகம் ஏந்திழைதன்னைப்பெற்ற
அப்பனுமதிதயேந்திர அரசன்பால்தாங்கள்சென்றே
இப்பவேஎனக்குமாலை யிடத்திடஞ்செய்வீர்போற்றி.

### வசனம்.

சுவாமிகளே, மோகமீறுது தாங்களிப்பவேசென்று சந்திரமதியென்னை மாலையிடும்படிக்கி திட்டஞ்செய்து காப்பாற்றவேண்டும் ஐயமார்களே,

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

வேந்தனேஅயோத்திராஜே விடுவிடுகிலேசந்தன்னை
வேந்தனேஅரைநொடிக்குள் வேண்டியவாறுபோல
வேந்தனேகன்னிதன்னை விரைவினிலுனக்கேமாலை
வேந்தனேசூட்டச்செய்வோம் விடைதாராய்வாழிவாழி.

### வசனம்.

கேளும்ராஜனே, அந்தச்சந்திரமதியுனக்கே பாரியாகச்செய்விப்போம் நாங்கள்போகவிடைதாரும் வேந்தேநீவாழிவாழி.

## அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரேதகைமைவாய்ந்த அறிவினிலுயர்ந்தஎன்றன்
ஐயரேஸ்நானஞ்சந்தி அனுஷ்டிக்கும்பொருளே நீங்கள்
ஐயரேஅங்குசென்றே அரசனையிணங்கச்செய்தே
ஐயரேவருவிருங்கள் அடிபார்த்துநிற்பேன்கண்டீர்.

### வசனம்.

சுவாமிகளே, நீங்கள் மதிதயராஜனிடத்தில்பேசி நிர்மானித்துவருமிடைவரையில் உங்கள் வழியெதிர்பார்த்திருப்பேன் வேதியர்களே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

மன்னனேநாங்கள்சென்றே மதிதயன்மகள்தானுன்னை
மன்னனேமணமச்செய்வோம் மகிழ்வுறுவேந்தேவாழி.

வசனம்.

அரிச்சந்திரமஹாராஜனே, நாங்கள் போய்வருகிறோம் சந்தோஷமாயி ரும் உம்முகோரிக்கையை யீடேற்றுவோம் ஆசீர்வாதம்.

---

## பொது விருத்தம்.

அந்தணர்கள் விடைபெற்று ஏகமன்னன்
அரன்மருகன்கனேயாலே நொந்துமெத்த
சந்திரமதிசந்திரமதி யென்றேயெண்ணித்
தளருவான்விரகமிஞ்சிக் கிளருவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, யாத்திரைப்பிராமணன் போனபின்பு அரிச்சந்திரமஹாராஜன் சந்திரமதியம்மனையெண்ணியெண்ணி விரகதாபப்படுகி றவிதங்காண்க.

---

அரிச்சந்திரன் தரு இராகம்-பைரவி, தாளம் - ஆதி.

பல்லவி.

மன்மதனேபொறுப்பாய் - என்மீதிற்கணை
மாறித்தூரமயிருப்பாய்.

அநுபல்லவி.

உன்மதமுன்னொருநாள் ஒடிக்கிப்பரமசிவன்
என்மீதில்வன்மம்வைத்தே யிப்படிச்செய்யத்தகுமோ. (ம.)

சரணங்கள்.

வேதியருரைக்கக்கேட்டே - மனதுருகி
விதவிதவுண்டியைவிட்டே
பாதிமதியோனையந்த பாவைசந்திரவதியானே
பாரியாயெனக்களிக்கக்கோரியேஉருகும்வேளை. (மன்.)

இல்லறமுடைய பேரை - அலவோநீதான்
வல்லமைசெய்குவாய் போரை



நல்லதிதுவுன்காலம் நாரிசந்திரவதிவாய்க்கில்
நாணங்கொள்ளவுன்னையெங்கும்வீணாகச்செய்வேனிப்போ()

காலமிது உனக்கன்றே - யெனைவருத்தும்
கோலமினியாகாதென்றே
சிலமுளமாது அந்த தேவிசந்திரவதிவரில்
செப்புவேன்உனக்கே ஒப்புவாயித்தருணத்தில். (மன்.)

## சத்தியகீர்த்தி விருத்தம்.

வேதத்தின்வாக்கியமென்ன விளங்குமெய்காவைப்பூண்ட
போதத்தினுயர்ந்தவங்கள் புனிதரேஅரசேகேளும்
சீதளச்சந்திரன்வீசத் தென்றலுஞ்சுடுகுதென்றீர்
வாதனைமறையோர்சொன்ன வாக்கியமெய்யேசொல்வீர்.

வசனம்.

கேளும்ராஜபரமேஸ்வரா, வேதியர்கள்வந்து சொல்லிப்போன வார்த்தையை பொய்மெய்யென்று எப்படியறிந்தீர் என்றுண்டவனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அழகுநற்குணங்கள்பூண்ட
அப்பனேமதிதயன்தான் அளிப்பனோஎனக்குத்தானே
அப்பனேபாரியாக அமைவதும்என்றோமோகம்
அப்பனேமீறுதிங்கே அணையும்வாறறிகிலேனே.

வசனம்.

அப்பாமந்திரி, அந்தசந்திரவதி யெனக்குக்கிட்டுவாளா? மோகமீறுது என்ன செய்வேனப்பா சத்தியகீர்த்தி.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

மனதிற்குமனமேசாக்ஷி வண்மையுமெய்யேஐயா
மனமகிழுறவேசந்திர மதியைநீர்சேர்வீர்சேர்வீர்
மனமுடனவர்போயந்த மதிதயன்கொண்டதிவ்விய
மனமதுஅறிந்தேயிங்கே வரமட்டும்பொறுப்பீர்வேந்தே.

வசனம்.

சுவாமி, மஹதிற்குமன்ஞ்சாகூடியென்பதாசியே மதிதயராஜன் என்னத்தை அந்தவேதியர்கள் தெரிந்துவருகிறவனாயில் பொறுப்பீர் ஆண்டவனே.

---

## பொது விருத்தம்.

அமைச்சனுமுரைக்கக்கேட்டு
அன்னா லுந்தணிவுகொண்டார்
அமைச்சருமதிதயேந்திரன்
அணிகொலுமுகம்வாராரோ.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே,கன்னமாபுரியையாளுகின்றமதிதயமஹாராஜன் கொலுவிற்குவருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

## மதிதயராஜன் தரு.

இராகம் மோகனம்–தாளம் ஆதி.

பல்லவி.

மன்னர்மன்னர்கள்புகழ் - மன்னன்மதிதயேந்திர
மகாராஜனிதோவந்தான் - கொலுவிருக்க
மதிதயராஜன் வந்தான்.

அநுபல்லவி.

நன்னகர்குடிவாழ நாட்டில்மும்மாரிவிழ
நம்பனிருபதத்தை நாளும்பணியுந்திவ்விய
நாட்டோர்புகழுந் தீரன் - தவ
வீட்டோர்மகிழுஞ் சூரன் - குல
நயமுளவாசகன் ஜயமுளகேசவன்
நாளும் மேலும் சாலும் வாழும் ஆளுலக. (மன்.)



சரணம்.

தித்தித்தோ மென்றுடும்
சிவனடி நாளும்பாடும்
திவ்விய குணத்தில்மிக
ஒவ்விய வுயுதித்தோன்
சத்தியுடனே செங்கோல்
சாதித் லேந்திமுடியில்
கதிரோ னொளியைமாற்றும்
கனத்தகிரீடந் துலங்க
கயவர்கண்டு ஓட இருபுறம்
ஜயமாய்க்கட்டியம் பாட வுசித
மயலார்காட்டிய மாட குடிகள்
பயத்தைவிட்டே நட எங்கும்
கண்டவர் நின்றவர்
சென்றவர் மண்டலர்
காண வாக்குமனம்
பூண வேற்றரசர்
நாண தன்மயமாய்த்
தோண வுலகமெலாம்
தன்னொளியாகவே விண்ணவர்மகிழ்ந்திட
நன்னெறிநீதியாய் இன்னுலகாண்டிடும். (மன்.)

## மதிதயராஜன் போற்றி விருத்தம்.

வையகந்தனிலேநீதி வளர்ந்திட அறம்விளங்க
துய்யவேமண்ணின்மீது தொகுத்துமும்மாரிபெய்ய
நொய்யுரலகற்றிவேத நொடித்திடயெக்கியமோங்க
ஐயனேகைலைவாழ்வே அருள்செய்வாய்போற்றிபோற்றி.

## கட்டியக்காரன் விருத்தம்.

பார்புகழுகன்னமாபுரியாளும்எந்தையே பார்த்திபாவெகுபராக்கு
பண்புபெறுகீர்த்திபுனைவேந்தனேநீதியுளபாக்கியனேவெகுபராக்கு

கார்முகிலைவிதிமுறைதன்பிசகாமல்பெய்விக்குங்கர்த்தனேவெகுபராக்கு, கண்டபகைவோர்களுங் கொண்டமதம்விட்டோட கனைதொடு
[ப்போய்பராக்கு.

### மந்திரி விருத்தம்.

மண்ணுளோர்போற்றும்வேந்தே மகதநாடாளுங்கோவே
திண்ணமாமுனிவர்தாமுஞ் செயுந்தவந்தனைவளர்த்தே
வண்ணமாம்தருமம்ஓங்க வளர்செங்கோல்புரியுமெந்தன்
அண்ணலேமதிதயேந்திர அரசனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மஹாராஜனே போற்றி.

### மதிதயராஜன் தேசவிசாரணை.

ராஜ.

பொன்னுலகையாள்கின்ற மன்னனதுசெங்கோலும்
புகழாய் நடக்கின்றதா?

மந்திரி.

புனிதனே இந்திரன் ஆளுகைக்குறைவின்றி
புகழாய் நடக்கின்றதே.

ராஜ.

எண்ணரும்முனிவர்கள் செய்கின்றஹோமங்கள்
இனிதாய்நடந்தேறுதா?

மந்திரி.

ஈசனேயோகிகள் நடத்திடும் யெக்கியங்கள்
எதேஷ்ட்டமாய் நடந்தேறுதே.

ராஜ.

வண்ணமுள தேசத்தில் மாதமும்மாரியும்
மாறாமல் பெய்கின்றதா?

மந்திரி.

வாணிபுகழ் தீரனே காலமுறைதவறாமல்
மாரியும் பெய்கின்றதே.



ராஜ.

தண்ணொளி விளங்கவே தேவாலயத்தினில்
தான்பூஜைசெய்கிறாரா?

மந்திரி.

தயாபரா குறையின்றி ஆலயங்களில் பூஜை
தடையிலாமற்செய்கிறார்.

### மதிதயராஜன் விருத்தம்.

நன்னருமதிமிகுந்த நலமுள்மந்திரிகேளாய்
என்னருமகள்தனக்கே எவ்வனகாலம்வாய்த்தும்
பன்னரும்விவாகஞ்செய்யும்யாங்கதையோசிக்காமல்
இன்னமுமிருப்பதாமோ யியம்புவாயியம்புவாயே.

வசனம்.

கேளுமப்பாமந்திரி, எனது தவப்புத்திரி பருவமடைந்தது தெரிந்தும் விவாகத்திற்குமுயற்சிசெய்யாமலிருப்பது யேதுகாரணம் சொல்லுவாயப்பா மந்திரி.

### மந்திரி விருத்தம்.

ஜெகம்புகழ்கன்னிநாட்டை சிருடனரசுசெய்வோய்
அகமகிழ்ந்திடநீர்பெற்ற அழகுளபுத்திரிதானும்
தகைமையுள்ளெவர்னகாலம் தானுற்றுளென்றேமெத்த
மகபதிதுயரமாமோ மணஞ்செய்யயோசிப்பீரே.

வசனம்.

கேளும்ராஜனே, உமது புத்திரிபருவமடைந்ததற்காக வியசனப்படப்போமோ சீக்கிரத்தில் விவாகமுடிக்கத்தகுந்த முயற்சிசெய்வீர் அரசே.

### மதிதயன் விருத்தம்.

மந்திரியுன்றன்வார்த்தை மகிழ்வுடனெப்பலானேன்
மந்திரியெனதுபுத்திரி வடிவுள அழகுக்கேற்ற
மந்திரிபுருஷன்வேண்டும் வழுத்திடச்சூத்திரத்தை
மந்திரிஅறிந்தோனிந்த மண்ணின்மீதாரோகானேன்.

வசனம்.

அப்பாமந்திரி, என்மகள் அழகுக்கேற்ற புருஷனாகவும் அவளிடமிருக்கு ந்திவர்கசியத்தைத்தெரிந்து சொல்லத்தக்கவனாகவும் இருப்பவனாரோ தெரி யாமல் தயங்குகின்றேனப்பா மந்திரி.

## மந்திரி விருத்தம்.

சந்தேகங்கொள்ளப்போமோ தயாபராநீதான்பெற்ற
சுந்தரமகள்தனக்கே சுருக்கினில்விவாகமாக
அந்தராஙிதனான ஆண்டவனருளேசெய்வார்
இந்தபுன்துயரம்விட்டே ஏங்காமலிருப்பீர்வேந்தே.

வசனம்.

கேளுமென்னாண்டவனே, நீர்பெற்றபுத்திரிக்குக் கலியாண மாகும்படி பரமசிவன் கடாக்ஷிப்பார். உமது துயரத்தைநீக்குவீரரசே.

---

## பொது விருத்தம்.

வேந்தனுமகள்தனக்கே விவாகமுமிலையேயென்று
சாந்தமும்போக்கிருக்க சாகரமிருந்தவேளை
வேந்தனுமரிச்சந்திரன்தன் விடைபெற்றஐயமார்கள்
சாந்தமாய்மதிதயேந்திரன் தனிக்கொலுமுன்வந்தாரே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே, சந்திரவதியின் கலியாணத்தைமுடிக்கக்காலம் வருமோவென்று சிந்தித்துக்கொண்டிருக்கும் மதிதயராஜன் கொலுவைநா டியாத்திரைப்பிராமணன் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

---

யாத்திரைப்பிராமணன் தரு ராகம், கலியாணி தாளம், சாப்பு.

பல்லவி.

அந்தணர்வந்தாரோ அயோத்திவிட்டே அந்தணர்வந்தாரோ.

அநுபல்லவி.

இந்தலோகம்புகழ சந்திரவதிதனக்கே
சுந்தரமணமாலை சூட்டிடச்செய்வதற்கே. (அந்த.)



சரணம்.

அண்டத் தவனைப்பாடி - மதயன்
அமர்ந்த வளவைத்தேடி
கொண்ட எண்ணத்தைநாடி - அச்சந்திரன்
கொள்கை முடியவோடி
என்றிட்டதந்தைக்கே இறைவன்பெருமைசெப்பி
யிணங்கச்செய்தேவிவாகம் இக்ஷணம்முடித்திட. (அந்த.)

## மதிதயராஜன் போற்றி விருத்தம்.

ஆதியாம்பரத்தைநாளும் அறிவுடன்உணர்ந்தசெ
வேதியமாரேதங்கள் மெய்யடிபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி வேதியர்களே போற்றி.

## யாத்திரைப்பிராமணன் விருத்தம்.

கன்னமாபுரியையாளும் கனமுளோய் ஆசிர்வாதம்
உன்னதமகளைப்பெற்ற வும்பனே ஆசிர்வாதம்
நன்னிலைகருமமெல்லாம் நயமுடன்முடிப்பாயப்பன்
சென்னியைமறவாத்திவ்விய நீரனே ஆசிர்வாதம்.

வசனம்.

ஆசீர்வாதம் மதிதயராஜனே, நீர்கோரிய கோரிக்கைகள் தடையின்றி நிறைவேறுமப்பாராஜனே.

## மதிதயராஜன் விருத்தம்.

அருமறைநாலுவேதம் அனைத்தையுந்தெளிவதாக
பெருமையாயுணர்ந்தேயாரும் பேணிடக்கூத்திபூண்ட
தருமரோநீங்கள்வாசம் தங்கிடும்நகரம்யாதோ
கிருபஞ்செய்தருள்வீரென்றன் நெஞ்சதுகுளிரத்தானே.

வசனம்.

சுவாமிகளே நீங்கள் வாசஞ்செய்யும்படியான நாடு எதுவோ விபரமா ய்ச் சொல்லவேண்டியது சுவாமிகளே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

வேந்தனேகேள்காம்பிலி யேவியேவாழ்வோர்நாங்கள்
வேந்தனநதிகள்யாத்திரை விரும்பியேகுமரிமட்டும்
வேந்தனவுள்ள திவ்விய விநோதக்ஷேத்திரங்கள்பார்த்தே
வேந்தனவுனையுங்காண வேண்டியிங்குற்றோம்வாழி.

### வசனம்.

கேளும்மஹாராஜனே, நாங்களிருப்பது காம்பிலிதேசம் யாத்திரைவந்தோம் கன்னியாகுமரிமட்டும் உள்ளநதிகளும் க்ஷேத்திரங்களும் தரிசித்து வந்தோம் உம்மையுங்கண்டுபோகஇங்குவந்தோம் மஹாராஜனே.

## மதிதயராஜன் விருத்தம்.

வேதத்தினுணுக்கங்கண்டு வேள்விசெய்விப்போரான
நாதனேநீங்களென்றன் நாட்டில்வந்ததுவேபாக்கியம்
ஏதெதுகருமம்நாடி யிங்குநீருற்றீர்தப்
பாதகனறியவேண்டிப் பகருவீர்பண்பினோரே.

### வசனம்.

சுவாமிகளே, நீங்கள் என்னாட்டில் வந்ததுவே மஹாபாக்கியம் தாங்கள் வந்தகாரியத்தை தெரிவிக்கவேண்டும் வேதியரே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

உன்மனமகிழவிண்ணின் உம்பரும்புகழ்கொண்டாடும்
நன்மையைநாடிவேந்தே நாங்களும்வந்தோம்காண்பீர்.

### வசனம்.

கேளும் மஹாராஜனே, தேவர்களு மானிடர்களு நீரும் மகிழும்படியானவொருசுபகாரியத்தை நாடிவந்தோம் வேந்தனே.

### மதிதயராஜன் வசனம்.

அப்படியா வெகுசந்தோஷம் வேதியர்களே,

## மதிதயராஜன் விருத்தம்.

எங்கெங்குசென்றீர்நீங்கள் யேதேதுகண்டீரையா
அங்குள அதிசயத்தை அடியனுக்குரைசெய்வீரோ.



### வசனம்.

சுவாமிகளே, நீங்கள் எங்கெந்த தேசங்கள் பார்த்தீர்கள் அங்கேயேதாகிலுமதிசயங்களைக் கண்டிருந்தால் எனக்குச் சொல்லவேண்டும் வேதியர்களே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

அதிசயமொன்றுகண்டோம் அயோத்தியையாளுமந்த
மதிமுகமுடையவேந்தன் மன்னவாமன்னனான
நிதிபெறும்அரிச்சந்திரன்தன் நெறியுளசத்தியங்கண்டே
மதிதயாவுனக்கேசொல்லி மருகனாய்ச்செயவேவந்தோம்.

### வசனம்.

கேளும் மஹாராஜனே, நாங்கள் கண்டதில்அயோத்தியையாளும் அரிச்சந்திரன் அழகும் சத்தியமும் நீதியும்நெறியும் கண்டோம் அவனையுனக்கேமருமகனாகச் செய்யவேண்டி வந்தோம் அரசனே.

## மதிதயராஜன் விருத்தம்.

நல்லறிவுடையவேத நான்மறைதெரிந்தோரான
வல்லவர்நீங்களென்றன் மகளிடமணத்திற்கேற்ற
நல்லவனுமோயெந்த நாட்டினோனநடக்கையாதோ
வல்லவாவெனக்குத்தோற்ற வகையுடனுரைசெய்வீரோ.

### வசனம்.

ஐயமாரே யென்மகள் குணத்திற்கேற்ற புருஷனைக்கண்டோமென்றீர் அவனுடைய குணாதிசயங்களைத் தெரியவியரமாய்ச் சொல்லவேண்டும் சுவாமிகளே.

## யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

தினமுந்தன்குருவின்வார்த்தை தெருமல்நடக்குந்திரன்
தனவந்தன்ரவிகுலத்தோன் தாரணிவேந்தர்வேந்தன்
மனமகிழ்ந்தும்வாழும் மருவாமல்நீங்கிவாழ்வோன்
உனதருமகளுக்கேற்ற வுத்தமபுருஷன்காண்பாய்

### வசனம்.

கேளும் மஹாராஜனே, உத்தமன் சத்தியவான் குருவிசுவாசன் சக்கிரேஸ்வரன் உன்மகளுக்கு அவனேதகுந்தபுருஷன் கண்டாய்வேந்தனே.

## மதிதயராஜன் விருத்தம்.

பொங்கமாங்கீர்த்தியுள்ளோன் பொய்யுரையாதமெய்யன்
துங்கவனமுகில்மாரன் தூய்மைகொள்வீரன்சூரன்
மங்களமுடையவென்றன் மகளுக்கேதருத்தோனென்றீர்
சங்கரனுடையருளும் தானுணர்பவனேசொல்வீர்.

**வசனம்.**

சுவாமிகளே, அழகன் சத்தியன் வீரன் என்றும் என்மகளுக்குத்தகுந்தவ னென்றும் சொன்னீர்கள் சங்கரனல் சந்திரவதியிடம் விளங்கும் ரகசியத்தைக் கண்டு சொல்லுவனே ஐயமாரே.

## யாத்திரைப்பிராமணள் விருத்தம்.

ஜகமதுமதிக்கக்கீர்த்தி தான்பெற்றராஜேகேளாய்
அகமதுமகிழஐயன் அனுக்கிரகம்புரிவான்கண்டாய்
மகளையேவிவாகஞ்செய்ய மணவாளனவனேயாகும்
இகபரமகிழருளும் இனிதுடனுரைப்பான்வேந்தே.

**வசனம்.**

கேளாய் அரசே, அந்த அரிச்சந்திரன் உனக்கே மருமகனாகும்படி பரம சிவனருள் செய்வார். நீயொன்றுக்கும் யோசிக்காமலிருப்பாய் வேந்தனே.

## மதிதயராஜன் விருத்தம்.

திட்முடன்சொன்னீரந்தகிரிசங்குமைந்தன்தானும்
திடமுடன்மருகனாகச் சிக்கும்வாறெதுவோசுவாமி.

**வசனம்.**

சுவாமிகளே, அந்த அரிச்சந்திரன் எனக்கு மருகனாகும்படியான வகை யறியேனே வேதியர்களே.

## யாத்திரைப்பிராமணள் விருத்தம்.

வேந்தனேயெங்கள்வார்த்தை வெகுவாகநம்பிநீர்தான்
வேந்தனேஅரசர்க்கெல்லாம் விரைவினில்மணத்தின்ஓலை
வேந்தனேயளிப்பாயந்த வீரனும்அயோத்திமன்னன்
வேந்தனேவருவாங்கள் வேண்டியவாறுசெய்வோம்.



**வசனம்.**

கேளும் ராஜனே, சந்திரவதிக்குசுயம்வரமென்று ராஜராஜாக்களுக்கும் மணவோலையனுப்புவாய். அந்த அரிச்சந்திரமஹாராஜன் இங்கேவரவேண்டி யமுயற்சிசெய்ய நாங்கள்போய் வருகிறோம் வேந்தே.

## மதிதயராஜன் விருத்தம்.

ஐயரேவுங்கள்வாக்கை அடியேனுந்தடுக்கமாட்டேன்
ஐயரேசுயம்வரமென் றவனியில்முரசடிப்பேன்
ஐயரோஅரிச்சந்திரன்தான் அடியேன்தன்மருகனாக
ஐயரோசெய்வீருங்கள் அடிபணிந்திட்டேன்போற்றி.

**வசனம்.**

சுவாமிகளே, தங்கள் கருத்தின்படி சுயம்வரம்சாட்டுகின்றேன் அந்த அரி ச்சந்திரமஹாராஜன் எனக்கு மருமகனாகும்படிக்கு தாங்கள் வேண்டியபிரய த்தனஞ்செய்து காப்பாற்றும்படி போற்றிசெய்கின்றேன் போய்வருவீர்கள் வேதியர்களே.

**யாத்திரைப்பிராமணள் வசனம்.**

அப்படியே செய்விக்கின்றோம் போய்வருகின்றோம் சுபம் சுபம் வேந் தனே.

---

## பொது விருத்தம்.

மதிதயன்சபையிற்கேட்ட வாறெலாமுரைக்கவேண்டி
அதிமகிழ்வுடனேதோழி அரசிமுன்தோன்றுவாளே.

**வசனம்.**

கேளுங்கள் சபையோர்களே, மதிதயராஜன் முன்நடந்தசங்கதிகளை சந் திரவதிக்குத்தெரிவிக்க தோழிவருகிற விதங்காண்பீர் கனவான்களே.

## தோழி விருத்தம்

மங்கையர்க்கரசேபோற்றி மான்மயிலொளியேபோற்றி
சங்கையில்லாத்தவத்தால் தானுதித்தவளேபோற்றி
எங்களாண்டவன்மகிழ்ந்தே யீன்றதோர்மாதேபோற்றி
தங்கத்தைப்பழிக்குஞ்சோதி சந்திரவதியேபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யென்து ராஜாத்தியாகிய சந்திரவதித்தாயே நின்னடிக்கே போற்றிபோற்றி.

## சந்திரமதி விருத்தம்.

களிப்புறவென துநெஞ்சங் கனிவுளவார்த்தைசொல்லும்
விளிப்பெருமுலையினுளே மெல்லிநீயெங்குசென்ருய்
தளித்திடுமழைப்போன்ற சவுந்தரவல்லியுன்றன்
சலிப்பென்னவெனக்குத்தோற்ற சாற்றுவாய்சாற்றுவாயே.

வசனம்.

அம்மாதோழி, நீயெங்குபோயிருந்தாய் உனக்கென்னமனக்குறை பயமின்றி சொல்லுவாயம்மா.

## தோழி விருத்தம்

அம்மணிநீதான்கொண்ட அழகுநற்குணத்துக்கேற்ற
அம்மணிமன்னர்மன்னன் அன்புடன்வந்தேவுன்னை
அம்மணிமாலைசூட்டும் அதிசயங்காலமிப்போ
அம்மணிவாய்க்கக்கேட்டேன் அறிவிக்கவந்தேன்தாயே.

வசனம்.

கேளாய்அம்மாசந்திரவதி மன்னர்க்கெல்லாம்மன்னரானவர்வந்து உன்னைக்கலியாணம்செய்யப்போகிறசங்கதிகேட்டுத் தெரிவிக்கவந்தேன்தாயே.

## சந்திரமதி விருத்தம்.

என்னடிதோழிசொன்னாய் இன்னமோர்தரமுரைப்பாய்
மன்னவன்தவத்தால்வந்தேன் வாய்த்தநபருவந்தாலும்
இன்னார்தனிலேவாழு மிளந்தையர்போலநானும்
நன்மையாயிருக்கத்தெய்வ நாடுமோவுரைசெய்வாயே.

வசனம்.

அடி அம்மாதோழி, நானும் நாலு நாட்டுப்பெண்களைப்போல சுகப்பட்டவுளாகுஞண்டாகுமா சொல்லடிபாங்கி.



## தோழி அகவல்.

சந்தோஷமாகவே சாற்றுவேனரசியே
உந்தனற்றந்தையும் உகந்தமந்திரிகளும்
சித்திரச்சாவடி செழுங்கொலுமண்டபம்
நத்தியேவிசாரணை நடாத்திடும்வேளையில்

தேசசஞ்சாரத் தேசிகவேதியர்
வாசவன்கொலுமுன் வந்துமேகண்டனர்
அரசனுமவர்க்கே ஆசனமளித்து
பரமரேயெங்கெங்கு பற்றினீரங்குள

அதிசயம்யாது அடியனுமகிழ்பெற
பதிகளேயிங்கனம் பன்னுவீரெனவே
அந்தணர்மகிழ்ந்தே அறைந்தனரம்மா
சந்திரனைப்பழிக்குந் தனித்திருமுகமும்

மன்மதன்நாணும் வதனமும்அழகும்
சன்மார்க்கவொழுக்கமும் சத்தியநிலைமையும்
வேதவிளக்கமும் வெண்கிரியோன்மகிழ்
சாதனைநிஷ்டையும் தன்மொழிபிசகா

வீரமும்வெற்றியும் வேந்தருக்கடுத்த
சாரமாம்நீதியில் தனைவிடவேறு
மன்னரிலையென வழுத்திடச்செங்கோல்
உன்னதமாகவே உயிர்களைக்காக்கும்

அரசனுமயோத்தி ஆதித்தன்பரமன்
சரசவுல்லாசன் தாஷ்ட்டிகன்சூரன்
திரிசங்களித்த செல்வனுமுணர்வாய்
அரிச்சந்திரனவன்பேர்அண்ணலைகண்டோம்

மனம்தாமகிழ்ந்தே மன்னவர்அங்ஙனே
நினைவதையுன்மேல் நிருத்தியேவந்தோம்
உன்தவப்புத்திரி உயர்சந்திரவதிக்கே
நண்புளபக்குவம் நண்ணியதாலே

சந்திரவதியின் சற்குணஒழுக்கமும்
சுந்தரவடிவமும் சொகுசுறுநடக்கையும்
கண்டவராதலால் கடிதியிங்குற்றோம்
மண்டலாதிபனை மருகனாய்க்கொள்வாய்

என்னவேவேதியர் எந்தையுமகிழ்ந்தே
சொன்னதுசரியே சுந்தரமகளை
மணஞ்செயஅவரும் வருவரோஅன்றி
இனம்வேறுஉண்டோ யெப்படியாகுமோ

என்மகள்கவலை என்றுயிர்நீட்டேறுமோ
நன்மையாம்வாக்கதை நல்குவீரொன்றிட
ஒன்றுக்குநீர்தான் யோசிக்கப்போகா
நன்றுநீர்சுயவரம் நாட்டுவீர்நாங்களும்

அயோத்தியையடைந்தே அரசனையிங்கே
சயோத்தியாய்வருக தான்புரிவோமென
விந்தையாயுரைத்தே விரைவினில்வந்த
அந்தணர்சென்றனர் அம்மணிபோற்றி.

## சந்திரவதி விருத்தம்.

பாங்கியேநீதானிப்போ பகர்ந்ததோர்மன்னர்மன்னன்
பாங்கியேகுணவானென்றே பட்சமாய்மறையோர்வந்து
பாங்கியேவுரைத்தாரென்றாய்பண்புளோன்மகிமைதன்னை
பாங்கியேயெனக்குத்தோன்ற பற்றறவுரைசெய்வாயே.

வசனம்.

அடிதோழி, அந்த வேதியர் சொல்லிப்போனதாக நீ யிப்பொழுது செப்பிய அரசரின் அழகும் பெருமையும் எனக்குத் தெரியப்படச் சொல்வாய் பாங்கி.

---

தோழி-நாத இராகம்-சங்கராபரணம் தாளம் சாப்பு.

பல்லவி.

அந்த அரிச்சந்திரன் அழகைப்படித்துச்சொல்ல
ஆதிசேஷன் தான் வேண்டும் என்தாயே



அநுபல்லவி.

கந்தமலரோன்என்னகருதிப் படைத்தானோதான்
கதிர்குலம்விளங்கிட காவலனாயுதித்த. (அந்.)

சரணங்கள்.

கோடிமதிகளொன்றாய்க் குவிந்தமலர்முகமும்
கோவைமுத்தைப்பழிக்கும் தந்தம்நாசியோவென்றால்
தேடிக்குமிழைமாற்றும் திருநுதல்மூன்றுமந்நாள்
திங்கள்வடிவைப்போக்கும் செல்விநீகூடப்போகும். (அ.)

இருபுஜம்கிரியென எங்குமோர்நடுங்கிட
எடுத்தவில்மாறாமல் ஏவுங்கணையில்சூரன்
மருவேமன்மகன்சௌவம் மடங்கச்சலலாபநாலே
வாசித்தோனுனைக்கூடி மருவவேவருகின்ற. (அந்.)

வேதமதையுணர்ந்தோன் வித்தகன்திருத்தானே
விளங்கிடஅனுதினம் உளமிகும்லையபாரன்
பாதகமென்பதைப் பற்றறவிடுத்தவன்
பாவையேவுன்றனைத் தாவியணையவரும். (அ.)

சத்தியமென்பதைத் தரணியில்நிலையாக
சாற்றிடதருமத்தை தானேபேற்றிடுஞ்சீலன்
நித்தியகருமத்தல் நிபுணனேசந்திரவதி
நீசெய்தபாக்கியம் நேர்மையாருக்குண்டோ. (அந்.)

## சந்திரவதி விருத்தம்.

கனிபலாவாழைதேனும் கற்கண்டுநாநிகமான்
இனிவுளவார்த்தைபேசும் என்னிடசகியேகேளாய்
தனிமையிலுயர்ந்தஅந்த தயாபரனரிச்சந்திரன்தான்
பனிபோலென்துயரம்நீக்கப் பார்ப்பனோவென்னுவாயே.

வசனம்.

அடிஅம்மாதோழி, யென்னுடைய கவலை சூரியனைக்கண்டபனிபோனக்க அந்தஅரிச்சந்திரமஹாராஜன் வருவானோ சொல்லுவாயடி பாங்கியே.

## தோழி விருத்தம்.

அந்தணருரைத்துப்போன அன்புளமொழியினாலே
சந்திரவதியே அந்த தயாபரன்வருவனென்றே
உந்தனின்மனதில்மெத்த வுறுதியைநாட்டுங்தாயே
சுந்தரனருளினாலே சுகமது அடைவாய்அம்மா.

வசனம்.

கேளாய் அம்மா சந்திரவதி, வேதியர்சொல்லிப்போன வுறுதிவாக்கிற்குப் பிசகுவராது உன்கோரிக்கையின்படியே சிவன் கிருபைசெய்வான் தாயே.

## சந்திரவதி விருத்தம்.

தோழிநீசொல்லக்கேளாய் சுந்தரனருளினாலே
தோழிநான்பிறந்தேதிவ்விய சொருகுசுரும்பருவங்கொண்டேன்
தோழிநான்வாடுமெண்ணம் தலைக்கடைக்கைலைவாசன்
தோழிதானருள்செய்வானோ சொல்லுவாய்தோன்றத்தானே.

வசனம்.

அடிதோழி, யெனக்குப்பருவம்வாய்த்து நான்படும்படியானதுன்பம்நீங்கக் கடவுளருள்வருமோ சொல்லடி அம்மா.

---

சந்திரவதி தரு இராகம்-நாட்போதி தாளம் அதி.

பல்லவி.

ஒருநொடியுகம்போல இருக்கையிலேதோழி தென்றல்
வருகுதென்னடிசெய்குவேன்.

அநுபல்லவி.

அருமையென்துரையான அரிச்சந்திரன் இங்குவர
அன்னமேநான்கொண்ட வெண்ணமுமுடியுமட்டும். (ஒ.)

சரணங்கள்.

மெய்யுஞ்சோருதுஎன்றன் கையுமிடைதளர்ந்து
அய்யம்போலென்குஜங்கள் நொய்யுதடிமாதே
செய்யும்வகைகளொன்றும் தெரியாமல்நானிருக்க
தையலேமதன்பாவி தான்புரிவகைச்காணாய். (ஒரு.)



அன்னம்அருந்தமனம் எண்ணமும்விட்டதாலே
சொன்னம்போலொத்தமேனி வண்ணங்குன்றிடலாகி
என்னென்னமோமனதில் ஏக்கங்களாகுதையோ
அன்னமேவிரகதீ ஆளன்வரவைப்பார்த்தே. (ஒ.)

பாடுங்கிளிமொழியும் ஆடும்அன்னநடையும்
நாடுங்களபமலர் தேடுமெண்ணமும்விட்டேன்
ஓடுதேயென்றன்மனம் ஓகோவென்றுமெண்ணி
வாடுதே அரிச்சந்திரன் வருவானென்றேயேசித்து (ஒரு.)

## மதிதயராஜன் விருத்தம்.

பழுதது அறியாதிவ்விய பண்புளமந்திரிகேளாய்
மழுவதைத்தரித்தோனீந்த மகள்சந்திரவதிக்கேஇங்கே
பொழுதுபோக்கிடாமல் பூமணவோலைதன்னை
யெழுதராயசனைநீயும் இக்ஷணம்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி, சந்திரவதிக்குத்திருக்கலியாணமென்று ஐம்பத்தாறுதேசத் துராஜாக்களுக்கும் மணவோலையெழுத சபையில் ராயசனைவரவழைப்பாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் வேந்தனே.

## மந்திரி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா அரைநொடிதனிலேசென்று
சீரணும்மதுராஜன் திவ்வியமகள்தனக்கே
சீதாய்மணம்நடத்தும் சேதியையறியமன்னர்
காரணமெழுதராயசக் காரனையழைப்பிப்பாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே, நமது ராஜன்மகளாகிய சந்திரமதியம்மனுக்கு சுயம்வரமென்று மணவோலையெழுத ராயசக்காரனையழைத்துவாராயப்பா.

கட்டியக்காரன் வசனம்.

ஐயாராயசக்காரரே, அரசன் உம்மை அதிசீக்கிரத்தில் அழைத்துவரச் சொன்னாரையா.

இராயசக்காரன் வசனம்.

இதோஅப்படியே வருகிறேன் அப்பாகட்டியனே.

---

இராயசக்காரன் தரு. இராகம் ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

இராயசக்காரன்வந்தான் வந்தானிதோ ராயசக்காரன்வந்தான்.

அநுபல்லவி.

நியாயமதை அறிந்து உபாயமாய்மொழிசேர்த்து
நாடியவினைவதை ஏடதிலெழுதிடும். (இரா.)

சரணம்.

தலையில்பாகையுங் கட்டியே - அரைதனிலே
தனிச்சரிகையுள்ள வேட்டியே
விலையிலா அங்கியு மாட்டியே - கண்டவரோட
வேண்டிக்கைகளை நீட்டியே
கலைமகளருளினால் கணக்கில்நாணுக்கங்கற்றே
கருதிமந்திரியேந்திரன் கணக்கொலுமுகமுற்றே. (இரா.)

இராயசக்காரன் விருத்தம்.

ஜெகதலம்புகழ தேவருமகிழ
மகதலக்கன்னியை வளமிகுத்திடவே
யுகம்பலைத்தி உரைத்திடச்செங்கோல்
அகத்துளேபுரியும் அண்ணலேபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மஹாராஜனே போற்றி.

இராயசக்காரன் விருத்தம்.

மன்னனேஎன்னை வரவழைத்திட்ட
தென்னகாரணமோ இயம்புவீர்போற்றி.

வசனம்.

அடியேனை வரவழைத்தகாரியம் இன்னதென்று தெரியச்சொல்வீர்கள் மஹாராஜனே.



மதிதயராஜன் விருத்தம்.

ர்பெருமைம்பத்தாறு தேசத்திலுள்ளஎன்றன்
பேர்பெருமரபைச்சார்ந்த பிரபலமன்னருக்கே
கார்முகில்குழலாளான சன்னிசந்திரவதிக்குச்
சோர்விலாச்சுயம்வரந்தான் சூட்டலென்றறிவிப்பாயே.

வசனம்.

அப்பிராயசனே, எனதுபுத்திரியாகிய சந்திரவதிக்கு நாளைவரும் சித்திரைமாதம் பதினேழாம்தேதி புதவாரம் சுயம்வரஞ் சூட்டலென்றறிய சகலராஜர்களுக்கும் மணவோலை யெழுதும்பிள்ளாய் ராயசனே.

இராயசக்காரன் வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே யெழுதுகின்றேன் ஆண்டவனே.

இராயசக்காரன் வசனம்.

தாங்கள் ஆக்கியாபித்தபடிக்கே யெழுதினேன்மஹாராஜனே.

மதிதயராஜன் வசனம்.

எந்தெந்த தேசத்திற்கு எழுதினாய் சொல்லும்பிள்ளாய்.

இராயசக்காரன் வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே சொல்லுகிறேன் சுவாமி.

இராயசக்காரன் விருத்தம்.

அங்ககுடகம்மச்ச காம்போஜ ஆந்திரம்
அயோத்திபாஞ்சாலமகதம்
வங்கம்வங்காளமாளவகுருகுபல்லவம்
மலையாளசூரசேனம்
கொங்கணம் கூர்ச்சரம் கேகயம்கேரளம்
கொல்லகோசலசாலவம்
தெங்கணம்பப்பரம் நேபாளம்குந்தளம்
சீனசவ்வீரகருசம்
சிங்களம்சோனகம் துருவிடகம்சிந்து
கிராவிடம்போட்டு அருணம்

பொங்குபாண்டியசோழ காந்தாரகன்னட
புலிந்தமாராடகாசம்
துங்கமுறுகன்னடம் கிராடகாஸ்மீரகுரு
தேசாசரியா வருக்கும்
சங்கமகிழ்மணவோலை யெழுதினேனுத்தரவு
தந்திடலனுப்புவேனே.

வசனம்.

இந்ததேசத்தின் ராஜாக்களுக்கெல்லாம் ஓலையெழுதினேன் உத்தரவானுல் அனுப்பிவிடுகின்றேன் வேந்தே.

## மதிதயராஜன் விருத்தம்.

எழுதியவோலையைப் பழுதறவெனையே
தொழுதிடும்ராயசா கழறுவாயெனக்கே.

வசனம்.

கேளாய், ராயசனே, நீயெழுதியவோலையை நான்கேட்க வாசியுளாய்,

இராயசக்காரன் வசனம்

அப்படியே வாசிக்கின்றேன் மஹாராஜனே.

## இராயசக்காரன் விருத்தம்.

மகாராஜராஜ கெம்பீர மகாராஜஸ்ரீ
மன்னுமிமன்னர் சமுகம்
வந்தனந்தந்துய்க பிந்தைகவிகூர்ந்துநான்
வாசிப்பதியாதென்னிலோ
யுகமாதிதன்னிலே மனுவாதிமரபினில்
உதித்துரவி மரபடைந்து
உளமகிழ்யாவரும் புகழ்தரச்செங்கோலை
ஊர்ஜித்து தன்னிநாட்டை
அகமகிழ்ந்தாளுமதி தயனுனாவின்ற
அழகுபெறுசந்திரவதியை
அடுத்தமேஷம்நவில் புத்திவாரம்உச்சி
அமர்ந்தபஞ்சமி நாளிலே



ககனமாளும்விருஷப லத்திரஞ்சுபபஞ்ச
கரணசுபயோகவணசி
காலத்திலகுருவோரை மணமாலைசூட்டவே
கரிமீதில்முறை சாட்டினேன்
ஜெகம்புகழ்வீரியம் தேஜசும்உடையநீர்
பிரள்பந்து தளசகிதராய்
திருஷ்டிந்தென் கோரிக்கை பிடேற்றுவிரெனச்
செய்யும் விண்ணப்பமிதுவே.

## மதிதயராஜன் விருத்தம்.

மந்திரிகேளாயிந்த மணவோலைதன்னையெல்லாம்
சுந்தரமுடையராஜர் சுருக்காய்அறிவதாக
தந்தனுப்பிடவேவேண்டும் நாமகளுசெய்யொணுது
விந்தமாம்பந்தலுந்தான் விரைவினில்முடிப்பிப்பாயே.

வசனம்.

கேளாய்மந்திரி, ராஜாக்கள் சந்திரமதியின் மணமாலை சூட்டலை தீவரத்தில் அறிந்துவரும்படிக்கு இந்த ஓலைகளை அனுப்பிவிடுவாய் மணப்பந்தலுஞ் சித்தஞ்செய்குவாய் மந்திரி.

## மந்திரி விருத்தம்.

கேட்டரோதூதமாரே கிடுகிடுத்திடவே பூமி
ஓட்டமுமநடைநடந்து ஒருநொடிதனிலேசென்று
நாட்டமாயரசர்கட்கே நயப்புடன்வோலையிந்து
வாட்டமில்லாமலிங்கு வருகுவீர் வருகுவீரே,

வசனம்.

கேளுங்கள் தூதரே, தேசதேசராஜாக்களுக்கு இந்தமணவோலைக் கொடுத்து சீக்கிரம் வருவீர்களப்பா தூதர்களே.

தூதர் வசனம்.

புத்தி அப்படியே கொடுத்து வருகிறோம் சுவாமி.

## மந்திரி விருத்தம்.

ஜாலஞ்செ[illegible]மற்கட்டியா ஜகதலத்துள்ளசாவ
சீலமாம்வலஞ்செய்புஞ்சிற்பிகள்தனையழைத்தே

கோலமாய்மதுசந்திர குணவதிமணத்திற்காக
சாலவேமண்டபத்தைச்சதிருடன்முடிப்பிப்பாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே, நமது நாட்டிலுள்ள சகலசிற்பிகளையும் அழைப்பித்து சந்திரவதி அம்மன் கலியாணத்திற்காக திருதிவ்விய மண்டபம் முடிக்கச் செய்வாய் கட்டியனே.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.

## கட்டியக்காரன் விருத்தம்.

மன்னனின்னருள்படிக்கே உன்னதமாகநீங்கள்
சொன்னதோர்மண்டபந்தான் மன்னியேமுடிந்ததையா.

வசனம்.

கேளும் சுவாமி மந்திரியே, தாங்கள் உத்தரவுசெய்தபிரகாரம் கலியாண மண்டபம் முடிவுசெய்தேன் ஐயா.

---

## பொது விருத்தம்.

கன்னமாபுரியையாளுங் காவலன்மகிழ்ந்தேபெற்ற
வன்னமாமகள்தனக்கே மணமெனவோலையொன்று
சொன்னமாம்பசுமைகொண்டே ஜொலித்திடஅரிச்சந்திரன்முன்
மன்னவன்விடுத்ததூதன் வணங்கியேயளித்திட்டானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மதிதயமஹாராஜன் விடுத்ததூதன் வணங்கி சந்திரமதிமணத்தின் ஓலை அரிச்சந்திர மஹாராஜன் சமுகங்கொடுத்தானென்றறிவீர்கள் கனவான்களே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

பார்த்தனையோமந்திரியென்றன் பாக்கியமேபாக்கியமாகும்
சாத்திரிமார்களெல்லார்க்கு சடுதியில்முடிவதாக
நேத்தியாய்மணத்தினோலை நெறியுடன்வந்ததாலே
சாத்தியமாய்ப்போகவேணும் தளமதைச்சேர்த்திடாயே.



வசனம்.

அப்பாமந்திரி, வேதியர்கள் சொல்லிப்போன காரியம் முடிவானது போலகாணுகின்றது சந்திரமதிக்கு சுயவரமென்று திருமணப்பத்திரிகை மதிதயராஜன் அனுப்பியிருக்கிறான் நான்போகவேண்டும் தளமுதலானவைகளை சித்தஞ்செய்விப்பாய் மந்திரி.

## அரிச்சந்திரன் விருத்தம்.

என்மனக்கவலைநீங்கி யிருந்திடமதிதயந்தான்
நன்மையாயளித்ததிவ்விய நங்கைசந்திரவதிக்கே
இன்னிலமதிற்கவேநீ ஈந்ததோர்ஓலைபார்த்தேன்
ஜென்மசாபல்லியமாச்சு செப்புவாயவர்க்குத்தானே.

வசனம்.

அப்பாதூதனே, நீகொண்டுவந்து கொடுத்த ஓலையைவாசித்து ஆனந்த பரவசனானேன் நீசுபம்வாழ்த்தி போய்வருவாய்தூதனே.

தூதர் வசனம்.

அப்படியேபோய் வருகின்றோம் மஹாராஜனே.

## தூதன் விருத்தம்.

வேந்தனேபோற்றி விமலனேபோற்றி
சாந்தனேஉன்றன் தாளடிபோற்றி

வசனம்.

போற்றிபோற்றி மதிதயமஹாராஜனே போற்றி.

## மதிதயராஜன் விருத்தம்.

எங்கெங்குநீதான்சென்றாய் எவரெவர்க்கோலையீந்தாய்
அங்குளமன்னர்சொன்ன அதிசயவார்த்தையாது
பொங்குளஅரிச்சந்திரன்பால் போனையோகண்டாயோதான்
இங்ஙனேமனங்களிக்க இயம்புவாயியம்புவாயே.

வசனம்.

அடாதூதனே, யெந்தெந்த இராஜாக்களுக்கு மணவோலைகள் கொடுத்தாய் அங்குநீகேட்ட அதிசயவார்த்தைகளென்ன அரிச்சந்திரமஹாராஜனிடம் போயிருந்தையா எனக்குத்தெரியச்சொல்லும் பிள்ளாய் தூதனே.

## தூதன் விருத்தம்.

தேசதேசாதிமன்னர் செங்கோலுமுன்னுன்செனறு
தாசனுய்நின்றேஓலை சாதித்தேன்கைக்கொண்டார்கள்
வாசநலமலரணிந்த மன்னவனயோத்திவேந்தன்
ஆசையாய்வாங்கிக்கொண்ட ஆனந்தமென்சொல்வேனே.

வசனம்.

கேளும் ஆண்டவனே. யெல்லாராஜாக்களும் நான்பணிந்துகொடுத்த ஓலையை வாங்கிக்கொண்டார்கள் ஆனல் அரிச்சந்திரமஹாராஜன் மாத்திரம் மணவோலையை வாங்கிப்பார்த்தவுடன் கொண்ட ஆனந்தத்தை சொல்லஎன்னுலாவலாகாது வேந்தனே,

## மதிதயராஜன் விருத்தம்.

மந்திரிதூதர்தாமும் மனமது களிக்கநீதான்
தந்துமேபொன்பட்டாடை சடுதியிலனுப்புவாயே.

வசனம்.

அப்பாமந்திரி, யிந்ததூதர்களின் மனங்களிக்க நல்ல வெகுமதிகொடுத்தனுப்புவாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே யிதோகொடுத்தனுப்புகிறேன் சுவாமி.

மந்திரி வசனம்.

அடாதூதர்களே இந்தபொன்பட்டாடை வாங்கிக்கொள்ளுங்களப்பா.

## கட்டியக்காரன் விருத்தம்.

அரசன்முன்னடந்தசர்வ அனைத்தையுங்கேட்டதோழி
வரிசையாய்மாதுசந்திர வதிக்குரைசெய்குவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே, மதிதயராஜன் கொலுவில் நடந்தசங்கதிகளைக் கேட்டிருந்ததோழிஓடிவந்து சந்திரவதிக்குச்சொல்லுகிறவிதங்காண்பீர்களாக்களே.

## தோழி விருத்தம்.

கற்பினிலுயர்ந்ததிவ்விய கனசந்திரவதியேபோற்றி
நற்குணமுடையவென்றன் நாயகிபோற்றிபோற்றி.



வசனம்.

போற்றிபோற்றி யென்ராஜாத்தியே போற்றி.

## சந்திரவதி விருத்தம்.

ஏதடிமாதேநீதான் எங்குற்றுவந்தாயிப்போ
ஓதடிநானுங்கேழ்க்க ஒளிக்காமலநடந்தவாறு
வாதடிகாமன்செய்யும் வகையினலுருகுகின்றேன்
போதடியென்றன்ஜன்மம் புனிதமாவாறுசொல்வாய்.

வசனம்.

அம்மாசவுந்தரவல்லி, நீயெங்குபோயிருந்தாய் என்னவிசேஷங்கேழ்ப்பட்டாய் தெரியப்படச் சொல்லடிபாங்கி.

## தோழி விருத்தம்.

தாயேநீகேளாயுன்றன் தந்தையுன்சுயவரத்தை.
நேயமாய்முரசுசாட்டி நீணிலத்தரசர்க்கெல்லாம்
வாய்வேகதூதர்கையால் மணவோலையனுப்பக்கண்டு
காயமுங்களித்தயோத்தி காசிபன்மகிழ்ந்தான்கண்டாய்:

வசனம்.

கேளும் அம்மாசந்திரவதியே, உனக்குத்திருக்கல்யாணமென்று மணவோலை அரசனனுப்பக்கண்ட அரிச்சந்திரமஹாராஜன் மெத்தசந்தோஷப்பட்டாராம் தெரிகுவாயம்மணி.

சந்திரவதி அகவல்.

என்னடிதோழி யேதுநீபுகன்றாய்
அன்னமேஅயோத்தி அரசருமிங்கு
வருவரோவென்னை மணர்வரோவின்பம்
தருவரோவுரைப்பாய் சத்தியமாய்நீ
சொல்லடிமகிழ்வுறச் சொருகுளமணியே
நில்லடியென்பரம் நினைவதுமுடிய
காலமும்வருமோ கருத்துக்கிசைந்த
லோலரும்வருவரோ நுகருவாய்பாங்கி
போவதுயேனெனப் புந்தியில்மதித்தே
சாவதானமதாய் தடையதுபுரிந்திடில்

என்னடிசெய்குவேன் என்னுயிர்த்தோழி
பன்னடிதெரியப் பண்புடனீதான்
அரசருக்கென்போல் ஆனவொத்தனை
அரசியருண்டோ அறிகிலேனென்றன்
மோகம்பொல்லாது முடிவறியேன்மனத்
தாகம்இல்லாதே சகிப்பதெப்படியோ
கருத்துக்கிசைந்த கன்னிகையெனவே
உரைத்தனனுனக்கே வுயிர்த்துணையாளே.

## தோழி விருத்தம்.

சந்தேகம்விடுவாயென்றன் தாய்சந்திரவதிநீகொண்ட
விந்தையாங்கருத்தீடேற வேண்டியவ்வரசனிங்கே
வந்திடுவார்நான்கண்ட வகையுளகனவினாலே
உந்தனுக்குரைத்தேன்நீதான் உறுதியென்றுணர்வாயம்மா.

### வசனம்.

கேளுமம்மா,நான்கண்டகனவுபொய்க்காது நீகோரியபுருஷனேஉன்னைக்கூடுவார் தைரியத்துடனிருப்பாய் தாயே.

## சந்திரவதி விருத்தம்.

நல்லதுகண்ணே சொல்லியவாறு
வல்லவன்வந்தால் அல்லவோமகிழ்வேன்.

### வசனம்.

அடிதோழி, நீசொல்லியபடிஅவர்வந்தகாலத்திலல்லவோ நான் மகிழ்வேன் சவுந்தரவல்லி.

### தோழி வசனம்.

அகத்தியம் வருவாரம்மா நீசந்தோஷமாயிருப்பாய் தாயே.

---

## பொது விருத்தம்.

மதிதயனிடத்திற்சென்று மகிழ்வுடன்வார்த்தையாடி
கதிகொண்டகருத்தீடேற்றி கருதியேஅயோத்தியென்னும்



பதிதனையாளும்வேந்தன் பக்கலைநாடிதிவ்விய
நதிதனைக்கண்ட அந்த நம்பிகளிதோவாராரோ.

### வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மதிதயராஜனைக்கண்டுபேசியசங்கதிகளை அரிச்சந்திரமஹாராஜனுக்குத்தெரிவிக்கவேண்டி யாத்திரைப்பிராமணன்வருகின்றார்கள் சபையோரே.

## யாத்திரைப்பிராமணன் விருத்தம்.

அண்ணலேஆசிர்வாதம் அரிச்சந்திரா ஆசிர்வாதம்
விண்ணவர்மதிக்குநீதி வேந்தனேஆசிர்வாதம்.

### வசனம்.

ஆசிர்வாதம் ஆசிர்வாதம் அரிச்சந்திர மஹாராஜனே ஆசிர்வாதம்.

## அரிச்சந்திரன் விருத்தம்.

அருமறைவேதம்நாலும் அங்கமாய்ப்பூண்டதிவ்விய
குருபரஐயமாரே கும்பிட்டேன்வருவீர்சுவாமி.

### வசனம்.

வாரும் வாருஞ் சுவாமிகளே, இந்த ஆசனத்தின்பேரில் எழுந்தருள்வீர்கள் ஐயமாரே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

மதிதயராஜன்தன்னை வணங்கவேகண்டீரோதான்
சுதியெனக்கூட்டத்தக்க சம்பந்தமுடித்திட்டீரோ
மதிகளேமணத்தின்வோலை பண்புடனுப்பக்கொண்டேன்
கதிபெறுகன்னிதேசம் கடையன்பின்வருகுவீரோ.

### வசனம்.

சுவாமிகளே, தாங்கள் எனக்காக சம்பந்தம்பேசி முடித்தீர்களோ மதிதயராஜன் அனுப்பிய மணவோலை நான் கைக்கொண்டேன் என்னுடன் தாங்களும் கன்னமாபுரிக்கு வருகவேண்டும் வேதியர்களே.

## யாத்திரைப்பிராமணன் விருத்தம்.

தருமமுஞ்சத்தியம்நீதி தண்மையும்நிறைந்தகல்வி
பொறுமையும்படைத்தயோத்தி பேர்பெறஅரசுசெய்யும்

குருமொழிபிசகாமன்று கொண்டவுன்கருத்திடேற
நிருபனேசுயவரந்தான் நிகழ்த்தினுன்மதிதயேந்திரன்.

வசனம்.

கே. . . . . . . . திரமஹாராஜனே, நீகொண்டகருத்திடேறசந்திரமதி
க்கு சுயவரஞ்சாற்றினுர் தெரிகுவாய் வேந்தனே.

### சத்தியகீர்த்தி விருத்தம்.

அண்ணலேநீர்தான்சொன்ன ஆக்கினைப்படியேசேனை
வண்ணமாம்பரிகஜங்கள் வகையுளரதமுஞ்சேர்த்தேன்
கன்னியேகன்னிநாட்டை நாடியேநடக்கநேரம்
பண்ணுவதேதோ உன்றன் பாதமேபோற்றிபோற்றி.

வசனம்.

கேளும் மஹாராஜனே, தங்களுத்தரவின்படிக்கே ரதம் கஜம் பரி சேனை
முதல்சித்தஞ்செய்தேன் கன்னமாபுரிக்குப்போகத் தடைசெய்வதேன் என்
ஆண்டவனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே இப்போதே போகலாம் மந்திரி.

### அரிச்சந்திரன் விருத்தம்.

அய்யரே அடியேன்கொண்ட ஆவலும்நீங்ககாலம்
பையவேவந்ததாலே பண்புடனிங்கெல்லாம்
துய்யமாங்கன்னிதேசந் தொடர்ந்தென்பின்ரதத்திலேறி
மெய்யரேவருவீர்போவேன் மெல்லியைமணாத்தானே.

வசனம்.

சுவாமிகளே, நானிதோசந்திரவதியைக் கலியாணஞ்செய்ய கன்னமாபுரி
க்குப் போகின்றேன் தாங்களும் ரதத்தின்பேரிலேறி யென்கூடவருவீர்கள்
சுவாமிகளே.

யாத்திரைப்பிராமணர் வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியே வருகின்றோம் மஹாராஜனே.

---

அரிச்சந்திரன் தரு இராகம் அடாணு—தாளம் ஆதி.

பல்லவி.

போவோம்வருவீர் ஐயமாரே நாம் ஒருமையாய்ப



அனுபல்லவி.

காவும்மதிதயன்றன் கன்னமாபுரிதேடி
கருதியவென்மனக் கவலைகள்நீங்க
பரிதியின்குலமது பண்புடனோங்க. (போ.)

சரணம்.

இந்தவுடுப்பை அணிவீர் சுபங்கள்சொல்லி
யென்னுடன்ரதமேறுவீர்.
கந்தமலரைத் தாவுவீர் வழியில்தோற்றும்
கனிநிங்கச்சோலை புகுவீர்
சந்தம்புகழைப் பெறுவீர் என்னை
தன்னியனுக்கிய கன்னியவான்களே
உன்னியகருமத்தை யின்னிமைமுடித்திட. (போ.)

### அரிச்சந்திரன் விருத்தம்.

அண்ணலேயெனது திவ்விய அந்தணமாரேயிந்த
நண்ணரும்பாலைதன்னில் நான்கண்டேன்க்ஷேத்திரமொன்று
கண்ணதில்தோற்றுதையா கண்டுநான்போற்றிவாரேன்
வண்ணமாம்ரதத்தின்மீதே மகிழ்வுடனிருந்திடீரே.

வசனம்.

ஐயமாரே, இந்தபாலைவனத்தில் யேதோவொரு திவ்வியசந்நிதானந்
தெரிகின்றது நான்போய் தரிசித்துவருகின்றேன். நீங்களிவ்விடமிருப்பீர்கள்
வேதியர்களே.

---

### பொது விருத்தம்.

அரசனுமறையோர்தன்பால் அனுமதிபெற்றேபாலை
சுரமதில்தோன்றுந்திவ்விய சுந்தரிகோயில்புக்கி
கரமதைக்குவித்துநின்றே கன்னியைவெகுவாறுக
சிரமதுவணங்கிப்போற்றி செய்குவான்செய்குவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, வருகிறவழியில் வொருதிவ்விய கோயி
லைக்கண்ட அரசன் பிராம்மணர்களை நிறுத்தி சந்நிதிக்கிதனியாய்வந்து அம்
மனைப்பார்த்து துதிசெய்கிறவிதம் அறிவீர்கள் சபையோரே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தரிகபாலினீலி அபிராமிசூரிவீரி
மந்தரிவாலைகௌரி மனோன்மணிமயிடன்தன்னை
சுந்தரிவதைத்ததேவி சொல்லொணாமுக்குணத்தி
இந்தநல்வனத்தில்தோன்றும் ஈஸ்வரியெனையாள்வாயே.

## இதுவுமது.

காலனையுதைத்தோன்கூட கைலையில்வாழுந்தேவி
பாலனைஅளித்தேதேவர் பட்டத்தைக்காத்தருளி
சீலமாமாதிநாலை செம்மலுக்களித்தவேலி
கோலம்நான்கொண்டவெண்ணம் கூடிடஅருள்வாய்போற்றி.

## இதுவுமது.

சுடலையிற்சிலம்புபேச சுந்தரனுடனேஅன்று
பட்டுளநாகம்பாட பண்புடனடித்தசீலி
கட்டுறுலோகம்வாழும் கனவுயிர்காக்கும்பாலி
சடலமுமுனதேயாகும் சாம்பவிஅருள்வாய்போற்றி.

---

## பொது விருத்தம்.

தேவிமுன்னரசன்நின்று சிரத்தின்மேல்கரத்தைத்தூக்கி
ஆவியையுள்ளடக்கி அம்பிகைப்புகழைப்போற்றிக்
கூவியமுறையைக்கேட்டு கோமளிமனமகிழ்ந்தே
தாவியேஅரசன்முன்னே சாம்பவிதோன்றினாளே.

### வசனம்.

கேளுங்கள் சபையோரே, இந்தவிதமாக அரிச்சந்திரமஹாராஜன் வணங்கிநிற்க சாம்பவியும் பிரசன்னமாக வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே.

---

### பராசக்தி தரு இராகம்-மத்தியமாவதி. தாளம்-ஆதி.

பல்லவி.

பராசக்திதோன்றினாளே தானேதானாய் பாலைவனந்தனிலே,



அநுபல்லவி.

சராசரபுவனமும் தன்மயமாயிலங்க
சாம்பவிவிண்ணோர்க ளேத்தும்
பாம்பணி ஜடாதரி. (பரா.)

சரணம்.

திருமுகம் சதுர்ப்புஜமும்-அன்பர்கள்காண
திவ்வியகுலமுந் துலங்க
ஜெகத்துள மற்றதெய்வமும்-அம்மனைகையில்
சிக்கினால்மனங் கலங்க
அருண கிரணமணி
அணியும்பரி பூரணி
அம்பரி மனோன்மணி
அருளளிக்குங் காரணி
ஆட பூதங்கள்சுத்தி
நாட வுடுக்கைபாலம்
பாட சிலம்பொலிகள்
கூட சாந்தமாக
அம்ரீம்சம்ஸ்ரீம் ஆனந்தசுந்தரி
ஐயுங்கிலியும்ஒம் அருளுந்தயாபரி. (பரா)

## அரிச்சந்திரன் கலித்துறை.

மாதவிசாமளை வாலையானந்தி வராகிபொல்லாக்
காதகவேமன் றனையுதைத்தோன்மகிழ் கௌரிசூரி
சாதகிகாட்டில் வாழ்ருத்ரிசங்கரி தாங்கியெனை
ஆதரிதேவி தயாபரிதிரிபுரை யம்மணியே.

## பராசக்தி விருத்தம்.

புகழ்பெறுஅயோத்திநாட்டை பொங்குடன்அரசுசெய்த
மகிழ்வுறுதிரிசங்கின்ற மைந்தனேசதாநீவாழி
திகழ்பெறமுனிவர்யோகர் செயும்பெருந்தவங்களோங்க
நிகழ்நியளிக்குந்திவ்விய நெறிஅரிச்சந்திராவாழி.

## பராசத்தி விருத்தம்.

அந்தமாம்ரவிகுலத்தில் அவதரித்திட்டபாலா
உந்தநற்றோத்திரத்தால் உருகியேமனமகிழ்ந்தேன்
இந்தநல்வேளைதன்னில் எங்குநீயேகலுற்றாய்
வந்தகாரணந்தானென்ன வழுவறவுரைசெய்வாயே.

### வசனம்.

அப்பா ரவிகுலம் கீர்த்திபெற அவதரித்தபாலனே, நீ இரதாருடனாய் எங்குபோகின்றாய் என்னைக்காண வந்த வுன்கோரிக்கையென்ன தெரியச்சொல்லுவாய் ராஜனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

சாம்பவிவினவிப்பேனுன் சந்திரவதிதனக்கே
சாம்பவிசுயம்வரந்தான் சாற்றினன்மதிதயேந்திரன்
சாம்பவிஅவன்மேற்சேயன் தனிமனமுருகிக்கூட
சாம்பவிபோகலானேன் தாயேநீவரமீவாயே.

### வசனம்.

அம்பா, சந்திரவதிக்கு சுயம்வரமானதால் அவளை மாலையிட்டுச்சுகம்அடையக்கருதி புறப்பட்டுவரும்வழியில் உன்னுடைய தரிசனஞ்செய்து என் கோரிக்கையீடேறும்படியான வரம்பெறவந்தேன்தாயே.

## பராசத்தி விருத்தம்.

பாலனேஅரசேஅந்தப் பாவையாம்மதிதயேந்திரன்
சாலவேவரத்தாற்பெற்ற சந்திரவதியாம்மாது
நீலவேல்விழியாள்தன்னை நீமணஞ்செய்வாய்நித்தியம்
கோலமாயிருவரொத்து குவலயமாள்வீரப்பா.

### வசனம்.

அப்பா பாலகா, அந்த சந்திரவதியுனக்கேபாரியாவாள் நம்புவாய் நீங்களிருவரும் மனமொத்து சகல சாம்பிராஜ்ஜியத்துடன் அரசாண்டிருப்பீர்களப்பா வேந்தே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

தாயேயிதென்னகோலம் சற்றுமுன்னெனக்கிதெல்லாம்
தாயேகேள்கருங்கல்லாகத் தான்தோற்றக்கண்டேனிப்போ



தூயபொற்பசும்பொன்னாக தனக்குத்தோற்றுமையாதோ
தாயேநான்அறியநீதான் தயைபுரிந்துரைசெய்வாயே.

### வசனம்.

அம்மணி, நானிங்குவரும்போது இவைகள் கல்லாகக்காணப்பட்டன; இப்போது பொன்னாகக்காணுகின்ற புதுமை தெரியச்சொல்லவேண்டும் சங்கரி.

## பராசத்தி விருத்தம்.

வருணனும்இலங்கையாண்டு வளவிற்குப்போகுங்காலை
உருவுளதேர்வில்லம்பை உதிக்கக்கல்லாகச்செய்தே [காலை
இருத்தியென்வசத்தில்யார்க்கு இதுபொன்னாய்த்தோன்றுங்
கருதிநீகொடிப்பாயென்றான் கைக்கொள்வாய்வேந்தேநீயே.

### வசனம்.

அப்பா அரிச்சந்திரா, வருணன் இந்ததேர் வில் முதலானவைகளைக்கல்லாக்கி யென்வசம்வைத்தான் இவைகள் யாருடையகண்களுக்குப் பசுமையாய்த்தோன்றுமோ அவருக்குக் கொடுக்கச் சொன்னான் நீ ஒப்புக்கொள்ளுவாய்வேந்தே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

எனையீன்றமாதேஅம்பா என்குலதேவிநீதான்
தனையனைவிரும்பியிந்த தனுசம்புரதமுங்கொண்டேன்
முனையெனைநாளுங்காக்கும் மூதண்டிஅடியேன்செல்ல
துணையருள்தருகவேண்டும் சுந்தரிநின்றாள்போற்றி.

### வசனம்.

அம்மணி, யெனக்காகவைத்திருந்து கொடுத்த ரதம் வில் அம்புமுதலானதும் கைக்கொண்டேன் எனக்குத் துணையாயிருக்கும்படி வேண்டினேன் அருள்வாய் நான்போகவிடைகொடுதாயே.

## பராசத்தி விருத்தம்.

மைந்தாயித்தேர்மேலேறி வளர்கையில்வில்லைத்தாங்கி
மைந்தாநீபரியைப்பூட்டி வாழ்கன்னிநாடடைந்து
மைந்தாநீகருதுமாதின் மாயருத்திரமுங்கண்டே
மைந்தாநீஅவளைமேவி மன்றலிலிவாழ்வாய்வாழி.

வசனம்.

அப்பராஜனே, நீசந்திரமதி சுயம்வரத்தில் அவளிடமிருக்கும் பரமசூத்திரத்தைக்கண்டு சொல்லவே அவளுனக்கு மாலையிடுவாள் நீ சுகமாய்வாழுவாய் வரந்தந்தேன் போய்வருவாய் வேந்தே.

## யாத்திரைப்பிராமணன் விருத்தம்.

சென்றதோரிடத்தில்நீதான் தரிசித்தக்ஷேத்திரம்யாது
கண்டதோர்புதுமையேதோ கழறுவீர் அறியத்தானே.

வசனம்.

கேளும்ராஜனே, நீசென்று தரிசித்த கோயிலும் அங்குகடந்தவாறும் இந்ததேர்முதலானவை கிடைத்தவகையுந் தெரியச்சொல்லவேணும் மஹாராஜனே.

## அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே தெரியச்சொல்லுகின்றேன் சுவாமிகளே.

## அரிச்சந்திரன் அகவல்.

அய்யனேகேளீர் அடியனுந்தங்களை
பைய்யவேபிரிந்து பற்றியேதனிவழி
சென்றனனங்கே செழும்பொன்னிறமாய்க்
கண்டனேர் க்ஷேத்திரங் கானகந்தனிலே
என்னநானுரைப்பேன் ஏதெனப்புகல்வேன்
வன்னமாமதிலும் வளர்ந்தகோபுரமும்
படிக்கட்டழகும் பகரொணுஸ்தம்பமும்
நடியிடைசங்கரி ஜொலித்திடுமனையும்
மூலஸ்தானமும் முன்னடிபீடமும்
வேலனையீன்ற விமலிநுண்ணுருவை
கண்ணினுற்கண்டேன் கழறுவேன்கேளீர்
விண்ணினிற்கிட்டா விழிகளுநாசி
நேர்மையும்சதுர்ப்புஜம் நிகழ்த்தொணுத்தூலமும்
கூர்மையுள்வேலும் குறிப்பிடுசூலமும்
பிண்டியுமுடுக்கையும் பெரும்பூதப்படையும்
சண்டிகையேறும் தனிச்சிம்மாதமும்



கபாலபாத்திரமும் கண்டுகைகட்டியே
துவாரபாலகன்போல் தொழுதெதிர்நின்றே
அந்தரிகௌரி அழகுளவிமலி
விந்தரிநீலி வெற்றிகொள்சூலி
பாசாங்குசத்தி பகரொணுச்சத்தி
ஆசாவிரத்தி அடங்காப்பிடாரி
தேவிமனேன்மணி திரிபுரைமாதவி
தாவிடுபார்வதி சங்கரிகமலி
ஆதியிழத்தி ஆனந்தபைரவி
தாதியிமையில்லா தயாபரிசாம்பவி
என்றுநான்படித்தே யேத்தியேதொழவே
நன்றுளமகிழ்ந்தே நாயகியென்முன்
ஜலஜலவெனுமோர் சப்தத்துடனே
கலகலநகைப்புடன் கண்முனேதோன்றவே
தாயேநீயெனை தற்காரெனவே
சேயெயென்றனம் செல்கிறுயென்றனள்
கன்னமாபுரியன் கன்னிகைக்காக
அன்னையேபோகிறேன் அளித்திடுவாமே
அம்மணியென்றே அடிபணிந்தேத்த
செம்மணிமகிழ்ந்தே ஜெயம்ஜெயமென்றனள்
பாலகாவோர்குறி பாங்கிக்குமுண்டு
சாலவேவுனக்குத் தானதுதோற்றுமகீ
தூரைக்கவேமகிழ்ந்தே யுனையவன்கிட்டியே
விரைவினில்மாலையை விளங்கவுன்கழுத்தில்
சூட்டுவள்நீயுஞ் சுகமுடைவாயென
காட்டுமென்னெளிக்கிவைகல்லதாய்நின்றதும்
பசும்பொன்னிறமாய்ப் பகரொணுவொளியாய்
விசும்புவதேதென வினவினேன்தேவி
ஆதியில்வருணனும் அன்புடனீந்த
ஜோதியுள்ரதமும் சொகுசம்புவில்லும்

இம்மனேவைத்தே யேகிடுங்காலே
தங்கமாயார்க்கிது தானொளிகாட்டுமோ
அவற்கிதைபளிப்பாய் அன்றியேமற்ற
எவர்க்குமீயாதென இயம்பியவாறு
கண்டுநீசத்தியவான் களிப்புடனிவைகளைக்
கொண்டுமேசெல்லெனகொடுத்தனளடைந்தே
அய்யநான்வந்தேன் அனைவரும்அதன்மேல்
பையயவேவருவீர் பற்றுவோம்வழியை.

---

## பொது விருத்தம்.

தேசதேசாதிமன்னர் சேர்ந்தெதிர்செல்லக்கண்டு
பாசமாயயோத்திமன்னன் பந்தவர்தமைக்கலந்தே
நேசமாம்வார்த்தைபாடி நிகழ்மணச்சாலேநோக்கி
வாசமாய்வருகும்வேந்தர் வகையினிஅறிகுவீரே.

### வசனம்.

கேளுங்கள் சபையோரே, அரிச்சந்திரமஹாராஜன் வருகின்றவழியில் மற்றதேசஅரசனைக்கண்டு அவர்களுடன் தானுங்கலந்து சந்திரமதி சுயம்வரச் சாலேக்கு வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

## தேசாதிபதிகள் தரு, இராகம் சாம்போதி-தாளம், ஆதி.

### பல்லவி.

அகிலபுவனத்துள்ள ஐம்பத்தாறுதேசத்தின்
அரசர்களிதோவந்தார் மணத்திற்காக
அரசர்களிதோவந்தார்.

### அநுபல்லவி.

சகலவாத்தியமுடன் சங்கொலிமுங்கிட
சதுர்விதகளங்களும் தான்திரளாய்வந்திட
மகபதியின்தவத்தால் வந்தசந்திரவதியாள்
மணத்தைக்கோரியேமண மண்டபந்தனைநாடி (அ.)



### சரணம்.

ஆலவட்டஞ்சாமரம் அழகுகொடிகள்ஓங்க
அணியணியாய்ரதம் அஸ்வக்கூட்டந்துலங்க
சாலவேகஜவர்க்கம் சம்பிரமமாயிலங்க
தகைமையாயவரவர் தாவிஆனந்தம்பொங்க
நீலவிழியாளான நேர்சந்திரவதிதனை
நீநான்மணர் வேனென்று
தானேசாருய் மகிழ்ந்து.(அ.)

## மதிதயாராஜன் விருத்தம்.

இத்தலந்தனிலேயுள்ள இனியதேசங்களாளும்
உத்தமவரசரான வுசிதரேசரணம்வாரீர்.

### வசனம்.

வருவீர்கள் வருவீர்கள் மன்னாதிமன்னர்களே சரணம், இந்ததிவ்விய ஆசனங்களின்மீதிருப்பீர்கள் வேந்தர்களே.

---

## பொது விருத்தம்.

சந்திரவதிமணத்தைத் தான்பார்க்கவேண்டிதிவ்விய
விந்தமாமேருவிட்டு விஸ்வாமித்திரர்வாராரே.

### வசனம்.

சபையோர்களே, சந்திரவதிஅம்மன் திருக்கலியாணத்தின்மகிமையைப் பார்க்கவேண்டி விஸ்வாமித்திரமுனி வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே.

---

## விஸ்வாமித்திரன் தரு, இராகம்-தோடி, தாளம்-ஆதி.

### பல்லவி.

ராஜராஜனை நவிலுலகாண்டதிவ்விய
ராஜரிஷியும்வந்தார் - விஸ்வாமித்திர
ராஜமுனிவர்வந்தார்.

அநுபல்லவி.

தேசதேசங்களெல்லாம் திகழ்வுடன் தனைப்போற்ற
திரிசங்குக்கும்அன்னுளில் திகழுந்தாம்படைத்த, (ரா.)

சரணம்.

உத்தமன் குருமொழி யுணர்ந்தேநடப்போனிந்த
வுலகரசரில்கீர்த்தி ஓங்கும்அரிச்சந்திரன்தன்
அத்தன்மேல் வைத்திட்ட
அபிமானந் தனையெண்ணி
அயோத்திபன் மணக்கோலம்
அடைந்தேகளிக்க நண்ணி. (ரா.)

## மதிதயன் விருத்தம்.

அத்தனையகத்துண்ணுட்டி அன்புடனேத்துந்திவ்விய
வித்தகவிஸ்வாமித்திர எந்தையேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி விஸ்வாமித்திர மஹாமுனியே போற்றி.

## விஸ்வாமித்திரன் விருத்தம்.

மகதநாடாளுகின்ற மன்னனேவாழிவாழி
ஜெகதலந்தனிலேயுன்றன் செங்கோலுநீதிவாழி.

வசனம்.

வாழிவாழி மதிதயராஜனே வாழி.

## அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தகாளென்றன்தந்தை அன்னையின் துயர்க்கிரங்கி
விந்தமாயந்தரத்தில் மேவிநற்சுவர்க்கந்தன்னை
சுந்தரா அமைத்தேயங்கே சுகமுடனிருக்கச்செய்தே
எந்தனை அடிமைகொண்ட இறைவனேபோற்றிபோற்றி.

வசனம்.

எனதுதந்தைக்கு அந்தரசுவர்க்கமளித்ததேவனே நின்றன் போற்றி போற்றி.



## விஸ்வாமித்திரன் விருத்தம்.

திரிசங்கின்மைந்தாவாழி ஜெயவரிச்சந்திராவாழி
பெருதிகுணமும்யோக்கியம் பெற்றவாவாழிவாழி.

வசனம்.

வாழிவாழி அரிச்சந்திர மஹாராஜனேவாழி.

மதிதயராஜன் வசனம்.

இந்த ரத்தினபீடத்தின்மீது வீற்றருளவேண்டும் முனிநாதா.

விஸ்வாமித்திரன் வசனம்.

மஹாசந்தோஷமப்படியே மதிதயராஜனே.

---

## பொது விருத்தம்.

சீடன்றன் மணத்தைப்பார்க்க திவ்வியவசிஷ்டமூர்த்தி
நாடதையடையவேண்டி நடந்திதோவருகின்ருரே.

வசனம்.

கேளுங்கள்சபையோரே, தனதுசிஷனுகிய அரிச்சந்திரமஹாராஜன்றன் விவாகத்தைப் பார்க்கவேண்டி வசிஷ்டமஹாமுனிவர் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

வசிஷ்டர் தரு. இராகம் - சஹானு. தாளம் - ஆதி.

பல்லவி.

கியானவசிஷ்டர்வந்தார் பிரம்மக் கியானவசிஷ்டர்வந்தார்.

அநுபல்லவி.

ஞானவழிதெரிந்து மோனநிலையில்நிற்கும்
தினதயாளனும்தன் சிடன்மணத்தைப்பார்க்க. (கி.)

சரணங்கள்.

உத்தமன்முனிவரில் ஓகோவுயர்ந்தோனந்த
சத்தமிலாதெழுத்தைத் தானனுஷ்டிக்குந்திவ்விய. (கி.)

அஞ்சடக்கியிருபத் தஞ்சையுந்தான்பாழாக்கி
நெஞ்சைத்துலக்கிசிவ நேசன்வானவர்புகழ். (கி.)

கன்னமாபுரிநாடி கனனரிச்சந்திரனிட
தன்னருமணந்தனைத் தானேமுடிப்பேனென்று. (கி.)

## மதிதயராஜன் விருத்தம்.

நிர்த்தொந்தரகித்தான நிமலனைப்போற்றுகின்ற
உத்தமவசிஷ்டமூர்த்தி உமதடிசரணம்போற்றி.

வசனம்.

போற்றி போற்றி வசிஷ்டமஹாமுனியே போற்றி.

## வசிஷ்டர் விருத்தம்.

மதிதயராஜேவாழி மன்னரில்கீர்த்திதன்னை
தரியதில்அடைந்தநல்ல தயாபராவாழிவாழி.

வசனம்.

வாழிவாழி மதிதயமஹாராஜனே வாழி.

## அரிச்சந்திரன் விருத்தம்.

என்குருபரனேபோற்றி யென்றனைஅடிமைகொண்ட
நின்திருப்பாதம்போற்றி நிருபனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி யென்குருவேபொற்றி.

## வசிஷ்டர் விருத்தம்.

அப்பனேசிடாவாழி அயோத்தியாள்வேந்தேவாழி
இப்பநீகொண்டவெண்ணம் ஈடேறும்வாழிவாழி.

வசனம்.

வாழிவாழி அரிச்சந்திர மஹாராஜனே வாழி.

மதிதயன் வசனம்.

இந்ததிவ்வியஆசனத்தில் எழுந்தருளவேண்டுஞ் சுவாமி.

வசிஷ்டர் வசனம்.

அப்படியே சந்தோஷம் சந்தோஷம் ராஜனே.



## பொது விருத்தம்.

மதிதயன்மகளுக்கின்று மணமென்றுகேழ்விப்பட்டே
ததியில்நாரதருமங்கே தான்வந்துதோன்றினரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, சந்திரவதியின் கலியாணமஹிமையைப்பார்க்க நாரதமஹாமுனி வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே.

நாரதர் தரு. இராகம் - மத்தியமாவதி. தாளம் - ஆதி.

பல்லவி.

நாரதமுனிவந்தார் சுக்ஞான நாரதரிதோவந்தார்.

அநுபல்லவி.

தாரகமந்திரத்தைத் தானுணர்ந்தே அந்த
சத்தியமிலாப்பிரம்ம ஸ்தானமறிந்தகுண. (நா.)

சரணங்கள்.

பூரணத்தில்நினைவைப் பூட்டித்தினமகிழ்ந்து
பொறிபுலன்களையெல்லாம் போக்காகவேகழித்து
நாரணனெட்டெழுத்தை நாட்டிபுவனமெங்கும்
நண்ணியிந்திரனுலகும் நலமுடனுலாவிடும். (நா.)

கசடுகுணமொழித்து கன்மயிடறழித்து
காயமழியாவண்ணங் கருதிநிலைபிடித்து
அசடுஅழுக்காறவாஅகத்தைவிட்டேபோக்கி
ஆனந்தக்கூத்தாடிஅருளோங்கித்தானுலவும். (நா.)

எட்டுதிசைகளையும் எண்ணில்ஒருநொடியில்
ஏகியங்குற்றதொரு இயற்கைஅறிமுடியில்
சுற்றுஞ்சடைவளர்த்து சொகுசாய்மணிதரித்து
குக்குமமறியும்வீணை தோன்றகரத்தில்தாங்கி. (நா.)

## மதிதயராஜன் விருத்தம்.

வரதனின்னருளையோங்கி வானவர்போற்றுந்திவ்விய
பரதநாரதரோவுன்றன் பாதமேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி நாரதமஹாமுனிவரேபோற்றி.

## நாரதர் விருத்தம்.

சந்திரவதியைப்பெற்ற கன்னியனேவாழிவாழி
உந்திருநாடுங்கோலும் ஓங்கஎன்னாளும்வாழி.

வசனம்.

வாழிவாழி மதிதயமஹாராஜனே வாழி.

## வசிஷ்டர் விருத்தம்.

தவத்தினிலுயர்ந்ததிவ்விய தானுவேநாரதாதி
பவத்தினையொழிந்தநல்ல பண்பனேவாரும்வாரும்.

வசனம்.

வாரும்வாரும் நாரதமஹாமுனியேவாரும்.

நாரதர் வசனம்.

வந்தேன் வந்தேன் தவசிரேஷ்டர்களே.

## நாரதர் விருத்தம்.

மன்னுதிமன்னருந்தன் மகள்மணமாலைக்காக
மன்னுதிமன்னர்வந்தும் மதிதயாதருணம்வாய்த்தும்
நன்னுதிகுணத்தையுற்ற நங்கையைச்சிங்காரித்தே
இன்னுதிச்சாலைபுக்க இனித்தடைசெய்வதேனே.

வசனம்.

கேளும் மதிதயராஜனே, உனது மகளுடைய மணத்தைக்கோரி தேச தேசாதிபர்வந்தும் லக்கினநேரங்கிட்டியும் சந்திரவதியைச் சுயவரச்சாலைக்கி அழைப்பிக்கத்தடையாமோ வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

இதோ அழைப்பிக்கிறேன் நாரதமஹாமுனிவரே.

## மதிதயன் விருத்தம்.

அப்பனேமந்திரிஐம்பத் தாறுதேசாதிமன்னர்
ஒப்பவேவந்தாரென்றன் ஒருமகள்மணத்தைநாடி



செப்பரும்மணிக்குடைக்கீழ் செல்வியைச்சிங்காரித்தே
இப்பவேவருகஇங்கே இயம்புவாய்பாங்கிமார்க்கே.

வசனம்.

அப்பாமந்திரி, ராஜாதிராஜர்கள்வந்து வீற்றிருக்கும்சுயவரச்சாலைக்கியென்தவப்புத்திரியைச்சிங்காரித்து அழைத்துவரும்படி தோழிகளுக்கு உத்தரவு செய்வாய் அப்பாமந்திரி.

## மந்திரி விருத்தம்.

சந்திரவதியைநாளும் தயவுடன்பாதுகாக்கும்
சுந்தரமொழியாளான தோழியேசொல்லக்கேளாய்
இந்தநற்சமூகந்தன்னில் ஏந்திழைதனையேநீதான்
வந்திடமணிக்குடைக்கீழ் மகிழ்வுடனழைத்துவாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணேதோழி, இந்தக்ஷணத்திலேபோய் சந்திரவதியம்மனைச்சிங்காரித்து முத்துக்குடையின்கீழ்நடத்தி இந்தமணவளைப்பந்தலுக்கு அழைத்துவருவாய்பாங்கி.

தோழி வசனம்.

சந்தோஷம் அப்படியேஅழைத்துக்கொண்டுவருகிறேனையாமந்திரியே.

## தோழி விருத்தம்.

மதிதனைப்பழிக்குந்திவ்விய மலர்முகமுடையசந்திர
வதியெனுந்தாயேயுன்னை மன்னனுமணச்சாலைக்கே
நிதிபெறும்வேந்தர்தம்மை நீகண்டேமாலைசூட்ட
அதிவிரைவினிலேஅம்மா அழைத்தனர்வருகுவாயே.

வசனம்.

கேளும் அம்மாசந்திரவதி,உனது மணச்சாலையில் அநேகராஜாதிராஜாக்கள் வந்திருக்கிறார்கள் நீகண்டு உன்மனதுக்கேற்றபுருஷனை விவாகஞ்செய்துக்கொள்ளும்பொருட்டு உன்னை அழைத்துவரச்சொன்னார்அரசன் வருவாய் அம்மணி.

## சந்திரமதி விருத்தம்.

சகியேநீஅன்றுவந்தே சாற்றியநாள்துவக்கி
சகியேநான்அயோத்திமன்னர் தான்கிட்டவேண்டுமென்றே

சகியேநான்பரத்தைக்கோரி தனியுருஜபித்தேனிப்போ
சகியேயென்விதிதானென்ன சர்ப்பனைசெயுமோவாராய்.

**வசனம்.**

அடிதோழி, நீ சொன்னநாள்முதல் அரிச்சந்திரமஹாராஜன் எனக்குக்கணவனாகவேண்டுமென்று ஆண்டவனைத்துதித்துக்கொண்டிருந்தேன் என்விதி யேதேதுசெய்யுமோதெரியேன் வாராய்போவோம் சவுந்தரவல்லி.

---

## பொது விருத்தம்.

நவத்திறலரசன்பெற்ற சந்திரவதியாளிதோ
மகத்துவமன்னர்சூழும் மஹாசபைவருகின்றாளே.

**வசனம்.**

கேளுங்கள் சபையோரே, கலியாணமண்டபச்சாலைக்கு சந்திரமதியம்மன் வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே.

---

**சந்திரமதி தரு. இராகம் - பந்துவராளி. தாளம்-ஆதி.**

பல்லவி.

மாதுசந்திர வதனாள் வந்தாள்
மாசிலாதகுண பூஜிதமெனுமணி

அநுபல்லவி.

ஏதுஇவள்போற்பாவை யெங்குங்கிட்டாதெனவே
இனிவுடன்கண்டவர் மனமதுஉருகிட. (மா.)

சரணங்கள்.

கரியமுகிலைப்போன்ற கனத்தகூந்தல்முடித்தே
கையில்வெகுவுன்னதா காரமலர்பிடித்தே
திருநீறணிநுதலால் திங்கள்தனைப்பழித்தே
திவ்யநாசியும்விழி திரள்கயலையழித்தே
பரிவுளவேந்தர்கள் சிரமழிந்தலைந்திட
பணிந்துமதனுந்தூரம் பாராமல்ஓடிட. (மாது.)



சத்தியமாதுமே தான்வருந்தாதிட
பத்தியாய்க்குடிகளைப் பாலிக்கநான்போக. (வி.)
உந்தன்திருவடி உள்ளத்தில்நாட்டுவேன்
சந்திரவதியுடன் தன்னுடுநான்செல்ல. (வி.)

---

**மதிதயராஜன் தரு. இராகம்-நாராயணி. தாளம்-ஆதி.**

பல்லவி.

சுகமாய்ப் போய்வாரும்
சூரனே சொல்லொணு வீரனே மருகனே.

அநுபல்லவி.

மகளோசிறியவள் மன்னுவனுதினமு
மனமதுகளிப்புறும் இனம்தாய்நடத்துவீர். (சுக.)

சரணங்கள்.

சந்திரவதியாள்குற்றந் தனைப்பாராட்டாதேயப்பா
வந்திடாக்கோபங்கொண்டால் வணங்கியடிபணிவாள
வருத்தமதின்றியே கருத்துடனிருத்துவாய். (சுக.)
நீதிநெறியுலக நேர்ப்புமுணர்ந்தவள்
ஜாதிமுறையுஞ்செங்கோல் தகமையுமறிந்தவள்
சார்ந்தேயென்மகளுடன் சேர்ந்துநீமனமொகநு. (சுக.)
மாதர்நீதிகளெல்லாம் வழுவறத்தெரிந்தவள்
சாதனக்களபஞ்செய்யுஞ் சமர்த்திலுமுயர்ந்தவள்
சாந்தகுணமுடைய சந்திரவதியாளுடன். (சுக.)

## சந்திரமதி விருத்தம்.

அண்ணலேசொந்தவீடு அயோத்தியென்றறிந்தேனிப்போ
அண்ணலேகணவர்பின்னே அடியாளும்போய்நான்வாரேன்
அண்ணலேயென்மேல்வைத்த வாசைதானகன்றிடாதே
அண்ணலேவாழ்த்தியென்னை யன்புடனனுப்புவாயே.

வசனம்.

கேளும் என்பிதாவே, நான் என்புருஷன்கூட அயோத்திக்குப்போய் வருகின்றேன் என்மேல் வைத்த அன்பைமறவாமல் வாழ்த்தி விடைதாரும் தந்தையே.

மதிதயாராஜன் தரு. இராகம்-துஜாவந்தி. தாளம்-ஆதி.

பல்லவி.

போய்வருவாய்மகளே. உன்மாமிவீடு
போய்வருவாய்மகளே.

அநுபல்லவி.

நீயொன்றையும்மனதில் நினையாதே அம்மா அம்மா
நினைக்கும்போதடிக்கடி நினைப்பார்க்கநான்வருவேன். (போ.)

சரணங்கள்.

தாய்மனைநாளும்வாழ்தல் தகாமைதையலர்க்கென்றே
சாற்றும்விதிமுறையைத் தானுணர்ந்திட்டகண்ணே. (போ.)

கணவன்மொழிக்கிட்டு கட்டாதுகாட்டாதேநீ
கட்டிக்கரும்பேதேனே கதலிகற்கண்டமுதே. (போ.)

ஆளன்சொற்படிநின்றால் அடைவாய்பெரும்பதவி
அன்னமேநான்செய்ததவச் சொர்ணமேயென்சிந்தாமே. (போ.)

ஆடைபதுமைபணி யடிக்கடியனுப்புவேன்
அன்பாகவாழ்ந்திருப்பாய் அன்னமேகண்மணியே. (போ.)

வேணும்புத்திமதியுன் வேந்தனுக்குமுரைத்தேன்
வேண்டாம்மகளேதுக்கம் விட்டுநீசிவிகையேறி. (போ.)

அரிச்சந்திரன் விருத்தம்.

மாமாநானெனதுதேசம் மகிழ்வுடன்சென்றுவரரேன்
மாமாநான்மகளுநானும் மனமொத்துசுகமாய்வாழ்ந்தே
மாமாவென்குலம்விளங்க மக்களும்பெருகவேண்டி
மாமாநீவாக்களிப்பீர் மலரடிபோற்றிபோற்றி,



வசனம்.

கேளும் எனது அருமைதந்தையமாமாவே, நானும் உமது புத்திரியாகிய சந்திரமதியும் மனமொத்துவாழ்ந்து சகலசம்பத்துடன் புத்திரசந்தானம் பெருகும்படிக்கு ஆசீர்வதித்தனுப்பவேண்டும் மாமாவே.

மதிதயராஜன் விருத்தம்.

மருகனேநீயுமென்றன் மகள்சந்திரமதியும்வாழி
மருகனேயுனதுசெங்கோல் மண்ணின்மீதோங்கவாழி
மருகனேசகம்சமபத்தும் மற்றுநாமடைவாய்வாழி
மருகனேயுனதுகீர்த்தி மஹாகோடிகாலம்வாழி.

வசனம்.

வாழிவாழி அஷ்டைஸ்வரியமும் புத்திரசம்பத்தும் கீர்த்தியும் மென்மேலும் பெருகவும்வாழிவாழி மருமகனேவாழி.

சந்திரவதி வசனம்.

அம்மா என்னைப்பெற்றதாயே, இதுவரையில் உங்களை விட்டுப்பிரியா திருந்தேன். இப்போது எப்படி என் மாமியார்வீட்டுக்குப்போய் தனியே இருப்பேனம்மா, இதை நினைக்குந்தோறும் துக்கம் மென்மேலும் பெருகுகின்றதே இதற்கென்னசெய்வேனம்மணி.

அந்தரோசை தரு - இராகம் - காமா. தாளம் - ஆதி.

பல்லவி.

அழவேண்டாமம்மா ஆளன்மனைக்கேபோக.

அநுபல்லவி.

மழுதரித்தோனளித்த மணியே மரகதமே. (அழ.)

சரணங்கள்.

மண்ணில்மாதுபிறந்தால் வாழுமில்மனைக்கன்றி
மாதா இடத்திற்றங்க வசமோ உத்தமகண்ணே. (அழ.)

உன்னைப்பெற்றதாலம்மா உலகினில் சத்தியமன்னன்
உற்றுன்மருகனென்றே உம்பர்புகழவாழ்வாய். (அழ.)

போதுபோகுமுன்னுன்றன் புகழயோத்திக்குப்போவாய்
ஏதுவேண்டியுன்தந்தை இனிவாயனுப்புவாரே. (அழ.)
கணவனடிபணிந்தால் காணும்பெரும்பதவி
கண்ணே அயோத்திசென்றுசுகித்தாய்வாழ்வாய்நீதாயே (அழ.)
தந்தைதாய் குருதெய்வம் தானுமிவையொன்றே
தையலே விண்ணவர்கள் சார்ந்துனைப்புகழ்வாரே. (அழ.)

## சுந்தரமோகை விருத்தம்.

என்தங்கக்கொழுந்தேயம்மா ஈசனார்மகிழ்ந்தளித்த
நன்மயிலுயராயோத்தி நாடிநீகணவன்பாதம்
உன்மனந்தனிலேநாட்டி உயர்பதிவிரதம்பூண்டு
மன்மதனழகைமாற்றும் மக்களைப்பெற்றுவாழ்வாய்.

வசனம்.

கேளாயம்மா என்னுடைக் குழந்தையாகிய சந்திரவதியே, சுபம். நீயுன் கணவனையே தெய்வமென்று அவனுடைய மலரடியைத் துதித்து பதிவிரதா தருமம்பூண்டு மன்மதனைப் பழிக்கத்தக்க அழகையுடைய சற்குணபுத்திரனைப் பெற்று சுகமாய் வாழ்வாயம்மா.

## அரிச்சந்திரன் விருத்தம்.

என்னருங்கிளியே தேனே விளங்குமிகொளிமயிலாளே
நன்னிலைபாலை வந்தோம் நாமெனுன் றுசெல்வமிக்கு
உன்னுடைதம்பதியோலி ஓங்கமாமுசென்றேழும்
என்னிதாய்பனியைச்சென்று கழலடிபணிவோம்வாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரவதி, இந்தமாலையனைத்தில் பெருமையொருமைத் திருந்தேன்றது. சாமிகனைப்பெரும்போட்டசித்தது அம்மனின் வெகுபே ருமுன்னுக்குச்செல்வோம் வாராய்பெண்ணே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

திரிபுரமெரித்ததன்னாட்கரு சேர்ந்திருப்பவளேயம்மா
அரியமுந்தேடிக்காணு அன்னையேபாடுவந்தேன்
வரிசைகுணத்தாதன் மேவிடுங்கவியேசாயே
தெரியேனுனைப்பணியவந்தேன் சேவடிகாட்டுவாயே.



வசனம்.

ஓ சங்கரி, நீ கொடுத்த வரத்தின்பலத்தால் என்கோரிக்கைவிட்டேனிவன் தன் உமது திருப்பாதங்களைத் தரிசிக்கச்செய்வாய் சாம்பவிதாயே.

## பராசத்தி விருத்தம்.

அன்பனே அயோத்தியாளும் அரசனேநீதான்சென்று
நன்மையெவ்வாறடைந்தாய் நவிலுவாய்தெரியத்தானே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரனே, நீ சென்றகாரியம் முடிந்தவகையைச் சொல்லுவாய் அரசனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

உனதருளாலேதேவி யுற்றுமேகன்னிதேசம்
தனிமணச்சாலைபுக்கி தராதிபர்மகிழ்வதாக
கனமுளபாமருகம் கண்டுநானுனைக்கவேந்தன்
இனமொத்திம்மாதுதன்னை யீந்தனனெனக்கேதாயே.

வசனம்.

கேளும அம்மா மஹேஸ்வரி, உன்னுடைய உத்திரவின்படி நான் கல்யாணமண்டபஞ்சேர்ந்து இந்தகன்னியிடம் இருந்த பரமரகசியத்தைவெளியிட்டேன் மதிதயமஹாராஜன் மிகவும் சந்தோஷித்து தன்மகளாகிய இந்த சந்திரவதியை யெனக்குப்பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தார் அம்மா.

## சந்திரமதி விருத்தம்.

அம்புவிதனிலெல்லோரும் அடிபணிந்தேத்துகின்ற
சம்புவினிடதுபாகந் தங்கியதாயேபோற்றி
அம்புருகாதி சுரர்களும்பணியுஞ்சத்தி
தெம்புஎங்களுக்களித்தே சிறுடன்காப்பாய்போற்றி.

## பராசத்தி விருத்தம்.

தம்பதிமாரேநீங்கள் தரணியிலோங்கிவாழ்க
தம்பதிமாரேபுத்திர சம்பத்துமபெருகிவாழ்க
தம்பதிமாரேயுங்கள் சத்தியநிலைத்துவாழ்க
தம்பதிமாரேநாடு தான்சேர்ந்தேவாழ்கவாழ்வீர்.

வசனம்.

அப்பா அரிச்சந்திர அம்மா சந்திரமதி நீங்கள் சுகமாய் பாடுசேர்ந்து சக செம்பத்தும் பெருமை புத்திரசந்தானம்பெற்று சத்தியமேயங்க வாழ்வீர்கள் வாழி வாழி.

---

## பொது விருத்தம்.

மன்னனுமாதிரேறும் மஹேஸ்வரிதனைப்பணிந்து
மன்னனுமிடைவைத்தென்பேட மயிழ்வுடனிரதமேறி
மன்னனுவாத்தியமெளங் வாசிக்கவயோத்திவந்தே
மன்னனைக்குன்னெதல்லா மனைக்குக்கூட்டுவானே;

வசனம்.

கேளுங்கள்சபையோரே, அரிச்சந்திரமஹாராஜனும் சந்திரமதியம்மனும் பரசுத்திடம் விடைபெற்று சகல மேளவாத்தியங்களும் ஒலிக்க ரதாரூடராய் அயோத்தியடைந்து அங்குள்ள விசேஷங்களை சந்திரமதியம்மனுக்குக் காட்டுகிறதைப் பாரீர்கள் கனவான்களே.

---

அரிச்சந்திரன் தரு இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னமேநீபாராய் அயோத்தியின் அதிசயந்தனைப்பாராய்.

அநுபல்லவி.

முன்னமேநான்செய்த முறைதவப்பலத்தினால்
முத்தேநீகிட்டினாய் முனைந்துஎன் கைப்பற்றி. (அன்.)

சரணங்கள்.

வேதமறையோர்வாழும் வீதிவிதிதமும்
விந்தைநடனம்புரி வேசியர்ஸ்ரேணியது
பாதகம்புரியாமல் பணிமாறும்வணிபர்கள்
பக்ஷமுடனேவாழும் பாவையேவீதிஎன்றன். (அன்.)
வீராதிவீரான வில்லாளர்வீதியிது
விதியுயிர்த்துணைநீல வேலியமைச்சர்வீதி



காராளிருப்பிடம் கண்ணேதருமவான்கள்
கருதிப்பலகுலத்தோர்களிருக்கும்வீதிகள்பாராய்.(அன்.)
சித்திரச்சாவடி செழுங்கொலுவாசலிது
தேசப்பரிகள்தேரும் சேருமயிடமிது
பத்தினிநீவாழும் பன்புளவரண்மனை
பாரேவுன்மனமதை தேறுவாயடிஎன்றன். (அன்.)

## அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யன்பனேநமதுநாட்டில்
இப்பவேதகுதியுள்ள இளைஞர்கள்தனைநீதேடி
கொப்பவேகளஞ்சியத்திற் கோரும்பொனெடுத்துக்கொண்டே
ஒப்பவேசஹஸ்திரத்தெட்டு ஒளிமணம்முடிப்பாய் மந்திரி.

வசனம்.

கேளும் அப்பா சத்தியகீர்த்தி, நமது நாட்டிலுள்ள சதுர்விதஜாதிகளில் தேடி ஆயிரத்தெட்டு விவாகங்கள் செய்விப்பாய் அப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்பாகட்டியனே, நமது நாட்டிலிருக்கும்படியான சதுர்வருணஜாதிகளில் கல்லியாணத்திற்குத் தகுதியான சிறுவர்களைக்கூட்டிவருவாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே கூட்டிக்கொண்டு வருகிறேன் சுவாமி

## சத்தியகீர்த்தி விருத்தம்.

வேதியர் பெருநூறு முடிக்குகந்த
வேளாளர் நானூறு விறல்பொன்று
ஆதிபனே வைசியரிரண்டுநூறு
அன்பாகச் சுத்திரர் பெருநூற்றெட்டு
மாதிமதி யோன்மகிழப் பக்குவிட்டுப்
பண்பாக வெடிவிளப்பி மணஞ்செய்வித்தேன்
ஏதுனைப்போல் மன்னருண்டோவென் றுசெப்பி
யேத்தினர் குடிகளெல்லாம் வாழ்த்தினரே.

வசனம்.

கேளும் மஹாராஜனே, அந்தணரில் (௨௱) வேளாளரில் (௬௱) வைசியரில் (௨௱) சூத்திரில் (௨௱அ) ஆக ௲அ, கல்யாணம் வெகு ஆடம்பரத்துடனே நடத்தினேன். குடிகளெல்லாம் மகிழ்வடைந்து தங்கள் கீர்த்தியைக்கொண்டாடினார்கள் அரசனே.

அரிச்சந்திரன் வசனம்.

மஹாசந்தோஷம் மஹாசந்தோஷம் அப்பா சத்தியகீர்த்தி.

## அரிச்சந்திரன் விருத்தம்.

பத்தியாய்சிவத்தைநாடி பாரதற்றவம்புரிந்து
நத்தியென்குலம்விளங்க நாயகிகொப்பந்தன்னில்
புத்திரனடையவேண்டிப் போய்வாரேன்வருகுமட்டும்
உத்தியிலுயர்ந்தமந்திரி யுகந்தென்றனரசைகாப்பாய்.

வசனம்.

கேளாய் அப்பா சத்தியகீர்த்தி, யென்குலமனைக்கு தீபமில்லாதிருப்பதால் நான் சரயுநதிச்சாரல்புக்கிபராம்சிவத்தைக்குறித்து தவஞ்செய்து புத்திரனடையவரம்பெற்று வருகின்றேன் நீ அரசாக்ஷியை கவனத்துடன் நடப்பித்துக் கொண்டிருப்பாயப்பா மந்திரி.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

உலகினிலடையும்பாக்கியம் உம்பனேபுத்திரான்றி
உலகினில்மற்றும்வேறு உரைக்கவுமுளதோநாதா
நிலைதவறுவிடாமல் நேர்மையாயரசைக்காப்பேன்
நிலையுடன்சிவத்தைநாடி நீர்வரம்பெறுவீர்வேந்தே.

வசனம்.

கேளும்சுவாமி, உலகிலுள்ளவர்கள் அடையத்தக்கது புத்திரபாக்கியமன்றிவேறுண்டோ தாங்கள் ஆக்கியாபித்தபடிக்கே இந்த நாட்டைக்காத்திருப்பேன் தாங்கள் பரமசிவனருளைப்பெற்று வருவீர்கள் வேந்தனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

மாதேகேள்உலகந்தன்னில் மக்களைப்பெற்றோர்மேலோர்
மாதேகேள்மைந்தரில்லார் மலடரென்றிசைக்குள்ளாவார்
மாதேகாமனைவிலக்க மதனையளித்தோன்பாதம்
மாதேநாம்பேணவேண்டி வனத்திற்கேவருகுவாயே.



வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரமதி, பிள்ளையில்லாதவர் மலடரென்று உலகத்தார் சொல்லும் மொழி நம்மை அடையாதிருக்கும்படிக்கு நாம்காட்டிற்குச்சென்று சிவத்தைத்துதித்து புத்திரனளிக்கும்வரம்பெற்றுவாலாம் வருவாயடி கண்ணே.

சந்திரவதி வசனம்.

கேளும் என் பிராணநாதா, நீர் சொன்னதைக்கேட்டு நான் மெத்தசந்தோஷமானேன் அடியாளுக்குமதேகியாபகமிருந்தது வாரும்போவோம் சுவாமி.

---

## பொது விருத்தம்.

வேந்தனும்புத்திரசோபம் மீறியேசிவத்தைநாடி
வேந்தனுந்தவஞ்செய்ய வேண்டியேசதியினோடு
வேந்தனுமரசுதன்னை விற்றெரிமந்திரிபாகம்
வேந்தனுமொப்புவித்தே மேவியேகானஞ்சென்றார்.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, அரிச்சந்திரமஹாராஜன் புத்திரசோபம் நீங்க அரசை மந்திரிவசம்ஒப்புவித்து தானும் பத்தினியும் மெய்யுரிதரித்து சிவனைக்குறித்துத்தவஞ்செய்யப்போமன்றவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

அரிச்சந்திரன் தரு. இராகம் - காவேரி தாளம் சாப்பு.

பல்லவி.

வருவாயடிபெண்ணே தவஞ்செய்ய வருவாயடிகண்ணே.

அநுபல்லவி.

பெருமானடியினைப் பேணிமனதின்குறை
போதிவ்வியமகனைப் பெறவேயென்னுடன்கூட. (வரு.)

சரணங்கள்.

பஞ்சாக்கினி வளர்த்தே நடுஸ்தம்பம்
பற்றிநான்மேல் நடித்தே
அஞ்சாமல்காலையெடுத்தே ஒன்றையூன்றி
அரனுமத்தனைப்புழித்தே

நெஞ்சதையவன்பாகம் நிறுத்தியோர்வினைவாதி
நீலகண்டனருளால் நீபாலன்றனைப்பெற. (வரு.)

பூவுலகமு மேத்தும் அவனடியைப்
பொன்னுலகமும்போற்றும்
தாவுங்குறையை யோட்டும் பணிபவர்முன்
தன்னருளொளி காட்டும்
கோவும்வெங்கையிரண்டும் கூடிவாழ்ந்திடச்செய்யுங்
கொற்றவனருளினால் குமரனைநீபெற. (வரு.)

தேவர்களும் பணியுந், திருநாமஞ்
சித்தர்களு மணியும்
மூவர்களுங் கனியும். மெய்க்கொரு
மேருசம்ஹாரிணியும்
காவலனடியோரின் கர்த்தன்கயிலைவாசன்
கழலைத்துதித்துநீதான் காளைதனைப்பெற. (வரு.)

---

அரிச்சந்திரன் தரு. இராகம்-எதுகுலகாம்போதி தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

சம்போஹரசம்போஹரா சம்போஹராவருவாய்
அம்புலியைச்சடையிலிட்ட அரனேவரந்தருவாய்சிவ. (சம்போ.)
மாலும்மழுதாலேதேடிட வருத்தபரசிவமே எங்கும்
தானாய்நின்றபரனேயென்முன் தயவாய்வாருந்தவமேசிவ (சம்போ.)
கொன்றையும்பைமுடிபுனை குணனேயிதுகாலம்உனை
அன்றிவேறுகதிகாணேனே ஐயாவென்னஜாலம்சிவ. (சம்போ.)
காலன்றனையன்றுதைத்த கடவுளேயென்முன்தோன்றும்இந்த
ஞாலமீதிலுனையடியார் நாதன்வரவேண்டும்சிவ. (சம்போ.)
சுரர்களுந்தினைக்காக்கஅன்று சுரதமுண்டநாதா இப்போ
வரவென்றன்முன்தடைசெய்திடும்வனமம்விடும்பராதாசிவ (சம்போ.)
பாலனில்லாபாவியெனும்பழிநீக்கிடுந்தேவே சுவாமி
சாலவுன்றனடியேனென் சஞ்சலந்தீரவேசிவ. (சம்போ.)



நந்துன்வினைபோக்களன்முன் நாடிவருவாயே சொல்லும்
முத்துசுவாமிகோரும்வரம் முனைந்துதினந்தரவேசிவ. (சம்போ.)

பரமசிவன் விருத்தம்.

அரசனேயென்னைக்கோரி அனலின்மேற்கம்பம்நாட்டி
அரசனேயொருகால்தூக்கி அருந்தவம்புரிவதேது
அரசனேயுனக்கேதல்ல அம்மையும்பதியளித்தே
அரசனேயிருக்கச்செய்தும் அழைத்தவாறேதுசொல்வாய்.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா, உனக்கு தனகனகவஸ்துவாகனமுங்கொடுத்திருக்க என்னை யிப்போதழைத்தகாரியம் என்னசொல்லும்பிள்ளாய் ராஜனே.

அரிச்சந்திரன் தேவாரம்.

எங்களாண்டவனேபோற்றி இறைவனேநின்றாள்போற்றி
துங்கவாமக்களின்றி துரைத்தனம்இருந்துமென்ன
மங்களகுணத்துளோனே மைந்தர்பாக்கியநான்கொள்ள
சங்கராதிவ்வியவாக்கே தானளித்திடுவாய்போற்றி.

வசனம்.

ஆண்டவனே, வமிசவுத்தாரஞ்செய்ய புத்திரபாக்கியந்தவிர மற்றபாக்கிய மெல்லாமிருந்தும்பயனென்ன ஆனதால் அழைத்தேன் புத்திரபாக்கியமடைய அருள்செய்யவேண்டும் தேவனே.

பரமசிவன் வெண்பா.

உந்தன்முறைக் கேமகிழ்ந்தேன் உலகில்நல்ல கீர்த்திவா
மைந்தனுனக் கேபிறப்பான் மங்கையினால்—சந்திரனைப்
பழிக்கு மழகுடையான் பலகலையுந் தானுணர்வான்
செழிக்குங் குலமவனால்தேர்.

வசனம்.

கேளாய்அப்பா ராஜனே, சகலகலைக்கியானமறியத்தக்கவனாக ஒருவன் சந்திரமதிகெர்ப்பத்தில் பிறப்பான் அவனால் உன்குலமிடேறுமப்பா அரசனே.

(அரிச்சந்திரன் சந்திரமதி)

### போற்றி விருத்தம்.

சம்புவேபோற்றி தயாபராபோற்றி
நம்புவோர்தழைக்க நாடுவோய்போற்றி.

வசனம்.

மஹாபாக்கியம் அடியாரைக்காக்கும் ஆண்டவனே போற்றி.

### பரமசிவன் விருத்தம்.

மன்னனேவாழி மாதுடன்வாழி
சின்னவன்பெறுவாய் செல்கிறேன்வாழி.

வசனம்.

அப்பாராஜனே, நாம் கயிலைக்குப்போகின்றோம் வாழிவாழி.

---

### பொது விருத்தம்.

வேந்தனுந்தவசியற்றி விமலன்றன்னருளைப்பெற்று
சாந்தமாய்தனதுதேவி தரித்தகெர்ப்பமுமேயோங்கி
மாந்தளிர்மேனிகுன்றி மாதம்பத்தானதாலே
வாய்ந்ததோர்செர்ப்பநோயின் வளர்ப்பினித்தெரிகுவீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, அரிச்சந்திரமஹாராஜன்பெற்ற பரமசிவனருளினால் சந்திரவதியம்மன் கெர்ப்பமாகி பத்துமாதமானதால் இனிகெர்ப்ப வேதனைப்படுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

---

சந்திரவதி தரு. இராகம் புன்னாகவராளி தாளம் ஆதி.

பல்லவி.

என்னமோயெனக்கொரு விதமாய்வருகுதடி
என்னென்றுசொல்வேனம்மா பாங்கியே இதை
யேதென்றுசொல்வேனடி தோழியே.

அநுபல்லவி.

தின்னமாய்வயிற்றினுள் திக்குத்திக்கெல்லாஞ்சுற்றித்
திரும்புதென்னமோகாணேன் பாங்கியே. (என்ன.)



சரணம்.

நெஞ்சில்படபடவென்று நீள்மூச்சுவாங்குதடி
நிற்கவொட்டாமலிடை நெளிக்குதேஇடையடி
கொஞ்சியாடியதெல்லாங் குறைசெப்பஇடமாச்சே
கூறவுமனம்வெட்கங் கொள்ளுதடிபாங்கி.
விலாவிலென்னமோவந்து விரலாலிடிக்கிறாப்போல்
வெம்பிடநெருடது விரிபுதென்னடிசெய்வேன்
கலகலங்கியேநீருங் கால்வாய்ப்பெருகுதடி
கண்ணேமணியேதோழி கருத்தென்னவுரைபாங்கி. (என்.)

தோழி வசனம்.

கொஞ்சம் பொறுத்திருப்பாய் அம்மணி யிந்தசேதி நான் ஓடி அரசனுக்குத் தெரிவித்துவருகின்றேன்தாயே.

---

அரிச்சந்திரன் தரு இராகம் - அடாணா தாளம் - ஆதி.

பல்லவி.

மன்னர்மன்னருக்கெல்லாம் மன்னனரிச்சந்திர
மஹாராஜனிதோவந்தான் கொலுவிருக்க
மகுடவர்த்தனன்வந்தான்

அநுபல்லவி.

அன்னநடைவஞ்சிய ராட்சசவரிபோட
அந்தணர்சித்தர்யோக ராசிகளோதிட
மன்னவர்மாந்தர்களும் நாடிப்பணிந்திட
நாலுதிக்கிலுங்கீர்த்தி நாட்டினிலோங்கிட
கல்லுளந்தங்கியே கவிலொளும்கிமையாய்
அல்லும்பகலும்சிவத்தை யறிவினில்நிறுத்திய. (மன்.)

சரணம்.

இரத்தினமிழைத்தமுடி நெற்றிப்பட்டமும் துன்ன
நேராய்முத்துவடமும் நிகழ்வலயமு. மின்ன
சத்தியகொடி துலங்கச் சாமரைபோரி பன்ன
சான்றோனிவனேயெனச் சகலருங்கூறி சொன்ன

நித்தியகருமநெறி நிலைபிசகாத — நேயன்
நிகருண்டெனவெவரும் நினைக்கப்போகாத — தூயன்
பத்தினிமாதுபாகம் பண்ணிருந்திடும் — மாயன்
பலகலைநீதிபத்தி பாரிற்சத்திய — வாயன்

பம்பையின்றொனி பம்பம்பம்மென
ஜம்பையின்ஜாலர் ஜம்ஜம்ஜம்மென
கொம்புகள்தொனி கும்கும்கும்மென
தம்புருஇசை தொம்தொம்தொம்மென

ஜொலிக்க பகைவரை — கெலிக்க தவனிலே
பலிக்க சத்தியம் — ஒலிக்க புகழுடன்
சொல்லொணாதகீர்த்தி தோய்ந்திடஎங்கணும்
மெல்லொணாதசித்தி மேன்மைகள்தங்கிட. (மன்.)

## தோழி விருத்தம்.

அரசரேவுமதுதேவி அடைந்ததால்பத்துமாதம்
அரசரேகெர்ப்பநோயின் அடையாளங்காட்டக்கண்டே
அரசரேயோடிவந்தேன் அனுப்பிகட்டியனையிப்போ
அரசரேமருத்வமாதை அழைத்திடச்செய்குவீரே.

வசனம்.

கேளும்சுவாமி, சந்திரமதிஅம்மன் பத்துமாதமானதால் கெர்ப்பநோய்ப்பட்டின்றுள் சீக்கிரத்தில் மருத்துவச்சியையழைப்பிக்கவேண்டுமெஹாராஜனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

புத்தியுனுயர்ந்தேலோகம் புகழ்ந்திடநெறியைப்போன்ற
சத்தியகீர்த்தியென்னுந் தனையனேமந்திரிகேளாய்
பத்தினிகெர்ப்பவாதை படுவதால்மருத்துவத்தில்
முத்தியேதெளிந்தமாதை முன்னுதாய்வரச்செய்வாயே.

வசனம்.

கேளாயப்பாசத்தியகீர்த்தி, யென்றுதேவி கெர்ப்பநோய்படுவதால் விவேகசாலியாகிய மருத்துவச்சியை சீக்கிரத்தில் வரச்செய்வாயே.



சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே வரச்செய்கின்றேன் மஹாராஜனே.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

அப்பனேகட்டியக்காரா அரசன்றன்தேவிதானும்
இப்பவேகெர்ப்பவேதை யெடுத்திடக்கண்டதாகச்
செப்பவுந்தோழிவந்தே செம்மலுமாக்கியாபித்தார்
ஒப்பவேமருத்துவமாதை யோடியழைத்துவாராய்.

வசனம்.

கேளும்பின்னாய்கட்டியனே, நமது ராஜரின்தேவி கெர்ப்பநோய்ப்படுவதால் மருத்துவச்சியை சீக்கிரம்போயழைத்துவருவாயப்பா கட்டியனே.

கட்டியன் வசனம்.

இதோவொருநொடிக்குள்ளழைத்துக்கொண்டுவருகின்றேன்சுவாமி.

## கட்டியன் விருத்தம்.

மருத்துவமாதே மன்னருமுன்னே
கருத்துடனழைத்தார் கடுகியேவருவாய்.

வசனம்.

கேளாய்மருத்துவமாதே, அரசனழைப்பதால் சீக்கிரத்தில் வருவாயம்மா.

மருத்துவச்சி வசனம்.

அப்படியேவருகின்றேனப்பா கட்டியனே.

---

மருத்துவச்சி தரு இராகம் ஆனந்தபயிரவி தாளம் ஆதி.

பல்லவி.

மருத்துவமாதுவந்தாள் கைவாசியுள்ள
மருத்துவமாதுவந்தாள்.

அநுபல்லவி.

வருத்தமுற்றோகளைக்கும் மங்கையாள்துயர்நீங்க
வாட்டமாகவேதுன்று ஓட்டமும்நடையுமாய். (மரு.)

சரணங்கள்.

சுக்குத்திப்பிலியுடன் சொல்லுமிளகுகோஷ்டமும்
சொகுசதிமதுரமும் சூரணித்தேயதனில்

திக்குகளினிலுள்ள செடிமூலிகைகலந்தே
தேனுடன்பனம்பாகுஞ் சேர்த்தவுண்டைதாங்கியே. (மரு.)
மாதர்கள்பிரசவ மாகுங்காலையிலவர்
மனந்தளராமல்நல்ல மார்க்கந்தனைப்படித்து
சீதளந்தாக்கிடாமல் சிசுவையுளிக்கச்செய்து
செப்பொணுநிலையுடன் சிற்றறைதனைக்காக்கும். (மரு.)
என்னைப்போலிவ்வுலகி லிருப்பரோமருத்துவர்
என்றேகுலதெய்வத்தை யேத்திமனதில்நாட்டி
முன்னேயெனக்குக்கீர்த்தி மொழிவரச்செய்வாயென்றே
மூர்க்கமாய்தன்பெருமை மோடியாய்பேசியிதோ. (மரு

## மருத்துவச்சி விருத்தம்.

விண்ணவர்மகிழுங்கோவை வேந்தனேஅயோத்தியாளும்
அண்ணலேயழைத்தவாறு அடியாளுக்கருள்வீர்போற்றி.

## வசனம்.

போற்றிபோற்றி அடியாளை அழைத்தகாரியந் தெரியப்படச்சொல்லவேணு மஹாராஜனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

மருத்துவப்பெண்ணேயென்றன்
மாதினைகெர்ப்பநோய்தான்
வருத்துதாம்நீயுஞ்சென்றே
வகையேதோபுரிகுவாயே.

## வசனம்.

கேளாய்ப்பெண்ணேமருத்துவச்சி, என்து தேவிக்கு கெர்ப்பவேதனைகண்டிருக்கிறதாம் நீசென்றுஅதிஜாக்கிரதையுடன்வேண்டியவாறுசெய்வாய்.

## மருத்துவச்சி வசனம்.

மஹாபாக்கியமப்படியே செய்கின்றேன் என் ஆண்டவனே.

## மருத்துவச்சி விருத்தம்.

என்னடியம்மாசந்திர வந்திமூரயுன்றன்னேயைப்
பன்னடியெனக்குத்தோற்ற பண்பினிலுயர்ந்ததாயே.



## வசனம்.

அம்மா என் ராஜாத்தியே, உனக்கு என்னமாயிருக்கின்றது தெரியச்சொல்லுவாயம்மா.

## சந்திரவதி விருத்தம்.

மந்திரமுணர்ந்தநல்ல மருத்துவத்தாயேகேளாய்
வந்திட்டநோயின்கூறு வழுத்தவுமாகாதம்மா
மைந்தனைப்பெறவேவேண்டி மஹாதவம்புரிந்தோரிந்தச்
சிந்தனைப்படுவதுண்டோ செப்புவாயெனக்குத்தானே.

## வசனம்.

அம்மா மருத்துவச்சி, அந்தநோயின் கூறுஎன்னசொல்வேனடி பிள்ளைக்காகத் தவமிருந்துபெறுவோர்க ளிந்ததுயரடைந்ததுண்டா சொல்வாயடி தாயே.

## மருத்துவச்சி வசனம்.

அம்மா எல்லாருக்குமுண்டு உனக்கு என்னவிசேஷமான நோயெடுத்தது தெரியச்சொல்லுவாய் தாயே.

## சந்திரவதி விருத்தம்.

நாணமுமாகுதம்மா நவின்றிடப்போமோகேளாய்
சாண்வயிறதிலேதாயே தனியடிவாரந்தன்னில்
கோணமாயங்குமிங்குங் குடுகுடென்றலாவுருப்போல்
காணவுமானேன்பெண்பால் கடைப்பிறப்பிதுவாயே.

## வசனம்.

அடிஅம்மா யடிவயிற்றில் யேதோசங்கடமாகின்றது யேதோமுட்டுகின்றது பலவிதஆயாசமாகின்றது இந்தபெண்ஜென்மம் கடைப்பிறப்படிதாயே.

## மருத்துவச்சி விருத்தம்.

ஆதிசத்தியுமையவளும் பெண்ணேயாகும்
அருந்ததியும் ஆகாயவாணிபெண்ணே
ஜோதியுளலட்சுமியும் பெண்ணேயந்த
சுருதிபுகழ்கலைமகளும் பெண்ணே அம்மா
ஏதிலுமிபபெண்ணுருவே உயர்ந்ததென்று
எண்ணியல்லோமாலொருநா ளெடுத்துக்கொண்டான்

நீதிதனிலுயர்ந்தவன்பால் வந்ததேவி
நின்ஜென்மம்புனிதமென நினைப்பாயம்மா.

வசனம்.

அம்மா, பார்வதி,லட்சுமி, அருந்ததி,ஆகாயவாணி, சரஸ்வதி யிவர்களெல்லாம் பெண்ணல்லவோ இதைச்சிறந்ததென்று மாயனும் பெண்ணுருவம் எடுக்கவில்லையா அதிலும்உன்ஜென்மம்மெத்தசிறந்ததென்றறிவாயம்மாதாயே

---

சந்திரமதி பிரசவ தரு. இராகம்-கேண்டா. தாளம் சாப்பு.

பல்லவி.

என்னசெய்வேனடி அம்மாஅம்மா ஐயோநான்
எதுசெய்வேனடி.

அநுபல்லவி.

பெண்ஜென்மமறியடி பெருந்துன்பக்குகையடி
பேதையேயிதென்ன பிரளயஞ்சொல்லடி. (என்ன.)

வசனம்.

அடிமருத்துவச்சி, யிந்தஜென்மம்போதும் இந்தத்துயரமும்போதுமடி அம்மா.

மருத்துவச்சி வசனம்.

சகலமும்தெரிந்தவளாச்சுதே இப்படித்தியங்கலாமா கொஞ்சம்பொறுப்பாய்தாயே.

தரு.

சரணங்கள்.

கல்லும்மண்ணுமரமாய்க் கருதிப்பிறத்தல்மேலு
காட்டில்மிருகமாகில் கவங்கனம்வெகுமேலு
தொல்லுலகினில்தாயே கோதைப்பிறத்தல்பாழு
துன்பத்திலிதுமெத்த துயரடிநீகேளு
அடிக்குதே விலவில் இடிக்குதே யிடை
கடுக்குதே துடை நடுக்குதே அடி. (என்ன.)

மருத்துவச்சி வசனம்.

மண்ணும்பெண்பால்தான் மிருகங்களிலும் பெண்ணுண்டு இன்னங் கொஞ்சநேரம்பொறுப்பாய்தாயே.



தரு.

மேல்நோக்கியேசுவாச மெடுக்குதடிதாயே
விதவிதநோய்வயிற்றில் விளங்கிக்காட்டுதுவாயே
கால்கிறக்கச்சோருது கைகளாருதாநீயே
கமலவாசனிதற்கோ கருதிப்பிடித்தான்சேயே
கசையுதே குடல் பிசையுதே வுடல்
அசையுதே மனம் இசையுதே குந்த. (என்ன.)

மருத்துவச்சி வசனம்.

இந்தாத்திலாசிதமுக்காலியின்பேரில் உட்காருவாயம்மா சற்றேமேல் நோக்கிப் பார்ப்பாய்தாயே.

தரு.

அடிவயிற்றினிலேதோ அசையுதடியம்மா
ஆயாசமீறுது அழுந்துதடியம்மா
துடிதுடிக்குதேஅரை தோகையேதுரிதமா
சொல்லடிநீர்பெருகும் குக்ஷமென்னடியம்மா
சோருதே யுதோ சோருதே கண்
மீறுதே மனங்கோருதே தாங்க. (என்ன.)

மருத்துவச்சி வசனம்.

கோடிசூரியப்பிரகாசம்போல தேஜசுஉடைய திவ்வியமகன்பிறந்தான் சந்திரமதியம்மா வுனது பாக்கியமேபாக்கியம் அம்மாதாயே.

மருத்துவச்சி வசனம்.

குழந்தைபிறந்தசங்கதியை, அரசனுக்குத்தெரிவிப்பாயடியம்மா சவுந்தரவல்லி.

தோழி வசனம்.

அப்படியேயிதோபோய் தெரிவிக்கின்றேனம்மா.

தோழி விருத்தம்.

வேந்தனேமனைவியாக வேண்டியேமணம்புரிந்த
சாந்தமாங்குணத்தில்மிக்க சந்திரவதியுமிப்போ
நேந்துமேகெர்ப்பவாதை திவ்வியமகனைப்பெற்றாள்
யிந்ததோர்தாயும்பிள்ளை யிருக்கிறார்சுகமாய்வேந்தே.

வசனம்.

கேளும்மஹாராஜனே சந்திரமதிஅம்மன் கெர்ப்பநோய் நீக்கி திவ்விய மகனைப்பெற்றுந் தாயும்பிள்ளையுஞ்சுகமாயிருக்கிறார்கள் என் ஆண்டவனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியா மஹாசந்தோஷம் எல்லாம் பரமசிவத்தினுடைய அருளா லும் உனது எஜமானிக்காக வேண்டிய தேவபூசாரத்தி லதிஜாக்கிரதையா யிருப்பாய் பெண்ணே சவுந்தரவல்லி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேமந்திரியென்றன் அரசனைத்தாங்கவேண்டி
அப்பனே திவ்வியபுத்திரன் அவனியிற்பிறந்தாலே
செப்பவேபலதேசங்கள் திகழ்பெறமனங்களிக்க
இப்பவேசுவர்னதானம் இடைவிடாதிருவாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி, சிவனருளால் என்குலம்விளங்க திவ்வியபுத்திரன் பிறந்ததால் வேண்டியதானங்கள் அபரிமிதமாகக் கொடுப்பாய் மந்திரி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகின்றேன் மஹாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியகீர்த்தியொன்று சாற்றுவேன்கேளாயப்பா
நித்தியவோமம்யெக்கியம் நிகழ்த்திடும்முனிவர்சித்தர்
பத்தியிலுயர்ந்ததிவ்விய பண்புளோர்மகிழவேண்டி
நத்தியேவிசிஷ்டதானம் நயமுடனளிப்பாய்மந்திரி.

வசனம்.

கேளாயப்பாமந்திரி, வேதியர் முனிவர் யோகர் சித்தர்முதலானவர்களுக்கும் அபரிமிதமாய் தானங் கொடுப்பாய் அப்பாசத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

மஹாபாக்கியம் அப்படியேசெய்கின்றேன்சுவாமி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

ஐயனேநீர்தானிட்ட ஆக்கினைப்படியேகாணும்
ஐயனேமுனிவர்யோகர் அருந்தவத்தோருமற்ற
ஐயனேபலருவேத்தோர் அதிகமாய்மகிழ்கொண்டோங்க
ஐயனேதனம்பொன்பட்டாடையுமளித்தேன்வேந்தே.



வசனம்.

கேளும் ஆண்டவனே தாங்களிட்ட கட்டளைப்படியே வேதியர் முனிவர் முதலானசகலரு மகிழும்படி நவரத்தினம், பொன், பட்டாடைமுதலானசகல மும் கொடுத்தனுப்பினேன் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி மகன்வந்துபிறந்தசேதி
வந்திதோதெரியச்சொன்ன மாதுவின்மனங்களிக்க
சுந்தரப்பொன்பட்டாடை சொருகுசுறுபணிகள்மெத்த
தந்திடுவாய்நீயுன்றன் தாழ்வுறாக்கையாலப்பா.

வசனம்.

அப்பாமந்திரி, யிந்ததோழிக்கு வேண்டியவெகுமதிகள் கொடுத்தனுப்பு வாயப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகின்றேன் வேந்தனே.

மந்திரி விருத்தம்.

பொன்பணிகள் பலவுடனே வயிரப்பச்சை
புகழோங்க முத்துவடம்பட்டு ஆடை
நன்மொழியாள் தோழிமனங் களிக்கநானும்
நாடியே தானளித்தேன் நாதாபோற்றி.

வசனம்.

கேளும் சுவாமி, தோழிமனங்களிக்க வயிரம்,பச்சைவடம், பட்டாடை முதலானதும் கொடுத்தனுப்பினேன் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

மெத்தசந்தோஷம் மெத்தசந்தோஷம்.

மருத்துவச்சி விருத்தம்.

பாங்கியேசொல்வேன்கேளாய் பற்றும்புகலிகள்தன்னை
தாங்கிநீசென்றேவேறு தனியிடமிருத்தியிங்கு
ஓங்கியேசுத்திசெய்து ஓமோமோகாத்துநல்சல
நீங்கிடச்சாராங்கள் நிசமாமல்முடிக்காப்பாய்.

வசனம்.

அம்மாதோழி, பற்றுணவஸ்திரங்களை யிவ்விடமிருந்து நீக்கி யிந்த இடத்தை சுத்திசெய்து காத்தும் இரைச்சல் வாராமல் சாளரங்களைமூடி பத்திரமாகக் காப்பாய் அம்மாதாயே.

## பொது விருத்தம்.

பழமணியும் பொன்முத்து ரத்னமாடை
  பசுவுடனே நிலம்பொரிப்பும் பண்பின்மிக்க
குலமறையோர் தவமுனிவர் யோகர்சித்தர்
  கொடுக்கமனங் களித்திடவே சென்றபின்னர்
நலமுடனே பாலகனைத் திருநீராட்டி
  நவரத்தின கசிதமுள தொட்டில்தன்னில்
தலைமகனைத் துயில்புரிய சத்தியன்மாது
  தாலாட்டும் வகைசபையோர் தான்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே, மகன்பிறந்தானென்று ராஜன் பலதானங் கொடுக்க எல்லோரும்பெற்றுக்கொண்டுபோயினபின் சந்திரமதிஅம்மன் பாலகனைத் தொட்டிலிலிட்டு தாலாட்டும்விதங் காண்பீர்கள் கனவான்களே.

---

சந்திரமதி தாலாட்டு இராகம் நீலாம்புரி.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
பாரோர்புகழ்வந்த பரிதிகுலஜோதிவிளக்கே. (ஆரா.)
அந்தரசுவர்க்கமுற்ற அண்ணல்மகனைகோல்தாங்க
வந்தவென்றனுருதிரே வள்ளலேகண்வளராய். (ஆரா.)
கங்கைபுனைநாதன் கருணையினாலென்வயிற்றில்
மங்களமாய்வந்துதித்த மணியேகண்வளராய். (ஆரா.)
பாலேபழரசமே பகரவொண்ணாத்தெள்ளமுதே
மேலேவிண்ணோர்மகிழும் வித்தேதூங்கண்வளராய். (ஆரா.)
வேதமுறைதாலயமுறையும் விளங்கவேயின்றிட்டில்
இதமொழிகேட்கவந்த இனியேதூங்கண்வளராய். (ஆரா.)
மெய்க்கியகோமகனுமே மெத்தஇசைபுந்தாரேஞர்க
நீக்கெல்லாமுயிர்தபுதியபுகழ்தோமாகிரோகண்வளராய் (ஆரா.)



தருமமுடன்சத்தியமுந் தானோங்கவினைதமெனும்
பெருஞ்சபையைக்காக்கவந்தபோணியேகண்வளராய். (ஆரா.)

## அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி வளமிகுகுடிகள் யாயும்
இந்தநல்வருஷத்தீர்வை யியம்புவாய்வேண்டாமென்றே
அந்தமாய்நாட்டிலுள்ள அனைவருக்களிக்கச்சீனி
சுந்தரன்பிறந்ததற்காய் சுருக்கெனவழங்குவாயே.

வசனம்.

அப்பாமந்திரி, மகன்பிறந்தபடியால் ஊரில்வாழுஞ் சகலருக்கும் சர்க்கரை தாம்பூலமுதலானதும் வழங்குவாய் பின்னும் நமது குடிகளுக்கு இவ்வருஷத்திய தீர்வை வேண்டாமென்று தெரியப்படுத்துவாய் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

அடியேன் அப்படியே செய்கின்றேன் வேந்தே.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

முற்றுமிந்த வாசாள புத்ரன்வந்த
  மொழியறைந்து கட்டியனே குடிகட்கெல்லாம்
நற்றியிந்த வருஷத்தின் தீர்வைதன்னை
  நாயகனு மன்னித்தா ரென்றேசொல்லி
வெற்றிசையும் புகழோங்கச் சகலருக்கும்
  எண்ணெய்காய் சர்க்கரைவெற் றிலையும்பாக்கும்
வெற்றியுடன் கலர்னப்பூ நாறுமிட்டு
  விரைவுடனே அளித்திங்கு வருகுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே, நமது ராஜனுக்கு ஆண்பிள்ளை பிறந்ததாலே குடிகளுக்கெல்லாம் இந்தவருஷத்தியதீர்வை மன்னித்தோமென்று சொல்லுவாய் பின்னும் நாட்டிலுள்ள சகலருக்கும் சர்க்கரை யெண்ணெய் சீயக்காய் தாம்பூலம் ஈ. பொன்பூவுங்கொடுத்து வருவாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே செய்கின்றேன் சுவாமி.

## கட்டியன் விருத்தம்.

சொன்னதோர் முறைபோல்
இன்னிலத் தேவர்க்கும்
வண்ணமாய் அளித்தேன்
அண்ணலே போற்றி.

வசனம்.

சுவாமி, தாங்கள் செப்பியவாறே செய்துவந்தேன்.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

அண்ணலே நீர் தானிட்ட ஆக்கினைப்படியே இனி
அண்ணலே சுவர்ணபுஷ்பம் அடைக்காய் தாம்பூலத்தோடும்
அண்ணலே யாவருக்கும் அளித்தனமே குடிகட்கெல்லாம்
அண்ணலே வருஷத்தீர்வை அறிவித்தேன் வேண்டாமென்றே.

வசனம்.

ஆண்டவனே, சகலருக்கும் சர்க்கரை சுவர்ணபூ தாம்பூலமுதலானதும் அளிப்பித்தேன் குடிகளுக்கும் இந்தவருஷத்தீர்வை வெகுமதியென்றும் அறிவித்தேன் மஹாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

வெகுசந்தோஷம் வெகுசந்தோஷமானேன் மந்திரி.

## பொது விருத்தம்.

வேந்தனாமகன்பிறந்த விருப்பத்தால்சகலருக்கும்
சந்தனம்பன்னீர்புஷ்பம் இவையவைப்பிறந்தவாறும்
சாந்தமாய்முன்னடக்கும் தனிப்பலாபலனைக்கேட்க
வாய்ந்தஜோதிடனைராஜன் வருவிக்குமிதங்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, அரிச்சந்திரமஹாராஜன் குழந்தை பிறந்ததற்காகவேண்டிய வெகுமதிகளை நடத்தி இனி குழந்தைக்கு வரும் ஜாதகப் பலாபலனைத் தெரியவேண்டி சோதிடனை அழைப்பித்தறிவதைக் காண்பீர்கள் சபையோர்களே.



இரத்தினத்திற்முத்திழைத்தவெழில்போல்தந்தந்துலங்க
இமையவர்முதலோரும் இவளழகால்கலங்க
விரதத்திலுயர்ந்தோரும் வேண்டிநாடித்தியங்க
மேவிப்பொற்கிண்ணமென விளங்கும்ஸ்தனங்குலுங்க
கரத்தின்விரல்பயற்றங் காய்களைமாற்றிட
கைப்பிடியிடையுள சாமரஇயென்றிட. (மா.)

தவளச்சங்கதைமாற்றும் தனிக்கழுத்துதுலங்க
தவடைமாந்தோடையென தாவிவண்டுகள்தாங்க
இவளழகைக்கண்டுமே இந்திராணிபின்வாங்க
ஈசன்படைக்கமனம் என்கொண்டானெனவேங்க
பவமதைகண்ணிடாப் பண்பர்கள்தனக்குமே
பாரியாவாளென்றெண்ணப் பதருமல்நடந்துமே. (மா.)

## சந்திரவதி விருத்தம்.

விண்ணவர்காணொணாத வெண்கிரிபரத்தைநாடி
நண்ணருந்தவமியற்றி நாதன்றன்னருளாலென்னை
வண்ணமாயீன்றெடுத்தே மகிழ்வுடன்வளர்த்ததூய
அண்ணலேஅழைத்தவாறு அன்புடனருள்செய்வீரே.

வசனம்.

என்னை அருந்தவஞ்செய்துபெற்றுவளர்த்த தந்தையே அழைத்தகாரணந்தெரியச்சொல்லவேணும் என்பிதாவே.

## மதிதயராஜன் விருத்தம்.

என்னருந்தவத்தால்வந்த இனியவென்கண்ணே அம்மா
மன்னவர்மன்னருந்தன் மணமதுநாடிவந்தார்
உன்னதமாலைதாங்கி ஒளியவர்கீர்த்திகேட்டே
அன்னமேவுனக்கிசைந்த அரசன்மேற்சூட்டுவாயே.

வசனம்.

அம்மா, உன்கல்யாணத்திற்காக ராஜாதிராஜாக்களும் வந்திருக்கிறார் நீயிந்தபுஷ்பமாலையைக்கையில்தாங்கி அவரவர் பெருமையுங்கீர்த்திப்பிரதாபகுணத்தையுங்கேட்டு உனக்கு இஷ்டமான அரசன் கழுத்தில் போடுவாய் நான்பெற்றசெல்வமே.

### சந்திரவதி வசனம்.

அப்படியே செய்கின்றேன் என்பிதாவே.

### சந்திரவதி விருத்தம்.

பாங்கியேயென்றதந்தை பகன்றதால்சுயம்வரத்தில்
ஓங்கியபிரபலமன்னர் ஒளிசபைதனில்நான்சென்றே
நீங்கிடமதன்செய்வாது நிகழ்மணமாலைசூட்ட
தாங்கியமன்னர்பேரும் சௌரியமுமுரைப்பாயம்மா.

### வசனம்.

அடிதோழி, யென்தந்தை வாக்கின்படி நான்செய்யப்போகின்றேன் நீயி விடம் வீற்றிருக்கும்ராஜர்களின் பெயரும் பெருமையும் எனக்குத்தெரியச் சொல்லுவாய்அம்மா.

### மதிதயராஜன் விருத்தம்.

மன்னரின்மன்னரான மகிபரோவுரைக்கக்கேளீர்
அன்னவனருளிறவே அருந்தவப்புத்திரியான
கன்னிக்கிலன்குற்றசூக்ஷ்மம் கண்டுரைத்தவர்க்கிம்மாது
உன்னதம்மனைவியாவாள் உரைத்திட்டேனறிகுவீரே.

### வசனம்.

கேளுங்கள் ராஜாதிராஜர்களே, என்மகளிடத்தில் தேதன்றும்படியான பரம ரகசியத்தைக்கண்டு சொன்னவர்க்கு அவள்மாலையிடுவாளென்று அறி வீர்கள் வேந்தர்களே.

### தோழி வசனம்.

அம்மா, ராஜர்களின் பேரும்பெருமையுஞ் சொல்லுகிறேன் கேளாய்தாயே.

### வசனம்.

அப்படியே சொல்லுவாயடி பாங்கியே.

### தோழி - தரு. இராகம்-நாதநாமக்கிரியை. தாளம் -சாப்பு.

பல்லவி.

சொல்லுவேன் அம்மா மன்னர்பெருமை
சொல்லுவேன் கேளம்மா.



அநுபல்லவி.

அல்லும்பகலுலாவும் ஆதித்தன்மதிகுலம்
அடைந்தஅரசர்புகழ் அரிவையேநீதெரியச்.(சொ.)

சரணங்கள்.

அங்கதேசாதிபதி அழகிற்சிறந்தோரிவர்
அரிவையேகாம்போஜம் ஆளும்புனிதரிவர்
கொங்கணம்ஆள்பவர் கூர்ஜ்ஜரர்அதிவீரர்
கோதையேநேபாளர் கொடுஞ்சூரரிவரினி. (சொ.)

[illegible]யநாடாள்வோர் பலகலையுணர்ந்தவர்
பத[illegible]ங்காளம் பணியும்உத்தாரரிவர்
ஆண்டவன்வளர்காசி ஆளுமதிபரிவர்
அறந்த[illegible]ரவிளைவிக்கும் அண்ணலென்றறியினி.(சொ.)

சிந்துதேசத்தையாளும் சிங்காரர்மலையாள
தேசம்அரசுசெய்யும் தீரரிவரறிவாய்
தந்துபின்வாங்காத திராவிடர்கலிங்கத்தார்
தாழ்விலாச்சேரசோழர்தானிவர்முன்னடப்பாய்.(சொ.)

அம்மாஅயோத்தியாளும் ஆதியின்மாபுகற
அண்ணலிவரறிவாய் அழகிற்சிறந்தோர்சூரா
பெம்மானைப்பணிபவர் பெருமையிற்சிறந்தவர்
பேருலகம்புகழ்க்கும் பெண்ணேசந்திரவதியே.(சொ.)

### சந்திரவதி விருத்தம்.

என்மனங்களிக்கநாளும் இசைபுரிதோழிகேளாய்
முன்னம்நீவந்துரைத்த மொழிபெறுகிரிசங்கின்ற
மன்னவரிவரோஅன்றி மற்றுவேறுண்டோயிங்கு
பன்னவேவேண்டும்பிராண பதமானசகிதான்நீயே.

### வசனம்.

அடிஅம்மாதோழி, முன்னம் நீவந்துசொன்னவரிவர்தானு? அல்லது வே றுண்டா? சொல்லவேணும் பாங்கியே.

## தோழி விருத்தம்.

அம்மாகேளிவரேயாரும் அயோத்திபன்திரிசங்கின்ற
அம்மாகேள்அரசர்முன்னே அந்தணருரைத்துப்போன
அம்மாகேள்தருமநீதி அசத்தியந்தவிழ்த்திசெய்யும்
அம்மாகேள்முனம்நான்சொன்ன அரிச்சந்திரனிவர்தான்தாயே.

### வசனம்.

அம்மணி, முன்புமெதுராஜனிடம்வந்து உனக்குக் கல்யாணத்தை நிர்ணயித்துப்போன வேதியர்கள்சொன்ன ராஜாதிராஜனிவர்தான் தெரிவாயம்மா.

## அரிச்சந்திரன் விருத்தம்.

என்னகாரணந்தான்சொல்வாய் எந்திழாய்நின்கழுத்தில்
மின்னல்போலேதுதாலி விளங்குதேயுனதுதந்தை
முன்னம்யார்தனக்குஉன்னை முடித்தனன்விவரஞ்சொல்வாய்
நன்னலங்கடந்தேருது நடத்தலுந்தகுமோமாதே.

### வசனம்.

கேளும் பெண்ணே, உன்கழுத்தில் தாலியேது? முன் உன்னைமணஞ்செய்து மாங்கல்யஞ்சூட்டினவன் யார்? உன்தந்தை யிவ்விதமோசம் நடத்தக்கருதினதுஞ் சரியோ? சொல்லுவாய் மாதரசே.

## சந்திரமதி விருத்தம்.

அரசேநானுரைக்கக்கேளீர் அன்னையுங்குழந்தைவேண்டி
சூர்பணிகங்கைபூண்ட சுத்தனைத்தொழவேநானும்
வரமென்றனுடனித்தாலி வந்திடுங்கண்டபேர்க்கே
தரவேணும்பாரியென்றே சாற்றினனறிவீர்நாதா.

### வசனம்.

கேளும்மஹாராஜனே, சந்ததிவேண்டியென்தந்தை சங்கரனைக்குறித்துத் தவஞ்செய்யக் கடவுள் மகிழ்ந்து உனக்கு ஒருபெண் தாலியுடன்பிறப்பாள் அதைக்கண்டு சொன்னவருக்கு அவள்பாரியாவாள் என்றனர் அப்படியே நான் பிறந்தனன் இதுதான்பரமரகசியமென்று என்தந்தை சபையோருக்குஞ் சொன்னது பிராணநாதா.



## சந்திரவதி விருத்தம்.

வல்லவன்கிருபையாலே வந்தனரிவருமிங்கே
நல்லதோர்காலமின்று நாதனும்எனக்களித்தார்
சொல்லரும்வேந்தர்மன்னர் சூழுமிச்சபையிற்றோழி
அல்லலைகற்றிமாலை அன்புடன்சூட்டினேனே.

### வசனம்.

அம்மாசவுந்தரவல்லி, நான்முன்செய்தபூஜாபலத்தினால்இவர்வந்தார்சூக்ஷ்மத்தையுங்கண்டுசொன்னார். இதோயிந்தசபையிலுள்ளமுனிவர்களும்ராஜர்களுமறிய அரிச்சந்திரமஹாராஜரின்கழுத்தில் மணமாலைசூட்டினேன் அடியம்மா தோழி.

### தோழி வசனம்.

மஹாசந்தோஷம் அம்மாசந்திரவதியே.

### ரிஷிகள் வசனம்.

சகலசவுக்கியசாம்பிராஜ்ய அபிவிர்த்திக்கவேண்டியது சுபம் சதாஸ்து:அப்பா அரிச்சந்திரமஹாராஜனே அம்மா சந்திரவதித்தாயே நீங்களிருவரும் உடலும் உயிரும்போல் அரைநொடியாகிலும் இணைபிரியாமல் இருக்கக்கடவது வாழிவாழி.

## நாரதர் விருத்தம்.

சந்திரவதியைப்பெற்ற தயாபராமதிதயேந்திரா
உந்தனற்பெருமைகீர்த்தி உலகில்வேறொருவர்க்குண்டோ
கந்தவிழ்மலர்ப்பூஞ்சோலை கன்னியாபுரிகளிக்க
வந்தவர்போகாமுன்னம் மணமதைநடப்பிப்பாயே.

### வசனம்.

கேளாய்மதிதயராஜனே, இந்தசபை கலைவதற்குள்ளாக உனது தவப்புத்திரியாகிய சந்திரமதியின் நற்குணத்திற்கேற்ற கணவன்வாய்த்தான் சீக்கிரத்தில் கல்லியாணத்தை நடப்பிக்கத்தீவரப்படுவாய் மன்னவனே.

### மதிதயராஜன் வசனம்.

அப்படியே செய்கின்றேன் முனிநாதரே.

## மதிதயராஜன் விருத்தம்.

ஐய்ரோவிஸ்வாமித்திர அண்ணலேயெனதுபுத்திரி
ஐய்ரோதிரிசங்கின்ற அன்புளவேந்தனுக்கே

ஐயரேசுயம்வரத்தில் அணிந்தனள்மாலைதன்னை
ஐயரேவுமதுகையால் அணிமணம்நடப்பிப்பீரே.

வசனம்.

சுவாமிவிஸ்வாமித்திரரே, எனதுபுத்திரி அரிச்சந்திரமஹாராஜனுக்குமா லைசூட்டினள் தாங்கள் தங்கள் திருக்கரங்களால்கல்லியாணத்தைநடப்பிக்கவே ண்டும்முனிநாதரே.

## விஸ்வாமித்திரர் விருத்தம்.

மதிதயாமணம்நடத்தும் வண்மையுக்கிரிகையெல்லாம்
சதியன்றிவுணர்ந்தஅந்த தன்னரியவசிஷ்டராலே
விதிபிசகாதவண்ணம் விரைவினில்முடிப்பிப்பாய்நற்
கதிபெறஉபயத்திரள்தன் கருத்தைநான்சொன்னேன்கண்டாய்.

வசனம்.

அப்பாராஜனே, கல்லியாணம்நடத்தும் சடங்குகளில் தெளிந்தவசிஷ்டராலே சீக்கிரத்தில் லக்கினமீறாமல் நிறைவேற்றுவாய் வேந்தனே.

## மந்திரி விருத்தம்.

மண்ணுளோர்மதிக்குமன்னா மதிதயேந்திரனேகேளீர்
வண்ணமுன்மகள்தனக்கே மணஞ்சூட்டுங்காலமாச்சே
திண்ணமாஞ்சடங்கையெல்லாம் திறமையாய்நடத்தவேண்டி
செண்ணைலேவசிஷ்டர்கையால் செய்விப்பீர்செய்விப்பீரே.

வசனம்.

கேளும் மஹாராஜனே, சந்திரமதிஅம்மன் திருக்கல்லியாணச்சடங்கை வசிஷ்டரைக்கொண்டு நடப்பிப்பதேவெகுவுத்தமம் மஹாராஜனே.

மதிதயாராஜன் வசனம்.

அப்படியே நடப்பிக்கின்றேன் மந்திரி.

## மதிதயன் விருத்தம்.

அவமதியைத்தும்போக்கி ஐம்புலன்றனையொடுக்கி
தவநிறைநிஷ்டைபுக்கி தானதாய்நின்றபிரம்ம
குவலயமெலாந்துதிக்கும் குருநாதாவசிஷ்டமூர்த்தி
கவலைவிட்டெனதுபுத்திரி கல்லியாணம்நடப்பிப்பீரே.



வசனம்.

சுவாமிவசிஷ்டமாமுனியே, எனதுபுத்திரியாகிய வுமது அடியாள் சந்திர மதியின் திருக்கலியாணத்தை தங்கள் கையினால் நடப்பிக்கவேண்டுகின்றேன் தேவனே.

வசிஷ்டர் வசனம்.

அப்பாமதிதயாராஜனே, சந்தோஷம் அப்படியே நடப்பிக்கின்றேன்; சக லரும் கல்லியாணமண்டபத்திற்கு வருவீர்களப்பா.

மதிதயாராஜன் வசனம்.

அப்படியே யெல்லோரும் கல்லியாணமண்டபத்திற்கு வருகின்றோம் முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்.

கேளும்மதிதயராஜனே, கல்லியாணத்திற்கு வேண்டியசாமக்கிரியங்களை வரவழைக்கவேண்டும் வேந்தே.

மதிதயாராஜன் வசனம்.

சுவாமி, அப்படியே ஓமத்திரவியங்களும் சமத்துகளும் சாமக்கிரியங்க ளும் இதோவரவழைத்தேன் நடத்தவேண்டியதை நடப்பிப்பீர்முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்.

அப்பாராஜனே, சந்திரமதியை ஆசனத்தில் அரிச்சந்திரன் முன்னிலையி லிருக்கச்செய்வாய் வேந்தனே.

மதிதயாராஜன் வசனம்.

சுவாமி, உமது ஆக்கினையின்படியெனது புத்திரியைச்சிங்காரித்து ஆசன த்திலிருக்கச்செய்தேன் முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்.

கேளுங்கள் வேதியர்களே, ஆதிகணபதியின் பூஜைநடப்பிப்பீர்கள் சுவா மிகளே.

மதிதயாராஜன் வசனம்.

கேளாய்பெண்ணே சுந்தரரோகையே, நாம்மணவறைச் சாலைக்குப்போ வோம் வாராய்.

## சுந்தரரோகை விருத்தம்.

என்னுயிர்க்குயிரதான இறைவனேநின்றுன்போற்றி
மன்னரில்மகிமைபூண்ட மகதநாட்டரசேபோற்றி
உன்னருமணச்சாலைக்கே உகந்தெனைநீரழைத்த
தென்னகாரணமோதோன்ற இயம்புவீரொளியாளுக்கே.

வசனம்.

கேளும்பிராணநாதா, என்னை மணவரைச்சாலைக்கு அழைக்குங்காரணந் தெரியச்சொல்லவேண்டும்.

## மதிதயன் விருத்தம்.

அடிமானேநாம்தான்பெற்ற அருந்தவமாதுஇன்று
படிமிசைபுகழ்யோத்தி பதிதனைமாலையிட்டாள்
கெடிதலம்நமதுநாட்டிற் கிளரொளுமன்னர்காண
கடிகினில்வாராய்சென்று கன்னியைத்தாரைசெய்வோம்.

வசனம்.

கோவெனப்பிராணநாயகி, நமது தவப்புத்திரியாகிய சந்திரவதியானவள் இன்று சுயம்வரச்சாலையில் அயோத்தியாபுரியையாளும் ஏகசக்கிரேஸ்வரனுகிய அரிச்சந்திரமஹாராஜனைமாலைசூட்டியதால் நாமிருவரும்மணவரையிற்சென்று சகலருமறிய கன்னியைத் தாரைவிட்டுவருவோம் வாராய் பெண்ணே.

சுந்தரரேகை வசனம்.

மஹாபாக்கியமப்படியேவருகின்றேனென்பிராணநாதா.

## வசிஷ்டர் விருத்தம்.

அப்பனேமதிதயேந்திரா அன்பனேபலருங்காண
இப்பதின்மகளையின்று இனிவுடன்தாரைவாரோ:

வசனம்.

அப்பாமதிதயமஹாராஜனே, நீயுமுன்தேவியுமணவரையில்நின்றுபலருங்காண சந்திரவதியை தாரைவார்ப்பாய் வேந்தனே.

## மதிதயன் சுந்தரரேகை இருவருஞ்சொல் விருத்தம்.

அரியதவஞ் செய்தன்று சிவத்தால்காங்க
ளடைந்தவழ குறுசந்திர வதியையின்று
பிரியமுடன் ரவிகுலத்து திரிசங்கின்ற
பேசரிய வரிச்சந்திர மகிபனுக்கே
கரிபுரித்தோன் ரவிமதியும் பூமிசேனும்
கல்ஜலமு மஷ்ட்டதிக்கோர் முனிவர்காண
பரிவுடனே மணவரையிற் றாரைவார்த்தோம்
பலகோடி காலமிவர் வாழ்கவாழி.



வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, நாங்களரியதவஞ்செய்துபெற்ற சந்திரவதியம்மாளையின்று கயிலைவாசனும் தேவியும் தேவர்களும் சூரியசந்திரனும் பூதேவி ஆகாயவாணியும் அஷ்டதிக்குப்பாலகர்களும் தவமுனிவர்களும் மன்னாதிமன்னர்களுமறியக் கன்னியைத் தாரைவார்த்தோம்; இவர் கற்பகோடிகாலஞ்சுகமாய் வாழக்கடவது வாழிவாழி.

## வசிஷ்டர் விருத்தம்.

மன்னவர்மன்னனீதான் மகாகோடிகாலம்வாழி
இன்னிலமதனிலிந்த ஏந்திழைதானும்வாழி
பன்னரும்யோகபோக்கிய பாவுயின்சந்ததியம்வாழி
என்னருஞ்சீடாநீதா னிகபரசவுக்கியம்வாழி.

வசனம்.

அப்பாஎன்னருமை சீடனுகிய அரிச்சந்திரா, நீயுமுன்பத்தினியாகிய சந்திரவதியும் தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் வேந்தர்கள்புகழ்கீர்த்திபெற்று இகபரசவுக்கியமடைவீர்கள் வாழி.

## நாரதர் விருத்தம்.

சந்திரவதியும்வாழி சற்குணம்பெருகவாழி
சுந்தரவரிச்சந்திரா சுகமாகவாழிவாழி.

வசனம்.

அரிச்சந்திரமஹாராஜனே, நீயும் சந்திரவதியம்மாளுஞ் சதாசுபம் வாழிவாழி.

## விஸ்வாமித்திரர் விருத்தம்.

என்னருங்குலத்திலுந்த இறைவனாந்திரிசங்கின்ற
மன்னனுந்தேவிதானும் மகிழுடன்வாழிவாழி.

வசனம்.

என்குலத்திலுதித்த திரிசங்களித்த அரிச்சந்திரனும் அவன்தேவி சந்திரவதியும் சதாசுபம் வாழிவாழி.

## யாத்திரைப்பிராமணன் விருத்தம்.

எங்களையன்றுவேண்டி இசைந்ததைமுடிக்கச்செய்த
மங்களவுனமையாள்பாகா மன்னனுந்திரிசங்கின்ற

திங்கள்கன்னழகன்தேவி செப்பொனுப்பெருமைபூண்டே
சங்கராவுனைத்துதித்தே சதாசுபம்வாழிவாழி.

வசனம்.

எங்களையன்று கோரிக்கேட்ட மன்னவனிஷ்டப்படி சந்திரவதியம்மன் அவனை மணஞ்செய்யக் கூட்டிவைத்த பரமசிவமே யிந்த தம்பதிகளிருவரும் மஹாகோடிகாலம் கீர்த்தியடைவது சகலசம்பத்துடன் உனதுஇவ்வியாமந்து நித்துசுகமாயிருக்கவாழிவாழி.

நாரதர் விருத்தம்.

மன்னனில்தேர்கன்னிநாட்டின் மஹிபனேவுரைக்கக்கேளாய்
இன்னமதாய்விவாகம் தேவரும்மகிழ்வதாக
வண்ணமாய்நடந்ததாலே வந்ததோர்மன்னர்கட்கே
அன்னலேபோஜனந்தான் அன்புடனளிப்பாய்வேந்தே.

வசனம்.

கேளும்மதிதயராஜனே, சந்திரமதியினுடையவிவாகம் தேவர்களும் மகிழ்ந்திக்கதாக நடந்தேறிற்று; இனிவந்திருக்கும் பந்துஜனவர்க்கங்களுக்குபோஜனத்தை நடப்பிப்பாய் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

அப்படியே நடப்பிக்கின்றேன் முனிநாதரே.

---

பொது விருத்தம்.

புளிப்புடனே காரம்உப்பு துவர்ப்பினிப்பு
புனிதமுடன் கயப்புடனு ருசிகளோடு
களிப்புறவே மன்னுதி மன்னரெல்லாம்
கருதியதோர் புசிப்பதனை யுண்டுஅப்பால்
களிப்புறவே தாம்பூலம் கந்தம்புஷ்பம்
நாடியே பன்னீருந்தாங்கியாவர்
வெளிப்பட்டே அவரவர்கள் தேசம்புக்க
வேந்தனிடம் விடைபெற்று மேவினரே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, சந்திரவதியம்மன் திருக்கல்லியாணத்திற்காக வந்திருந்தபந்துவர்க்கசம்பந்த மன்னுதிமன்னர்களெல்லாம் அறுசுவைபதார்த்தத்துடன் உண்டிபுசித்து கந்தபரிமளம்அணிந்து தாம்பூலந்தரித்து மதிதயராஜனிடத்தில் விடைபெற்று தங்கள்தங்கள் இருப்பிடம் சென்றார்களென்றறிவீர்கள் சபையோர்களே.



விஸ்வாமித்திரர் வசனம்.

கேளும் மதிதயராஜனே, உனது புத்திரியின்விவாகம் நடந்த விதத்தில் மெத்தவும் களிப்புற்றேன் இனிமதது ஆசிரமம்போய்வருகின்றேன்வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

மஹாபாக்கியம் அடியேன்பேரில் சம்பூர்ணகடாக்ஷமிருக்கவேண்டியது முனிநாதா.

வசிஷ்டர் வசனம்.

அப்பாமதிதயராஜனே, கல்யாணம் வெகுசிறந்தியங்களே நடப்பித்தாய் சந்தோஷம் சந்தோஷம் எனது ஆசிரமத்திற்குப் போய்வருகின்றேன் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

அடியேன்பேரில் என்றும் சம்பூர்ணகடாக்ஷம் வைத்தாளவேண்டியது வசிஷ்டமஹாமுனியே.

நாரதர் வசனம்.

கேளும்மதிதயராஜனே, தேவாதிதேவர்களும்கண்டு மகிழத்தக்கதாக சந்திரமதி அம்மனுக்கு விவாகம் யாதொருகுறையின்றி நடந்தேறியது உனது பாக்கியமே பாக்கியம் நீ மகளைத் தவஞ்செய்து பெற்றதுபெரிதல்ல உன்கோரிக்கைப்படி நல்லயோக்கியனை மருமகன் கிடைத்ததற்காக நான் மெத்தவும் சந்தோஷப்பட்டேன் இனிநான் தேவலோகத்திற்குப் போய்வருகின்றேன்வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதம் அடியேன்பேரில் பூர்ணகடாக்ஷம் இருக்கவேண்டியது நாரதமஹாமுனிவரே.

---

பொது விருத்தம்.

மணமிகுமணத்தைநாடி வருமன்னர்முனிவரெல்லாம்
கனமுடன்களித்துஉண்டு கன்னிபன்விடைபெற்றேக
மனமதுகளித்தேகூட மன்னனும்மாதுமொத்து
கனமுடன்பள்ளியுற்றார் கழறினேனறிவீர்தாமே.

வசனம்.

கேளுங்கள் கனவான்களே, கல்யாணத்திற்காக வந்திருந்த முனிவர்களும் ரிஷிகளும் வேந்தர்களும் மதிதயாராஜனிடம்விடைபெற்று அவரவரிருப்பிடஞ்சென்றனர். சந்திரமதியம்மனும் அரிச்சந்திரமஹாராஜனும் உண்டுடித்தி சயனிக்கப்பள்ளியறை அடைந்தனர்களென்றறிவீர்கள் சபையோர்களே.

---

அரிச்சந்திரன் தரு இராகம்-சஹானா தாளம் சாப்பு.

பல்லவி.

மயிலே வசந்தகாலமே பாராய் கூட—
வருவாய் முத்தந்தருவாய் மட.

அநுபல்லவி.

கையில்மன்மதன்வில்லைக் காட்டுகிறான்பாவி
கண்ணேயென்மேலருள் பண்ணே இனிசகிக்கேன். (மயிலே.)

சரணங்கள்.

உன்னைச்சேரவேகாணும் ஓஹோஹோ வெகுநாளாய்
உம்பர்கயிலையனை யுருகிப்படித்திருந்தேன்
தன்னையனையசாலந் தாக்குதலாகுமோ
தாளேனினி மீளேன்மயல்
சாலேன்தனி வாழேன் மட. (மயிலே.)

வேண்டியேபோனதெய்வம் விளங்குமுன்கண்டாப்போல்
வித்தகிநீயெனக்கே பத்தினியாகவாய்த்தாய்
தாண்டியென்னையேவிட்டு சங்கரன்மருகனும்
தலைதப்பியே நிலைவிட்டிட
குலைகெட்டுமே அலைவுற்றிட. (மயிலே.)

சூதநூலினிற்செப்பும் சூக்ஷமந்தெரிந்துநாமே
சொகுசுறுகேளிக்கை அணிவாய்நடத்தப்போமே
இரவியின்குலமோங்க ஈசனுமருள்செய்ய
எண்ணிமனம் நண்ணிவுடல்
பின்னியுற கண்ணிமட. (மயிலே.)



அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமேகிளியேமானே அயோத்தியைவிட்டேவந்து
அன்னமேநெடுநாளாச்சு அரசுஎவ்வாறுகாணேன்
அன்னமேநீதான்சென்று அன்னையின்விடைகைக்கொண்டால்
அன்னமேநமதுநாடு அடைகுவோமன்பாய்த்தானே.

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரமதி, நான் நமதுதேசம்விட்டுவந்து வெகுநாளாயிற்று நமதுராஜ்ஜியம் எதாயிற்றோ நீயுன்தந்தையிடஞ்சென்று விடைபெற்றுவந்தால் நமது தேசத்திற்குப் போவோம்பெண்ணே.

சந்திரமதி வசனம்.

அப்படியே போய் விடைபெற்று வருகிறேன் பிராணநாதா.

சந்திரமதி விருத்தம்.

தந்தையேவெகுநாளாகத் தவஞ்செய்துஎனையேபெற்று
விந்தையாயிதுவரைக்கு மேனியைவளர்த்தஐயா
உந்தனைப்பிரியநானும் உற்றதேபெண்ணின்ஜென்மம்
வந்ததின்பயனைக்கண்டேன் மனமதுவாடுதையா.

வசனம்.

என்னை அருந்தவஞ்செய்து பெற்றதந்தையே உன்னைப் பிரியுங்காலம் வந்து நேரிட்டது என்னசெய்வேன் என்பிதாவே.

---

சந்திரவதி தரு. இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.

ஆளன்வரவேசொல்லி அழைக்கிறாரேனையா
அடியாளும்போய்வரவோ சொல்லையாயென்னையா
காலமிப்படியென்றென் கருத்திலெண்ணாமற்போனேன்
கழலடிபிரிந்திடக் காரணம்வந்ததையா. (ஆளன்.)
பெண்ஜென்மமெடுத்ததும் பெருந்துயருறவென்றே
பேதையிப்போதறிந்தேன் ஐயாவேயென்னையா
நன்மையாய்ப்பெற்றெடுத்த நாதாக்களைப்பிரிய
நாயகனால்காலங்கண்டேன் ஐயாவே யென்னையா. (ஆ.)

பிறந்தவிடம்பிள்ளைக்கன்றி — பெண்களுக்கில்லையெனும்
பேச்சின்றறியலானேன் — ஐயாவேயென்னையா
வரந்தந்தசிவன்றனை — மகனுயெனைப்படைக்க
மன்றாடாதேனுநீர்தான் — ஐயாவேயென்னையா. (ஆ.)
நானுஞ்சதமென்றெண்ணி — நானுமிருந்தேனிங்கு
நகன்றிடக்காலமாச்சே — ஐயாவேயென்னையா
வாழுமனைவேறென்று — வழுத்தும்மாந்தர்மொழியின்
வண்மைக்குள்நானுமானேன் — ஐயாவேயென்னையா. (ஆ.)

மதிதயராஜன் வசனம்.

அம்மாசந்திரவதி, விசனத்தைவிடு இதுஎல்லோருக்கும் இயல்பேயாகும் என்கண்மணியே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னனேமதிதயேந்திர மாமாநானுரைக்கக்கேளாய்
என்னருஞ்செங்கோல்தன்னை யிந்நுமேஅமைச்சன்பாகம்
வன்னமுன்மகளைநாடி வந்துநான்வெகுநாளாச்சே
சென்னெலோங்கயோத்தியேகச் சிலவதுகொடுப்பீர்போற்றி.

வசனம்.

கேளும் எனதுமாமாவே, நான்வந்து நெடுநாளாச்சுது அயோத்திக்குப் போக விடைதரவேண்டும் மாமாவே.

---

அரிச்சந்திரன் தரு. இராகம்-எமுனகல்யாணி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

விடைகொடுப்பீர் வேந்தேபோக விடைகொடுப்பீர்.

அநுபல்லவி.

தடைகளின்றியே — சந்தோஷமாகவே
தக்கவயோத்திக்கிச் — சந்திரமதியுடன். (விடை.)

சரணங்கள்.

வீட்டைவிட்டேவந்து — வெகுநாளாச்சுது
நாட்டையடைந்தினி — நானரசுசெய்ய. (வி.)



## அரிச்சந்திரன் விருத்தம்.

கலைமையும்பெருமைமிகு ஞாயமுமொழுக்கந்தன்னை
நிலைமையாய்விளங்செய்யு நெறியுள்ளமந்திரிகேளாய்
குலமதுவிளங்கதிவ்விய குமாரனும்பிறந்ததாலே
வலதுளசாஸ்திரியாரை வரச்செய்வாயிவண்செய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி, குழந்தை பிறந்தவகையால் இனி நடக்கப்போகிற பலாபலன்களைத் தெரியவேண்டியதால் ஜோதிடரை அழைப்பிப்பாய் மந்திரி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் வேந்தனே.

## மந்திரி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா அணிகொடிதனிலேசென்று
திரமும்வலுமைசாஸ்திரத் திறமையுமுணர்ந்தேகால
நேரமுமறியச்செப்பும் நிகழுஞ்ஜோதிடரைநீதான்
வீரமாயழைத்தேயிங்கு விரைவினில்வருகுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே, வேந்தனுக்குக் குழந்தைபிறந்த பலாபலத்தைத் தெரியவேண்டியதால் ஜோதிடரை அழைத்து வருவாயப்பா வீரனே.

கட்டியன் வசனம்.

அப்படியே அழைத்துவருகின்றேன் சுவாமி.

## கட்டியன் விருத்தம்.

சாத்திரமுணர்ந்த ஜோதிஷியரேயும்மை
பார்த்திபன்அழைத்தனன் நேத்தியாய்வருவீர்.

வசனம்.

ஐயா ஜோதிடரே, உம்மை எங்களுடைய மஹாராஜா அழைக்கச்சொன்னார் சுவாமி.

## ஜோதிடர் விருத்தம்.

ஒருதடையின்றி அருமையாய்நானும்
வருகிறேனுன்பின் வருகிறேனப்பா.

வசனம்.

வருகிறேனப்பா வருகிறேன் கட்டியனே.

---

ஜோதிடர்வருகிற தரு. இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜோதிடர்வந்தார் பலன்சொல்லும் ஜோதிடர்வந்தார்.

அநுபல்லவி.

பாதிமதிசடையில் பரிவுடனேதரித்த
ஆதிசிவனடியை யனுதினமுந்துதிக்கும். (ஜோ.)

சரணங்கள்.

வேதமுறை படித்தே-நவக்கிரக-விதியைவாயால் கொடுத்தே
குரோதமதைத்தடுத்தே-பலபேருங்-கொள்ளுங்கருத்தைவிடுத்தே
மாதலத்தினில்தார் வருத்தபாலகர்களின்
அந்தஉடைகதனை வருத்துமுடனேயவர்
வாழ்வையும் வரும்தாழ்வையும்
மட்டிடாமலே விட்டிடாமலே
தட்டிடாமலே கெட்டிடாமலே மனம்
வைத்துத்திசை புத்தியுடன்
நக்ஷத்திரம் முதலுஞ்சொலும். (ஜோ.)

ஜோதிடர் விருத்தம்.

சத்தியம்வழுவில்லாமல் தனிச்செங்கோல்செலுத்திநாட்டில்
நித்தியந்தருமம்வெள்ளி க்ஷேமமாய் நடக்கவாகி
சுத்தியேகோவும்வேங்கை சொல்பசைசீக்கிவாழ்க
வைத்திடும்அரசேயென்னை வரவிட்டதருள்வாய்போற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மஹாராஜனே அடியேனை அழைப்பித்த காரணந் தெரியப்படுத்தவேண்டியது வேந்தே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சாத்திரியாரேகேளிர் தருமபத்தினியுமென்றன்
கோத்திரம்விளங்கத்திவ்விய குழந்தையின்பெற்றதாலே



நேத்திரயாய்ஜோதிடத்தால் நிருமேபலாபலத்தைச்
சாத்திடவேண்டியிங்கு தானழைப்பித்தேன்கண்டீர்.

வசனம்.

கேளும் ஜோதிடரே, என்குலம் விளங்க மகன்பிறந்தபடியால் ஜோதிட நூலைப்பார்த்து பலாபலன் தெரிந்துகொள்ள அழைப்பித்தேன் ஐயா.

ஜோதிடர் விருத்தம்.

அப்படியேநான் சொற்படிநூலை
ஒப்பிடப்பார்த்தே கொப்பெனவுரைப்பேன்.

வசனம்.

சுவாமி தங்கள் உத்தரவின்படி நூல்களைச் சோதித்துச் சொல்லுகிறேன் வேந்தனே.

ஜோதிடர் விருத்தம்.

வேந்தரேமதலைவந்த வேளையும் நாளுமின்றோ
சாந்தமாயெனக்குரைப்பீர் தாளடிபோற்றிபோற்றி.

வசனம்.

மஹாராஜனே, குழந்தைபிறந்தநாளும் நேரமும் எனக்குத்தெரியச்சொல்லுஞ்சுவாமி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அறிவினிலுயர்ந்தவென்றன் அன்புகொள்தாழ்வுமின்றி
நெறியுடனடக்குமந்திரி நிமைதனில நீயேசென்று
விரிபுகழ்மைந்தன்வந்த விபரமுங்கடிகைதன்னை
சரிவரத்தெரிந்துவந்தே சாத்திரிக்குரைசெய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி, நீயேசென்று என்மகன்பிறந்தநாளையும் நேரத்தையும் தெரிந்துவந்து சாஸ்திரிக்குச்சொல்லுவாய் அப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அத்தனேஅரசேயெங்கள் அன்பனேஅண்டினோரின்
சுத்தனேதேவியின்ற கண்மணிதானும் இந்த
சித்திரையுத்தபத்தாந் திங்களிலவையியந்தி
உத்தனென்றேதாயாருரைசெய்யஅறிந்தேன்வேந்தே.

### வசனம்.

ஆண்டவனே தைமாதம் பூர்வபக்ஷம் நவமி பகல் உ௰௬-நாழிகைக்கு மேல் ஜெனனமென்று தெரிந்தேன் சுவாமி.

### அரிச்சந்திரன் வசனம்.

ஐயா ஜோதிடரே, இதேபிரகாரம் குறிப்பிட்டுக் கொள்ளும் சாஸ்திரியரே,

### ஜோதிடர் வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே குறிப்பிட்டுக்கொள்ளுகின்றேன் மஹாராஜனே.

## ஜோதிடர்-வெண்பா.

வாரமது திங்கள் வளர்நவமி பூர்வம்
தாரணியி லோர்பரணி தானுதித்தான்-வீரமுளோய்
அவனிதனை யோர்குடையி லாள்வான் பனிரெண்டில்
கவனியினி குண்டலியால் காண்.

### வசனம்.

கேளும் சுவாமி, மகரமாதம், பூர்வபட்சம், நவமி, சோமவாரம் பகல் நாழிகை உ௰௬-க்குமேல் கர்க்கடலக்கனத்தில் மேஷராசியில்ஜெனனமானதால் இதின் இராசியில் கிரகம் நின்றநிலைதெரிவிக்கின்றேன்மஹாராஜனே.

### அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே தெரியும் ஜோதிடரே.

## ஜோதிடர் விருத்தம்.

ஆதித்தன் திருவோண மொன்றிற் செவ்வாய்
அதேரெண்டிற் சந்திரனே பரணியொன்றில்
பேதிக்காச் செட்டியுமே சித்திரைரெண்டில்
பிரமனாம் பூசமுதற் காலில்நின்றான்
வேதமுற்ற தேவர்கோன் முதல்மகத்தில்
வீரியமுள காலனுமே சதயம்மூன்றில்
பாதகியாங் காரியுமே அனுஷம்மூன்றே
பாரகணக்கன் ரோகணிமுன் பகருவேனே.



### வசனம்.

சுவாமி, திருவோணம் ஒன்றில் சூரியன், பரணி ஒன்றில் சந்திரன், திருவோணம் இரண்டில் செவ்வாய், சித்திரை இரண்டில் புதன், பூசம் ஒன்றில் குரு, மகம் ஒன்றில் சுக்கிரன், சதயமூன்றில் சனி, அனுஷம் மூன்றில் இராகு, ரோகணி ஒன்றில் கேது, இப்படியாக தற்காலத்தில் கிரகம் நின்றநிலை வேந்தனே.

| | | | |
|---|---|---|---|
| | சந்திரன் | கேது | |
| சனி | இராசி | | லக்கினம் குரு |
| செவ்வாய் சூரியன் | குண்டலி | | சுக்கிரன் |
| | இராகு | | புதன் |

### ஜோதிடர்வசனம்.

சுவாமி, இராசி குண்டலியில் கிரகம் நின்றவகையைச் சொல்லுகின்றேன் மஹாராஜனே.

### அரிச்சந்திரன் வசனம்.

சந்தோஷம் அப்படியே தெரியப்படச்சொல்லும் ஐயா ஜோதிடரே.

## ஜோதிடர் விருத்தம்.

சூரியனும் குஜனேழிற் குருவுதானும்
சொகுசுற்றான் லக்கினமாங் கடகந்தன்னில்
வீரமுடன் ராகுஐந்தில் கேதுவுமதில்
விளங்கினான் நட்புடனே புதனோலென்றால்
சாரமுள கன்னியிலு மேஷச்சந்திரன்
தனிச்சுக்கிரன் சிங்கத்தில் அச்சம்பெற்றான்
காரியுமே கும்பத்தில் ஆக்ஷியுற்றான்
கழறுவே னிதின்பலத்தைக் காணீர்வேந்தே.

### வசனம்.

கேளும் மஹாராஜனே, லக்கினமாகிய கடகத்தில் குருவும் இரண்டாமிடத்தில் சுக்கிரனும் மூன்றாமிடத்தில் புதன் உச்சனும் ஐந்தாமிடத்தில் இராகு ஆக்ஷியாயும் ஏழாமிடத்தில் சூரியன்பகைவனும் செவ்வாய் உச்சனு

யும் எட்டாமிடத்தில் சனி ஆக்ஷியாயும் பத்தாமிடத்தில் சந்திரன் பகைவ னாயும் பதினோராமிடத்தில் கேது சுபனாயும் நின்றபடியால் இனிநடக்கும் பலனைச்சொல்லுகின்றேன் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே பலனைச்சொல்லும் ஜோதிடரே.

ஜோதிடர்-அகவல்.

வேந்தனேகேளாய் விளம்புவேன் நீர்தான்
ஈந்தோர்மைந்தனா லினிவரும்பலத்தை
மேஷமேராசி மேவினதாலே
தோஷங்கள்கொஞ்சம் சொல்விடலானேன்
இலக்கணப்பலனே எழிலலங்கிரன்
யாகஹோமங்கள் இயற்றியேவாழ்வான்
உச்சத்திலுமேவ னுற்றதால்லோகம்
மெச்சவேகீர்த்தி விளங்கியேயிருப்பான்
காரியுமாகூஷி கனமுடனுற்றதால்
வீரியம்பெருகி மேதினியாள்வான்
சூரியனொருவன் சொல்லுவேனரசே
காரியபங்கமுங் கயப்பிடமுற்றனன்
ஆதலாலுனைப்பெ னையனேகொஞ்சம்
வேதனைவிளைந்தே வினைவினில்நீங்கும்
மதியுமேஷத்தில் வாய்த்ததால்சந்திர
வதியுமேவிசேஷம் மனதினில்அடைவாள்
ஆயுள்காரகன் ஆக்ஷிபெற்றதனால்
காயத்திற்றொன்றுங் கஷ்டமில்லைவேந்தே
கோசாரவிதியையும் கூறுவேன்கொஞ்சம்
நாசனுமுடவன் நகன்றிடில்மீனம்
ஏழரைஆண்டும் இம்சையுங்கலக்கமும்
தாழ்வுறச்செய்தவன் தன்னுளொழிந்திடில்
மென்மேல்கீர்த்தியும் விளங்கவேயசம்
நன்மையுஞ்செல்வமும் தான்கொடுத்திடுவான்
இதயிலனத்தில் ஏகியபின்னென



பருமனேநீதான் பண்புடனறிவாய்
ஞாலத்தில்பாணியில் நற்சிசுவந்ததால்
சாலவேலோக தாசனேபெயராம்
வியாழனுமலக்கினம் வீற்றதால்சிறுவன்
ஞாலமேற்பலகலை கவிலுவன்கோவே
நடப்பதுசுக்கிர நற்றிசைராகு
கடப்பதிபுக்தியாம் கண்டிடுமரசே
எந்தையேவெனக்கே இயன்றமட்டிலும்
வேந்தனேயுரைத்தேன் விமலனேசரணம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாய் வலுமைஜோதிடர்க்கே
தந்தினிவெகுமதி தான்அனுப்புவையே.

வசனம்.

அப்பாமந்திரி, இந்த ஜோதிடர்க்கு வெகுமதி கொடுத்து அனுப்பிவைப் பாய் சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் சுவாமி.

மந்திரி வசனம்.

இந்தவிலை யுயர்ந்த பட்டு பணிமுதலானவைகளைப் பெற்றுக்கொள்ளு மையா ஜோதிடரே.

ஜோதிடர் விருத்தம்.

அனுதையாமெனக்கு அன்புடன்வெகுமதி
மனோதிக்கமாகவே மந்திரியளித்தனர்
குணோதியும்நீருமுன் குழந்தையுஞ்செங்கோல்
வினோதமாஞ்சபையும் மென்மேலும்வாழி.

வசனம்.

வாழி வாழி மஹாராஜனே வாழி.

---

பொது விருத்தம்.

தேவர்களரக்கர்சித்தர் திகழ்புவிவேந்தர்மன்னர்
மூவர்கள்வசுக்கள்பாலர் முனிவர்கள்யோகவான்கள்
யாவருநடுங்கச்செய்தோ னனிகவக்கிரகத்தின்மேலோன்
காவலன்றன்னைக்காணக் காரியம்வருகின்றானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மஹா மகத்துவந்தங்கிய சனிபகவான் அரிச்சந்திரமஹாராஜனைக் காணவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

---

சனி - தரு. இராகம்-அடாணு. தாளம்-ஆதி.

பல்லவி.

தேவர்தேவர்களு நாதர் மூவர்களும்
திகைக்கச்செய்தசனியன் நானே - மனம்
பதைக்கச்செய்தபுனிதன் யானே.

அநுபல்லவி.

காவலனேயாகிலும் எனக்கிணைசொல்லப்போமோ
கடந்தசுக்கியாளிகளும் கண்டால்நிலைக்கலாமோ
பாவந்தனக்குஅஞ்சாப் பழியைச்சமத்திமெத்த
தாபத்திரியத்துள்ளாக்கும் சாயாவதியளித்த. (தே.)

சரணம்.

ஆதிமூலப்பொருளை ஒருகொடிக்குள்ளாக
அடக்கிசர்ப்பந்தரிக்கச் செய்தேன் - நல்ல
அழகுள்ளமாயனைக் கோவமொடிக்கிப்பன்றி
யாக்கிபூமியைக்கெல்ல வைத்தேன்
நீதிவழுவாக்காலன் கொண்டமதமழிக்க
நிலத்திலுருளவுதைப் பித்தேன் - சர்வ
நிகரொடிங்கிட அந்தப் பிரமன்சிரசுதனை
நிமையிற்கிள்ளிடச்செய்து வைத்தேன்
கோதிலாக்குணன் அந்த குமரன்பயமடைந்தே
கோணுமரமாய்நிற்கச் செய்தேன் - சகல
கோடாசிகளைக் காக்குமவனைநானே
குன்றில்தவம்புரிய வைத்தேன்
ஜோதிச்சுடராம் வஜ்ராயுதனுடலெல்லாம்
தோன்றிடகணக்காணச் செய்தேன் - திகழ்



சூரனெனவேவெகு வீரியம்பெற்றவனைத்
துண்டிரண்டாகவெட்டுவித்தேன்
எதிலும் என்னைவிட ஒருவன்வலியனுண்டோ
எதிர்த்தென்னுடன்சமர் புரியும்பெரியோனுண்டோ
இல்லை இதுவே யென்றன் சொல்லை அமரரில்வே
றல்லை கண்டேகாட்டப் பல்லை யின்னங்கேளீர்
இன்னடங்காமலை இரண்டுதுண்டுபெற
அண்டரண்டபகிரண்டமெண்டிசையும்
திகைக்க பிரமிக்க நடுக்க வெடிக்கவே
செய்வேன்மதங்கொண்டோரைக்கொய்வேன்பணிபவரை
உய்வேன் நிகர்ந்தவரை வைவேன்இத்
தேசம்புகழ்பெறவே வாசம்மருவிடு
நேசன்பாபவி மோசனாமெனை. (தே.)

சனி விருத்தம்.

ஆடாகட்டியக்காரா அனைகொடிதனிலேநீதான்
நீராளுமரிச்சந்திரன்தன் செங்கோலுமுனமேசென்று
வீரனுஞ்சனியன்காண வேண்டியேவந்தானென்றே
கூறிடாவுத்தரவாகில் கொப்பெனவருகுவாயே.

வசனம்.

அடாகட்டியனே அரிச்சந்திரன்கொலுவின்முன்னேசென்று காண்பதற்காக சனியன் வந்திருக்கிறானென்று தெரிவியும்பிள்ளாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றேன் பகவானே.

கட்டியன் விருத்தம்.

வேந்தனேகாணவேண்டி விரும்புறார்சனியன்தானும்
சாந்தனேகொலுமுன்னுட சாற்றினால்வரச்செய்வேனே.

வசனம்.

ஆண்டவனே, தங்களைக்காணவேண்டி சனிபகவான் வந்திருக்கிறார் உத்தரவானால் வரச்சொல்லுகின்றேன் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே அழைத்துவாரும்பின்னாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அரசன்வரச்சொன்னார் வாரும் சனிபகவானே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

நீரிலையுண் டெழுமேக மூற்றவன்றோ
நெடுங்கரத்திற் சூலமதைத் தாங்குமன்றோ
சூரியன்றன் றவப்பலத்தால் வந்தகன்றோ
சொல்லுநவக் கிரகத்திலுமே லானஅன்றோ
காரியெனும் பேர்படைத்த குருவேஇந்தக்
காசினியோ ரைக்காக்குங் கடவேலாதா
நீரிங்கு வந்தவகை அடியனுக்கே
நிகழ்த்துவீர் நின்னடிக்கே போற்றி போற்றி.

வசனம்.

போற்றிபோற்றி சனிபகவானே தாங்கள் வந்தகாரணம் தெரியப்படுத்தவேண்டும் முனிநாதா.

## சனி விருத்தம்.

சத்தியம்வழுவில்லாமல் தரணியையாளுமன்னா
எத்திசையுள்ளோரெல்லாம் எனக்குடன்பட்டோர்கண்டாய்
சத்திருவுன்னைக்காண கொட்டமுங்கொண்டுவந்தேன்
இத்தினம்நலமோஅன்றி யிளமைபோய்வரவோசொல்வாய்.

வசனம்.

அப்பாராஜனே, சகலரும் எனக்குடன்பட்டவர்களென்று உனக்குந் தெரியுமல்லவா ஆதலால் உன்னிடத்திலநான் வாசஞ்செய்யவேண்டிவந்தேன், இதுகாலஞ்சரியோ அன்றி யிந்த இளமைபோய் முதுமையில் வரவோசொல் வாய் வேந்தனே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

எதுகாலமென்றேயென்னை யின்பமாய்க்கேட்டநாதா
இதுகாலமதுவேநன்று இளமைபோய்முதுமையுற்றால்
தழும்புமுன்னருளைத்தாங்க சக்தியமோயென்றால்சுவாமி
உதும்பிலாமனத்தோடிதே வுத்தமம்உணருவாயே.



வசனம்.

சுவாமி,முதுமைதங்கியகாலத்தில் உம்முடையகருணையால் வருங்காரியங்களைச்சகிக்கப்போமோ இந்தஇளமையே தாங்கள் திருவடிக்கத்தகுந்தகாலம் ஆண்டவனே.

## சனி விருத்தம்.

நல்லதாமன்றோ சொல்லியவாறே
வெளிபோய்உன்பால் வள்ளலேவருவேன்.

வசனம்.

கேளும் மஹாராஜனே நீ சொல்லியபடியேவருகின்றேன் வாழிவாழி.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமிவந்தாலும் அடியேன்பேரில்பூர்ணகடாக்ஷம்வைக்கவேண்டியது.

---

## பொது விருத்தம்.

காரியுமேஅரசனுடன் வினவிச்சென்றான்
கதிர்குலத்தோன் பாலகனும் வயதும்ஐந்தை
மீறிடுமுன் சகலகலை உணர்த்தவேண்டி
மேவியினியள்ளிவைக்கும் விதங்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே, அரிச்சந்திரமஹாராஜன் தன்மகனுகிய லோகிதாசனைப் பள்ளிக்குவைக்கும் விதங்காண்பீர்கள் கனவான்களே.

## அரிச்சந்திரன் விருத்தம்.

பத்தியில்மிகுந்தவென்றன் பாங்குளவமைச்சனுன
சத்தியகீர்த்தியொன்று சாற்றுவேன்கேளாயப்பா
புத்திரன்லோகிதாசன் பொருந்தினுன்வயதோஐந்து
வித்தியாப்பியாசஞ்செய்ய வேதியன்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி, லோகிதாசனுக்கு ஐந்துவயதானதால் வித்தியாப்பியாசஞ்செய்யவேண்டும் உபாத்தியாயரை அழைப்பிப்பாய் சத்தியகீர்த்தி.

## மந்திரி விருத்தம்.

ஆடாகட்டியக்காரா அனாநொடிதனிலேயோடி
நீசாத்திரங்களோதி செய்கலைவிருத்திசெய்யும்
சீரணிகுமரவேலு சிறப்புள்ளவுபாத்தியாரை
வீரமாயென்றன்முன்னே விரைவினில்வரச்செய்வாயே.

### வசனம்.

அடாகட்டியனே, வித்தையில் மஹாவல்லவனுகிய குமரவேலு உபாத்தியாயரைச் சீக்கிரம் அழைத்துவரும்பிள்ளாய்.

### கட்டியன் வசனம்.

இதோ ஓடி அழைத்துவருகின்றேன் சுவாமி.

---

## கட்டியன் விருத்தம்.

பிள்ளைகள்தங்களுக்கே போதிவிளங்குஞானம்
உள்ளமுங்களிக்கவேதம் உணர்ப்பிக்குமையாகேளாய்
கள்ளமுங்கபடுஞ்சூதும் கனவிலுங்கருதாவெங்கள்
வள்ளலுமையழைத்தே வரவெனவிட்டார்சுவாமி.

### வசனம்.

கேளும் உபாத்தியாயரே, எங்களரசன் தங்களை அதிசீக்கிரம் அழைத்துவரச்சொன்னார் வாருஞ்சுவாமி.

### வசனம்.

அப்படியே வருகிறேனப்பா வீரகட்டியனே.

உபாத்தியாயர் தரு. இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-சாப்பு.

### பல்லவி.

வாத்தியார்வந்தார் அயோத்திவாழ்
வாத்தியார்வந்தார்.

### அநுபல்லவி.

கேத்தியதாமவெள்ள வீறுநிதமிந்நூறி
சாத்திரமுறையினில் தர்க்கமிகவேபேசி. (வா.)



### சரணங்கள்.

அரையில்பட்டுமடி அன்பாகவேகட்டி
அங்கவஸ்திரம்மேலுஞ்சகம் அழகாய்த்தொங்கவேபூட்டி
சிரமேல்மடியொன்றைச் சிங்காரமாய்க்கட்டி
சீமைவாத்திகளெல்லாம் திகைத்திடவேவெட்டி. (வா.)

வேதசாஸ்திரமதை விதிமுறைப்படி அந்த
வேணுஞ்சிறுவர்க்கெல்லாம்விளைவிருரைப்பேனந்த
பாதகம்போக்கவே பரிவாய்உரைசாந்த
பஞ்சாக்ஷரமிட்டை பண்புடன்சொல்வேனென்று. (வா.)

சொல்வித்தைவில்வித்தை சுருக்காய்ப்படிப்பிப்பேன்
ஜோதிடவாகடத் தன்மையுங்கற்பிப்பேன்
மல்யுத்தம்வாள்யுத்தம் வகையுடனுணர்ப்பிப்பேன்
மந்தாரிபரிவிடும் வரிசையுஞ்சொல்வேனென்று. (வா.)

நித்தியகருமவிதி நிலைதனிலேமோடி
நிலைநில்தனக்கு நிகரில்லையெனப்பாடி
சத்தியபாஷா அரிச்சந்திரன்கொலுவனைநாடி
சந்தோஷமேவிட்டு தாண்டிக்குதாண்டியாடி. (வா.)

## வாத்தியார் விருத்தம்.

உன்னதகட்டியனே என்வரவையேநீ
மன்னவன்றனக்கே பன்னியேவருவாய்.

### வசனம்.

வாத்தியார்வந்தாரென்று இராஜனுக்குத்தெரிவிப்பாய் கட்டியனே.

### கட்டியன் வசனம்.

மஹாராஜனே, உபாத்தியாயர் வந்திருக்கிறார் வேந்தனே.

### அரிச்சந்திரன் வசனம்.

வரச்சொல்லும்பிள்ளாய் கட்டியனே.

### கட்டியன் வசனம்.

எங்கள் ஆண்டவன் உத்தரவு செய்தார் வாரும் வாத்தியாரே.

### வாத்தியார் விருத்தம்.

மானைப்பழிக்குந்திவ்விய மதிமுகமுடையோய்போற்றி
வீரனைபகைத்தபேரை வெற்றிகொள்சூராபோற்றி
காரணையனுங்காணு நம்பனைத்துதிப்போய்போற்றி
காரணமெனையழைத்த கருத்துரைசெய்வாய்போற்றி.

வசனம்.

போற்றி போற்றி மஹாராஜனே, என்னை அழைத்தகாரியந்தெரியப் பட அருள்புரியவேண்டும் வேந்தனே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனேஎனதுபாலன் ஐந்தாண்டுநிறைவுற்றான்
செய்யவேவித்தியாப்பியாசஞ்சீருடனழைத்தேன்காண்பாய்.

வசனம்.

கேளும் உபாத்தியாயரே, என்குமாரனுக்கு ஐந்து வயதானதால் வித்தியாப்பியாசம் உம்மிடத்திடல் செய்விக்க அழைப்பித்தேன் ஐயரே.

வாத்தியார் வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியே செய்விக்கலாம் சுவாமி.

### அரிச்சந்திரன் விருத்தம்.

செப்புவேனுபாத்தியாரே தீவரந்தனிலேநீரும்
ஒப்புடன்பஞ்சாங்கத்தை உற்றுமேநோக்கிநாளை
கொப்பெனவுரைப்பீராகில் குமரனையவரவழைத்தே
அப்பவேயக்ஷரத்தை யனுட்டிக்கவிடையீவேனே.

வசனம்.

உபாத்தியாயரே, நீர்பஞ்சாங்கத்தைப்பார்த்து நல்லநாள்வேளையைச்சொல்வீராகில் லோகிதாசனை வரவழைத்து அக்ஷராப்பியாசம் செய்யவிடைகொடுக்கின்றேன் உபாத்தியாயரே.

### வாத்தியார் விருத்தம்.

இன்றுநற்றினமேவித்தியாப் பியாசமேதான்செய்விக்க
நன்றுநன்றிதுவேகண்டீர் நடப்பிக்கவிடையீவேந்தே.



வசனம்.

மஹாராஜனே, வித்தை ஆரம்பஞ்செய்வதற்கு இன்றையதினமே சுபமாயிருக்கின்றது வேந்தனே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

வித்தியாப்பியாசத்திற்கே வேண்டியவகைகளெல்லாம்
சித்தஞ்செய்திடவேநீதான் சீக்கிரப்படுவாய்மந்திரி.

வசனம்.

அப்பாமந்திரி, லோகிதாசனைப் படிப்பிக்கவேண்டியதால் வேண்டியதினுசுகளையெல்லாம் சீக்கிரத்தில் சேகரிப்பாய் சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

அப்படியே செய்கின்றேன் மஹாராஜனே.

### மந்திரி விருத்தம்.

கடலைபொரி காய்பழமுஞ் சீனிதேனுங்
கரும்படைக்காய் வெற்றிலையுங் கருப்புட்டியும்
திட்டமுடனே தூபதீப நெய்யுமெக்கிய
தினுசுகளும் பட்டுநூ லோலையேடும்
படருமலர் மறகுடனே பொன்னுந்தானியம்
படியொன்றுமெழுத்தாணி பண்பின்மிக்க
நடனமிளி மொழியைவிட இனிப்பதான
நற்புதல்வன் படிக்கவேகொணர்ந்தேன்வேந்தே.

வசனம்.

கேளும் மஹாராஜனே, வித்தியாப்பியாசத்திற்குவேண்டிய சகல சமுத்துகள் எல்லாஞ் சித்தப்படுத்தினேன் ஆண்டவனே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாய்நீதான் மதிமுகம்போன்றவென்றன்
சந்திரவதியாளீன்ற சற்குணபாலன்றன்னை
சுந்தரப்பொட்டுமிட்டு சொகுசுறவுடுத்தியிங்கு
வந்திடச்செய்வாய்பள்ளி வைத்திடக்காலமாச்சே.

வசனம்.

கேளாய் மந்திரி, நீசென்று லோகிதாசனை ஸ்நானஞ்செய்வித்து நல்ல ஆடையுடுத்தி அதிசீக்கிரமாய் அழைத்து வருவாய் அப்பா சத்தியகீர்த்தி.

மந்திரி விருத்தம்.

அன்னையேகேளாயுன்றன் அருமையாம்பாலன்றன்னை
இன்றையதினத்தில்வித்தை யியற்றிடவேணுமென்றே
முன்னமேசேகரித்தோ மும்மதிடஞ்சென்றுபாலன்
றன்னையேயழைக்கவேந்தன் றான்வரவிட்டார்தாயே.

வசனம்.

கேளும் என்னை அடிமைகொண்டதாயே, இன்றையதினம் வித்தியாப்பியாசஞ்செய்யவேண்டி லோகிதாசனைச்சிங்காரித்து அழைத்துவரும்படி ஆண்டவன் ஆக்கியாபித்தார் அம்மணி.

சந்திரமதி வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியே அழைத்துக்கொண்டு போவாய் அப்பா மந்திரி.

சந்திரமதி விருத்தம்.

கேளடிதோழி பாலனைநன்றாய்
மேலெனவுடுத்தி சாலவேகொணர்வாய்.

வசனம்.

அம்மா சவுந்தரவல்லி, பாலகனைக் குளிப்பாட்டி திலதமிட்டு ஆடை ஆபரணம்பூட்டி சீக்கிரத்தில் அழைத்துவருவாய் தோழி.

தோழி வசனம்.

அப்படியே சீவரத்தில் செய்விக்கின்றேன் தாயே.

தோழி விருத்தம்.

அம்மணியெனக்குநீதான் ஆக்கினையிட்டவாறு
அம்மணிபாலன்றன்னை அழகுநற்றீர்த்தமாட்டி
அம்மணிநீறுபூசி அதின்மேல்திலதமிட்டு
அம்மணியுடுத்தியாச்சு அதிகுவாய்தாயேபோற்றி.



வசனம்.

கேளாயம்மா, தாங்கள் உத்தரவுசெய்தபடியே கண்மணியாகிய லோகிதாசனைச்சிங்காரித்தேன் தாயே.

சந்திரமதி வசனம்.

கேளாயப்பா என்குலம் விளங்க வந்தலோகிதாசா.

லோகிதாசன் வசனம்.

சொல்லுவாயம்மா என்னைப் பெற்றதாயே.

சந்திரமதி விருத்தம்.

அப்பனேமகனேஎன்ற னருந்தவப்பலனேகேளாய்
செப்பவுமாமோகல்விச் சிறப்பிற்குயினையாவேறு
இப்புவிசுவர்ணமிரத்னம் இன்னதைவிடவுமேலாம்
ஒப்பவேஜெயிக்க வுன்தந்தையழைத்தார்போவாய்.

வசனம்.

அப்பாஎன் கட்டிக்கரும்பே, செல்வப்பொருளெல்லாம் கல்விப்பொருளுக்கீடல்ல ஆனதால் உனக்குக்கல்விகற்பிக்கவேண்டி உன்தந்தை யழைத்தாராம் போய்வருவாய் மகனே.

லோகிதாசன் விருத்தம்.

அம்மணிகல்விகற்க அடியனும்போவேன்தாயே
அம்மணியுனதுதிவ்விய அருள்வாக்குக்கொடுப்பாயம்மா.

வசனம்.

அம்மாஎன்னைப்பெற்றதாயே, எனக்கு சகலகலையும் சீவரத்தில் சித்திக்கும்படிக்கு ஆசீர்வாதஞ்செய்குவாய் தாயே.

சந்திரமதி விருத்தம்.

பாலனேவுனக்கேகல்வி பலித்திடஆசீர்வாதம்
பாலனேபரியினேற்றம் பலித்திடஆசீர்வாதம்
பாலனேவில்லுவேதம் பலித்திடஆசீர்வாதம்
பாலனேயோகம்ஞானம் பலித்திடும்போய்வாகண்ணே.

வசனம்.

அப்பாமகனே, உனக்குக் கல்வி யோகம் ஞானம் ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை முதலானதும் இனி சிவன் அருள்செய்வார் போய்வருவாயென்கண்மணியே.

சந்திரமதிவசனம்.

அப்பா மந்திரி, லோகிதாசனை அழைத்துக்கொண்டுபோவாய்சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே அழைத்துக்கொண்டு போகிறேன் தாயே.

## லோகிதாசன் விருத்தம்.

அன்னையேபோற்றி அனைவரும்பணிய
மன்னியவுமது மலரடிபோற்றி.

வசனம்.

என்னை யீன்ற தந்தையே போற்றிபோற்றி.

அரிச்சந்திரன் வசனம்.

கேளும் உபாத்தியாயரே, இதோ குழந்தையும் வந்துவிட்டான் இனிவித்தியாரம்பம்செய்யத்துவக்கும் ஐயரே.

வாத்தியார் வசனம்.

சுவாமி அப்படியே ஆரம்பிக்கின்றேன் மஹாராஜனே.

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா, என்வலதுபக்கத்தில் சப்பாணிகாலிட்டு கிழக்குமுகமாய்த்திரும்பி உட்காருவாய் அப்பா நான்சொல்லுகின்றபடிக்கு உன்வாயினால் சொல்லி ஆதிகணபதியைத் தொழுவாயப்பா கண்மணியே.

லோகிதாசன் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் ஐயா.

## வாத்தியார் விருத்தம்.

ஓம்காிமுகனே போற்றி உயர்கணபதியே போற்றி
தேங்கனிவாயா போற்றி திருநேத்திரமுடையாய்போற்றி
தாங்குமைமங்கரத்தோய்போற்றி சத்திவல்லபையாய் போற்றி
மூங்கிசாபால போற்றி மூஷிகாரூடியே போற்றி.



வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா நான்சொல்லும் வாக்கியத்தை நீயுஞ் சொல்லுவாய் அப்பா கண்மணியே.

வாக்கியம்.

பஜேபிர்மம் பஜேவிஷ்ணு பஜேருத்திர மகேஸ்வர
பஜேசாக்ஷாத் பரப்பிர்மம் சதுர்முகம் ஷண்முகா

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா, இம்மலர்த்தட்டைத்தாங்கி நான் சொல்லுகிறபடியே நீயுஞ்சொல்லி மூலகணபதிக்கு அர்ச்சனை செய்குவாயப்பா பாலகா.

அர்ச்சனை.

| | | | |
|---|---|---|---|
| ஒற்றைக்கொம்பாய | நம: | ஓங்கணபதியே | நம: |
| சித்திபுருஷாய | நம: | தேவிவல்லபாய | நம: |
| திவ்வியரூபாய | நம: | தேஜோன்மயாய | நம: |
| வித்தைக்கரசேய | நம: | விக்னேஸ்வராய | நம: |
| சித்திமூலாய | நம: | சின்மயரூபாய | நம: |
| ஆதிகாரணாய | நம: | அருமைப்பொருளேய | நம: |
| ஜோதிச்சுடரேய | நம: | சூர்ப்பகர்ணாய | நம: |
| அகண்டபரிபூரணாய | நம: | அரிவேரம்ய | நம: |

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா இந்த எட்டைக்கையில்தாங்கி நான் சொல்லும் படியே உன்னுவால் ஒலிப்பாய் மைந்தனே.

லோகிதாசன் வசனம்.

அப்படியே ஒலிக்கின்றேன் ஐயா.

வாத்தியார் வசனம்.

ஹரி - ஓம் - நன்முக - குருவாழ்க - குருவேதுணை.

லோகிதாசன் வசனம்.

ஐயா இதின்பயனை யெனக்குத் தெரியச்சொல்லுஞ் சுவாமி.

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் அறிந்துகொள்ளுவாய் பாலகா.

### வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா, நீ நலப்பட வுனக்குபோதிக்கும் குருவானவன் வாழ்ந்து அவன் மொழி யுனக்கு முன்துணையாகி ஓம் எனும் பீசத்தை அறிந்து தெளிவுறுவதே யிதின் கருத்தென்றுணர்வாய் கண்மணியே.

### லோகிதாசன் விருத்தம்.

ஓமெனச்சொல்வதென்ன வுணர்வதால் வருவதென்ன
நான்மனங்களிக்கஐயா நலமுடன் தெரிவிப்பாயே.

### வசனம்.

ஐயா வுபாத்தியாயரே, ஓம் என்று சொல்வதின் பயனென்ன அதை யுணர்வதால் வரும் பலனென்ன எனக்குத்தெரியப்படச்சொல்லவேண்டும் சுவாமி.

### வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் தெரிந்துகொள்ளுவாய் அப்பா லோகிதாசா.

### வாத்தியார் விருத்தம்.

ஓதுவாய் முதலெழுத்தே அகாரமாகும்
உணர்ந்திடுவாய் உகாரமதே நடுவதாகும்
பேதமற நுனியெழுத்தைச் சொல்வேனப்பா
பிரியமுடன் தெரிந்துகொள் மகாரந்தானே
சாதனையா லிதைக்கூட்டி ஓமென்றேதான்
சாற்றிடுவாய் பரஞ்சோதி தன்னுட்டோன்றும்
வாதனைகளும் வேதனையுங் காலனாலே
வாராது பேரின்பம் வாய்க்குந்தானே.

### வசனம்.

அப்பா லோகிதாசா, அகார உகார மகாரமாகிய மூன்றையுமிணைத்து ஓமென்று மனதை நிறுத்தி உச்சரித்தால் இயமபாதை நீங்கி பேரின்பவாரியில் குளிக்கலாகும் இதுதான் சகலத்திற்கு மூலமந்திரமென்று தெரிந்துகொள்வாய் கண்மணியே.

### லோகிதாசன் வசனம்.

இதுமூலமானவகை தெரியச்சொல்லவேணும் ஐயா.

### வாத்தியார் வசனம்.

அப்படியேசொல்லுகின்றேன் பாலகா.



### வாத்தியார் விருத்தம்.

அண்டபிண்ட மில்லாத ஆதிகாலே
அரூபியாய் குருதானும் கண்டேயிருக்க
தெண்டிறலவ் வரூபத்தில் ஓமென்றேதான்
திகழொலியொன் றேபிறக்க வாயுவோங்கி
கொண்டபரஞ் சுடரொளியும் வேறதாச்சு
கோமளனே அக்கனலுற்றான் சிவமாய்த்தானே
விண்டநீ பவன்ஜலமும் வேறதாச்சு
வித்தகனே குயவன்வந்தான் விளம்புவேனே.

### வசனம்.

இன்னந்தெளிவாகக்கேளாய் அப்பாபாலகா.

### வாத்தியார் விருத்தம்.

விளம்புவேன் இவ்வகையாய்ப் பஞ்சகர்த்தா
வெளியாகிப் பலவுருவாய் வீற்றுநின்றார்
விளம்புவேன் பிரிதிவப்பு தேயுவென்றும்
விட்டாத வாய்வு ஆகாயமென்றும்
தலந்தனிலே பிர்மவிஷ்ட்ணு ருத்ரனென்றே
சாற்றியே ரூபங்கள் தானமைத்தார்
நலந்தெரிவாய் மற்றிரண்டின் ரூபந்தானும்
நற்பாலா இனிபாடம் படிப்பாய்நாதா.

### வசனம்.

அண்ட பிண்ட சராசர மில்லாத காலையில் கடவுள் அரூபியாய்த் தானேதானா யெங்கும்பரவி நிற்க அவ்வரூபத்தி லிருந்து ஓம் என்று ஒரு சப்தம்பிறந்து அந்த சத்தத்தில் வாய்வுசேர ஒளியுண்டாயிற்று அந்த ஒளியிலிருந்து விராட்டு உதிக்க அதனால் வெம் பிறந்து வெந்திருந்து ஜலம் காற்று மண் அக்கினி ஒளி யிவைகள் தனித்தனியாகி ஒளியால் சதாசிவமும் காற்றால் மகேஸ்வரனும் அக்கினியால் ருத்திரனும் ஜலத்தால் மாயவனும் ஜலந்தங்கிய மண்ணால் பிரமனும் வெளியாக இதில் கண்ணுக்குத்தோற்றும் படியான மூன்றைமாத்திரம் உருவாய் அமைத்து அவைகளுக்கு பிரமா விஷ்ட்ணு உருத்திரனென்று பெயரிட்டுகாரணதேவதைகளாக பூசித்துவருகிறார்கள் மற்றஇரண்டும் கண்ணிற்குத்தோற்றுதானதால் உருவு அமைக்கத்தெரியாமல்விடப்பெற்றிருக்குதென்றறிவாய் கண்மணியே.

லோகிதாசன் வசனம்.

மஹாபாக்கிய மஹாபாக்கியம் சற்குருவே.

வாத்தியார் வசனம்.

அப்பாலோகிதாசா இனி அக்ஷரத்தை வாசிப்பாய்பாலகா.

லோகிதாசன் வசனம்.

அப்படியே வாசிக்கின்றேன் குருவே.

வாத்தியார் தரு. இராகம்-பிலஹரி தாளம்-ஆதி.

ஓ ம் ந ம வென்றுரைப் பாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

ஓ ம் ந ம வென்றுரைத்திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

சி வ ய வெனச்செப்புவாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

சி வ ய வெனச் செப்பினேன் என் குருவே.

வாத்தியார்.

அ ஆ இ ஈ யென்றறை வாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

அ ஆ இ ஈ யென்றறைந் திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

உ ஊ ரு ரூ வென்றோது வாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

உ ஊ ரு ரூ வென் றோதினேன் என் குருவே.

வாத்தியார்.

லு லூ எ ஏ யென்றுரைசெய்வாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

லு லூ எ ஏ யென்றுரை செய்தே னென் குருவே.

வாத்தியார்.

ஐ ஒ ஓ வென்றறைந்திடு நீ கண்மணியே.



லோகிதாசன்.

ஐ ஒ ஓ வென்றறைந் திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

ஒளஉடனிவை உயிர் அறிந்துக்கொள் நீ கண்மணியே.

லோகிதாசன்.

ஒளஉடனிவை உயிர் அறிந்திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

க க! க!! க!!! வைகருது நீ கண்மணியே.

லோகிதாசன்.

க க! க!! க!!! வைகருதி னேன் என் குருவே.

வாத்தியார்.

ச ச! ச!! ச!!! வைசாற்றுவாய் நீ கண்மணியே.

லோகிதாசன்.

ச ச! ச!! ச!!! வைசாற்றினேன் என் குருவே.

வாத்தியார்.

ட ட! ட!! ட!!! நீதா னோது கண்மணியே.

லோகிதாசன்.

ட ட! ட!! ட!!! நான்தான்சொண்டேன் என் குருவே.

வாத்தியார்.

த த! த!! த!!! வைதான் சொல்லு நீ கண்மணியே.

லோகிதாசன்.

த த! த!! த!!! நான்தான்சொன்னேன் என் குருவே.

வாத்தியார்.

ப ப! ப!! ப!!! நீ படித்திடு கண்மணியே.

லோகிதாசன்.

ப ப! ப!! ப!!! நான் படித்திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

ண ன ங ஞ வைநாட்டிக் கொள் நீ கண்மணியே.

லோகிதாசன்.

ண ன ங ஞ நான் நாட்டிட்டேன் என் குருவே.

வாத்தியார்.

ய ர ல வ நீ அறிந்துக்கொள் கண்மணியே.

லோகிதாசன்.

ய ர ல வ நான் அறிந்திட்டேன் என் குருவே.

வாத்தியார்.

ஜ ஷ ஸ ஹ நீ சாற்றிடு கண்மணியே.

லோகிதாசன்.

ஜ ஷ ஸ ஹ நான் சாற்றினேன் என் குருவே.

வாத்தியார்.

ள ழ க்ஷ மெய்நாட்டிக்கொள் நீ கண்மணியே.

லோகிதாசன்.

ள ழ க்ஷ மெய் நாட்டினேன் என் குருவே.

வாத்தியார்.

நாற்பதும்பத்துமொன்று நயந்தெரி நீ கண்மணியே.

லோகிதாசன்.

நாற்பதும்பத்துமொன்றை நான்கண்டேன் என் குருவே.

வாத்தியார் வசனம்.

கேளும் அப்பா லோகிதாசா.

லோகிதாசன் வசனம்.

சொல்லும் ஐயா வுபாத்தியாயரே.

## வாத்தியார் விருத்தம்.

மெய்யினிலுயிரைப்பூட்டில் வேணும்வார்நீண்டொலிக்கும்
ஐயனேஅசைகள்சேர்ப்பாய் அதின்பின்புபதமும்வாக்கியம்
வையகந்தனிலேயாரும் வகுத்திடாரிந்தசூக்ஷம்
பையவேவுணர்வாய்கல்விப் பயிற்சியின்மூலந்தானே.

வசனம்.

அப்பாலோகிதாசா, மெய்யெழுத்துடன் உயிரெழுத்தையிணைத்தால் நீண்டொலிக்குமொலியறிந்து அசைசேர்ப்பாய் அதின்மேல் பதம் வாக்கிய முதலானதுஞ் சேர்க்க அறிவாய் இதுதான் வித்தைகற்க சூக்ஷவழியென்றறிவாய் பாலகா.



## லோகிதாசன் விருத்தம்.

தெரிந்திட்டேன்படிப்பின்சூக்ஷம் செப்பும்வேதம்படிப்பேன்
பரிந்துநீருரைத்தமார்க்கம் பலாபலாமிகவுநன்றே.

வசனம்.

ஐயரே, நீர் சொன்ன மார்க்கம் மிகவும் நன்று வித்தையின் சூக்ஷந்தெரிந்தேன் இனிதடையின்றி வேதமுதலானதும் வாசிப்பேன் சுவாமி.

## லோகிதாசன் விருத்தம்.

இப்படிக்கிருக்கமார்க்கம் ஏனிந்தச்சிறுவர்தாலும்
வெப்பவேவெகுநாளாக வேதனைப்படுகிறார்கள்
கைப்பணியிவரிரண்டு கண்ணிற்குத்தோற்றிடாமல்
வைப்பதேனையாநீதான் வகையென்க்குரைசெய்வீரே.

வசனம்.

ஐயா வித்தையின்சூக்ஷம் இப்படியிருக்க இவாளுக்குத் தெரிவிக்காதிருப்பது யேனோ சொல்லுஞ்சுவாமி.

## வாத்தியார் விருத்தம்.

அவரவரன்னைதந்தை அமைத்தகர்மத்தின்வாறே
வருவர்கள்சுதர்கள்கண்டாய் வகையறிபுத்தியோகம்
இறமையும்பெறுதல்மெத்தசிறுமையென்றுணர்வாய்நீகாண்
அருர்தவச்சத்தியபாஷ அரிச்சந்திரனளித்தபாலா.

வசனம்.

கேளாய் பாலகா, மாதா பிதாக்கள்செய்த கருமத்தை அநுசரித்தே புத்திரர்கள் பிறப்பது அறிவின்னுட்பந்தெரிவது துர்லபம் நீ சத்தியவாக்கரிச்சந்திரன்பெற்ற பாலனென்றறிவாய் கண்மணியே.

## லோகிதாசன் விருத்தம்.

இப்படிக்கிவர்பிறக்க யேதுகாரணமோ ஐயா
கொப்பெனவெனக்குத்தோற்ற குறைவின்றியுரைசெய்வாயே.

வசனம்.

ஐயா இவர்களிப்படி பிறப்பதற்குக்காரணஞ் சொல்லவேணுஞ்சுவாமி.

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் அறிவுடைய பாலகனே.

## வாத்தியார் விருத்தம்.

சத்தியந்தனைமறந்தே தனைப்படைத்தோனைவிட்டும்
நித்தியகருமம்போக்கி நீள்கிரகநிலைமறந்தும்
முத்தியேமூர்க்கமோகம் முனைந்துமேநிலைமையில்லா
பத்தினிதனையணைந்த பாவத்தால்வந்தோர்கண்டாய்.

### வசனம்.

கேளாயப்பா, அசத்தியனாய் கடவுளை மறந்து நித்திய கர்மானுஷ்டானங்களை விட்டு மூர்க்கமோகங்கொண்டு நக்ஷத்திராதியோகம் அறியாமல் புருஷன் பணிவிடையில் குறைவாகிய மாதரைப்புணர்ந்ததால் வருபவர்களென்றறிவாய் கண்மணியே.

## லோகிதாசன் விருத்தம்.

அறிந்திட்டேனீர்தான்சொன்ன அரும்பொருள்விதியைநானே
திறமுடன்முன்பாடத்தில் செப்பியஐந்தெழுத்தும்
பிறந்ததோஉயிர்மெய்தன்னில் பேதத்தையானுநன்றாய்
அறிந்திடவுரைப்பீரென்றன் அண்ணலேவுபாத்தியாரே.

### வசனம்.

ஐயா நீரெனக்குச் சொல்லிவைத்த அக்ஷரத்தில் முன்செப்பிய நமசிவயவென்பவைகள் ஐம்பத்தோரெழுத்தில் சேர்ந்ததா வேறா அதின் விபரமும் நுட்பமுந் தெரிய நன்றாய்ச் சொல்லவேண்டுஞ்சுவாமி.

## வாத்தியார் விருத்தம்.

சொல்லுவேனப்பா நல்லறிவுற்ற.
வள்ளலேகவனம் வைத்துநீகேட்பாய்.

### வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் கவனத்துடன் கேட்டுத் தெரிந்துகொள்ளுவாய் பாலகா.

## வாத்தியார் விருத்தம்.

அஞ்செழுத்தே ஆதிபரன்நாமமப்பா
அதையுன்ரத்தால் அந்தசங்கியுச்சிதன்னில்
நெஞ்சமதில்குடிகொள்வான் கவலைநீங்கும்
நீதெரிவாய்கண்மணியே நிகழும்வேந்தே.



### வசனம்.

கேளுமப்பா ராஜகுமாரா, அந்த அஞ்செழுத்தாகிய நமசிவய வென்பதே பிரம்மா விஷ்ணு ருத்திர மகேஸ்வர சதாசிவமென்னும் பஞ்சகர்த்தராகிய சிருஷ்டி திதி சம்மார திரோபவம் அநுக்கிரகமெனும் ஐந்தொழில்புரிந்து பிரிதிவு அப்பு தேயு வாயு ஆகாயமெனும் பஞ்சபூதங்களாகி ஆன்மாக்களுட்பிரவேசித்து நடத்தல் இருத்தல் அறிதல் உணர்தல் தெளிதல் என்னும் பஞ்ச அறிவைப்புகட்டி நன்மை தீமைகளைப் பகுத்தறியச்செய்யாநின்றவைகளாகும் பாலகா துவக்கத்தில் இதில் மூன்று கண்ணிற்குத் தோற்றுபவைகளாதலால் விக்கிரகரூபமாக நிறுத்தி நேசம் காமம் நானிதமெனும் மூவகைக்குறியிட்டு நாலு ஐந்து எட்டெழுத்தில் மூலமந்திரத்தையிணைத்து திவ்வியபுஷ்பங்களால் நாமாவளிசெப்பி அர்ச்சனைபுரிந்து புலைபுன்கொலை தவிர்ந்து பக்தியாய் தூப தீபநைவேத்திய மீந்து பணியவேண்டியது பாலனே நடுவில் திரோபவம் பெற்றால் இத்தவுருவுகளைத் துறந்து ஆராதனைவிட்டு மந்திரத்தையே மனமலரால் அர்ச்சிக்கவேண்டியது பாலகா முடிவில் அநுக்கிரகம் பெற்றால் மனம்வாக்கும் ஒன்றாக்கி ஞானநேத்திரந்திறந்து பேரானந்தத்தில் மூழ்கி காலன் உபாதையைத் தள்ளக்கூடவேண்டியது பாலகா அதின் பேரில் அரும் பெரும்பொருளாய் இவ்வைந்திற்கும் மேலாய்நிற்கும்அருபிரமமத்தை அறுசரிப்பதுமுறை இம்மூன்றையில் ஒன்றைவிட்டு ஒன்றில் பிரவேசித்தல்வழிஅறியாக்குருட்டனாய் வாசாஞானம் பேசி பலபேரும் நகைக்கவுடல் வெட்கி எமனுக்கிரைக்குள்ளாகி ஆவியானது தூஸ்தூலத்தை விடுந்தாலையிலீலி கைவிட்டு வெளிப்பட அசத்தியாய் மனக்கண்ணிற்கும் ஞானக்கண்ணிற்குமத்தியில் சிலேஷ்மக்கபங்கட்டி நாய்போல் மொறுமி குலைந்தாலுழாமல் பார்த்தவர் இவன் மகாபாவியென வுயிர்நீக்குமென்றறிவாய் அறிவினுயர்ந்தபாலகா.

## லோகிதாசன் விருத்தம்.

ஐயனேயெனக்கேஅந்த அரும்பொருள்மந்திரத்தை
உய்யவேதயைபுரிந்தே உபதேசித்தாட்கொள்வீரே.

### வசனம்.

சுவாமி அடியேனுக்கு அந்த பஞ்சாக்ஷரமந்திரத்தை உபதேசஞ்செய்வேணுங்குருவே.

### வாத்தியார் வசனம்.

அப்படியே உபதேசிக்கின்றேன்; அறிவை யோர்நிலையில்நிறுத்தி தெரிந்துகொள்ளுவாயப்பா சேயனே.

**லோகிதாசன் வசனம்.**

புத்தி அப்படியே நிறுத்திக் கொண்டேன் குருவே.

**வாத்தியார் உபதேசம் தரு-இராகம்-ஆரபி தாளம்-ஆதி.**

பல்லவி.

ஓம்நமசிவாயமென்றே ஓதுபாலா - ஓதுபாலா
இதேபோதுஞ் சிலா. (ஓம்.)

அநுபல்லவி.

ஓம்நமசிவாயமென வாநமசியா வென
மசிநயவாவென வாழ்த்துபாலா - உரு
வேற்றுஞ் சிலா. (ஓம்.)

சரணங்கள்.

ஜனனமரண துன்பச்சிக்கறுத்திடும் பிரம்ம
கவச நிலையுன்னுள் காட்டும்பாலா - சுழிமேல்
ஏற்றுஞ் சிலா. (ஓம்.)

இருப்பினும் எதினும் எத்தொழில் புரிகினும்
திருமுத்துசுவாமிபோலச் செயபுபாலா - மனம்
ஒப்புஞ் சிலா. (ஓம்.)

**லோகிதாசன் வசனம்.**

புத்தி புத்தி அப்படியே அப்படியே யென்குருநாதனே.

**வாத்தியார் வசனம்.**

அப்பா லோகிதாசா, இன்னமொரு விசேஷமிருக்கின்றது அதையும் படித்துத்தெரிந்துகொள்ளுவாய் அப்பா ராஜகுமாரா.

**லோகிதாசன் வசனம்.**

மஹாபாக்கியம் அப்படியே தங்களுடைய திருவாக்கின்படிக்கே வாசிக்கின்றேன் என் குருநாதனே.

## வாத்தியார் விருத்தம்.

கரிபரிவிடுத்தல்தாண்டல் ககனத்திலுலாவுமம்பு
வரிசையாய்த்தொடுத்தல்வாளால்வகுத்திடுநாதையின் மல்லும்
சரிக்கொளாப்பின்படியாலம் சஸ்திர அஸ்தலாகம்
தெரியுநாலிதுவே அப்பா திருடன்வாசிப்பாயே.



**வசனம்.**

அப்பாலோகிதாசா, ஆனையேற்றங் குதிரையேற்றம் வில்வித்தை மல்யுத்தம் முதலானவைகளைத் தெரிவிக்கும் நூலிதுவானதால் நன்றாய்க் கவனித்து கைபழகுவாய் வேந்தனே.

**லோகிதாசன் வசனம்.**

அப்படியே செய்கின்றேன் சுவாமி.

## லோகிதாசன் விருத்தம்.

ஓதியேநீர்தானன்று உரைத்தவப்படியின்னூலை
சாதனைபுரிந்துணர்ந்தேன் சஸ்திர அஸ்தலாகம்
நீதியாய்க்கரிமேலேறும் நேர்மையும்பரிவிடுத்தல்
பேதியாமல்லும்வாளும் பிரியமாயறிந்திட்டேனே.

**வசனம்.**

சுவாமி, நீர் அடியேனுக்குச் சொல்லியவாறே இந்த நூலைவாசித்து சாதனையும் புரிந்து ஆனையேற்றமுதலான சகலமுந் தெரிந்துகொண்டேனையா நாதனே.

**லோகிதாசன் வசனம்.**

கேளுஞ்சுவாமி யென்குருநாதா.

**வாத்தியார் வசனம்.**

சொல்லுவாயப்பா ராஜகுமாரா.

## லோகிதாசன் விருத்தம்.

ஐயனே குருவேபிரம்மம் அநுஷ்டிக்கவெனக்கேகிரும்
பையவே அருள்தான்செய்வீர் பாதமேபோற்றிநாதா.

**வசனம்.**

சுவாமி, அடியேன் பிரமத்தை அநுஷ்டிப்பதற்காக முறை தெரியச் சொல்லவேண்டும் குருநாதனே.

**வாத்தியார் வசனம்.**

அப்பா பிரமத்தை அநுஷ்டிக்க காலமல்ல அதற்குத்தகுந்த காலத்தில் முறைசொல்கின்றேன் கேளாயப்பாலகா.

## வாத்தியார் இரட்டை ஆசிரிய விருத்தம்.

வாக்குமன மொன்றாய்ப்பொய்த் தூக்கம்விட்டே
மண்ணாசை பொருளாசை மங்கையாசை
நீக்கிநிஜ மடைந்தேபொய் கொலையும்போக்கி
நிகழாது படுமெட்டுஞ் சாம்பலாக்கி
தாக்கிரவி மதியையுமே யிணைத்துப்பூட்டி
தாமரையின் நடுவிருத்தி ஒட்டைமூடி
ஆக்கியே உண்ணுணவு நீருந்தள்ளி
அணுகாமல் மலசலத்தை யகற்றியப்பா
ஆக்கியே யிரண்டு மூன்றுமாறும்
சொல்லுமென் பற்றிருக்கு மிடத்திலவைத்தே
ஜாக்கிரதையாய்க் காவல்புரி நீயிமையும்
தனையறுத்தே கும்பத்தி லோசைகாட்டி
யோகநியமா யிருப்பவர்கள் பிரம்மந்தன்னை
உணர்வர்கண்டாய் பக்குவமின்றி யிவைபடிதெல்லாம்
நரகத்திலேயாம் நாகமவரும் நிலமுறாசம
நாடாதே வுனக்கிதுதான காலமன்றே.

### வசனம்.

கேளும் அப்பா அறிவுடைய சேஷனே, சபலசித்தவிருத்தியை அகற்றி பெலித்தனுந் மனம்வாக்கொன்றாக வமைத்து மூவாசையெனும் முனையின் அடிவேர்களைக்களைந்து புலை, புன் கொலைதவிர்த்து விருத்திக்காமல் அஷ்டவர் க்கங்களையும் அஷ்டமதங்களையுங்களுங்கி யிருளைகளையுமிளைத்து ஒரு மொ க்ஷாபிய பலசித்தழுடைய கமைந்துன்னிருந்தி மூலக்கனலெழுப்பி வாசல்களை யடைத்து உபாதைகளணுகாமல் நிருவாணையும்போக்கி மூன்று நான்கு ஆறு கோணங்களுள்ள கொத்தளங்களின்பேரில் பேகோபாவனும் உலவுபவனு யும் ஒரு கொத்தளமுள் ஒப்பிலாக்கோட்டையுள் தங்கியும் தங்காமற் சஞ் சரிக்குங்கள்ளனை காப்பவனாகிய பாவியின் மாய்கைகளையெல்லாம் பற் றறவறுத்துபிரம்மாந்திர வழியிடாமல் மூலத்தை நிறுத்தி பேரும்பேசாத பேராநந்த பட்டணத்தால் பூரணத்தைக்கட்டி ஆட்டி கும்பஸ்தானத்தில் பேரானந்த இசைபாடி இருவினைகளையும் நீக்கத்தகுந்தவரும் சுழுத்தியில் மெய்த்தூக்கம் புரிபவர்களாகிய யோகியவான்களல்லவோ அந்த சத்ய சித்து ஆனந்த பத்திய நிராமய [illegible] பிரகாசரூப சுத்தரும்பெரு



ருமான பிரமந்தனை யிருந்துமிடந்தெரிந்து உணரத்தக்க மஹானுபாவர்கள்; அப்பாபாலகா, இவைகளை யறியாமல் வாய் ஒலியினால் பிரம்மமென்பதெல் லாம் வெறிகாய்கள் புரியுங் குலைச்சல்களான நால் பாலகா இது உனக்குத் தகுதியான காலமல்லவென்று அறிந்துகொள்வாய் சேடனே.

### லோகிதாசன் வசனம்.

புத்தி புத்தி புத்தி அபசாரம் பொறுத்தருள வேண்டியது ஆண்டவனே.

### வாத்தியார் வசனம்.

அடா பிள்ளாய் சிங்காரம் உன்பாட்டதை யொப்பியும் பிள்ளாய்.

## சிங்காரம் தரு இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.

அறஞ்செயவே விரும்பு - மனமேநாளும்
அறஞ்செயவே விரும்பு
பரமன்சோதிக்கவேண்டி பணமுனக்கேகொடுப்பான்
பாசவலைக்குள்ளாகி மோசம்போகாமல் தினம்.(அற.)

வரும்விருந்தை நாடு - நாளுந்தானம்
வந்திரந்தவர்க் கிடு
கருமத்திற்குள்ளாகிய கள்ளைக்குடிக்காமலும்
கயவனுயெளியோரைக் கண்டித்துரைக்காமலும்.(அற.)

கோவுக்குஉண விடு - கவிஞர்கள்
குறைதவிர்த்திடத் தேடு
பாவிபோலடுத்தோரைப் பதைக்கவதையாதே
பண்புளோர்வரிலன்னம் பகராமற்புசியாதே.(அற.)

தாயற்றபிள்ளை கட்கே - வேணவுதவி
சாதிப்பாய் பலனுனக்கே
நாயைப்போல் வந்தவரை நயமின்றிபேசாதே
நமனிட ஓலைவந்தால் நாடாதேதுயிப்போதே.(அற.)

### வாத்தியார் வசனம்.

சட்டாம்பிள்ளை! யிவனுக்கு நாளையபாடத்தைச்சொல்லிகொடும்அப்பா.

### வாத்தியார் வசனம்.

அடா சுந்தரம் உன்பாட்டத்தை யொப்பியும் பிள்ளாய்.

### சுந்தரம் வசனம்.

அப்படியே ஒப்பிக்கின்றேன் ஐய.

சுந்தரம் தரு இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

படைத்தகுருவின் பாதம் மறவாதே-உன்னை
அடுத்தசேட்டைகள் நாளும் பரவாதே.

அநுபல்லவி.

அடைத்திடொளுந்தேவதூஷணைநீசெய்யாதே
துன்பந்தனையறுக்க இன்பந்தனையடைய
வன்மந்தகளைந்தே கன்மமதைத்தொலைப்பாய். (ப.)

சரணங்கள்.

ஒருவர்கொள்கையைப்பற்றி யிகழாதே-வீணாய்
கருமத்திற்குள்ளாய்நாய்போ லலையாதே
திருநீறென்பதைக்கண்டால் குலையாதே-காணும்
வருந்துன்பமகங்காரம் கிலையாதே
சருவுமாதருஞ் சுத்தம் தழைக்காதே-யென்றும்
தங்குமருளைநாடி பெருகுமவனைப் பாடி
பொங்கும்படிக்கே ஆடி அங்கந்தனிலே தேடி. (ப.)
மாயனடியனை நீ தூறாதே-யிந்த
காயமிலைக்க வருள் வாராதே
கேவங்கொடுப்பார்வேறு பாராதே-லோக
நாயவனன்றிவேறுக் தேறாதே
சேயன்றி முறையிடில் ஏறாதே-நான்
செப்புமொழியைக்கேட்டு ஒப்பிமனதிலிட்டு
கப்புமட்டம்பத்தைவிட்டு அப்பனடியைத்தொட்டு. (ப.)
எல்லாமொருதெய்வமே அறிவாயே-அவன்
அல்லாலொன்றசையாது தெரிவாயே
கல்லாதிருமண்மையாய்ப் பணிவாயே-பத்தி
நல்லாயிற்றிலருள் பெறுவாயே
சொல்லாருமுனக்குச் சரியாயே-யிதைச்
சூட்டினேனுனக்குமே காட்டினேன்வினைக்குமே
நாட்டினிலெவர்க்குமே மேட்டியாய்க்காக்குமே. (ப.)

வாத்தியார் வசனம்.

அடா மாணிக்கம்! உன்பாட்டத்தைச் சொல்லும்பிள்ளாய்.



மாணிக்கம் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் ஐயா.

மாணிக்கம். தரு - இராகம் இந்துஸ்தான் தாளம் ரூபகம்.

பல்லவி.

புத்திகேழ்ப்பாயே நான்சொலும் புத்திகேழ்ப்பாயே.

அநுபல்லவி.

சத்தியந்தன்னையே தள்ளிச்சொல்லாதே
தரணியிலிடம்பனுப் திரியாதே-என். (புத்.)

சரணங்கள்.

உத்தமரை யிகழாதே-ஞாயம்
ஒதிடாச்சபை நீசாராதே
பத்தினிதன்னை நோக்காதே-பாவம்
பலித்திடும்நாவினில் மூழ்காதே-என். (புத்தி)
கெட்டவார்த்தை புகலாதே-நீதி
கிட்டாதமார்க்கத்தில் நீ நுழையாதே
பட்டகுடி யடுக்காதே-நாளும்
பாரில்கொலைசெய்துதான் துடிக்காதே-என். (பு.)
புத்திகெடக் குடியாதே-பலர்
புகலாவார்த்தைகளை நீவிடியாதே
சுத்தியில்லா திருக்காதே-தேவ
தூஷணைமார்க்கத்தை நீபிடியாதே-என். (புத்தி.)
ஜீவன் போவப் புரியாதே-உடல்
சிக்கிப்போம் சொன்னதை அறியாதே
கோபத்தால் வசை உரையாதே-நமன்
கொள்ளும் எண்ணமுனக்குத் தெரியாதே-என். (பு.)

வாத்தியார் வசனம்.

அடாஇரத்தினம்! உன்பாட்டத்தைச் சொல்லும்பிள்ளாய்.

இரத்தினம் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் ஐயா.

## இரத்தினம் விருத்தம்.

ஒருவனே யாவருக்குந் தேவனாகும்
உதயவ் பேரினு மவனேயாகும்
கருமவிதி நடத்துபவ னவனேயாகும்
கனிந்தவர்க்கே வரமளிக்குங் கடவுளாகும்
தருமகுணம் படைத்தவனு மவனேயாகும்
சரவணமூர்த் தியுமென்றன் றந்தையாகும்
முருகனே விநோதசபை காப்போனாகும்
முகிழ்ந்துபணி வோமவனை நாளுநாமே.

### வாத்தியார் வசனம்.

கேளாயப்பா சட்டாம்பிள்ளை.

### சட்டாம்பிள்ளை வசனம்.

சொல்லுங்சுவாமி குருநாதரே.

## வாத்தியார் விருத்தம்.

அரசன்றன் மகனுமிந்த அன்புள்ள லோகிதாசன்
வரபுத்திரனுதாலே வகையுடன்மூலாதார
சாவித்திரியெல்லாஞ் சார்வறத்தெரிந்தான்வேந்தன்
பாருசென்றுவருவேன்பள்ளி பத்திரம்சட்டாம்பிள்ளாய்.

### வசனம்.

அப்பா சட்டாம்பிள்ளை, இந்தலோகிதாசன் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் மனுவிக்கியானம் நீதிநெறி ராஜாங்கத்தைச் சார்ந்த சகலவித்தைகளிலும் தெளிவுற்றான் ஆதலால்மஹாராஜனிடம்போய் வருகின்றேன் பள்ளிக்கூடம் பத்திரமப்பா.

## சட்டாம்பிள்ளை விருத்தம்.

நீர்வருங்கடிகைமட்டும் நிமைப்பொழுதிடர்செய்யாமல்
சார்விள்ளிசிறுவர்பாடஞ் சட்டமுந்திட்டமாக
பார்வைநான்கொள்வேனையா பதிவரகோரமாகில்
மார்பொழுதிருக்கமைந்தர் மனைக்கேகவிடையீவேனே.

### வசனம்.

அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறேன் தாங்கள் வருந்தனையாகில் ஒருமார்பொழுதிருக்கச்சே சிறுவர் வீட்டிற்குப்போகவிடுகிறேன் ஐயா.



### வாத்தியார் வசனம்.

அப்படியே செய்வாயப்பா சட்டாம்பிள்ளாய்.

## உபாத்தியாயர் விருத்தம்.

கட்டியக்காராகேளாய் கவுருடன்சென்றுபார்த்தி
திட்டிறுசென்றுவேந்தன் * நியியுறச்செப்புவாயே.

### வசனம்.

அப்பா கட்டியனே, உபாத்தியாயர் லோகிதாசனை அழைத்துக்கொண்டு காணவேண்டிவந்திருக்கிறாரென்று அரிச்சந்திரமஹாராஜனுக்குத் தெரிவியும்பிள்ளாய் வீரனே.

### கட்டியக்காரன் வசனம்.

அப்படியே போய்த்தெரிவிக்கின்றேனையா வாத்தியாரே.

## கட்டியக்காரன் விருத்தம்.

ஐயனே வாத்தியாரும் அழகுமின்பாலனோடு
ஐயனே யிருக்கிறதான் அறிவிக்கசொன்னார்வேந்தே.

### வசனம்.

ஆண்டவனே, குமரவேல்வாத்தியார் லோகிதாசனை அழைத்துக்கொண்டு தொலுவாசல்முன் வந்திருக்கிறார்சுவாமி.

### அரிச்சந்திரன் வசனம்.

அடாகட்டியனே, ஜாக்கிரதையாய் அழைத்துக்கொண்டுவாரும் பிள்ளாய்.

### கட்டியன் வசனம்.

ஐயா உபாத்தியாயரே அரசன் வரச்சொன்னார் போகலாமையரே.

## வாத்தியார் விருத்தம்.

வேந்தனேபோற்றி விமலனேபோற்றி
சாந்தனேபோற்றி தாளடிபோற்றி.

### வசனம்.

போற்றி போற்றி மஹாராஜனே போற்றி.

### அரிச்சந்திரன் வசனம்.

வாரும் உபாத்தியாயரே நீர் வந்தகாரியஞ்சொல்லும்ஐயரே.

---

* இயிகசெவி.

### வாத்தியார் விருத்தம்.

சத்தியனேஉமதுபாலன் சாஸ்திரமெல்லாங்கண்டான்
சத்தியனேஅவன்தலாசம் சார்வுறக்கற்றனம்பு
சத்தியமேவிடலும்ஞானம் சாரவேவழியுங்கொண்டான்
சத்தியனேஇவனைத்தேவ தாசனென்றழைகுவீரே.

### வசனம்.

கேளும்மஹாராஜனே, உமதுகுமாரனுமெலேவிதாசனானவேதம்ஆறு சாத்திரம் அரசுக்குரிய வில்யுத்தம் மல்யுத்தம் ஆனையேற்றங்குதிரையேற்றம் நீதிநெறி ஒழுங்கானதும் கற்றதுடன்கூட பரமன் மகிழும் ஞானத்தைச்சார நேர்வழியுந்தெரிந்திட பஞ்சாக்ஷர மகிமையையும் அறிந்தானதலால் இதுமுதலிவனைத்தேவதாசனென்று அழைக்கத்தகும்வேந்தனே.

### அரிச்சந்திரன் வசனம்.

ஆ அப்படியா வெகுசந்தோஷம் இன்றுமுதல் நீருரைத்தபடியே தேவதாசனென்றழைக்கச் செய்வேன் உபாத்தியாயரே.

### தேவதாசன் விருத்தம்.

என்னையீன்றெடுத்தஐயா இணையடிபணிந்தேனந்த
தென்னைமாமலர்முடிப்போன் திருவடியிறைஞ்சுவாத்தியாயர்
தன்னையேபணிந்தேவேத சாரமுந்தருநீதி
பன்னிவேமற்றவெல்லாம் பழுதறக்கற்றேன்போற்றி.

### வசனம்.

கேளும் எனையீன்றபிதாவே, உபாத்தியாயர் பாதம்பணிந்து சகலகலையுங்கற்று அரசுக்குரிய விசிஷ்டமும் அறிந்தேன் இன்றுபஞ்சாக்ஷரவுபதேசமும் பெற்றேன் தந்தையே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

கண்ணின்மணியே யென்குலத்தைக் காக்கவந்தகதிரொளியே
விண்ணின்மதியேபடித்த வித்தையென்னவிளம்புவையே.

### வசனம்.

அப்பா பாலகா நீ வாசித்த வித்தையை விபரமாய்ச்சொல்வாய் என் கண்மணியே.

### தேவதாசன் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் எந்தாயே.



### தேவதாசன் அகவல்.

சீர்பெருமயோத்தி செங்கோல்நடாத்தும்
பார்புகழ்தந்தையே பகருவேன்கேளீர்
ஓமெனுமெழுத்தி னுறுதியுமோன
நேமமுமக்ஷர நிலைமையுமுணர்ந்தேன்
அ முதல் க்ஷ கடை ஐம்பத்தோரக்ஷரம்
தன்மையாயுரைத்தநி ரையப்பையுங்கண்டேன்
அசைமொழிவாக்கிய மமைத்திடுவகையையும்
இசைதனைதொங்க விலக்கணமறிந்தேன்
அஞ்செழுத்தாகி அடியிடைமுடியாய்
நெஞ்சதிலமர்ந்த நிலையதுமறிந்தேன்
கரிபரிவிடுக்குங் கவனமுமம்புகள்
அறிவுடன்தனுசா லனுப்பவுங்கற்றேன்
மல்லுடன்வாளும் வளைதடிபாலமும்
சொல்விடுங்கதையின் சூக்ஷமுந்தெரிந்தேன்
செங்கோன்முறைமையுந் தேசவழக்கமும்
தங்கள்சொல்மீறாத் தன்மையும்உணர்ந்தேன்
ஆசனவிதியும் அரும்பொருளறமும்
தேசமும்பெற்றேன் தேவனேபோற்றி.

### அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாயென்றன் மகனுமேவித்தையெல்லாம்
சுந்தரமாகக்கற்றான் சுறுக்கெனநீதானிங்கு
வந்திடவுபாத்தியாயர் மனங்களித்திடவேசென்று
உந்திருக்கையாலநல்ல வுடுப்புதந்தனுப்புவாயே.

### வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி, நமது தேவதாசனுக்கு வித்தைகற்பித்த உபாத்தி மனங்களிக்க வேண்டிய வெகுமதிகள் கொடுத்தனுப்புவாய் மந்திரி.

### மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகின்றேன் மஹாராஜனே.

## மந்திரி விருத்தம்.

வாத்தியார்தனக்கே நேத்தியாய்வெகுமதி
பார்த்திபா அளித்தேன் சாற்றியபடியே.

## வசனம்.

மஹாராஜனே, உமது உத்திரவின்படி வாத்தியாருக்குவெகுமதிகொடுத்தேன் வேந்தனே.

## அரிச்சந்திரன் வசனம்.

மெத்தசந்தோஷம் மெத்தசந்தோஷம் அப்பாமந்திரி.

## வாத்தியார் விருத்தம்.

வெகுமதி தோணப் பெற்றேன்
வேண்டிலேன் வேறு ராஜே
ஜெகதலா வும்மைப் போலச்
செய்தவ ரொருங் காணேன்
மகிழுட னிருந் தேவி
மட்டிலாத் தேவ தாசன்
திகழ்சபை விநோதமுன்றன்
செங்கோலும் வாழிவாழி.

## வசனம்.

மஹாராஜனே, வெகுமதிபெற்றுக்கொண்டேன் போய்வருகிறேன் வாழி வாழி மஹாராஜனே.

## அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே போய்வாரும் உபாத்தியாயரே.

## தேவதாசன் விருத்தம்.

அம்மணிஉபாத்தியாய ரடிபணிந்தடியேன்றுனும்
அம்மணிசகலவித்தை யடியனுங்கற்றேனம்மா
அம்மணிஅந்தசெழுத்தி னடிநானிஅறிந்ததற்காய்
அம்மணிதேவதாச னென்றெனையழைத்தார்தாயே.



## வசனம்.

கேளும் என்னைப்பெற்றதாயே உனது, ஆசீர்வாத பலத்தினால் சகலவித்தையுங்கற்று பஞ்சாக்ஷரவுண்மையும் தெரிந்துகொண்டேன் அதனால் எனக்கு தந்தைமுன்னிலையில் என்குருவானவர் தேவதாசனென்றழைக்கச் சொல்ல தந்தை மகிழ்ந்து அப்படியே அழைத்தனர் அம்மா.

## சந்திரமதி விருத்தம்.

என்தவமுதலேவாழி
என்கண்ணின்மணியேவாழி
முன்செய்தபலனால்வந்த
முத்தொளிவிளக்கேவாழி.

## வசனம்.

வாழிவாழி என்தவபுத்திரனாகிய தேவதாசனே.

விவாககாண்டமும் - புத்திரோற்சவகாண்டமும்

முற்றியது.

௭

முருகன் துணை.

## சத்தியபாஷை அரிச்சந்திரவிலாசம்.

# இந்திரகாண்டம்.

விநாயகன்-துதி.

வெண்பா-சங்கராபரணம்.

சீராரிகுலத்துச் செம்மலரிச்சந்திரன்றன்
போரார்சரித்திரத்தைப்பேசுதற்கே - ஏரார்
செஞ்சடையிற்கங்கையுடன் றிங்களணிபெம்பெருமான்
கொஞ்சுமெழிலைங்கரனைக்கோரு.

தரு-இ-ம-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி.

ஓங்கணபதிசரணம்-வரத்தருணம்-ஓம்

அநுபல்லவி.

மாங்குயிலொலியுமை ஓங்கவளித்தவுனை
பணமுநாடிடுவேன் கனமுடன் மங்கிடவே
தினமுமென்வாய்மொழி அனந்தம்புகழ்பெற (ஓம்)

சரணங்கள்.

அஞ்செழுத்தானபாமே - மதிப்பணிவோர்
நெஞ்சைத்துலக்கும் தாயே
குஞ்சரவேண்முகா மஞ்சுகாத்திலகா
கோர்வேழுக்கினைப் பார்மெலன்றுவினிற்
பேரிடிபோற்கனி தாவிசெரியருட்
கொற்றவா எத்தினைப்
பெற்றவா தினியிது
மற்றவா பணியுநாத
கற்றவா பேரிடபே (ஓம்)

அங்குசபாசம்பிடித்தாய் - காந்தனிலே
எங்குங்களிக்க நடித்தாய்
பொங்கரவப்பணி கங்கைசடையிலணி
பொன்னம்பலவனும் அன்னன்னடையளும்
நன்னயமாயெனி முன்னதவருட்செய
போற்றினேன் மனமது
தேற்றினே நின்புகழ்
ஏற்றினேன் முறையிதோ
சாற்றினேன் வருடா (ஓம்)

மூலாதாரத்திலுருவே - பத்தரது
கூலாவேதத்தின் மருவே
சீலாவல்லபைமகிழ் லோலாசுரரும்புகழ்
சீருளமுனிவரும் பாருளவேந்தருங்
காருண்யனென்னவே பேருவினற்கதை
செப்பிடு மாயவ
ஒப்பிடு குணமது
உப்பிடு வாறுபோல்
வெப்புட னெழுதிய (ஓம்)

அரிமகிழ்மைமருகா - கைலைபெனுங்
கிரிவிட்டிங்ஙனம் வருகா
அரியேனேழுத்துசாமி கிரியேனுனக்குக்காமி
தாவிடப்புகழது பேவிடத்திசைகளுங்
கூவிடஎன்னருட் பாவிடயுன்னடி
தேடவு மூனமது
நாடவு பெருக்கும்
பாடவு முன்னேயே
கூடவுந் செய்திட (ஓம்)

பரமன் துதி,

ஆசிரியவிருத்தம்-இ-ம்-தோடி.

அம்புலிவருக்கிலே யழிந்திடும் பேனோமி
னையனே யுமாங்கனிந்து
யாதரித்தவனுடை யரியசாபம்போக்
கடித்தலாயந்தகரிச்



கம்புவேசங்கரா சடைமுடிதரித்திடுஞ்
சதாசிவா சர்வ பௌமா
சாயுச்யதாரியே சலந்தனை யுதைத்தவா
சகலருக் குகந்தநாயா
வம்பதையுணர்ந்துமன் வரியதிரிபுரமதை
வதைத்திட வெறிக்கதுயா
வாமதேவா சுரர் வாழ்ந்திடக்காளகூட
வாரியுட் கொண்ட நேயா
நம்புவோர்க்கதிசுக வருளிடுஞ்ஜோதியே
நாதனே நந்திகேசா
நானுனையேற்றினே னண்ணியிடும் வினைதனை
நசிக்கிடயருளிவையே.

பார்வதி துதி.

விருத்தம-பியாக்-

அந்தரியே யபிராமி யிணையமல்லி
யானிடத்தி னமர்ந்துவோ ஐயைசத்திச்
சுந்தரியேயபிராணி உருத்திராகௌரி
சுகந்தநிறைந்த வாகிசூலி
மந்திரியே மலையரைத்தா மயானந்திரி
மகிடாசுரனை வதைத்த மாதுங்கமா
விந்தரியேவிரிசடைச்சி வெளியன்னபழ்
விட்டகல வருளாயிதோ வேண்டினேனே.

117113

திருமால் துதி.

ஆசிரியவிருத்தம்-கமாஸ்.

அரிபரந்தாமனே யனந்த சயனுவன்று
மலைகடைவுன் மச்சமாகி
மரக்கனை வதைத்துமே மருமறைகள் கைக்கொண்ட
வண்ணமேல் யுனைகேதா
கிரிதனைத் தாங்கிடக் கூர்மமாய் நின்றமண்
கிளறிட வராகமாகிக்
கேசவாபுத்தம னென்னவும் பரம்பொருள்
கிழித்திடவாக்கனெஞ்சை
தரியாய்த்தூணதி லுதித்தவாவாமனா
தாராய்மெலி தோய்மா

துண்டித்துரானிமா புறநவல் வேந்தனைத்
  தொழச்செய்த பராபரமா
சரியிலா வுண்மைகொண் டசுரருந் தசமுகன்
  சாகவே செய்தராமா
சப்பபலபத்திர கம்சனை வதைத்தவா
  சரணிதோ வாட்கொள்வையே.

## இலக்குமி துதி.

விருத்தம்—ஆனந்தபைரவி.

இந்திரையே யினையமலே செல்வியம்பா
  விவ்வுலகமெவ்வுலக மேற்றுந்தேவி
சுந்திரமிழ்சோதரியே விமலையாக்கம்
  நற்குணியே நவநிதிக்குமேட்டியாளே
முந்தியடிவேணைத்த பொல்லாம்மெல்லா
  மோட்டிமோசுற்பரவி மூனையமென்னை
அந்தமதுக்கடனுதித்த வாரியாளே
  யடிபணிந்து முறைக்கிரங்கி யருளுவாயே.

## முருகன் துதி.

விருத்தம்—காம்போதி.

கள்ளியுமை யுளங்களிக்க வன்றுதித்த
  கடம்பனே காங்கேய கங்கைமைந்தா
வள்ளிவளர் வனம்புகுந்து காலையங்கு
  வந்தவற்கே தோற்றுமன் மறைந்ததூயா
தெள்ளிரவி மதிமுதலாந் தேவரேற்றுஞ்
  செய்யானே தனையனைந்த சிவம்பெருமா
துள்ளிமயி லேறிவந்தென் றுயரமெல்லாந்
  துண்டிப்பாயிறைவாவுந் துதித்திட்டேனே.

## சரஸ்வதி துதி.

விருத்தம்—கல்யாணி.

கலைமகளே யுலகத்திற் காதிமாதா
  காயத்ரி சாவித்ரி கமலமாதி
விலையிலாக நற்குணியே விம்பன்றேவி
  விசைமடக்கு வெள்ளைக் கலைசி வெள்ளைமேனி



புலைகொலையுந் தானகற்றிப் பூரணமே
  பொய்யுறத்தென்புந் திதனிற் பூர்த்தியாக
நிலைபெருக வெங்கவென்றே நினைத்தேனம்பா
  நீதயவா யென்னிதத்தி னிற்பாய் போற்றி.

## வசிஷ்டர் துதி.

விருத்தம் பியாகடை

அட்டதிக்குப் பாலகரை யடக்கிச்சென்ம
  மடையவைத்த தற்பரனு மியாருங்காணு
மிட்டதனினுயர்ந்தவரும் திருவிதனின்ன
  நிலையமிக்கு முள்ளிருந்து மேன்மற்றும்
வட்டமுல கத்திலுமேற் புனைமேற்ற
  வரிச்சந்திரனிலையதனை யறியச்செய்தோன்
விட்டமதுபெறுகவென்றே யடியேன்றுனு
  மிடிமுறைகேட் டருள்புரிய வேற்றினேனே,

## விஸ்வாமித்திரர் துதி.

கலித்துறை—பைரவி.

நன்னுடலுடன் திரிசங்குமன் றவத்துடனே
விண்ணுடைய விமானத்திலேறி விரைந்துசெல
மண்ணுளாரே புகலெனத்தேவர் மறுத்துநன்னா
அன்னுணைய மெனக்காத்தகௌசிக னடிவணங்கே.

## குருவணக்கம்.

ஆசிரியவிருத்தம்—ஆரபி

நல்லறிவுபோதிக்க வேண்டியே நண்ணியன்
  றுடனெனக் கைப்பிடித்தே
காட்டித்துட்பலதொழிற் புரிவதுமுனைக்குமே
  னுடைக்கொடா தென்னவென்
புல்லறிவகற்றியே வாழ்நாளுந்தோதெனப்
  புகட்டியும் பலநூன்முறை
போதித்த நற்றமைய விதியுடன்குருவடி
  போற்றிடுவ தருளளித்தன்
செல்லவுமதித்திடன் றுயிடிப்பாயெனச்
  செப்பியப் பாட்டைகொண்டு

## சத்தியபாஷை

சேட்டைகளகற்றிட விலைதுறுமணர்த்தியே
சீர்பெறச் செய்துனையாற்
சொல்லரியமதுமாரி புண்ணையும் பூணசவுந்
துக்குமத் தரியவுருவை
குலத்திறையினிடக் காட்டியசரவணச்
சுவாமிபதம் பணிநெஞ்சமே.

### அவையடக்கம்.

ஆசிரியவிருத்தம்-கேதாரகவுளம்

நீரதுபாலினிற் சேர்ந்துமருந்துவார்
நீக்காம லுலகின் மாந்தர்
நேற்புடனின்பிடு மைந்தின்முடமாயி
னிக்கிலார் மதலைமாவை
காரதுபூவுட னினொயினுமகற்றும்
நடாளுமன்ன ரணிவார்
கற்றந்தமதிற்கெட்ட கந்தமதுவிலையினும்
பெய்ந்தேதுலக்கி மகிழ்வார்
சீர்பெறப்பைங்கூட லக்கிறைக்கும்புனற்
சிற்றுறுப் புல்லகற்றுச்
செல்லும்வாறதுபெருகு மேன்மையையடியனுந்
சித்தத் தினைஞ்சுமிங்மன்
பார்புகழுமதிவீர கவிவாணர்முன்னிதைப்
பன்னினேன் சிற்றறிவுளோன்
பார்த்திடாருத்தம பொன்சொலைப் புன்மைபெண
பண்புடன் களிப்ப ரன்றோ.



### தோடையம்.

தரு-இ-ம்-காட்டை-தாளம்-திரிபுடை.

சகலலோகமுங்கீர்த்தியோங்கிய தனிஅரிச்சந்திரன்சரிதையை
தருமவிலாசமதாகவாணுமே தமிழிலுரைவிசைபன்னவே ஆ-ஆ
அகிலபுவனத்தமரர்முனிவர்களனைவருமடிபணிந்திடு
மகாகுண்டலமைங்கரனருள்வைத்து மென்றனைக்காக்கவே. (ஜெய)

பெருமைபெற்றிடவருமையுற்றதோர் தருமனரிச்சந்திரன்காதையை
அருமைதங்கியபொருளமைத்துமே யான்விலாசமாய்ப்பாடவே ஆ-ஆ
வருந்துந்தேவர்கள் சிறையறுத்திட வந்தேதருகானைவாட்டிய
முருகவேலவன் கருணை பென்றுனமேயெங்கொளுமேகாக்கவே. (ஜெய)

சுத்தமுளசக்கிரவர்த்தி சொல்லொளுப்பத்னிசரிதையை
இத்தாட்டிலோர்வந்துபார்க்கவே யிவ்விலாசகான்பாடவே ஆ-ஆ
சத்தவேளியிலமர்ந்தவளினிற் கிழுகன்பிளைவிந்ததோர்
பந்தபாசத்தைதவிலக்கியாளுமென் பரமகுருவன்காக்கவே. (ஜெய)

தந்தைவாக்கியம்பிசகிடாமலே சந்தலோகிதன்காதையை
விந்தையாய்கவிவாணரின்பதம் வேண்டிநான்தமிழ்ப்பாடவே ஆ-ஆ
கந்தைபோற்றியதோழனையன்று கருதியாண்டவென்கண்ணனை
எந்தையினருளென்றுமோங்கியோமிடியகன்றிடக்காக்கவே. (ஜெய)

நிலைபுளோன்புகழ்க்கலைபுளோனென் னெறிபிராமசந்திரிகாதையைப்
புலையிளாருநங்களிக்கவேகான் புகழ்விலாசமாய்ப்பேசவே ஆ-ஆ
தலைமைதங்கியதாணிபங்குளா சகலநால்சருந்தாதியாங்
கலைமகளருளென்றுமோங்கியெங் காலமுமெனைக்காக்கவே (ஜெய)

கள்ளமுந்துநங்கபடமீந்திய கன்னரிச்சந்திரன்காதையை
வள்ளலென்குருபாதம்போற்றியே வாயினுற்றமிழ்ப்பாடவே - ஆ-ஆ
வெள்ளைக்காளையன் வேணுகோபாலன் விமலிசனபதிமுருகனு
முள்ளமுவந்துவிநோதமையோ மோங்கியோழ்ந்திடவருளவே. (ஜெய)

பொது-கலித்துறை.

அத்திக்கணபதி ஆதிக்கணபதி அன்பர்துதி
சித்திக்கணபதி செல்வக்கணபதி சிப்புறதாய்
பத்திக்கணபதி பாலக்கணபதி பாக்கியமருள்
வெற்றிக்கணபதி விநோதசபையில் விளங்கினனே.

விநாயகர்-தரு-இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சித்திவிநாயகன் முன்னேவந்தான்-வெற்றியளிக்க
சித்திவிநாயகன் முன்னேவந்தான்.

அநுபல்லவி

எத்திசைபுகழும் கல்யாணபுரியில்
உத்தமவேளாளர்கருதும் செறியில்
சித்தித்தோவென்று அதித்தித்தோவென்று
தேசங்கள்கொண்டாட வாசகங்கள்பாட (சித்தி)

சரணம்

அன்னையுமையருளங்குச பாசன்-கருணாகரன்
ஆதிமூலமாய்வரும் விசுவாசன்
என்னையடிமைகொண்டிட்ட நேசன்-தொழுபவர்க
ளிடுக்கண்போக்கி யாண்டிடுமீசன்
முன்னைவினையைக் களையும்மாதன்
போனவினையைத் தரும்விநோதன்
தன்னையண்டினோர்க் கருளும்பாதன்
சாயுஜ்யமடையச் சாற்றிடும்போதன்
சற்குணநிரன் வல்லமை
நற்குணமாரன் பலகலை
அற்புதவீரன் தேவர்க
ளொப்பியசூரன் நாட்டில்
சாற்றிடும் நூல்வகை
ஏற்றிடும் பலதுகை
ஓட்டிடும் துயரதை
வீற்றிடும் பாமதை
தாங்கிஜங்காத்திட ஜோதி
சன்னைவென்றிரு காமனைத்தாக்கிட
வாமதுயளித்துமே பலவது செய்திடும் (சித்தி)

—



பொது விருத்தம்.

மிட்டையிலுயர்ந்தமித்தர் மிகழ்த்திடதேவர்போற்ற
துட்டராக்கதர்டுங்கத் தூவிகள்பணிந்துபோற்ற
அட்டதிக்கெல்லாமேங்க ஆளுகைசெய்தேவராஜன்
இட்டமேயெழுங்கட்டியனிதோவந்துதோன்றினனே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் கொலுவா யல்லாக்குங் கட்டியன் சபைக்குவருகிற விதங்காண்பீர்கள் கனவான் களே.

கட்டியன் - தரு - மோகனம் - ஆதி

பல்லவி

கட்டியக்காரன்வந்தான் - இதோ
கனமுளாயிந்திரன் - மனமதுமகிழ்ந்திடும் (கட்)

அநுபல்லவி

எட்டித்துட்டர்கள்பல்லைத் தட்டிமதமொடுங்க
கெட்டியனத்தோன் முன்னை கெட்டிக்குலைநடுங்க (கட்)

சரணம்.

விண்ணுலகோரெல்லாம் - வேந்தனைப்பணிய
விமலனடிமறவா வாயன் சர்வ
வேதசாஸ்திரமுறை - விதிதெரிவேதியின்
வெற்றியாகிகள்பெறு நேயன்
மண்ணுள்முதல்யாரு - மகிழ்ந்திடச்சொர்க்கத்தை
மகாநேமியுடனாளு நாயன் வந்த
மல்லரக்கர்படையை - மாய்க்கவேதான்வேண்டி
மாறுபூதங்கள்செய்யு மாயன்
என்னுடனக்கெதிர் - இல்லையுலகிலென
என்னவெவருமடி. போற்றவேமுழங்கவே (கட்)

கட்டியன்-வசனம்

கேளுங்கள் சபையோர்களே சொர்க்கத்தை யாளுகின்ற ஜெயவீர தீரமாகிய தேவேந்திரமகாராசன் வருகிறார் எச்சரிக்கை எச்சரிக்கை கனவான்களே.

பொது-தரு-கியால்-ஏகதாளம்.

வாரா ரிதோ ஷஜ்ர பாணி வளர்சபை நாடி
சேராய் நாரி வரு மாடச் சேர்ந்துமே கூடி (
தேவர் மூவர் மனம் நாடத் திகழொலி பேச
பாவ லருந் சார மனை பண்புளோர் வீச (
கோலா கல முடி யுடன் கோஷ்ட்டமும் பாட
சிலா வெண அசுர ரஞ்சி சேவடி நாட (

தேவேந்திரன்-தரு-தோடி-ஆதி

பல்லவி.

தேவாதிதேவன் திகழ்விண்ணுலகையாளுந்
தேவேந்திரராஜன்வந்தான் - கொலுவிருக்க
தேவேந்திரராஜன்வந்தான்.

அநுபல்லவி

மூவர்மனமகிழ தேவர்களும்புகழ
முனிவராதிகள்கூற கனியிந்திராணிசேர
முத்துமாலை துலங்க-நவ
ரத்னமகுடமிலங்க
மோகனமாலையும் வாகுவலயமும்
பாகுபுஜமிருதும் போகனெனவணிந்தும் (தே)

சரணம்.

வெண்கரிமீதினிற் திண்மையுடனேவேப்பிர்
வீரகட்டியங்கூற - விருதும்
வெண்சாமரைகளாட
நன்மையுறவேதேவர் துன்பமுபிராக்கதர்
நாவுகினைக்கோரப் - பராக்கென
நாவலர்பேசித்தேற
சுயமுடன்வலம்புரிச் சங்குகளூத
ஜெயஜெயவெனவே தங்களுமேத
நாட்டியமாதராட - வீணை
மீட்டிப்பதங்கள்பாட - வெகு



கலமுளதவசிக ளாசிபகர்ந்திட
பலமுளகவசிக ளாசிலுருந்திட

நாடி தனிக்கொலுவைத்
தேடி விநோதமுடன்

நடித்து நீதிகை
பிடித்து கினைவதை
முடித்துப் பகைவனா
இடித்துப் புகழ்பெற

நாட்டிச்சுரர்களிலே மேட்டிக்கிலிபதனை
ஓட்டித்தனக்குவேறு போட்டித்தன்னகரினில்

நாடாமல் தேவர்மனம்
வாடாமல் பெருத்த
களிப்புடன்-மனக்-களிப்புடனிதோ

நானுவிதவாத்தியங்கள் தானுமொலிக்கவெகு
தீனுதேவர்கள்கோன் நானுமெனவிரு (தே)

---

தேவேந்திரன் - போற்றி - விருத்தம்.

அருமறைவேதனென்னும் அரிக்குமெட்டுவேகுணனைக்
கருணைசெய்பொருளேதிவ்யச் சுதிரொளிச்சடேரமுத்தி
தருவிக்குவிபோயத்தீவ தயாபரா வெனவுசெங்கோல்
பெருமையாய்வாழ்கப்பாரும் பிருதுனாலைகலைவாழ்வே.

மந்திரி - போற்றி - விருத்தம்.

தன்னிகரிலாதசுய தருமமுளமன்னவுமோமய
பன்னருகுருமாருங்வாழ்சப் பாவெலாக்கறைமுகமித்தி
அன்னவாசனைதேனுடைய அரசமுகளிக்கபெய்யுற
மன்னவாபுமதிதிவ்ய மனாடிக்கடிபேண்போற்றி.

கட்டியக்காரன்-கட்டியம்.

வின்னுலகையாள்கின்றதேவேந்திரனிறைபுகழ்வேந்தனே வெகுபராக்
வித்தகாராக்கதரைப பற்றாகியொட்டிய வீரனே வெகுபராக்கு
அன்னைகள்கொண்டமேச்சிதரை மறுத்தவென்றுமனே வெகுபராக்கு
அருந்திதிக்கொப்பான விந்திராணி மணமிகு ஆளனே வெகுபராக்கு

மண்ணுலகின் வேந்தர்கள் இன்புகழ்கொண்டாடும்மகிபனே வெகுபராக்கு
மாசிலாமுப்பத்து முக்கோடிதேவர்க்கு மகிபனே வெகுபராக்கு
கண்ணுண்மணிநோக்கொளு ரத்னமுடி தாங்கியகர்த்தனே வெகுபராக்
கருதரியவினோதசபை யோங்கவே வந்தயுன் கழலடிக்கே பராக்கு

தேவேந்திரன்-தேச விசாரணை.

தேவாதிதேவர்கள் யாதுமொருதுயரின்றி திகழ்வுட னிருக்கிறா

மந்திரி.

நிரனேவச்சிரந் தாங்கியகையனே தெளிவுட னிருக்கிறார்கள்

தேவேந்திரன்,

தவயோகமுனிவர்கள் செய்திடுங் கருமங்கள் தடையின்றி நடந்தேறுத

மந்திரி.

தானுவேமுனிவர்புரி யாகாதிகருமங்கள் தழைத்துமேநடந்து வருதே

தேவேந்திரன்.

அஷ்டதிசைபாலகர் செயத்தகுங்காரியம்அன்பாய் நடத்துரா

மந்திரி.

ஐயனே தடையின்றி முறைப்படிவேலைகள் அழகாய் நடத்திவாரு

தேவேந்திரன்.

நவக்கிரகவாசிகள் அவரவர் கதிப்படி நன்பாய் நடக்கிறா

மந்திரி.

நாதனேகிரகங்கள் நிலைபிசகாமலே நலமாய் நடக்குவாரு

தேவேந்திரன்.

அசுரர்கள்தேவர்க்கு பணிந்துமேயேவல்கள் அடங்கியே புரிகிறா

மந்திரி.

ஆண்டவாராக்கதர் சுரர்மொழிகடவாமல் அன்பாய் நடக்கிறார்கள்

தேவேந்திரன்

விருட்சமாங்கற்பக மதனது இடத்திலே விளங்கியே நிற்கின்றதா

மந்திரி.

வேந்தனேகற்பகந் தனதுநிலைதன்னிலே வெற்றியாய் நிற்குதையா

தேவேந்திரன்-வசனம்.

வெகுசந்தோஷம் வெகுசந்தோஷம் மந்திரி



தேவேந்திரன்-விருத்தம்.

என்னரும்பொருளாய் நின்ற மிருந்துணைகடப்பிற்கும்
உன்னதமனைச்சனை உபர்ருணமந்திரிநேனாய்
நன்னெறியுடையநாரதமுனிவனைஇங்கே
இன்னரும்வாருதேதேனு விரைவுடனழைப்பியாயே.

வசனம்.

அப்பாமந்திரி நாரதமகாமுனியை நமது சபைக்கு சீக்கிரத்தில்
அழைப்பாயப்பா மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே வரவழைக்கின்றேன் ஆண்டவனே

மந்திரி-விருத்தம்.

மையமாநிக்குமிந்திரன் சொலித்தாத்திருந்தே
மெய்யகேவலாள்னைக்கொண்டு நிற்குங்கட்டியனேநோய்
துய்யநாரதரிடம்போய்த் தொழுதுநற்சபைக்கிப்போதே
வையமெய்யழைத்துக்கொண்டேபணியுடன்வருகுவாயே.

வசனம்.

அப்பாகட்டியனே நமது ஆண்டவன் வீற்றிருக்கும்படியானசபை
க்கு நாரதமகாமுனியைச் சீக்கிரமழைத்துவருவாய் கட்டியனே.

கட்டியன்-வசனம்

அப்படியேயழைத்துவருகிறேன் சுவாமி

கட்டியன்-வசனம்

சுவாமி நாரத மகாமுனிவரே தேவேந்திர மகாராசன் சபைக்கு
வரும்படி தெரிவிக்கச் சொன்னார் முனிநாதா,

நாரதர்-வசனம்.

அப்படியேவருகின்றேனப்பா கட்டியனே

பொது-விருத்தம்.

பலக்குரும்பக்கத்தன்னைப் பரிறவொழித்துவிட்டே
தலக்கவிளங்கிருந்தேமுத்தர் தன்னொளிகொண்டநல்லோன்
இலக்கனைவிடைவிடாமற் சிந்தையிருப்பிக்க
நலமெய்புகழ்கொண்டேற்றும் நாரதர்வருகின்றாரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தவத்திலுயர்ந்த நாரதமகாமுனி தேவேந்திர மகாராசன்சபைக்கு வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

நாரதர்-தரு-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி

நாரதமுனிவந்தார்-வந்தாரிதோ - நாரதமுனிவந்தார்.

அனுபல்லவி

தாரமதானப்பொன்   தாங்கும்வீணையுமேந்தி
தங்கபிரம்போன்மேனி   தழைத்திடயதிகாந்தி
வீரமுடையதேவர்   விருப்பப்புகழைப்பேச
வெற்றிபுனைந்தகுரு   விரதமுடையதாச (நாரத)

சரணம்.

மண்ணும்பெண்ணாசையெனு   மயக்கமதையொடித்தே
மயக்கிடும்பொன்னாசையை   மாறியோடவடித்தே
எண்ணுஞ்சிவமதனில்   ஏகோபித்தேபுகழ்ந்தே
ஏகாட்சரியில்லை   யிருத்திமனமகிழ்ந்தே

எங்குஞ்சிவத்தைநாடி   மனம்
பொங்குமெழுத்தைப்பாடி   திவ்ய
கங்கைதனிலேயாடி   அருள்
தங்கபனதிற்கோடி   தினம்

ஏற்றி   பிறவித்துயர்
ஓட்டி   பாப்ரமத்தைப்
போற்றி   தவசிகளின்
மேட்டி   எனவேசொல

இருவினையெனுமந்தக்   கருவையழித்தேசந்த
பெருமைபடைத்துகந்தக்   குருவைப்பணியுமிந்த(நார)

தேவேந்திரன்-வசனம்.

போற்றிபோற்றி நாரதமகாமுனியேபோற்றி

நாரதர்-வசனம்.

வாழிவாழி தேவேந்திர மகாராஜனே வாழி



தேவேந்திரன் - வசனம்.

இந்ததிவ்ய ஆசனத்தின்பேரி லெழுந்தருளுஞ் சுவாமி

நாரதர் - வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் இந்திரதேவே

கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்குச் சுப்பிரமணியர் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் - விருத்தம்.

எங்கடன்னிடுக்கந்தீர வெழிலுறுவேலைத்தாங்கிப்
பொங்குளசூரனுயிர் போக்கியேஅமரர்கொண்ட
சங்கடமனைத்துமோட்டி சாங்காராயிருக்கச்செய்த
மங்களவள்ளிலோலா மயூரனேநின்றாள்போற்றி.

வசனம்

கொடும்பாவியாகிய சூரனேவதைத் தெங்களைக் காத்தவடி வேலனே போற்றிபோற்றி இந்ததிவ்யஆசனத்தி லெழுந்தருளுந் தேவே

சுப்பிரமணியர் - வசனம்

வாழி வாழி தேவேந்திரனே வாழி.

கட்டியன் - வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராஜன் சபைக்கு அக்கினிபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் - வசனம்.

எனதன்புக்குரிய அக்கினிபகவானே வாரும் வாருமிந்த ஆசனத்திலெழுந்தருளுமையா.

அக்கினிபகவான் - வசனம்

சந்தோஷம் வாழிவாழி இந்திரனே வாழி.

கட்டியன் - வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்கு சுக்கிரபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் - வசனம்

வெக்கிரகத்திற் பெருமைபொருந்திய சுக்கிரபகவானே சரணஞ்சரணஞ் சுவாமி இந்த ஆசனத்தி லெழுந்தருளும் பகவானே.

சுக்கிரபகவான் - வசனம்

வாழி வாழி தேவர்கோனே வாழி.

கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராசன் சபைக்கு எமதருமராசன் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே,

தேவேந்திரன் - வசனம்.

சரணஞ்சரணம் எமதருமராசனே சரணம் இந்த ஆசனத்தி லிருந்தருளுமையா.

எமதருமர் - வசனம்.

வாழி வாழி தேவேந்திர மகாராஜனே வாழி.

கட்டியன் - வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன் சபைக்கு மகாவிஷ்ணு வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் - வசனம்.

போற்றிபோற்றி கபடநாடக சூத்திர தாரனேபோற்றி இந்தஆசனத்திலெழுந்தருளுஞ் சுவாமி.

மகாவிஷ்ணு - வசனம்.

வாழிவாழி தேவேந்திரனே வாழி.

கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன்சபைக்குவருணபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் - வசனம்.

வாரும் வாரும் வருணபகவானே வாரும் இந்த ஆசனத்தி லெழுந்தருளுமையா.

வருணபகவான் - வசனம்.

வாழி வாழி தேவேந்திர மகாராஜனே வாழி.



கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன் சபைக்கு வசிஷ்டர் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

---

வசிஷ்டர்-தரு-இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வசிஷ்டமுனிவந்தேன்-சகலரிஷு-மகிஷ்டமுனி வந்தேன்.

அநுபல்லவி.

விதித்தவிதிகடக்கும் வேணுமிலேயுனாக்குந்
சதுர்த்திசைகளும்போற்றுஞ் சகலருப்பணிந்தேற்றும் (வசி)

சரணம்

அவதிபார்ப்பாலரை - யன்றுகாமதேனுக்கா
யவர்கள்பிறவிபெறச் செய்தேன் அந்த
அரியபசுவிகாணு - யருப்பொருளாகதையென்ற
னதிவிலடக்கிமாய்வை கொய்தேன் நல்ல
நவநிலைபெற்றேயிந்த - தரணிவாழ்வேந்தர்களுக்
குறைக்கச்சராத்திரமுணைப்பித்தேன் அன்றித்
பதிவைபசூரியனுற் - சூழ்ந்துவாரணைக்கே
தானேகொடுத்திடவே வைத்தேன்
இனித்தேனும் - இன்னம்பாரும்
கவுசிகன்பிள்ளைகளும்- கெருவப்படைத்தாலே
கருக்கிச்சாம்பலாக கெடுத்தேன் எந்தன்
காமதேனுக்காய்வந்த - காதிமகன்படையைக்
கலங்கியழித்திடவே விடுத்தேன் சர்வ
புவனமதில்விளங்கும் - புனிதமுனிவர்களிற்
புகழுங்கனமதைநா னெடுத்தேன் எங்கும்
போற்றிசெய்யவேபரமம் - புகட்டியபரஞ்சோதியை
புக்குறிலேதெரிந்தே யடுத்தேன் என்னைப்

ட

போற்ற - யாவர்களு - மேற்ற

எவர்களாயினுமிவ்வா - றெனைப்போலழியார
 விருக்குமிடத்தைக்கண்டே பிடித்தேன் இன்ன
மெழிலுருமருள்ஞானத் - தின்பத்திறுனுக்கத்தை
 யிச்சித்தவர்களுக்குப் படித்தேன் சர்வ
பலமதுமமிக்கிடப் - ரர்வதியானூலைப்
 படித்தநின்சாரத்தைக் குடித்தேன் எந்தப்
பாவையாகினுமோகம் - பற்றமயக்கிடினும்
 பதாதிருக்கமன முடித்தேன் ஆ ஆ

கேளுங் - சதாகாளும் - வெகு

கொர்வக்குணங்கள்போக்கி கிட்டி டுஞ்சிடருக்கே
கிர்த்திவாய்ந்திடநோக்கி ளெய்திடும்நாடருக்கே (வகி)

தேவேந்திரன் - விருத்தம்.

பந்தமென்பதையொழித்த பண்பனேயுன்முள்போற்றி
சிந்தையைச்சிவத்தில்வைத்த சிறப்புளாதாபோற்றி
விந்தையாங்காமதேனை விளைவித்தபொருளேபோற்றி
எந்தையேயென்னைக்காக்கு மிறைவனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி வசிஷடமகா முனியேபோற்றி.

வசிஷடர் - விருத்தம்

விந்தனேவேந்தேவாழி வெற்றிகொள்படையாவாழி
பொற்புறுகுணனேவாழி புகழுமிந்திராணிவாழி
கற்பகத்தருவும்வாழி கவஜ்ஜாயுதமும்வாழி
தற்பாதேவர்தேவே தயாநிதிவாழிவாழி.

வசனம்

வாழி வாழி தேவேந்திர மகாராஜனே வாழி.

கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தவத்திலுயர்ந்த விஸ்வாமித்திரமுனி தேவேந்திர மகாராஜன் சபைக்கு வருகிறவிதம் காண்பீர்கள் கனவான்களே.



விஸ்வாமித்திரன்-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி

தகிக்குந் - சதுர்மறைநெறியினைமதிக்கும்
 பெருமையிலுயர்தவ கவுசிகமுனிநானே - கவ
 கண்டம்போற்றுங்-கவுசிகமுனிநானே.

அநுபல்லவி

எத்திசைபுவனங்க - ளினிலெனைப்போலொருவ
 ரொற்றவருண்டோ - ஆ ஆ மற்றவருண்டோ யார்
 மீண்டோ காம் விண்டோ தவ
 ருண்டோ வருள் கொண்டோ சதி
 எழிலுறுமுனிவர்கள் கழலடிகாண்ணுறப்
 பழியதையறுத்திடு மழிவிலாவடிகொளுவ (தகி)

சரணம்-

இருசியின்மாயையென்னை - யேசிடிற்பயந்தோட
 எண்ணெண்ணொனிலை நாட்டுவேன் தபம்
ஏற்றுந்திறமையினு - மெவ்வுலகங்களுநா
 னெண்ணுகிலமயிலாட் வாட்டுவேன்
சர்கைமுதலாய்நாலுந் - சாற்றும்பெருங்கலையைச்
 சாந்தமினைகடினை யோட்டுவேன் மற்றுஞ்
சாரொணுமவைகுந்தந்தச் - சர்வருமாமிழச்
 சட்டமாயுள்ளாங்கைமிற் காட்டுவேன் நல்லோர்

 அரிதிற்பணியப் போனந்த மூட்டுவேன்
 அண்டபகலவினைக ளகன்றிடமாட்டுவேன்
 இரசுறுபெரிந்திடக் கொரணல்மூட்டுவேன்
 இம்மேருலகமெலாங் கீர்த்திமைகாட்டுவேன்

அரியன்மூவர்களு - மப்பொருளுமூலத்தை
 யகத்திலடக்கிநில யேற்றுவேன் சர்வ
லாதமகோடிசுவொலா - மறையுமொழிப்படிக்கே
 படக்கிப்பணிபாடி தேற்றுவேன்

சிரித்தொழுமெனைக் - கண்டம்பலமுமிறுக்
கனிவுமியமத்திலடி போற்றுவேன் அந்த
காயதேசமுமின்றன் - கைக்குட்டமிட்டவே
காசியெமுத்தரைமென்றன் சாற்றுவேன்

விரிவுபடதுரையும் வெண்டிட்டுன்பாற்றுவேன்
வேதபொலிக்கும்பல வேண்டியுபேற்றுவேன்
பரிசாதலிதும பண்புறத்தேற்றுவேன்
பகபொருளுடைனைப் பணிந்திடச்சாற்றுவேன்

பற்றித் தாய்கடனை சுற்றி பரிவியசை
சுற்றி புவசுதனில் வெற்றி பெருமிரக்கும்
பாவித்த வத்திர மேவித்த திரிசங்கை
கோவித்த தேவரும் தாவித் தணியச்செய்த
பட்சன் முனிவர்களின் மெச்சன் சனிவுபெறு
மிச்சன் சகலிலு முச்ச ன்னெனவேதொழ
பாடி மதிமடையா யோடி யிந்திரன்சபை
நாடி யாவிலு யோடி யோடியெனவே (கதி)

தேவேந்திரன் - வசனம்.

போற்றி போற்றி விஸ்வாமித்திர முனியே போற்றி

விஸ்வாமித்திரர் - வசனம்.

வாழி வாழி தேவேந்திர மகாராஜனே வாழி.

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன் சபைக்குத் தேவர்கள் முனிவர்கள் அட்டவசுக்கள் சித்தர்கள் முதலான சகலரும் வந்து சேர்ந்தனர்களென் றறிவீர்கள் கனவான்களே,

கட்டியன் - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராசன் வீற்றிருக்குஞ்சபையில்நட்டியஞ்செய்ய அரம்பை வருகிறாளென் றறிவீர்கள் கனவான்களே.

—⋆⋆⋆※⋆⋆⋆—



அரம்பைவருகிற-தரு-இ-ம்-பொல்-ரூபகதாளம்.

அண்டர்புகழ்தேவராஜன் அருளோடிடவே
அழகிலுயர்ம்பாதரம்பை அடையத்தேடியே (க)
முகத்தாண்மதிதாணவின்னோர் முகமும்வாடவே
முக்தேரவெனத்தகத்தம்மாலி போகங்கூடவே (உ)
தவசுநிறமேவியாள் தாளும்நாணவே
தாவலணிமிளிர்னைமொழி தனிபாய்ப்பூணவே (௩)

அரம்பை-தரு-இ-ம்-தோடி - தாளம்-ஆதி.

பல்லவி.

நடனமாடவந்தாள் - அரம்பையெனும்
நடனமாடவந்தாள்,

அநுபல்லவி.

கடிமபனத்துடையோர் கருதிக்காலனையென்ற
காலன் பூஜையும்போக்கி கலங்கமாலையைப்போன்ற
தண்டமாசை ॰ தொண்டுமேவ
எண்டிசையோரிவள் அண்டையோட (௪)

சரணம்.

மூன்றாம்பிறையைப்போல முழுதும் நுதல்விளங்க
முகத்தைப்பழிக்கும்சந்திர மொலித்தாறுத்தமிலங்க
வானத்தின் வில்லோவென வண்புருவங்கமிலங்க
வார்குழமிழைப்போகி கானவர்நாறுமேங்க

வண்டிரெலிபோன கயல்
கொண்டைகெட்டகம்பூரா அவள்
வாயினிதழ்கோவை மாங்
காயினிதுமேருபானவை சொல்

கலம்புரிபொத்தோர் வழிமுத்தோங்க
வானத்தின்மீன்களின் வரிபொளிவாங்க

வண்டுமொய்க்குங்கனங்கள் - நிரிகள்
கண்டொளிகுந்தளங்கள் - மிடி

உற்றிடு - இற்றிடை - பெற்றுடை - குற்றிய
பெருமலைக்க சர்வ
நாரிபலைக்க முக்

தேவர்திகைக்க — ரதி
பாவைபதைக்க — மால்

மகனுமிவள்முகங்கண்டுமே — வோட
ககனம்விடச்சகுனம்யென — நாட

வஜ்ராயுதனை — நாடி
சர்ஜனசபை — தேடி
கைச்சிலம்பொலி — கூடி
மெச்சத்தோடியிற் — பாடி (நட)

அரம்பை - வசனம்.

போற்றி போற்றி யுமது திருப்பாதாரங்களுக்குப் போற்றி.

தேவேந்திரன் - வசனம்.

கல்லயிசைகூட்டி ஒருபதம்பாடி நாட்டியம்புரிவாய் அரம்பா.

அரம்பை - வசனம்.

மகாபாக்கிய மப்படியே நடிக்கின்றேன் தேவர்கோனே.

அரம்பை-தரு-இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி.

மோடிசெய்குவதேதுகாரணமோ - ஐயோ
மோகம்பொல்லாதுசுவாமி (மோடி)

நாடி யுன்றன்பாதந் தேடி யென்றன் மனம்
வாடி யிவ்விதச்சொல் பாடி நின்றுனுமென்மேல் (மோ)

மாரா [illegible] கூற காணேனேயென்ச்
சேர [illegible] பார பென்றுனுமென்மேல்(மோ)

சங்கை பேதெனுமென்றன் கொங்கை [illegible]
பங்கை [illegible] செங்கை தாக்கிடயென்மேல்(மோ)

வாசா [illegible] யீசா தேவர்கள்பணி
நேசா [illegible] நாசா [illegible] (மோ)

தேவேந்திரன் - வசனம்.

இன்னமொருபதம்பாடுவாயரம்பையே

பதம்-இ-[illegible]-தாளம்-ரூபகம்

பல்லவி

[illegible]



அநுபல்லவி

அண்டர்கோனே — அடிபணிந்திட்டேன்
ஆணைக்கண்டாலுனான் — அணையவழைப்பேனோ (கொ)

சரணம்.

தென்றற்காற்றும் — வீசுதே — என்றன்
இரோகமெங்கும் — கூசுதே
கொண்டற்குயிலுங் — கூவுதே — இரு
கொங்கைவிம்மி — நோவுதே
தெண்டனிட்டுன் — தாள்பணிந்திட்டேன்
நீராவென்றுவலே — தாராயொருவிலை (கொ)

சந்திரனொளியுந் — தாக்குதே — காமச்
சரம்மிகவு — மோங்குதே
எந்தனுடலுஞ் — சோங்குதே — மனம்
இனிநிலைக்கப்பின் — வாங்குதே
சுந்தரவாகாவுன் — சொருசுகண்டோன்
சொக்கலானேநாதா — இக்கணமும்வா,கா (கொ)

காமநீரு — போடுதே — உன்றன்
கனியிதழினைத் — தேடுதே
ஜாமத்திரை — கூடுதே — மனந்
சஞ்சலத்தினின் — ருடுதே
சேமமாகவே — நின்றடியேற்றனேன்
நித்தனேவந்திடும் — முத்தமேதந்திடும் (கொ)

தேவேந்திரன் - வசனம்.

இன்னமொரு பதம்பாடுவாய் அரம்பையே

அரம்பை - வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி.

ஜாவளி-இ-ம-காபி-தாளம்-ரூபகம்.

இனி அவனோடுகூடி ஆடுமிச்சை போதுமே.

ஆடுமிச்சைபோதுமே-அவனோடாடுமிச்சைபோதுமே (இனி)

நின்றவிடத்தில்அன்றிலாட — நினைவுமவன்மேல்நாடுதே
நினைவுமவன்மேல்நாடுதே - என் - வினையெனமனமலாடுதே (இ)

இருக்கிடாயவொருவெழுத்தை எழுதிலவைருதே
எழுதிலவைருதே - மதம் - வழிந்துவிறைப்போகுதே (இ)
இவ்விலவன்வந்துயென்னைக் கட்டிறுற்போல்காட்டலே
கட்டிறுற்போல்காட்டவே - அவன் - தட்டியெனைவாட்டவே (இ)

ஜாவளி - பியாக் - ரூபகம்.

ஒய்யாரமோ - தேவராஜன் - மருவவாடானே - கொங்கை
சருவத்தேடானே
தாவவந்த பெத்தன்மனம் கோல்லாச்சுதே - அடி
தங்கமே காமமிருந்தால் தாங்கலல்லவோ - மனம்
வாங்கலல்லவோ (ஒ)
கெஞ்சமில்லா நெஞ்சகனைக் கெஞ்ச லாகுமோ - அடி
கொஞ்சநேரம் வந்துயென்னைக் கூடவாரானே - கலந்
தாடவாரானே (ஒ)
ஆசையில்லா ஆளுடன் பேசலெ [illegible] - அடி
[illegible] பன்னீர்க்கு வாங்கிப் [illegible]
யேங்கிறாடி (ஒ)
காமமீறுங் காலங்கூடாக் கணவனேனடி - அடி
கிளைக்குதே நந்தன் நெஞ்சையிதோ துளைக்குதேயைப்போ - உடல்
யிளைக்குதையைப்போ (ஒ)

தேவேந்திரன் - வசனம்.

அப்பா மந்திரி நேர்த்தியான நாட்டியஞ் செய்த அரம்பைக்கு விலை புயர்ந்த வெகுமதிகொடுப்பாயப்பா.

மந்திரி - வசனம்.

அப்படியே கொடுக்கின்றேன் மகாராஜனே

அரம்பை - வசனம்

[illegible] வெகுமதிபெற்றேன் வாழி வாழி இந்திரராஜவாழி.

கட்டியக்காரன் - வசனம்.

[illegible]



ஊர்வசி - கன்னடி - மியால் - ஏகதாளம்

இராஜதேவராஜவிந்திர ராஜபூபனே
ஆசையுடனூர்வசியுனை நாடிநாடினே (க)
கண்டதேவாசுராமைய்யற் கொண்டுதேடவே
மண்டலத்திலுன்னைப்போலா மயங்கிவாடவே (உ)
ஆதிசிலம் பூஜைசெய்யு மதிருர்தானுமே
ஜோதிதனைவிட்டேயெனைத் தொடரவேனுமே (௩)
மாரனேனிளன்னைப்பார்க்கிற் றாடியோடுமே
தீரனைக் காணிலுடற் சோரவாடுமே (௪)

ஊர்வசி - வசனம்.

போற்றி போற்றி தேவர் கோனேபோற்றி

தேவேந்திரன் - வசனம்.

இந்தசபைகளிக்க ஒருநல்லபதம் பாடி நடிப்பாயடி அப்சாரி.

ஊர்வசி - வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி [illegible] பாடி நடிக்கின்றேன் மகாராஜனே.

ஊர்வசி - ஜாவளி.

கூடவாருமே - கலந் - தாடவாருமே
வாடமனமதனிதோ வாளிதூவுறானோராஜே (கூட)
ஆசைமீறுதே - புணர் - ஓசைகோறுதே
மாசைவேண்டும் - வேசையல்லேன்
மருவவாருமே ராஜே (கூட)
நாணம்போக்குதே - மதன் - பாணந்தாக்குதே
சேனைமீறிற் - பெண்கலைச்
செல்லுங்கூடவே ராஜே (கூட)
நாமேலந்தேனே - வேண்டிக் - கோனேநோக்கினேன்
தானேகோர - வானேன் [illegible]
தகுதியல்லவோ ராஜே (கூட)
என்னபாவமோ - மதன் - பின்னங்கோவமோ
மன்னவனே - உன்விதயம்
மகிழ்வில்லையோ - ராஜே (கூட)

தேவேந்திரன் - வசனம்

இன்னமொரு பதம்பாடிவாய் பெண்ணே ஊர்வசி

ஜாவளி-இ-ம்-காப்பி - தாளம்-ரூபகம்.

ஓ ஆசைதீருசெய்தேன்-அணையவாருமே

| | | | |
|---|---|---|---|
| வாருசெய்யில் | மதன்வாளி | வருத்தும்பாருமே | (ஓ) |
| ஜாலஞ்செய்யக் | காலமல்ல | சாணக்காருமே | (ஓ) |
| கொங்கைவிம்மு | திங்கேயெனைக் | கூடித்தீருமே | (ஓ) |
| அஞ்சலென்று | அடிபணிந்தேன் | அருளைத்தாருமே | (ஓ) |
| காமரசம் | கக்கலென்னைக் | கட்டிச்சேருமே | (ஓ) |

இ-ம்-சகானா- அடதாளம்.

பல்லவி.

ஓ துரையே [illegible] வே - ஓ துரை

அநுப[illegible]

நாடுவாயே - தேடுவா[illegible]யே - ஓ துரை

சரணம்.

அந்தத்திவ்யாரனே சந்த்ரசூர்யாதனே
சொந்தமாய் - எந்நேரம்-சந்தித்திட - பந்தமாசுகக் (துரை)

வாடினேனுனமே - பாடினேனுனையே
நாடிடக் - கூடிட - ஆடிடத் - தேடிடச் சுகக் (துரை)

தேருஞ்சோதுதே - மோகமுற்றிந்த
தாமமாய் - வேகமாய்ப்-போகமாய்-ஏகமாய்ச்சுகக் (துரை)

மாரனம்பாலியே - சாதகன் தாவியே
சோர்ந்து - விரகமாய் - மாமதக்-தீரவே சுகக் (துரை)

தேவேந்திரன்-வசனம்.

இன்னமொருபதப்பாடி பாடிப்பெண்ணே

ஊர்வசி-வசனம்

மகாபாக்கியஞ் சுவாமி



ஜாவளி-இ-ம் காப்பி-தாளம்-ரூபகம்

| | | | |
|---|---|---|---|
| இதுவேளையே | என்னைக்கூடும் | இஷ்டமாய்த்தாவி | |
| பொதுவாசமதன் | வாளிதீட்டி | பொருமுமான்பாவி | (இ) |
| உன்னைக்கண்டு | உருகிவாடிவாடி | உளங்கலக்குமே | |
| உகந்துயெனைக் | கலந்தணையும். | ஓடிவந்துமே | (இ) |
| காமமீறி | ஜலமோடாடு | கடுக்கமாருமே | |
| காதலாகி | வந்தேனெனைக் | கட்டிச்சேருமே | (இ) |
| அரையின்சேலை | அவிழுதையோஐயோ | அரசனேபாரும் | |
| அனங்கன்செய்யுங் | கோபமிக்க | அன்புடன்வாரும் | (இ) |
| முத்தமிட்டு - விரும்படித்துக்கடித்தமுகத்துடன்சேர்ந்து | | | |
| யோகத்திர | விருவராட | முறையதுபார்த்து | (இ) |

தேவேந்திரன் - வசனம்

அப்பாமந்திரி நமதுசபையில் [illegible] வென்னை ஆடல்பாடல் செய்த ஊர்வசி மனங்களிக்க விலையுயர்ந்த [illegible] மதி கொடுப்பாயப்பா.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுக்கின்றேன் மகாராசனே.

ஊர்வசி - வசனம்

சுவாமி வெகுமதி தொகைபெற்றேன் வாழிவாழி தேவர் கோனேவாழி.

கட்டியக்காரன்-வசனம்

சேனுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்குநாட்டியஞ்செய்ய மேனகைவருகிற சிறங்காண்பீர்கள் கனவான்களே.

மேனகை - இ-ம்-பியாகு - ஏகதாளம்.

| | | |
|---|---|---|
| வாரார்விதோமேனகையும் | வாடிவின்னவர் | |
| கூடிடவும்நெஞ்சமது | வாதங்கியண்ணவர் | (க) |
| கண்டமாந்தர்கருத்தழிந்து | காணவேயவர் | |
| காமாதியெனையங் | காட்டவேதவர் | (உ) |
| மோகமுட்டும்பதனையென | மோடியாகவே | |
| முனிவர்சித்தர்யோகர்மனம் | புழுதுயபோகவே | (ங) |

தேவாசன்சபைநாடி இங்கன்போலவே
பாவையிவளழகால்மனம் பதராச்சாலவே

மேனகை-தரு-இ-ம்-உசேனி-தாளம் - ருபகம்.

பல்லவி

மேனகைவந்தாள்-வெகுவுச்சித-சாமெச்சித-மேனகை

அநுபல்லவி.

வானவர்பணி வஜ்ஜிரபாணி
மகிழிந்திராணி மருவுநல்மணி
வாடும்பசை கூடுமிசை
நாடுமசை பாடும்விசை (மேன)

சரணம்.

முகத்தாமரையை யோட்ட - கண்டவர்
மோகத்தாற்புத்திமய நாட்ட
குசத்தாற்கிரியை வாட்ட - விழிகள்
குண்டுபோற்கெண்டையாய்காட்ட - மிகு
மத்தகரிநடப்பதைப் போல
மட்டில்லாதவிடையாடவே லோல
விதித்தான்முகன்கண்டாலுமேசால
வெட்கித்துத்-துக்கித்து - ஓடவேஜால.

விண்ணி லொளி
மண்ணிற் கிளி
உண்ணிற் றெளி
கண்ணி னெளி

விண்ணவர் பன்னவர் மன்னவர் கின்னரர்
வேட நாட பாட ஆட

மேனகை-வசனம்.

போற்றிபோற்றிதேவேந்திரமகாராஜனேபோற்றி

தேவேந்திரன்-வசனம்

பெண்ணே யாவருமிகழ வொருபதம்பாடி நடிப்பாயடி.



மேனகை - வசனம்.

மகாபாக்கியநு சுவாமி

மேனகைஇ-ம்-பிலஹரி-தாளம்-ருபகம்

பல்லவி

வாரும்வாரும் காலமென்னைச் - சேரு மையல்தீரும் ராஜே

அநுபல்லவி

பாருங்கண்ணாலே பாவிமதனோட
பதைக்குதேயுடல் பதறுதேயோடி. (வாரு)

சரணம்.

நல்லவாசம் வெறுக்குதே - இதோ
கல்லாய்க்கொங்கை பெருக்குதே
அல்லற்செய்வது மாருமோவெந்தனை
வல்லவாவென்றுளம் வாடுதையோவோடி (வாரு)

பனிநீரும்வெப்பம் காட்டுதே - உன்
கனியித்ழ்மேலே நாட்டுதே
வனிதைமேலிந்த வன்மமாகுமோ
இனிச்சகித்திடே னேந்தலேநீயோடி (வாரு)

ரோகமெத்த சொக்குதே - ஐயோ
மோகநீருங் கக்குதே,
ராசனென்றுமே சார்ந்தேனிந்திரா
காந்தொட்டுக்கொங்கை கட்டியணைத்திட (வாரு)

ஜாவளி - இ-ம்-செஞ்சுருட்டி - தாளம்-ஆதி.

கோபிநேனெனைக்கூடுமே-சாமிநான்

தென்றலும்வீசுதே மோகமுங்கூசுதே
மன்றலிதோ பூசுதே மலர்வளி
மன்றலிதோ பூசுதே மயல்மீற
மன்றலிதோ பூசுதே மிகுவேளை. (கோ

உன்சுகந்தேடுதே உளமதுநாடுதே
என்மனமும்வாடுதே மிதோபாரும்

என்மனமும்வாடுதே பாலமன்னைதக்க
என்மனமும்வாடுதே யிதுவேளை (கோ)

துயலிதோசோருதே துடைகளோச்சாருதே
குயிலினமுங்கூறுதே மதனுக்காய்
குயிலினமுங்கூறுதே எனைவருத்த
குயிலினமுங்கூறுதே யிதுவேளை (கோ)

இ-ம்-செஞ்சுருட்டி - அடதாளம்.

அணைவானோதங்கை - அமராராஜன் - அணைவானோ தங்கை.
இணையானவனென்றுமே யேங்கினானின்றுமே
கணையால்நொந்துமெத்தக் களைத்தேனேமங்கை
வரக்கருதானோ தங்கை

நானிங்கே - அவனங்கே - இனியெங்கே (அணை)

அழகுயந்தமுங்கண்டு ஆசைபெருகிக்கொண்டு
பழகியதெண்ணியெண்ணி பதைக்கிறேன்மங்கை
யினிச்சகிக்கிலேன் தங்கை
நானிங்கே - அவனங்கே - இனியெங்கே (அணை)

உபாதிசமாதி ஊட்டுவதெனத்தந்தி
தவிலெனக்கினித் தருதியார்மங்கை
யினித் தாளேனே தங்கை
நானிங்கே - அவனங்கே - இனியெங்கே (அணை)

ஜாவளி - இ-ம்-கமாசு-சின்ன-தாளம்-ஆதி,

மபலிமேல்சொக்கி-மனம் வாடினேனண்டா சாமி
தயவுடன் - ஒருமுத்தந் - தருக தருக வேளை (ம)
சனிவினிஉன்னையே கண்டவர்நெழுந்து
நினைவதுயாரியே நின்றிடவே
தனமதுவிம்முதே தழுவு-தழுவு-முத்தன் (ம)
ஆருடனுனுமே அன்புடன்பேசிஉன்
போதுவருகுது பிசகலவே
திருமேனனுவலே தேவர் - தேவனே-யுத்தன் (ம)
வந்திரானிங்கே வாடியேயிரங்கீ
நெஞ்சிரங்காதது நீஇயதோ
கொஞ்சியேவங்தெனைக் கூடுங்-கூடிடு-முத்தன் (ம)



கட்டியன்-வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்குத் திலோத்தமைவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

திலோத்தமை - கன்னி - இ-ம்-பியால் - ஏகதாளம்

தேவயிந்திரசபைதிலோத் தமையாதுமே
தேடிவாராளுடைய விங்கு தெரியப்போதுமே (௧)
இந்திராணிமுதல்யாரு மிவளைக்கண்டுமே
ஏங்கமனம்வாங்கவெட்க மேங்கிக்கொண்டுமே (௨)
மூவர்முதற்றேவர்களும் மோகங்கொள்ளவே
முகத்தின்காந்திமதியொளியை மொதுங்கத்தள்ளவே (௩)

திலோத்தமை-தரு-இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்

பல்லவி

தேவேந்திரன்சபையைநாடியே - நடனமது
திலோத்தமைவந்தாள் தேடியே

அநுபல்லவி

பாவலர்களும் காவலர்களும்
பட்சமுடனேதி அட்சதைதூவிட
பதிபாய்விண்ணின் மதியாய்த்தேவர்
பார்க்கத்-துயர்தீர்க்க-மனமூர்க்க-வொளிதாக்க-விநோத (தே)

சரணம்

மூன்றாம்பிறைபோலவே நுதலும் - ஆடல்பயிற
மொழிகிளிக்கோவைகனிபோல விதழும்
தெண்டைபோல நீண்டவிழியுங்
கிளிருப்பேடைப் பழிக்குமடையுங்
கிட்டவே - மோகம் - முட்டவே - மையற்
சிந்தித்திட - செஞ்சற்றிட-அஞ்சுற்றிட-வஞ்சுற்றிட (தே)

பொற்கிண்ணம்போலேத்தஸ்தனமும் - இடைநிறுத்து
புதுமையோவெனப்பார்க்கவேமனமும்
அரம்பபல்ல யிடைநிருதுடை
அடிவானுமாம் சனிபோலதாடை
ஆற்றவே - சாபமேற்றவே - யிதோ
அன்புற்றுமே-தென்பற்றுமே-இன்புற்றுமே-மன்பற்றுமே (தே)

சுருட்டிராகப்பதமும்பாடியே - அபிநயத்தாற்
சோரத்தேவர்மனங்கள்வாடியே
மருவுமுல்லை   மாட்டிமல்லிகை
வாசனைமிக   வீசிடவேமேனி
வருந்தியே-மோகமிருந்தியே-இட்ட
வந்திடவும் - தந்திடவும் - மிந்திடவும் - நொந்திடவும் (தே)

திலோர்த்தமை - வசனம்

போற்றி போற்றி தேவர்கோனே போற்றி

தேவேந்திரன் - வசனம்

பெண்ணே திலோத்தமை நல்லபதம் பாடுவாயடி

திலோத்தமை - வசனம்.

மகாபாக்கியந் சுவாமி.

இ-ம்-பிலஹரி - தாளம் - ரூபகம்.

இந்திரனேயுன்னைவிட   வெவர்மேல்மனம்நாடுவேன்
சுந்தராங்காயுன்வடிவாற்   சொக்கினேனுனைக்கூடுவேன் (இ)

பொறுக்கிலேனேபொங்கிக்காமம்   போருதேதாபமீறுதே
தரிக்கிலேனேயோட்டத்திற்   றதியிதுவென் றுடல்சோருதே (இ)

மதியைமாற்று-மதிகமாகின்   மலர்முகத்தைக்கண்டபோதே
சதிகாரனுமாரன்மலர்ச்   சரந்தொடுக்கின்றானேவாதே (இ)

கொங்கைபடுங்கோரம்போக்கக்   கூடியென்னைச்சேராயோ
அங்கமெலாம்வெப்பமாகி   யடியாள்படுந்துயர்தீராயோ (இ)

உன்னைப்பார்த்தகண்கள்வே றொருவனைக்கண்டாற்கூசுதே
என்னைமிரட்டமதனும்பாவி யவுருன்தென்றலிதோவீசுதே (இ)

தேவேந்திரன் - வசனம்

இன்னமொருபதம்பாடுவாய் பெண்ணே

ஜாவளி - இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி

ஆ ஆ அதி அன்பனே-ஆசையானனே

அநுபல்லவி.

சகித்திடேனினிமிக - சரணஞ்செய்கிறேனிதோ



சரணம்

மனதுந்தன்மேலிட்டு   மகிழ்ந்திட்டானே
குனமிலாமற்றவனைக்   கருதேன்கருதேனினி (ஆ)

கொங்கைகள்விம்முதே   கூடிடவாவே
சங்கைதனைநீக்கியே   சாமிசாமிநீயினி (ஆ)

படமிதோதுடிக்குது   பாவைக்கித்தானே
கொடங்கையாலணைத்துமே   கூடுங்கூடுமினி (ஆ)

ஜாவளி - இ-ம்-காப்பி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கூடவும்நானே-கோடியுகாலமே

அநுபல்லவி.

பாடலைப்பாடியும் - பாவியானேனே - உனை (கூட)

சரணம்

காமனுமென்னையே   கணைகளைத்தூவியே
சாமமோராண்டதாய்   சாகுறேனே-உனை (கூட)

கொங்கைசருகுதே   கோரமுமீறுதே
சங்கையாயெந்தனை   சாரவுங்கோனே-உனை (கூட)

தேகமும்வாடுதே   நீருமோடுதே
போகனேயுன்னடி   போற்றினேனே-உனை (கூட)

ஜாவளி-இ-ம்-பியாக்-தாளம்- ரூபகம்.

பல்லவி.

காமியாய்நான்வந்தேனே - காலமேகூடவாவே.

அநுபல்லவி

ஜாமமோரிரவாகுதே (கா)

சரணம்.

வந்துவெகுரோமாச்ச - வாருஞ்சோவே
மையல் - பாருந்திரவே (கு
சுந்தரனேயிதுவேளை - சுகந்தாருமே
அதி - மதந்தீருமே (சு
தேவர்கோனேயிடதுமுலை - தீண்டவாருமே
மதன் - வேண்டப்பாருமே (கு

—————※—————

தேவேந்திரன் - வசனம்.

அப்பாமந்திரி இந்த திலோத்தமைக்கு வேண்டியவெகுமதி கொடு
த்தனுப்புவா யப்பா.

மந்திரி - வசனம்.

அப்படியேகொடுத்தனுப்புகிறேன் மகாராசனே.

திலோத்தமை - வசனம்.

மெத்தசந்தோஷம் வெகுமதிபெற்றேன்வாழி வாழி இந்திரரா
ஜே வாழி.

தேவேந்திரன் - விருத்தம்.

என்னருஞ்சபையுளோரே யின்றுநானியம்பக்கேளீர்
வன்னமாநிலத்திற்சத்யம் வழுவாமனிதியேற்றித்
தின்னமாம்பொருமையோடு திண்மையுந்தீர்த்திகொண்டோ
மன்னவனிருண்டோநீங்கள் மகிழ்வுடனுரைசெய்வீரே.

வசனம்.

சபையோர்களே பூலோகத்தில் சத்தியம்வழுவாமல் பூதயவு ப
சாதாபமடைந்து செங்கோற் செலுத்து மன்னர்களுண்டோ தெரிய
சொல்வீர்கள் கனவான்களே.

நாரதர் - வசனம்.

தேவேந்திர மகாராஜனே நீர்கேட்ட சங்கதி வசிஷ்டரால் தெரி
துகொள்ளக் கூடும் மகாராஜனே.



தேவேந்திரன் - விருத்தம்

ஐயனேவசிஷ்டமூர்த்தியரும்பொருளுணர்ந்தோதா
ஐயனேபுவியிலாளு மரசரின்மெய்மைபூண்டோன்
ஐயனேசத்தியனுரோ வடியனுக்குரியவேண்டி
ஐயனேபணிந்தேனீரு மன்புடனுரைசெய்வீரே.

வசனம்

சுவாமி வசிஷ்டமாமுனியே பூலோகத் தரசர்களிற் சத்தியனும்
மெய்யனுமிருப்பவன் யாரோ தெரியச்சொல்லவேண்டும் முனிநாதா.

வசிஷ்டர் - விருத்தம்

இந்திரனே நீர்வினவு நெறிக்குறியோ னுலகதனி
லியம்பக்கேளும்
அந்தரமாஞ் சொர்க்கமுற்ற திரிசங்கின்ற
யயோத்தி நாடாள்பவனே யன்றிவேறு
சுந்தரனோ நாவறியே பிறிகள் மூன்றாஞ்
சோராமற்சத்தியத்தை யுடையோன்கண்மயர்
மந்திரமாஞ்செழுத்தை மனதிலெண்ணி
மகிழ்வுடனேவாழ்கின்றான் மன்னவனிற்றனே.

வசனம்

கேளுந் தேவேந்திர மகாராஜனே உலகத்தில் நீர்கேட்ட வாறு
போல் நீதிசெலுத்து மயோத்தியை யாளாநின்ற அரிச்சந்திர னெ
ன்றறிவீர் மகாராசனே.

வசிஷ்டர் - விருத்தம்

திங்களைச்சடையில்வைத்த தேவனதடியைப்போற்றி
பங்கமதன் றிக்குமாம் பலப்படையற்றவேண்டிற்
பொங்குமாய்மானிடருக்கே பொருள்கொடுத்துதவிசெய்வோன்
எங்களாண்டவரோகேட்பீர் யெனக்கவன்சீடனுமே.

வசனம்

கேளுமிந்திர தேவனே யாகங்கள் செய்ய நிதிகள் கொடுத்
து தபோதிஷ்டர்களைக் காத்துக்கவனக்கு நல்லசீடன் தெரிவீர் ம
காராஜனே.

தேவேந்திரன் - வசனம்

சுவாமி அரிச்சந்திரனெப்படிக்கொத்தவனு அவனுடைய குணநிசயங்களை விபரமாயினனக் தெரியச்சொல்லும் முனிநாதரே,

வசிஷ்டர் - வசனம்

அப்படியேசொல்லுகிறேன்கேளும் ராஜபூபனே

வசிஷ்டர் - சந்தவிருத்தம்.

பாநாரிசகோதரனும் குருமொழியைக் கடவாத பண்பனுகுந் திராமனைவாக்குள்ளான் பொய்பேசான் நிலைதவறான் திகழ்பெருத்த வரமுடையமனைவியுளான் றனக்குகந்தவமைச்சனையும்வகுத்தோன்கண் டீர்-நார்வாழுமுலகில்வெகு கீர்த்தியுளோன் நற்புதல்வ னடைந்தோன் வேந்தே.

வசனம்.

பரதாரம் விரும்பாதவன் பொய்சொல்லாதவன் பதிவிரதையை மணந்தவன் சற்குணமுடைய மகனைப்பெற்றவன் தனக்குரிமையான மந்திரியையு முடையவனென் றறிவீர் தேவேந்திரனே.

தேவேந்திரன் - வசனம்

சுவாமி வசிஷ்டரே உலகில் மெய்மைபூண்ட ராஜாக்களிருக்கிறார்களென் றறியாமல் வினவினேன் மன்னிப்பீர் முனிநாதரே,

நாரதர் - விருத்தம்

மன்னரேவசிஷ்டர்தானு மறைவதாலவனேசத்தியன்
மன்னரேசபையில்வேறு மறுப்பவர்காணேன்கண்டீர்
மன்னரேவந்தனந்தான் மகிழ்வுடனவருக்கீந்து
மன்னரேவிடைதானேக மகாசபைக்கருள்செய்வீரே

வசனம்.

கேளுந் தேவேந்திர மகாராசனே இந்தசபையோரை நோக்கி நீர் பிரேரேபித்த பிரசனை வசிஷ்டராற் பூர்த்திசெய்யப்பட்ட படியா லவருக்கு யாவரும் வந்தனஞ்செய்து அவரவ ரிருப்பிடம்போக விடைதாரும் மந்திர லோகாதிபரே.



தேவேந்திரன் - வசனம்,

அப்படியே செய்விப்ப தெனக்குச்சரியாய்த் தோற்றுகின்றது நாரதமகாமுனியே சபையோரெல்லாம் வசிஷ்டருக்கு வந்தனந் தாருங்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

வசிஷ்டனும்வாய்க்குவந்த வாறுபோலுளறித்தீர்த்தான்
வசிஷ்டனேசத்தியமுட்டை வாய்த்ததோர்சீடனென்றால்
வசிஷ்டனை விட்டேனாரேன் லோர்சபைதனிலேகீரும்
வசிஷ்டனைவணங்கச்சொன்ன வாறதுதடுப்பீர்வேந்தே

வசனம்

கேளுந் தேவேந்திர மகாராசனே வசிஷ்டனே சத்தியமுட்டை அவனுடைய சீடனோ யவனைவிடப் பெரியமுட்டை, அப்படிக்கிருக்கயவனுளறியதைக் கேட்டு மகாசபையிலுள்ளோரை வந்தனஞ்செய்யச் சொல்வது தகாதகாரியம் வேந்தே.

நாரதர் - விருத்தம்.

கௌசிகமுனிநீசொன்ன காரியமொப்பப்போகா
தவசினிலுயர்ந்தோன்வாக்கு தாழ்வுண்டோவுனக்குப்பேச
அவசியக்காரணங்க ளாகப்படியாகிலிங்கே
நவசிகாமணிமுன்பாக நயம்பெறநவிலுவாயே.

வசனம்

விஸ்வாமித்திர முனியே வசிஷ்டர்வாக்கு பிசகாது உனக்கே தாகிலுங் காரணமிருந்தால் வெளியிடுவாய் விஷியே.

விஸ்வாமித்திரர் - வசனம்.

அப்படியே வெளியிடுகிறேன் பாரும் நாரதரே

விஸ்வாமித்திரர் - வசனம்

ஓய் வசிஷ்ட மாமுனியே நீர்சொன்ன குணங்களாந்த அரிச்சந்திரனிடமிருப்பது பொய்தானுமுனியே.

வசிஷ்டர் - வசனம்.

நான்சொன்ன குணங்களைவிட மின்னமதிக முண்டென் றறிவீர் விஸ்வாமித்திர முனியே.

விஸ்வாமித்திரன்-சந்த விருத்தம்.

வெங்கையிலாக்காட்டிப்பரி வேந்தனை நுங்கதையுன்னால்
விளங்கக்கண்டேன்
சாங்கமிலாதருளில்லான் மாபாவிபொய்வாயன்
சருவமேது
பாங்கியமைப்பிடித்திழுப்போன் சத்தியமிலானெக்கியமா
பறைக்கக்கொல்வோன்
சங்கைபோரியோத்தியனை மேலோனென்றியதைமதிக்கப்
போபோதாளியப்புவாயே.

வசனம்.

ஆ ஆ ஆ வெகுநேர்த்தி புலியில்லாதகாட்டில் நரியே துரையெனு
ங்கதைபோலாச்சுது அந்தவரிச்சந்திரனை மகாபொய்யன் அசத்யன் அன்
னியமாதரை பலவந்தமாய்ப் புணர்வோன் இரப்பவர்க்கு பேராலோபி கொடு
மன்சோபி கிர்மூடன் தேவதாபக்தி யில்லாதவன் அப்படிப்பட்ட வீண
னை யிந்தசபையில் மேலேனென்று யிதையார்தான் மெச்சுவார்
போதும் போதும் வசிஷ்டமாமுனியே.

வசிஷ்டர்-சந்தவிருத்தம்.

நீதிநெறியுள்ளோனையிச்சபையில் நீதானும்
வினைவஞ்சாமல்
ஓதினுய்பொய்யனென்றுஞ் ஜாரனென்றும்
லோபியென்று மொழிக்கவிட்டே
வேதனையாங்தோஷம்வருந்தெய்வஞ்சிறும்
விண்ணுமண்ணுமுன்றனையேவிருப்பாதையோ
சாதனைகள்பேசாதேபாவருசேருஞ்
சாற்றுவேனவன்மெய்யன் சரிதான்பாரே.

வசனம்.

கேளும் கவுசிகமுனியே அரிச்சந்திரனை பொய்யன் லோபி ஜார
னென்று பலவாய்சழுந்தா யிதுதெய்வத்திற் கேற்காது பாவஞ் சம்பவிக்
குமவனே சத்தியனென்று மெப்புவாய் ரிஷியே.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

மெய்யனைப்பொய்யனென்றால் மிருத்திவதாருமன்றி
பொய்யனைச்சொல்வதாலே பொருந்துமோவெனக்குத்தோஷம்



கையகத்துளிலேசீதான் வருத்தனைகொடியன்கண்டாய்
வையமேவசிஷ்டாயிந்தப் பதிவிட்டுயேகுவாயே

வசனம்

நீய் வசிஷ்டமாமுனியே மெய்யனைப் பொய்யனென்றும்பழி பொ
ய்யனைச்சொல்வதால் குற்றமில்லை அந்த அரிச்சந்திரனை மகாகொடிய
னவனை நீ புகழ்ந்தாலிந்த சபையைவிட்டுவெளிப்போவாய் ரிஷியே.

வசிஷ்டர் - விருத்தம்

அலைகடல்பொங்கினாலு மவனியுமதிர்ந்திட்டாலும்
நிலைதப்பிரவியுந்திங்கள் நீள்திசைமாறிட்டாலும்
கலைமான்றுபொய்த்திட்டாலும் சயிலமாண்வருந்தினாலும்
புவியிலாவரிச்சந்திரன்றான் பொய்சொலாப்புநிதன்காணே.

வசனம்

கேளாய் கவுசிகமுனியே வேதம்பொய்த்தாலுஞ் சூரிய சந்திராதி
கைக்கிரகங்கள் சுதிதப்பினாலு மீசனொருவேளை விருதுபினாலுமென் சீஷ
னாகிய அரிச்சந்திரன் பொய் சொல்லானென் றறிவாய்ரிஷியே.

விஸ்வாமித்திரன்-கண்ணி-இ-ம்-போசனம்-தாளம்-சாப்பு.

பொய்சொல்லானென்றுமே - செய்வச்சபையில்வந்து
புகழ்ந்தாயைப்பேசுகள் பேசுறாய் - மெத்த
யிகழானவிச்சுகள் வீசுறாய் - உன்றன்
புத்தியுமவனுடை - சத்தியதருமமும்
போதும்போதுமிருவேன் வசிஷ்டா

வசிஷ்டர்-கண்ணி-இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

சத்தியதருமமே - தன்னையுமறியாமல்
சாதனைப்பொய்யனென் - பேசுறாய் - சபை
காதகனைப்போலே - வீசுறாய் - இந்த
சாருமண்ணிலின்திர - கேனொருவனையுஞ்
சாற்றப்போகாதுநீ கௌசிகா

விஸ்வாமித்திரன்-

அறியாமற்சொல்வேனோ - யன்பில்லாதவனென்
றகமதிலுணராமற்கொள்ளுறாய் - வேறு
ஜகமதிலிலையென்று துள்ளுறாய் - அட
ஆ ஆ ஆ அச்சாய - மவனுக்குநிலையேது
அறியோனுநலமேது வசிஷ்டா

வஷிஷ்டர்

அறமில்லானென்றுமே – மறைபச்சுதுவாது
மனமில்லாப்பொய்கற்றாய் முனியே – அவன்
உளந்தெரியாமலே தனியே – ஆ ஆ
ஆட்டாதேயுன்றனைக் – காட்டாதேமொடிக
மனைப்போனீ ஆகாய் கௌசிகா

விஸ்வாமித்திரன்.

காட்டாதேநீயென்றாய் – காட்டில்வாழ்மிருகத்தை
கருதிக்கொலைபுரியும் நேமி – சத்திய
சுருதியுணராத காமி – அவனை
கம்பிரனென்றுமே – வம்பிங்குரைக்கிறாய்
கட்டுவுன்மூட்டையை வஷிஷ்டா

வஷிஷ்டர்

வம்போவவனுட்டில் – வாழுங்குடிகளெல்லாம்
வண்ணமுளசத்திய வான்கள் – தாம
எண்ணரியபுத்தி மான்கள் – மன்னன்
வாய்பிசகாதவன் – நீயதையுணர்ந்துமே
வணக்கமாயொடுங்கிப்போ கௌசிகா.

விஸ்வாமித்திரன்.

ஒங்கசொன்னாய் நீதி – யுடன்புன்கோபிமெய்யை
யுணராதவெகுதுஷ்டப் பாவியை – பலர்
வணங்கப்பேசுங்கெட்ட நாவியை – ஒகோ
ஓதிடயிங்குமே – கோதிலாதவனென்று
உன்குருசொன்னதோ வஷிஷ்டா

வஷிஷ்டர்

குருமொழியென்றாயுன் – அரசுமைந்தர்களீதி
கோலமென்றலல்லோ போச்சு – இப்போ
ஜாலங்கற்றாயிது எச்சு – அடா
கோவிக்காமன்னனைப் – பாவியென்றாயுன்றன்
கொள்கையுந்தெரிந்திட்டேன் கௌசிகா



விஸ்வாமித்திரன்.

தெரிந்திட்டேன்நீதேவ – தாசிமைந்தனென்றக்
தேடிச்செம்பாரியைப் புணர்ந்தாய் – மனம்
வாடியின்றுமிதைப் புணர்ந்தாய் – அடா
தேசமிகழவுன்றன் – பாசமக்களோநீறாய்
நீயந்தவனுனல்லவோவஷிட்டா

வஷிட்டர்.

தானுய்ச்சிவம்மின்ற – ன் தானமழிந்திடக்
தகைமையுனக்குண்டோ நாயே – தேவர்
நகைக்கின்றார்மூடின்ன் வாயே – அவன்
தன்மையையுணராமல் – புன்மையாயுளறாதே
தாழ்ந்துன்பொங்கபோங் கௌசிகா.

விஸ்வாமித்திரன்.

போமென்றுரைத்திட்ட – தாமதமபோக்காத
பொய்யனேயுன்வாயை மூடடா – நீ
உய்யுமிடமெல்லாங் காட்டா – அவனை
பொய்பேசச்செய்குவான் – வையகமிசழ்ந்திடப்
புரிகுவேனுன்னையேவஷிட்டா.

வஷிட்டர்

புரிகுவேனென்றென்றான் – சரியாகுமின்றுமே
பூச்சிகாட்டாதேடா நீயே – அடா
ஏச்சியேயடிப்போடா பேயே – அஷ்டா
போக்குநீக்கயாத – காக்கைப்பிறவியுற்ற
புத்தியினறுன கௌசிகா.

வஷிட்டர் – கனம்

வார்த்தைக் கெதிர்வார்த்தைகள் பேசமுனியே இச்சபையை விட்டப்புறம் போவதிறுனக்கு மெத்தநலமென் றுரைப்ப விஸ்வாமித்திர முனியே.

விஸ்வாமித்திரன் – விருத்தம்.

போமெனச்சொன்னாய்மல புத்தியில்லாதபேயா
தாவிநனவன்பாற்சென்று தமுகிபோமேன்கப்பொய்வைபக்

சீர

கூடவேசெய்வேன்மெத்த சொலேகளுட்புரியச்செய்வேன்
பாவனையுனக்கேவெட்கம் பலிக்கவுஞ்செய்வேன்காண்பாய்.

வசனம்.

ஓமுனியே நான்போயந்த வரிச்சந்திரன்வாயி லனேகம்பொய்களை வரச் செய்வதுடன்கூட யனேகதுட்ட கிருத்யங்களுஞ் செய்வித்துதேவர்முன்னிலையிலுன் மானங்கெடுப்பேன் தெரிகுவாய் வசிட்டா.

பொது விருத்தம்.

வசிட்டனும்விஸ்வாமித்திரன் வழக்கிட்டுசினமேற்கொண்டு
அதட்டியேபேசியேசி யறைவதைக்கண்டேயிந்திரன்
பதட்டமாய்நடுங்கியோடி பண்புடனிருவர்தம்மை
உதட்டையுமூடியமர்த்தியே வோதுவான்நீதிதானே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே வசிட்டனும் விஸ்வாமித்திரனும்வழக்காடக்கண்ட தேவேந்திர னோடிப்போய் சமாதானஞ்செய்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன்-தரு-இ-ம்-அடாணா- தாளம்-ஆதி.

பல்லவி

போதும்போதும் பொறுங்கள் - முனிவர்களே
போர்புரியாதிருங்கள்

அநுபல்லவி.

வாதுபுரிவதுங்கள் வண்மைக்கடுக்குமோதான்
ஏதுயித்தனைகோப மிருவருங்கொண்டீர்கள் (போ)

சரணம்.

பஞ்சேந்திரியங்கடனைப் பழுதாகவேயொடுக்கிப்
பாரமதங்களெல்லாம் பரந்தோடவேமுடிக்கி
நெஞ்சிற்சிவனடியை நிறுத்தித்தவம்புரிவோர்
நீசத்தொழிலினர்போல் நிலைநெறிதிரிடப்போமோ (போ)

மூவாசையெனும்மரம் முளைக்காமலடிகிள்ளி
மோடிவீம்புவம்பும் முதலுருமலேதள்ளி
ஆவாகனமாக யனுதினம்பிரமத்தை
அடுத்துப்பணிந்திட்ட யருமையுமிதுதானோ (போ)



ஒருவர்க்கொருவர்மேலா யுணர்ந்தவர்மூலத்தை
ஓகோவிவரீதங்க ளுதறுவீர்கோலத்தை
தருமதேவதைகூட தழைப்பதுமுங்களாலே
தாபந்தவிர்த்துசுபம் தாவுவீர்வாக்காலே (போ)

அண்டமெலாம்நடுங்க பதிர்ச்சியாய்பேசுகீர்
ஆ ஆ ஆ கோபத்தா லாக்ரோஷம்வீசுகீர்
தெண்டம்புரிவேனிங்கள் நீர்த்திடுவீர்வாதை
தேவர்கள்மதியாமே திகழடிக்கேபணிந்தேன் (போ)

தேவேந்திரன் - வசனம்,

கேளுங்கள் முனிவர்களே உங்கள்கோபத்தைத் தணித் திந்த ஆசனங்களிலிருப்பீர்கள் ரிஷிகளே.

வசிட்டர் - வசனம்

அப்படியே யிருக்கின்றேன் தேவேந்திர மகாராஜனே.

நாரதர்-விருத்தம்.

தத்துவத்தின் துற்குணத்தை நீக்கியேமெய்ஞ்ஞானந்
தன்னைச்சேருஞ்
சித்தருக்குள்சிறந்தவரோ யிவ்விதமாய்ச்சினங்கொண்டு
சீறலாமோ
உத்தமனேனரிச்சந்திரன் மத்தியனேனிங்குள்ள
வும்பர்கேட்க
இத்தலத்திலிருந்தபடி யோர்நிலைமைகுறிப்பாக
யியம்புவீரோ.

வசனம்

கேளாய் வசிட்டரோ விஸ்வாமித்திரரோ அந்தவரிச்சந்திரன் பொய்யனா அல்லது மெய்யனா யாதொதைத் நிர்மானிக்கிறீரோ யதற்காக ஓர் நிலையானவாக்கு சொல்வீர்கள் முனிவர்களே.

தேவேந்திரன் - வசனம்

கேட்டீர்களா சபையோர்களே நாரதர்சொன்னதே சரியானதாகத் தோற்றுகின்றது உங்களுக்கு தோன்றுங்கருத்தை வெளியிடுவீர்களா கனவான்களே.

சபையோர் - வசனம்.

தேவேந்திரமகாராஜனே நாரதர்சொன்னதே யெங்களுக்கும்யுக்தமாகத் தெரிகின்றது ராஜனே.

தேவேந்திரன்-விருத்தம்

ஐயரோவதிட்டமூர்த்தி யரிச்சந்திரன்மெய்யனென்றே
ஐயரேயுரைத்தீர்பொய்யென் றறைந்தனர்விஸ்வாமித்திரர்
ஐயரேயுமதுசிட னருமையாம்பொய்யுரைக்கில்
ஐயரேசொன்னவாக்கு மழியுமோவில்லையோசொல்வீர்.

வசனம்

சுவாமி வசிட்டரே உமதுசிடனாகிய வரிச்சந்திர னொருவன் தான் பூலோகத்தில் மெய்யனென்றிந்த தேவசபையின்முன் சொன்னீரவனைப் பொய்யனென்று விஸ்வாமித்திர ரிஷிவெளி யிட்டார் அப்படிக்கவன் பொய்சொல்வானாகில் உமதுவாக்கு பிசகோ யலவோ சொல்வீர் சுவாமி.

வசிட்டர் - சந்தவிருத்தம்

தண்ணொளிகொள்ளரிச்சந்திர மகராஜன் றன்குணத்தை
தடைகளின்றிக்
கண்ணொளியாயிரமுங்கொண்டோய்கவுசிகனுஞ்சோதிக்கக்
கனிவுகூர்வாய்
திண்ணொளியேபொய்யுரைக்கிற்றலங்குலைந்துமுடிகளைந்தென்
சிரசின்மீதில்
எண்ணொணுமதுக்குடத்தையேந்திபலர்நகைக்கத்தெற்
கேகுவேனே.

வசனம்.

கேளுந் தேவேந்திர மகாராசனே அந்தவரிச்சந்திரன் வாயால்விஸ்வாமித்திரனொரு பொய்வாச் செய்வானாகில் நானென் தவமேடத்தைவிட்டு முடியைச் சிரைத்தெறிந்து கள்நிரப்பியபாண்டத்தைத் தாங்கி பலருநகைக்கத் தென்றிசைநோக்கிச் செல்லுவேனறிவீரது சத்தியமகாராஜனே.

சபையோர் - வசனம்.

கேளுந்தேவர்கோனே வசிட்டர் பெருத்த சத்தியஞ் சொன்னார் கேட்டோங்கள் மனமெல்லாம் நிலைகுலைந்தது இனி விஸ்வாமித்திருடைய கருத்தைவெளியிடச் செய்வீர்மகாராஜனே.



தேவேந்திரன் - வசனம்

அப்படியேவெளியிடச் செய்கின்றேன் சபையோர்களே.

தேவேந்திரன்-விருத்தம்.

அண்ணலேவிஸ்வாமித்திர அன்பரோவசிட்டர்தானுஞ்
சொன்னதைக்கேட்டீர்யாருஞ் சொல்லொணாச்சத்தியங்கொண்டார்
விண்ணருந்திசைத்தாரந்த வேந்தனும்வாயாற்பொய்யை
பன்னவேதவர்வாருகிற் பவருவதெதுவோகாணேன்.

வசனம்

கேளும் விஸ்வாமித்திரரே தேவசபை நடுங்கிட வசிட்டர் சொன்னசபதங்கேட்டிரா நீர் தவறிப்போகாமல் அரிச்சந்திரனைப் பொய் பேசச்செய்வீரோ சொல்லுவீர் முனியே.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

மன்னனரிச்சந்திரனை யடக்கிவெகுபொய்யுரைக்கமகிபாசெய்வேன்
மன்னவனுமெனைக்கெலித்தானுனிந்நாட் புரிந்தகொருமகாதவத்தில்
மன்னவனுக்கதிற்பாதிதானைசெய்வேன்வசிட்டனுக்குமடங்கிநிற்பேன்
மன்னவனையிச்சேதிநரபதிக்கேயிட்டாத மார்க்கஞ்செய்வீர்.

வசனம்

கேளுந்தேவர்கோனே அரிச்சந்திரனை அனேகம் பொய்பேசச்செய்வேன் தவறுவேனாகில் வென்றபோபலத்தில் பேர்பாதி யவனுக்குத்தானைவார்த்து வசிட்டனுக்குப் போற்றிசெய்வேன் ஆதலிந்த நடக்குஞ்சங்கதி யவனுக்கெட்டாதவாறுசெய்யக் கோருகின்றேன் மகாராஜனே.

தேவேந்திரன் - வசனம்

அப்படியே கிட்டாதபடிக்கு வேண்டிய முயற்சி செய்கின்றோம் விஸ்வாமித்திர முனியே.

தேவேந்திரன்-விருத்தம்.

தேவரேசெளிர்சித்தில்தெளிவுளமுனிவரோநீர்
ஏவுமோர்விடமிச்சேதி யியம்பிடிற்றெருதுஞ்சூற்றும்
பேவியேசேத்துரோகமிழைத்தவன்புகுமதெதிக்கே
தாவியேவாழ்விசேர்ந்தன் தன்மியரோத்தியந்தானே.

வசனம்

கேளுங்கள் சபையிலுள்ளோரே இந்ததேவ ரகசியத்தை வெளியிட்டவர்களுக்குத் தோஷஞ்சம்பவிக்கும் தவிர சினேகத்துரோகஞ்செய்தபாதகன் போகும்படியான கதியடைவார் கனவான்களே.

சபையோர் - வசனம்

தேவராஜனே சிவ சிவா நாங்களுமது ஆக்கினைக்கும் சத்தியத்திற்குமுள்ளானோம்வெளியிட கவனிக்கோம் வேந்தனே.

வசிட்டர் - விருத்தம்

வல்லபமுபார்த்தவிண்ணோர்வாழியேயுரைக்கக்கேளீர்
புல்லறிவுளோனிவன்றான் பொருந்திநான்வெளியேசென்றால்
சொல்லருஞ்சேதிதன்னைச் சொன்னதாய்ப்பழியுரைப்பான்
கல்லதைக்கொய்தோய்தேவர் காவலிலென்னைவைப்பாயே.

வசனம்

கேளுந் தேவர்கோனே நான்வெளிசென்றால் நானேசொன்னதாகப்பழிபேசுவான் விஸ்வாமித்திரனாதலால் என்னை தேவர்கள்காவலில்வைத்திடுவீர் வேந்தனே.

சபையோர் - வசனம்.

தேவேந்திர மகாராசனே அந்தப்படிசெய்வது மிக நலமாய்த் தெரிகின்றது அதின்பேரிற் றங்கள்சித்தம் மகாராஜனே.

தேவேந்திரன் - வசனம்.

சபையோர்களே நானப்படிசெய்விக்கின்றேன் கனவான்களே.

தேவேந்திரன் - விருத்தம்

ஆடாகட்டியக்காரா அன்றவந்தனிலுயர்ந்த
நீராம்வசிட்டர்தம்மை தெரிவாயென்விடையிலாமல்
வேறொருவிடத்திற்கேகி யிங்குற்றமொழிபேசாமல்
வீரமாய்க்காவற்காக்க விதித்தனுக்கினைகாண்பாயே.

வசனம்

அடாகட்டியனே யிந்தவசிட்ட மகாமுனிவரை யென்னுடைய வுத்திரவன்றி யொருவருடன்பேசாமலும் வெளியேபுறப்படாமலுஞ் சிறையில்வைத்துக் கடின மானக்காவல் புரிவாயடா வீரனே.



கட்டியன்-வசனம்

அப்படியே அதிஞாக்கிரதையாய்க் காக்கின்றேன் தேவேந்திர மகாராஜனே.

கட்டியன் - வசனம்.

சுவாமி வாரும் வசிட்டமூர்த்தியே.

வசிட்டர்-வசனம்.

அப்படியேவருகின்றேனப்பா கட்டியனே

கட்டியன் - வசனம்.

கேளுஞ் சுவாமி யிந்தஅறையி லிருக்கவேண்டும யாருடனும்பேசப்போகாது தேவர்கோனுக்கினைப்படி நானுங் காவல் காக்கின்றேன் போற்றி போற்றி முனிநாதா

வசிட்டர்-வசனம்.

அப்படியே யிருக்கின்றேனப்பா கட்டியனே.

விஸ்வாமித்திரர் - விருத்தம்.

சேனாதிபதியேபோற்றி செங்கண்மால்வருணாபோற்றி
வானதிரவக்யாகத்துள் வலுமைசுக்கிரனேபோற்றி
தானகநீதிகண்ட தருமனேதெய்வேபோற்றி
நானுமிங்காலம்வந்தா நலந்தரவாமீவிரோ.

வசனம்.

சுவாமி சுப்பிரமணியரோ திருமாலே வருணரோ சுக்கிரரோ அக்கினிதேவரோ எமதர்மரோ நானொருவேளை தங்களைக்கவனித்தாலடியேன் முன்தோன்றி யென்கோரிக்கை யீடேற்றுகிறதாக அபய அஸ்தங்கொடுக்கவேண்டுந் தேவர்களே.

தேவர்கள் - விருத்தம்

மிக்கநற்றவங்கள்செய்யு மித்திரமுனியேவாழி
எக்கணந்தனிலேநீதா னெங்களைநினைப்பிராகில்
முக்யமாய்வருவோம்நீரு முறைத்திடுங்காரியத்தின்
பக்குவமறிந்தேசெய்வோம் பணித்தசொற்பாதுகாப்பீர்

வசனம்.

கேளும் விஸ்வாமித்திரரே யெங்களில்நீர் யாரைக் கோபித்த நடையின் றிவர் துமது மனக்கோரிக்கையை யீடேற்றுவோ மிதை யவிர் முனியே.

விஸ்வாமித்திரன் - வசனம்.

சுவாமிகளே மெத்தசந்தோஷமினி வதிட்டனை வெகுநிவாதி லவமானப் படுத்திவிடுகிறே னீங்களே பார்க்கப் போகுறீர்கள் தேவ கனே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்

மங்கையிந்திராணிபாகா மன்னவன்வாயினாலே
சங்கையில்லாமற்பொய்யைச் சாற்றிடச்செய்வேனின்னம்
இங்கிதக்கொலைசெய்விப்பே னியம்பியபந்தயத்தை
பொங்கமாய்க்கெலிப்பென்போகப் புனிதனேவிடையீவாயே.

வசனம்.

கேளுந் தேவேந்திர மகாராஜனே நான் அரிச்சந்திரனை படாதபா டுபடுத்தி பொய்யுடன் கொலை ஜாரத்வமும் புரியச்செய்து வதிட்டனை யவமானப்படுத்துகின்றே னெனக்குப்போக விடைதாரும் ராஜனே.

தேவேந்திரன் - வசனம்.

அப்படியே போய்வாரும் முனிநாதரே

விஸ்வாமித்திரன் - வசனம்

போய்வருகிறேன் வாழிவாழி

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரன் தேவேந்திரனிடம் விடைபெற்று வருகிறவழியில் சனிபகவானைக்கண்டு சகலமுந் தெரியச் சொல்லி தனக்குத் துணையாக விருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறதி தங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன் - வசனம்.

போற்றி போற்றி சனிபகவானே போற்றி.



சனிபகவான் - விருத்தம்.

தேகத்தைநிலைநிறுத்த திவ்வியரூபன்மங்கை
பாகத்தோனடியைநாளும் பணிந்திடுமுனியேயேது
ஏகனுச்செல்லலானீ ரினிமுகங்கருகலேனோ
யோகனேயெனக்குத்தோன்ற வொளியாமலுரைசெய்வீரே.

வசனம்

கேளும் விஸ்வாமித்திர முனியே நீர்தனிவழியாய் முகம்வாடி யே தோ யோசனையாய் நடப்பதைப்போல் காணுகின்றது ஒளியாமலெனக் குச் சொல்லும் ரிஷியே.

விஸ்வாமித்திரர் - அகவல்.

சொல்லெனக்கேட்ட சூரியன்புதல்வா
வள்ளலாமிந்திரன் வளர்சபைசென்றேன்
தேவருமுனிவர்கள் திரளுடன்வதிட்டன்
பாவலர்யாவரும் பண்புடன்வந்தனர்
நாட்டியமாதரும் நலமுடன்நடித்தபின்
பேட்டியுமுலகினில் மெய்யனுண்டோவென
வதிட்டனுமயோத்தி வளர்பதியென்று
பதட்டமாயுரைக்கப் பார்த்திபன்மகிழ்ந்தே
சபையிலுள்ளோரை சற்குணமுனிக்கே
யிபம்பெறவைத்தனம் கிழித்திடவைந்தான்
நானதுபொறுமல் நாயகாவயோத்திமன்
முன்பொய்யனென்றேன் றவதிட்டனுமே
அரிச்சந்திரனைப்பொய் மறைந்திடச்செய்தாற்
றரித்துவிவ்வேடந் தன்னிலைநோக்குவேன்
என்றனனென்னை யேயிடமிந்திரன்
நன்றதுபொய்சொல நான்செய்குவனைஇற்

றவருவேனுகிலென் றவத்தினிற்பாதி
நவகுறைதிரிசங்கு நற்புதல்வனுக்கே
தருகுவேனென்றே தயவனுஞ்சாற்றியே
வரும்வழிதனிலுன் வளரடிகண்டேன்
எப்படியாமோ வேந்தலோசதயன்
அப்பனேயெனக்குமுன் னருளதையளிப்பீர்
அல்லலையறுப்பீ ரடியனைக்காப்பீர்
வள்ளலேயுன்றன் வாக்கருள்போற்றி

சனிபகவான் - விருத்தம்.

முனியேநீவருந்திடாதேமுன் ேனுக்கிபவன்பாற்செல்வாய்
முனியேயுன் றுணையாகிற்பேன் மூர்க்கனைவாட்டிவாயால்
முனியேபொய்சொல்லச்செய்வாய் முனையுமுன்காரியத்தில்
முனியேநீவிழைசகாய முகந்துநான்செய்வேன்வாழி.

வசனம்.

கேளும்விஸ்வாமித்திரமுனியே அரிச்சந்திரன் நம்முடையகைக்கு ளானவன்றான் அவன்வாயிலொருபொய் வரவிப்பதொருபெரிதா ? செய்யும்படியான பிரயத்தினத்திற்கெல்லாம்நானுஞ்சகாயமாயிருக் துனது மனம் மகிழச்செய்கின்றே னஞ்சாதேயும் வாழி வாழி முனியேவாழி.

விஸ்வாமித்திரர் - வசனம்

மகாசந்தோஷம் போய்வருகின்றேன் சனிபகவானே.

இந்திரகாண்டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன் துணை.

# அயோத்தியாகாண்டம்.

பொது-விருத்தம்.

சபாபதியின்சபைவிடுத்துக் காரியோடு
சொல்லிமுறைகவுசிகனுமகிழ்ச்சிகொண்டே
நரபதியாமரிச்சந்திரன் றன்னைவாட்டி
நாவில்வெகுபொய்விளைக்கக் கருதியங்கே
விரவுடனேயயோத்திதனையடையவேண்டி
விம்புற்றுத்தானடந்தே யிமயமென்னும்
பருவதத்தின்சாரனுற்றா னயோத்தியாளும்
பரிதிமன்னன்கொலுச்சீர்மை பகருவேனே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே யிவ்வாறு விஸ்வாமித்திரன் சனிபகவானிடம் விடைபெற்று அரிச்சந்திரன்வாயால் பொய் வரவழைக்க வெண்ணங் கொண்டவனு யிமயமலைச்சாரல் சேர்ந்தானினி யரிச்சந்திரன் கொலுச்சீர்மை பகருகின்றேன் கனவான்களே,

---

கட்டியன்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டியக்காரன்வந்தான் - வெகுவுன்னத
அதிகன்னதமாகவே - கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி

எட்டுத்திசைகளெல்லா மேகக்குடைக்குளாக்கும்
இறைவனரிச்சந்திர னெறிக்கொலுவாயற்காக்கும் (கட்)

சரணம்

நீறுநுதலணிந்து நெடியவெங்கியுந்தொட்டு
நிகரில்லாமதிப்புள்ள நேரபாணமிட்டு
கூறும்பனைனுமொல்லாங் கொள்ளப்பயத்தையிட்டு
கொடியவாயுதமீட்டி கூர்வாளுடனேயெட்டு

கோணம்நடுங்க – அறிவிலா – வீணரொடுங்க

குதித்து அற்பனை
பிடித்து புராணியைச்
சதித்து துரும்பதாய்
மதித்து களிப்புடன்

கொக்கரித்தேஅரசன் மிக்கபுகழைப்பாடி
தக்கவிநோதசபை எக்காலம்வாழநாடி (கட்)

கட்டியன்-விருத்தம்

திரிபுரத்தைஎரித்தவனுய்திகழ்சடையிற்கங்கைமதி
முடியணிந்த
அரியயனுங்காணுத பெரும்பொருளாஞ்சிவமதனை
யகத்திற்கொண்டோன்
கரிமுகிலோனிடபாகம்வாழ் தேவிமனங்களித்தே
கருதியாட
பரிதிகுலதிலகனெனுஞ்சத்தியபாஷ வரிச்சந்திரன்
பாரீர்வாரார்.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே நீதிநெறிபிசகாமல் சதாகாலமும் காணுதற்கரிதாகிய பரமசிவத்தை மனதினிடத் துதித்து செங்கோல்செலுத்தாநின்ற வயோத்தியாபுரி ஏக சக்ரேஸ்வரனுகிய சத்தியபாஷ அரிச்சந்திர மகாராசன் சபைக்கு வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.



அரிச்சந்திரன் – தரு-இ-ம்-கல்யாணி-தாளம் – ஆதி

பல்லவி

இராஜராஜனுனராஜனயோத்தியாளும்
ராஜாதிராஜன்வந்தான் – கொலுவிருக்க
ராஜாதிராஜன்வந்தான்.

அநுபல்லவி.

தேசதேசாதிமன்னர் திருவடிபோற்றிசெய்ய
ஜெயஜெயவென்றுவீரர் செப்பமலர்கள்பெய்ய
வாசவராமர்கள் வாழ்த்தியாசிகள்கூற
மந்திரிபிரதானிகள் மகிழ்ந்திருபுறஞ்சார

வஞ்சிய ராட தேவி
கொஞ்சியேசாட பசைனுர்
அஞ்சியே ஓட வேத
மிஞ்சியே பாட திவ்ய

வாகுவலயமுடன் பாருபுஜகிருத
ஆகுமனைத்தையுந்தாங்கி வாருமன்னர்கைகொடுக்க (இராஜ)

சரணம்.

சத்தியமாதுதனை சாரக்கைகொண்டருான்
சார்வதா அனடி சரணம்பணியுத்தாரான்
நித்தியகருமத்தில் நிலைபிசகாதகடான்
நேமநிஷ்டைபுரிய நிதியளித்திடுந்தான்

நீதியறிந்தமாரன் வேத
யோதித்தெரிந்தவீரன் லோக
ஆதியுணர்ந்தசீரன் ஜீவ
ஜாதிமகிழ்ந்தருான் எங்கும்

திலக்க அமாரும்
மிலக்க அறமெய்கும்
உலக்க பலத்தொழில்
நிலக்க சதுர்மறை

பத்தினிசந்திரமதி பாகம்வாழுமொய்யாரன்
பாரில்தனக்குநிகர் பகரக்கிட்டாதமாரன்

சிவ

பாதங்கண்டநீதன்-சகல - நீதங்கொண்டசாதன்

வெகு.

நாதமுண்டபோதன்-கீர்த்தி-காதமின்றமேதன்
பண்ணவர் - மண்ணவர் - பன்னவர்-மன்னவர்

பணியப்புகழ் விடித்து
தணியமன முடித்து
இனியவிசை படித்து
தொனியதுவாய்நடித்து

பத்திபுனைந்தகீர்த்தி பணிகுடைபிடிவீரன்
பலபலவெகுமதி பாவலர்க்களிக்குந்தீரன்

பாட திசைகளெங்கும்
ஆட தருமமாது
நாட முனிவர்வந்து
கூட பாக்கொணுத

பகுபகுவிடங்களில் பகுதிகளிலங்கிட
பரிதிவொளிபோல்ரத்ன பணிமுடிதுலங்கிட

பண்டு குடிகடனைக்
கண்டு சிவனருளைக்
கொண்டு சரிவருஷம்
விண்டு பொழியச்செயும் (இராஜ)

அரிச்சந்திரன் போற்றிவிருத்தம்

புவியெலாம்புகழ்ந்துவாழ்க பூச்சக்ரக்குடையும்வாழ்க
கவியுணாவாணர்வாழ்க கனிந்தமென்குடிகள்வாழ்க
தவிழின்றிமுனிவர்வாழ்க தருமறைவேதம்வாழ்க
இரவிகுலமோங்கிவாழ்க ரட்சித்தேயாள்வாய்போற்றி.



சத்தியகீர்த்தி - போற்றிவிருத்தம்.

அந்தரசுவர்க்கமுற்ற வண்ணலாந்திரிசங்கின்ற
எந்தனுண்டவனேபோற்றியினியுடனயோத்தியாளுஞ்
சுந்தரகுணனேபோற்றி சொல்லொணுமெய்மைபூண்ட
சுந்தனன்மலனைப்போன்ற கழலடிக்கடியேன்போற்றி

சற்குணமந்திரி - போற்றி விருத்தம்.

ஆதியைமனதினுட்டி அறமதுவிளங்கவெங்கும்
நீதியைநிலைநிறுத்தி நிலமதில்மாரிகாலம்
பேதியாப்படிதான்பெய்ய பிரியமாய்க்குடிகள்வேத
மோதியேவாழக்காக்கு மும்பனேநின்றுள்போற்றி.

கட்டியன் - கட்டியம்.

சத்தியம்வழுவாமல் லுலகதையாளுமென்
சாமியேவெகுபராக்கு
சாந்தமாய்க்குருமொழி தப்பாமலேயொழுகுஞ்
சார்பனேவெகுபராக்கு
நித்தியநிர்மலநிருபனையுளமதில்
நினைத்திடும்பதிபராக்கு
நேருடன்மும்மாரி கோரியேபொழிந்திட
நிட்டைபுரிபவாபராக்கு
வெற்றிகொடுகேடயங் கார்முகமணிந்ததோர்
வீரனேவெகுபராக்கு
விளங்கவேசுதிர்குல மேதினியிலேவந்த
வேந்தனேவெகுபராக்கு
சத்தியேவருகவிஞர் மகிழ்பெறப்பெய்திடு
நாதனேவெகுபராக்கு
நாட்டிவிற்பகைவர்க ளுடாமலரசுசெய்
நாயகாவிதுபராக்கு

---

அரிச்சந்திரன் - தேசவிசாரணை

மந்திமாவதி - தேசத்தி லாலயப்-பூஜைகள் தடையின்றி
தினந் தினம் நடந்தேறுதா

க - மந்திரி.

செப்பரியமெய்யனே-யொப்பவேபூஜைகள்
செழிப்பாய் நடக்கின்றதே

அரிச்சந்திரன்.

சராணு - பாசத்தைநீக்கிய - யாமுனிவ ரெக்கியம்
பண்புடன் புரிகிறாரா

உ - மந்திரி.

பரமனைத்தியானித்து - பரிவுடனோமங்கள்
பண்பாகவேசெய்கிறார்.

அரிச்சந்திரன்.

தன்னியாசி-யர்குடி-தழைத்திட-மாதத்தில்மும்மாரி
யென்னாட்டிற் பெய்கின்றதா.

க - மந்திரி.

எங்களாண்டவனேகேள்-திங்களின்மும்மாரி
யேதேஷ்டமாய்ப் பொழிகின்றது

அரிச்சந்திரன்.

சுமாசு-பார்மன்னர்தருகின்ற-பகுதியதுதடையின்றி
பரிவாகவருகின்றதா.

உ - மந்திரி.

பணிந்துமேபலமன்னர்-அவரவர் முறைப்படி
பகுதிகள்கட்டிவாரார்

அரிச்சந்திரன்

அட்டாணு-சதுர்வகை வர்ணிகள் அவரவர்-விதியதைச்
சார்ந்தே நடக்கிறாரா

க-மந்திரி.

தருமனே அவரவர்கள் கருமத்தின்முறைப்படி
சாநடக்கிறார்களையா



அரிச்சந்திரன்.

யோகனம்-நாட்டினிலந்தணர்-வேதபாராயணஞ்
நன்பாய்ப்புரிகிறாரா

உ - மந்திரி.

நாதனேவேதியர்கள்-பாராயணம்மிக்க
நன்றாகவேசெய்கிறார்

அரிச்சந்திரன்

கேதாரகவுளம் - அகிலெக்காரர்க-ளிணைருறைக்காமனே
யளவுடன் விற்கிறாரா

க - மந்திரி

ஐயனே தானியம்-படியினைருறைபார்ப
லன்பாயளக்கிறார்கள்.

---

அரிச்சந்திரன் - வசனம்.

மந்திரி வெகு சந்தோஷப்பட்டேன் பெல்லாம் பாயலித்தி னருஞ்ளாகும்.

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திர மகாராசன்சபைக்குநாட்டியப்பெண் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

நாட்டியப்பெண் - தரு. நாதநாமக்கிரியை-ஆதி.

மங்கைவந்தனள் - ஆட-மங்கைவந்தனளே.

அம்பையொத்தவிழியும் பிம்பமிறத்துடனே
தும்பைபிறாப்பட்டுடு செம்புரைகளிட்டு
ஜம்புதொங்கலமாட்டி கெம்பீரமாய்நடந்து (ம)

கச்சைகட்டியுமே - இதோ - கச்சை கட்டியுமே.

இச்சையுடனேமதன் மெச்சியெய்துவாட்டி
எச்செகத்துள்ளோரும் தச்செயலாய்நாட
சொச்சபணிபூண்டு பச்சைக்கிளிபோல (ம)

ஆடவந்தனளே-இதோ - ஆடவந்தனளே.

வாடப்பலர்மனமும் தேடவிரகமீறி
பாடப்பலபதமும் நாட அரசன்மதி
கூடமத்தள தாளம் போடமுயிலாயிதோ (ம)

---

ஜாவளி-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

தடையேனோ தழுவவே - தருபோவென்சாமியே

இடையது துவளுது ஏக்கமுமாகுது
நடையதுமாறுது நாயகனே (த)

மோகமுமீறுது மூர்ச்சையாய்த்தோணுது
சோகமுமாகுது சுந்தரனே (த)

காமநீரோடுது கண்ணொளிமாறுது
தாமசமேனோ சத்தியனே (த)

---

ஜாவளி-இ-ம்-காபி- தாளம்-ஆதி.

ஏதினிச்செய்குவதே - துரை
வாதியாமதனிதோவாட்டுறானென்றனை (ஏ)

நீயெனைக்கூடிட நினைக்கவுமாட்டையே
நாயமதோவிதுமயக்கு நான்கோரியும்
பிரியமில்லாப்பேச்சானதே (துரை)

தென்றலின்வாதையை தெரிவித்துமென்மயல்
தீரத்தருந்தரு கூறுசெய்யாவிடில்
கிருபையில்லாமலானதே. (துரை)



இன்றெனைச்சேரவே எண்ணமாய்வந்துமே
என்றனிருகொங்கையைவைத்துநின்றாவகைநோக்கில்
இச்சையில்லாப்போறானுதே (துரை)

ஜாவளி - இ-ம்-சுருட்டி - தாளம்-ஆதி.

நாயமாமோவிங்கனே - நாங்களும்வாடிட போமோ
நயந்துகூடவாராதென்னமோ

காயமுவாடுது காமநோய்பாவியே
கனையது தாவியே கசக்கிறான் தானே
வாய்திறவாததும் வகையா வகையா து (நா)

தானுறுமெய்யியும் தோணுது தோணு
தூக்கமிரவினில் தூரமாயோடுது
தவமணிகூட்டுதி தருதி தருதி யிது (நா)

சித்தமுமாடுது சோரவுந்தேடுது
சிக்கிரந்தாவிட சீறுமாடுது
சத்தியமென்றனை நலமே நலமே யி (நா)

அரிச்சந்திரன் - வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி இந்தநாட்டியப் பெண்ணுக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா.

சத்தியகீர்த்தி - வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராஜனே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

சத்தியகீர்த்திகேளாய் சற்குணநேயமாசன
வித்தியாப்பியாசஞ்செய்தே வெகுநெறியறிந்தகற்றாய்
எத்தினைதனிலுமுள்ள யினியவாதுலர்கடம்மை
சத்தியங்கைப்பாய்நானுஞ் சொல்வதக்கொடுக்கிறேனே.

வசனம்.

அப்பாமந்திரி தேவதாசன் வித்தைகளிற்றேர்ந்த சந்தோஷத்திற்காய் தானங்கொடுக்க வேண்டியிருப்பதால் யாசகர்களைவரச்செய்குவநீ! சத்தியகீர்த்தி.

மந்திரி-வசனம்.

மகாபாக்கியமப்படியே வரச்செய்கின்றேன் மகாராஜனே.

மந்திரி - விருத்தம்.

ஆரடாவாயற்காக்கு மதிவீரக்கட்டியக்காரா
நீரறுமெதுராசன் இனமின்றேயாசகர்க்கு
போர்பெறதானம்பூரி பெய்கவேபோவதாலே
ஊரிலுள்ளோரெல்லா மொக்கவேவரச்செய்வாயே.

வசனம்

அடாகட்டியனே நமதுராஜன் இன்றையதினந் தானங்கொடுக்கப்போகிறபடியா லூர்களிலுள்ள யாசகர்களையெல்லாந் தோட்டி மூலமாய் பறைசாட்டிவரச் செய்குவாயப்பா கட்டியனே.

கட்டியன் - வசனம்.

கேளடாதோட்டி நமதுராஜன் பெருந்தானங் கொடுக்கப்போகிறபடியால் பறைசாட்டி யாசகர்களை வரச்செய்யடா.

தோட்டி - வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் சாமி

தோட்டி-தரு-இ-ம-நாதநாமக்கிரியைதாளம்-ஆதி

பல்லவி

தோட்டிநான்றனே - பறையடிக்குந்-தோட்டிநான்றனே.



அநுபல்லவி.

மேட்டியாமரிச்சந்திர ராட்டினைகாக்கும் (தோ)

சரணங்கள்.

சிசுவதைசெய் தோரும் - மற்றும்
பசுவதைபுரிந் தோரும்
குசுகுசுவென் போரும் - என்றன்
கூற்றைப்பழித்தோரும்
அசுபதியண்ணனு மாகண்ணைவெட்டிட
கொசுவதாய்த்தாங்கியே குறவனைவெட்டிடும் (தோ)

பின்மொழிசொல் வோரும் - ஒருவர்
தன்மையையிகழ்ந் தோரும்
நன்மையைவிடுத் தோரும் - குலத்
தின்மையைத்தொடுத்தோரும்
துன்மைசெய்யெனவேந்தன் றொலியிடுமுன்னமே
என்மானைக்குத்தி யிரத்தம்குடித்திடும் (தோ)

வழிகட்டிப்பறிப் போரும் - கெட்ட
விழியிட்டுரைகைப் போரும்
பழிதனைச்சொல் வோரும் - கோள
மொழிதனைப்புகல்வோரும்
அழிவுறவாண்டவன் அமைக்கவேதெண்டனை
குழியுறமுள்ளிரு பொங்கிரதையறிக்கும் (தோ)

தோட்டி - வசனம்.

அப்பா பிச்சைக்காரவாண்டயாளே ராஜா தானங் கொடுக்கிறாங்கோ ஓடிவாங்கோ ஓடிவாங்கோ தேடிவாங்கோ தேடிவாங்கோ கூடிவாங்கோ கட்டிவாங்கோடயேபெண் கூத்திமகளே.

கட்டியன் - வசனம்.

தானம் வாங்குவதிற்காக யாசகர்கள் வருகிறதைநீங்காண்பீர்கள்களான்களோ.

பாம்பாட்டி கண்ணிகள் - புன்னாகதோடி - ஆதி.

ஆடுபாம்பே நீ தேடுபாம்பே - யிந்த
அரிச்சந்திரன்சபைவாழப்பாடுபாம்பே (நீ ஆடு)

ஒருவர்நிலைதனை - யுணராமலே தூஷணை
வளரும்நாவைகடிக்கத்தேடுபாம்பே (நீ ஆடு)

தருமன்கதையிதனுள் - தகையையறியாமலே
தன்னிச்சைப்படிக்கும் போனைப் போய்ஜாடுபாம்பே (நீ ஆடு)

அரசனுக்கினியாய - மறியாமற்றிரித்திடும்
ஆங்காரிகளைக்கொத்த ஓங்குபாம்பே (நீ ஆடு)

நேசமாய்முன்பேசி - சார்ந்துபின் தூஷிக்கும்
சண்டாளனைக்கடிக்கத்தாவுபாம்பே (நீ ஆடு)

தெய்வதூஷணைசெய்து - தெருவீதிகளில்வாழும்
தீயனைஓடியோடித்தீண்டுபாம்பே (நீ ஆடு)

கைப்பொருட்கெருவத்தாற் கவிஞரைமதிக்காத
கருமிகளையோடிக்கடிபாம்பே (நீ ஆடு)

நீதிநெறியுணர்ந்தே நேயமுறைதெரிந்த
நேமிகள்பாதந்தினம்பணிபாம்பே (நீ ஆடு)

ஜாதிமுறைவிடுக்காதறிமதிக்குமந்த
சாமிகள்வார்த்தைகேட்டால் ஜாடுபாம்பே (நீ ஆடு)

ஹரிச்சந்திரன்-செய்யுளிதைப்பாடிய
இன்புயன்பேனைச்செப்புதினம்பாம்பே (நீ ஆடு)

வீரமோங்கியோரும் விநோதசபையோர்வாழ்க
வேண்டியவனைக்கோரியாடுபாம்பே (நீ ஆடு)

பண்டாரம்-கண்ணிகள்-ஆனந்தக்களிப்பு-சாப்பு.

பாவஞ்செய்யாதிருதினமே - குல
மேம்விட்டாற்றுயர்தான்வருமனமே (பாவ)



குருமொழிதனைமறவாதே - மனங்
கூசாமலேபொய்யை லேசாய்ச்சொல்லாதே
பெருமைபடைத்திருக்காதே - ஒன்றும்
பேசாமற்போய்விடுமாவிநில்லாதே (பாவ)

மதங்களையிகழ்ந்துபேசாதே-யிது
மாயப்பிரபஞ்சமயங்கித்துள்ளாதே
சதமென்றுவாழ்வைநம்பாதே - லோகாச்
சாரவிதிகளைத்தடுத்துச்செல்லாதே (பாவ)

திருநீற்றையிகழ்ந்துபேசாதே - அதில்
தீராக்கொடும்பாவந்தீண்டுஞ்சிக்காதே
திருமணிதனைப்பழியாதே-வெகு
தீமைகள்சூழ்ந்திடுந்தெளிவுமில்லாதே (பாவ)

மூத்தோர்சொல்வார்த்தைதட்டாதே-நீ
முறைதப்பியாதனைக்கருதிப்பாராதே
பார்த்தோர்கைக்கத்தியாதே - அந்த
பதிவிரதாசொல்வார்க்குப்பலிக்கும்பொய்யாதே (பாவ)

நீர்க்குளத்தருகினில்லாதே - துயில்
நீங்கிடுமாதர்மேனிகண்ணையாதே - சன்
மார்க்கத்திற்றிறுவும்பொல்லாதே-நிரோக
மடிந்தாலும்நாகத்திலமுழ்ந்திப்போகாதே (பாவ)

பெண்ஜாதிவார்த்தைகேளாதே - அதில்
பெரியதிறமைகள்வருதற்பொய்யாதே
தன்குலவிதியைவிடாதே-பிறர்
தாக்கும்பொய்மார்க்கத்திற்றுறுமையாதே (பாவ)

பணக்காண்டுகனப்படையாதே - அது
பலித்திடும்பாவிக்கேபார்மகிழாதே
குணங்கெடமதுக்குடியாதே - நாளுங்
கோட்சொல்லுமாந்தரைசேர்ந்திச்சேராதே. (பாவ)

மதிகெட்டுக்கொர்வம்படியாதே - நாளுந்
பரோநக்கங்கொண்டுபேயடிக்கும்போகாதே

விதித்தமொழியைமறவாதே-நாளும்
விநோதசபைவாழவேண்டிக்கொள்கோதே (பாவ)

---

தாசிரி – புன்னாகவராளி-ரூபகம்

ரா ரா போதாமு மனமு - அரிச்சந்த்ர
ராசுவாரிசமுக்க முனக்கு (ரா ரா)

இக்கடுண்டேதியாலரா யிந்துகலுகுட்டேயிரா
சக்கத்தனமுகனுகுவாடு யிம்பிலிமனக்கிவ்வகலடு (ரா)

சாசுடவுகனத்ரிஸங்குனி வாசுதுடவுவாடுகானி
அரிச்சந்துருடனுதியாகபூப அந்துராதனிசாயச்சாய (ரா)

நவமணுல்னூகுலத்தெகலு நாளுனிதபட்டுடணுலு
அவஸ்யமிச்சுமனக்குவாடு அந்தடிகனுடெவடுலேடு (ரா)

ராகத்தாளகிஞானசுருதிமகித்துடைத்தாசொலுவையுண்டு
போகவ்னோதசபனுமனபேபொகடிச்சாலடிஞ்சுதாமே (ரா)

பயிராகி – பாஸ்-இந்துஸ்தான்-ஆதி.

சலோபயிராகி-யஹர்யிக்கோயி-சலோபயிராகி

சாயேப்ரபூஅரிச் சந்தரடேவடி
ஆயேஅம்பூகா வயிரோதாதா (ச)

காமக்குரோதமன காயசேஜார்ஹோ
நாமஹ்றிக்கேலே நாச்சத நாச்சத (ச)

தான்தாமபர ஸாயிஹோதேகா
மானச்சலோகுரு மனபஜத்தரமி (ச)

ருக்காமக்கா நயிஅயேதாக்கா
பரக்கரோஆத்தம பாமனபாவத (ச)

பாட்டகஹோவே நாட்டகாச்சே
டேட்டாஇசபா டிக்கவிநோதக்கி (ச)



ஜோகி - பாஸ் இந்துஸ்தானிமெட்டு-தாளம்-ஆதி

அரோஜோகி-ஜானா-ஜானா-ஜானாரே

தானதாமபல ஸாச்சமன்மோத்தி
மானரிச்சந்த்ரசே மன்பரப்பூரே

பானா பானா பானாரே

தோரஹோவே பேராஜாவே
கோராபாவே மேவணக்காவே

ஆனா ஆனா ஆனாரே,

மோத்தியனஹாரே தோத்தியனசாரே
மேத்திமிலகாரே ரோட்டிபரப்பூரே

லோனா லோனா லோனாரே

காவதடோமரி பாஜதககரி
விநோதபகிசாரி பாசனஆசிரி

தோனா தோனா தோனாரே

அரிதாசர்-தரு-இந்துஸ்தான் காபி-சாப்பு

மனமேசத்குருபாதம் தேடு - இந்து
கனமேமிரபஞ்சம்விடசிநீ ருடு (மன)

சுக்லசுரோணிதஞ்செய்த கூடு - நீ
ஸ்தூலம்நிலைதுகுருபாதம் கோரு யேதும்
விக்கினமணுகாது பாரு கொலம்
விடச்சிஅணைச்சிமவுனமிட்டலோசேரு (மன)

எண்ணிக்கையில்லாத கிலு அந்த
யினக்கிரிமிலயிதேபதி பாலு வுடல்
உண்ணிப்பார்சதைவெறுக் தோலு மறுசா
ஓ ஓ ஓ யிகவிடுநீமோசஞ் சாலு (மன)

ஒன்பதுவாசலின் வீடு - அத்து
உண்டேட்டிபூதாலுசேசேட்டி பாடு - நீ
நன்மையறிந்துக்கொண் டாடு - லோன்
நாட்யமாடேவாணிபாட்டலோ - கூடு (மன)

மனோதுக்கங்கொண்டு சாகாதே - ஒட்டி
மாயமுயிதியந்தாமம முகாதே நாளும்
விநோதசபைமற வாதே வேரோ
வேடிக்கலந்தாவினுஒட்டி பாதே (மன)

யாசகர்-வசனம்.

போற்றி போற்றி எங்களாண்டவனே யெங்கள் மிடியைப்போக்கி ஆண்டாதரிக்கவேண்டுஞ் சுவாமி.

அரிச்சந்திரன் - வசனம்.

அப்பா சத்திய கீர்த்தி வந்தயாசகர்களுக்கு அவரவர்வருத்தம்நீங் கவேண்டியவைகள் வெகுமதிகொடுத் தனுப்புவாயப்பா.

மந்திரி - வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராஜனே.

அயோத்தியாகாண்டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன்துணை.

# வஞ்சனைகாண்டம்.

பொது-விருத்தம்.

இந்திரன்சபையிற்றனே யியம்பியவாறேமுற்றிப்
பந்தயங்கெலிக்கவேண்டி பரிந்துமேவிஸ்வாமித்ரன்
சுந்தரலட்சுமியாடச் சுகமுடன்வாழயோத்தி
சந்திரனிடத்திற்பொன்னை தான்கேட்கவருகின்றனரே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரன் சபையில் செய்துக் கொண்ட பிரதிக்கினை முடிப்பதற்காக விஸ்வாமித்திரன் அரிச்சந்திரம காராசனிடத்தில் பொன் தானங்கேட்க வருமிறவிதங் காண்பீர்கள் கன வான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-அட்டாணை-ஆதி,

பல்லவி

ஒருவனென்னைப்போலுண்டோ
ஓதுவீர்நீங்களே-யிந்துலகதனிலே (ஒரு)

அநுபல்லவி

பெருமைபடைத்தவரை - பென்றன்றவைலத்தாற்
பேணிப்பணிந்துகிற்கச்செய்வேன் - மெத்த
சிறுமையுற்றவர்களு - மெனைவணங்கிப்பணிந்தாற்
செப்பொணுதுன்பமயைக்கொய்வேன் - மேலும்

தருமகுணத்திலென்போற் றக்காரொருவருண்டோ
தரணிமேல்தரிலெந்தன் றன்னொருபாதருண்டோ (ஒரு

சரணம்.

காலமீதென்று யின்றே - அயோத்திமன்னன்
கனவளவிற்குச் சென்றே
ால்ஆகிக வென்றே - அவனையென்றன்
சாமார்த்தியத்தினல்வென்றே
பாலன்பதைக்கமாதும் பறக்கவமைச்சன்கூட
பண்டுவடிமையாகி பலபணிகளால்வாட
சிலமெலாந்துறத்து செப்பொணுவேடங்கொள்ள
செய்வேனவன்தசையைக் கொய்வேனவனைமெள்ள
ஜெயிப்பேன் வதிட்டனை
மெயிப்பேன் நான்
செப்பியசபதத்தை சிறதாய்முடிக்கிறேன்
ஒப்பிலேதேவர்களும் ஓடிங்கிடடிக்கிறேன்

சபம்.

செப்ப நீரனென ஒப்ப புகழினையே
கப்ப வதிஷ்டனோடஅப்ப நான்
சிரித்து என்புகழ் விரித்து அவன்றவம்
பறித்து அகமதை முறித்து வுலகினில்
சீரும் பேரும் பவர்
கூரும் வீரும் உள
சாரும் தேரும் நிலை
தோரும் பொரு ளழிக்த

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

தேசதேசங்கடோறும் இகழ்புனைக்கீர்த்திபெற்றேன்
வாசலிற்காத்திருக்கும் வாசைகட்டியனேகேளாய்
பூசாராசிகூறும் புகழரிச்சந்திரன்றன்பாற்
கோசிகன்வந்தானென்று கூறுவாய்குறியாய்த்தானே.



வசனம்.

கேளுமப்பா கட்டியனே நான்வந்திருப்பதாக வரிச்சந்திரமகாராஜ னுக்குத் தெரிவிப்பா யப்பா.

கட்டியன் - வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றேன் சுவாமி

கட்டியன்-வசனம்

மகாராஜனே இமயகிரிச் சாரலிலிருந்து தவசிரேஷ்ட சிகா மணியாகிய விஸ்வாமித்திரர் தங்களைக்காணவேண்டி வந்திருக்கின்றார் ஆண்டவனே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

மந்திரிசத்யகீர்த்தி மகாதவவிஸ்வாமித்ரர்
செந்திருவாயலுற்றே செப்பிடச்சொன்னதாக
வந்திதோகட்டியன்கூற வாட்டிடுந்துன்பம்போச்சு
முந்திப்போய்க்காணவேணும் முனைந்துமேவருவாயப்பா

வசனம்

அப்பாமந்திரிவிஸ்வாமித்திர மகாமுனிகோலுவாசலில் வந்திருக் கிறாராம் நாமெதிர் கொண்டுபோய் காணலாம் வாராயப்பா சத்திய கீர்த்தி.

மந்திரி-வசனம்.

அப்படியே வருகின்றேன் மகாராசனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

மனைவியேமானேதேனே மைந்தனேதேவதாசா
வினையதைமறுக்கவேண்டி விசுவாசமனதிறுடி
இனையிவாவிஸ்வாமித்ரர் எழில்ருபாதந்தன்னைத்
துணையெனநம்பிநாமே தொழுருவோம்வருவீர்தானே.

வசனம்.

கேளும்பெண்ணே சந்திரமதி அப்பா தேவதாசா நம்மைசூழ்ந்த வினைகளகன்றிட அதிவிசுவாசத்துடன் விஸ்வாமித்திரரைப் பணிவோம் வாருங்கள்.

சந்திரமதி-வசனம்

அப்படியேவருகின்றோம்

அரிச்சந்திரன்-தரு-நாதநாமக்கிரியை-சாப்பு.

அடிபணிகின்றேன் - ஐயாவுன்றன் - அடி

முடிமிசைசடையணி மூர்த்தியின்போதத்தை
பிடிவாதமாய்நாளும் பேணிடுமுன்பாதத்தை (அடி)

இருவினையகற்றிய விறைவனேவெளியரின்
கருமத்தைத்துலைத்திடக் கனிவுபுரிவீருன் (அடி)

மும்மலவழுக்கத்தை முனையறக்கிள்ளிட
செம்மலாவடியரின் றீவினைதள்ளிட (அடி)

தத்துவமிலைதனை தாழ்வன்றறிந்தவா
சித்துசத்துவில்லாச் சிவத்தையுணர்ந்தவா (அடி)

அரிச்சந்திரன் - விருத்தம்

மாதவப்பொருளேபோற்றி மணிமந்திரருபாபோற்றி
வேதத்திறுருவேபோற்றி விண்ணவர்மகிழ்வோய்போற்றி
நீதமங்குணத்தோய்போற்றி திகழுமாவலத்தோய்போற்றி
பாதகங்களைவோய்போற்றி பணிந்தனைப்போற்றிபோற்றி.

வசனம்

நாங்கள் தெரியாமற்செய்த பாபங்களைப்போக்கி யெங்களை ஆண்டருளவேண்டுமென்று சுவாமி.

விஸ்வாமித்திரர் - விருத்தம்

இன்னகாயோத்தியாளு மிறைவனேசத்யபாஷா
மன்னனேயரிச்சந்த்ராவுன் மாதுடன்பாலன்மந்திரி



வன்னமாமலர்போலுளும் வாழுலாதகளில்வாழ்வீர்
தன்யனேயிதுவேசத்யம் தானுமிங்கெழுந்திரோ

வசனம்

கேளு மகாராசனே நீயும் சந்திரமதியும் தேவதாசனும் சத்தியகீர்த்தியும் சுபமாகவாழ்வீ ரெழுந்திருங்களப்பா.

அரிச்சந்திரன் - விருத்தம்

நான்செய்தபலனேயன்றி நாயகிதவமோநீரும்
தானுவந்தெங்களுக்கே தரிசனந்தாலுமானீர்
மேன்மையிவ்வாசனத்தின் மேவியேயிருந்துவந்த
பான்மையைத்தெரியச்சொன்னாற் பரிவுடனடப்பிப்பேனே.

வசனம்

சுவாமி நான்செய்ததவமோ யென்றேவி நோற்ற நோன்போ தங்களுடைய பாததெரிசனங் கிடைத்தது யிந்தவாசனத்திலெழுந்தருளிவந்த காரியம் தெரிவிக்கவேண்டும் முனிநாதா

விஸ்வாமித்திரர்-விருத்தம்

நல்லதோவரிச்சந்த்ராகேள் நான்வந்ததயியான்போலச்
சொல்லவேகேட்டாயுன்றன் சொருபமுந்தெரிந்துதப்பா
நல்லதோர்விண்ணோர்முன்யான் நவின்றதோர்யாகஞ்செய்யச்
செல்லவேபொன்றான்வேண்டுஞ் செல்வனேயீகுவாயோ

வசனம்

கேளும் ராஜனே நான்வந்தகாரியம் தெரிந்துக் கொள்ளாமலென்னைக்கேட்ட சொருபந் தெரிந்தேன் தேவர்கள்முன்னிலையி லுன்சொல்லிவந்தயாகஞ் செய்வதற்கு கொஞ்சம் பொன்வேண்டியிருப்பதால் கொடுப்பாயோ அரிச்சந்திராசொல்லும் பிள்ளாய்.

அரிச்சந்திரன் - விருத்தம்

அடியன்மேற்கோபமாமோ வண்ணலேயுமக்குநாதா
மிடியனான்காப்பீரே ஞான மிணக்கிடும்பொருளீதென்று

முடிமிசைவைத்தே தாங்கிமுன்னடிதனிலேவைப்பேன்
கடிகியேயெனக்குத்தோற்ற கழுவீர்போற்றிசுவாமி.

வசனம்

கேளுஞ்சுவாமி யறிவில்லாதபாமரன்மேற் கோபஞ் செய்யப்பே
மோவேண்டியபொன்னைத் தெரியப்படச்சொன்னாற் றடையன்றிதரு
ன்றேன் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

கேளுமப்பாராசனே ஒருமதங்கொண்ட யானையின்பேரில் ஒருவ
லிபன் யேறிநின்று கவுண்டெறியு மூபாம் பொன்வேண்டி யிருப்பது
அன்னாற் கொடுக்கக்கூடுமா சொல்வாயப்பா.

அரிச்சந்திரன் - விருத்தம்

நல்லறிவினிலுயர்ந்த நயமுளசத்தியகீர்த்தி
வல்லவர்கேட்டவாறே வன்பொருளீயவேண்டி
கல்லலில்லாதவென்றன் களஞ்சியந்திறந்தேநீயுந்
சொல்லறுங்காளையானை சுருக்கெனவரச்செயவாயே.

வசனம்.

கேளாயப்பா சத்தியகீர்த்தி முனிவர் கேட்டவாறே பொன்னைக்
கொடுப்பேன் சடுதியில் யானையும் ஆளுங்கவுண்டும் வரச்செய்துநமது
களஞ்சியந்திறப்பாயப்பா மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே செய்கின்றேன் மகாராசனே

மந்திரி-வசனம்

அடாகட்டியனே நமது யானைக்கூட்டத்தில் பெருத்தயானையொ
ன்றும் நல்லவாலிபனையும் கவுண்டுங்கல்லுஞ் சீக்கிரங்கொண்டு வாரும்
பிள்ளாய்.

கட்டியன்-வசனம்

அப்படியே கொண்டுவருகிறேன் சுவாமி



விஸ்வாமித்திரர்-விருத்தம்

வேந்தனேயானையேறி விடுகவுண் ணுயரம்பொன்னை
வேந்தனேகொடுப்பேனென்று யென்மனங்குளிர்ந்தேனப்பா
வேந்தனேயாகத்திற்கே வேண்டியபோதுவாரோன்
வேந்தனேகாத்தேயன்று வினையமாய்த்தருவாய்வாழி

வசனம்-

கேளுமப்பாராசனே நான்கோரியபடி பொன்னைக் கொடுப்பே
னென்றாய் பெத்தசந்தோஷம் நான்யாகஞ்செய்யுங் காலத்தில் வந்து வா
ங்கிக்கொண்டு போகின்றேன் அரிச்சந்திர பூபனே.

அரிச்சந்திரன் - வசனம்.

மகாபாக்கியமப்படியே யென்வசம் வைத்திருந்து தங்களுக்கு வே
ண்டியகாலத்திற் கொடுக்கின்றேன் சுவாமி.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

நல்லதுமன்னநீதான் நயமுடன்வாக்களித்தாய்
நல்லதுவேண்டும்போது நண்பனேகொடுப்பேனென்றாய்
நல்லதுபொன்றான்மெத்த நாயகாவின்னிடாம
நல்லவாழியத்தாளை நாட்டின்கப்புவேனே.

வசனம்.

கேளாயப்பா நான்வந்து கேட்கும்போது கொடுப்பேனென்றதுசு
ரியே பொருந்தும் பெரிதானதா னல்லோர்களறியக்கொடுப்பதாய் தானா
வார்த்தை யொப்பிடப்பேன் மகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

முனிவரோகேலசம்வேண்டா முமதுபொன்கொடுக்கமாட்டேன்
முனிவரோவேண்டும்போது மொழிப்படித்தருவேன்கண்டீர்
முனிவரோயிதற்குச்சாட்சி முதல்சசிவின்னுயமன்னறு
முனிவரோதானைவார்த்தேன் முகத்துடனேற்றுக்கொள்வீர்

வசனம்

கேளுந்சுவாமி சஞ்சலத்தைவிடும் இதோ ஆகாயவாணி பூமிதே வி சூரியசந்திரா ளாகிய தாரைவார்த்தே னேற்றுக் கொள்ளும் முனி நாதா.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

சத்தியமன்னனென்றால் சாந்தனேநீயேயின்றி
சத்தியமன்னரிந்தச் சாலிற்கண்ட இல்லை
சத்தியனீயேயாகுஞ் சதியிலென்பத்னியாமே
சத்யனேவேண்டும்காலை சார்ந்துயேகொள்வேன்வாழி

வசனம்

கேளும் மகாராசனே நீயேசத்தியன் சந்திரவதியே பதிவிரதை யுங்களைவிட வேறுகண்டதில்லை யெனக்கு வேண்டும்போது வந்துவாங் கிக்கொண்டு போகின்றேன் அரிச்சந்திர மகாராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்.

அடியேன் செய்தகுற்றங்களை தயைகூர்ந்து மன்னித்து ஆட்கொ ள்ளவேண்டியது முனிநாதா.

---

விஸ்வாமித்திரன்-தரு-கேதாரகௌளம்-ரூபகம்.

மாட்டிக்கொண்டானே அரிச்சந்திரன்
மாட்டிக்கொண்டானே என்மாயவலைக்குள் (மாட்)

காட்டினிற்பசியாய்க் களைத்தவேங்கைபால்
தாட்டீகமாய்மேஷந் தான்வந்துபட்டாப்போல் (மாட்).

பிலவின்பிசினாலே பேரிக்கூட்டமதாய
தலையெனமேவிக்கால் தான்படும்வாறதாய் (மாட்)



தீபவொளிவைதீ தென்றறியாமலே
தாபமாய்வந்தீசற் றுன்பிலைறும்போலே (மாட்)

ஆனைதன்மதத்தை மணைக்கத்தெரியாமல்
தானேமண்பிரிட்டுத் தவிக்குமாறுபோல் (மாட்)

---

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திர முனியானவர் மே தோஒரு குதைக்கருதி தான்வாங்கிய பொன்னை யாசனிடத்திற்றுனே யிருத்தி காட்டிற்குச்சென் றங்குள்ளமிருகங்களை வருவிக்கிறவிதங்கா ண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

காட்டினில்வாழுஞ்சிங்கம் கரிபரியாளிசெந்நாய்
தாட்டீகயானைசோணன் றுனையெலிகுயிஇயங்கானை
பேட்டியர்மெருமையன்றி மிகத்துடிசோழியான்கள்
நீட்டியநாராயிங்கே நிமைதனில்வருகுவீரே.

வசனம்.

இந்தக்காட்டினில் வாசஞ்செய்கின்ற யானை குதிரை சிங்கம் நரி சோணன் எருமை எலி கழுகு காடைமுதலாகிய மிருகங்களேயிங்கே ஓடி வாருங்கள்.

மிருகங்கள்-வசனம்.

சுவாமி யெங்களை யழைத்தகாரணம் தெரியச்சொன்னால் அடையின் றி செய்கின்றோம் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்

கேளுங்கள் மிருகங்களே நீங்கள் கூட்டமாக அயோத்திநாட்டை யடைந்து குடிகளிட டிருக்கும்படியான பிரபலமாகும் பயிர்களையழித் திருவந்தெனக்குத் தெரிவிப்பீர்கள் மிருகங்களே.

மிருகங்கள்-வசனம்.

அப்படியே யிதோகாங்கள் சென்று பயிர்களை யெல்லாந் நாசஞ் செய் துமக்குவந்து தெரிவிக்கின்றோம் சுவாமி.

பொது-தரு-தர்பார்-தாளம்-ரூபகம்

பல்லவி.

வந்ததுபார் - மிருகங்கள் - வந்ததுபார்

அநுபல்லவி

அந்தவன்செப்பிய வனியாயஞ்செய்திட
இந்தாவுலகைப்போ லிருக்குமயோத்திகெட (வந்)

சரணம்.

கூட்டமாய்க் கூடியே - பொன்றோடொன்று
காட்டமா யாடியே
காட்டகம்விட்டுமே கௌசிகன்மொழிப்படி
ஓட்டமாயோடியே ஒருகொடிக்குளப்படி (வந்)

வாலைத் தூக்கியே - செவிநீட்டி
காலைத் தாக்கியே
சாலைவழியெல்லாம் சார்ந்தேபொடியாக்கி
ஓலைவழிவதை உணருபதிபோக்கி (வந்)

நன்சாயிற ருவியே - யழித்துமே
புன்சையின்மேவியே
நெஞ்சைமேயாடித் திட்ட நீள்விளைவைபோக்க
பஞ்சைக்காற்றிலிட்ட பாகலையாக்க (வந்)

கொத்துதுபார் தனைதனை கொத்துதுபார்
குடிமனம் நொந்துதுபார் இதோவிதோ
வந்ததுபார் மிருகங்கள் வந்ததுபார்



பொது - விருத்தம்.

மிருகத்தின்கூட்டம்வந்தே மேவியபயிரையெல்லாங்
கருவழித்திடவேகண்ட கனிவுள குடிகள் தானுங்
கிருகிருவென்றேகல்லை கொடியுமுறும்பங்கண்டு
வருமையுட்கொண்டேவேந்தன் வளர்சபைவருகின்றாரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திர னேவிய மிருகங்கள் பயிர்களை நாசஞ்செய்யக்கண்ட குடிகள் கல்லுகளைவிட்டெறிந்தும்போகாமல் முன்வருவதை குடிகள்கண்டு வருத்தங்கொண்டு அரசனிடத்தில்தெரிவிக்க வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

குடிகள்வருகிற-தரு-கலியாணி-ரூபகம்.

பல்லவி.

குடிகளுய்தலோ - பயிரினி- குடிகளுய்களோ.

அநுபல்லவி.

படியினைகாளுமே பாப்பவர்க்கறமிய
பாக்கியம்பெற்றதோர் பண்புளோராகிய (குடி)

சரணம்.

அந்தணர்வேந்தர்க - ளொந்தவர்வந்தாலும்
ஆதரணைசெய்தே காப்போம் - யார்
அண்டிகேட்டாலுமே - யில்லையென்னாமலும்
அன்பாயவர்பசி தீர்ப்போம்

சுந்தரமூர்த்தியின் சுவாசனமாகிய
சந்நிதியைநாளுமே நாடுவோராகிய (குடி.)

காலையெழுந்துமே - ஸ்நானபானஞ்செய்தே
கைகலியனுதினம் வாழ்த்துவோம் - ஒரு
காரணமில்லாமல்காலத்தைவீணாகக்
கழிக்காமல்பக்தி யோடிருப்போம்

வேலைசெய்தானையின் விசித்திரச்சாலைதாவும்
நாலைப்படித்துறை நண்ணிநித்தமேவும் (குடி)
சீவகாருண்யத்தை - கைக்கொண்டோங்களுந்
செயதிற்றிட்டிட நாடுவோம் - இந்த
ஜெகத்திற்புஷ்க்ருத்யந் - செய்திடுமாந்தரை
சேராமலவரைச் சாடுவோம்
பாவத்தொழில்களைப் பற்றிப்புரிந்திடோங்
காவலன் க்ஷேமத்தை கருதாதிருந்திடோம் (குடி)

குடிகள்வசனம்

கேளுமையா கட்டியனே யெங்கள்வரவை அரசருக்குத் தெரிவித்து காணக்கூடுமோவென்று தெரிந்துவந்துரைசெய்வாயப்பா.

கட்டியன்-வசனம்.

கேளுஞ்சுவாமி நமதுநாட்டின் குடிகளெல்லோருந் தங்களைக் காணவேண்டி வந்திருக்கிறார்கள் சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்

சீக்கிரம் வரச்சொல்லும் பிள்ளாய் கட்டியனே.

குடிகள் - வசனம்.

போற்றி போற்றி மகாராசனே போற்றி

அரிச்சந்திரன் - வசனம்.

மருதம் முல்லை நெய்தல் குறிஞ்சிபாலை யெனுஞ் க்ஷேத்திரங்களைப் புணர்ந்தே மேன்மைத்தொழில் புரியாநின்ற குடிகளோ நீங்கள் வந்தவகை தெரியச்சொல்லுங்களப்பா.

குடிகள் - விருத்தம்.

ஏதெனச்சொல்வோமையா வெங்களாலிட்டேபெற்ற
நிலப்பயிரையெல்லாந் தின்னியமிருகங்கட்கே
போதார மிக்கக்கண்டே புண்ணியனேயாறுவேண்டி
ஓடிவந்தோஞ்சுவாமி யுகந்துமைகாப்பீர்கோவே.



வசனம்

கேளும் ராசபரமேஸ்வரா நாங்கள் வருந்தப்பட்டு யிட்டபயிர்களை யெல்லாங்காட்டின் மிருகங்கள் கூட்டமாகவந் தழிப்பதாலதிவ்வாதை யைப்போக்கி யெங்களைக்காக்க வேண்டும் நாதனே.

குடிகள் - விருத்தம்

என்னயோகாலங்காணோ மேந்தலேசநாட்டில்
வன்னமாம்வனத்தில்வாழும் வனமிருகங்கள் மேவி
நன்னகர்ப்பயிரையெல்லாம் நாசமேசெய்யலாச்சு
மன்னவாவிலங்கையோட்டி மகிழ்வுறக்காப்பீர்போற்றி.

வசனம்

கேளுஞ்சுவாமி யுமதுசத்யம் பெருகியநாட்டுக்குள் காட்டுமிருகங்கள் மேவி பயிரையழிப்பதேதோ விபரீதகாலமாகத் தெரிகின்றது தெங்களை ரக்ஷியு மபய மபயம் வேந்தனே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

குடிகளேநீங்கள்சொன்ன கொடியதோர்வார்த்தைகேட்டேன்
குடிகளேயிதோநாம்வந்தக் கோரஞ்செய்மிருகந்தன்னை
குடிகளேவேட்டையாடி கொப்பெனமடிப்பேனிங்கள்
குடிகளேதுயரம்விட்டே கொள்ளுமும்மிடம்போவீரே

வசனம்

கேளுங்கள் குடிகளே யிதோநான்மிருகங்களை வதைக்கவருகிறேன் நீங்களுங்களிருப்பிடம்போய் சேருங்கள் குடிகளே-

அரிச்சந்திரன்-வசனம்

கேளுங்கள் குடிகளே நீங்களிட்டபயிரை மிருகங்கள் மிதித்ததாலே வருகிற விரண்டுவருஷத்திய வரியை நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை சந்தோஷமா யுங்கள் வீடுக்குப் போவீர்களப்பா.

வஞ்சனைகாண்டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன் துணை.

# வேட்டஞ்செய் காண்டம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சத்தியகீர்த்தியென்ன சகிக்கொணாக்காலங்கண்டோம்
நத்தியகுடிகளெல்லாம் நம்பனன்னருளோகாணும்
வெற்றியாய்வேட்டையாட வேண்டியதாலேயப்பா
சுத்தியவேடர்தம்மைச் சுருக்கினில்வரச்செய்வாயே

வசனம்

கேளும்மந்திரி குடிகளின் மனக்குறை நீங்கநாம் வேட்டைக்குப் போகவேண்டும் சீக்கிரத்தில் வேட்டைக்காரர்களை வரச்செய்வாய் சத்தியகீர்த்தி.

மந்திரி - வசனம்

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி

மந்திரி-வசனம்

அப்பா கட்டியனே குடிகளிட்ட பயிரை யழிக்கின்ற மிருகங்களை யோட்டுவதற்காக மகாராஜன் வேட்டைக்குப் போகிறதால் சீக்கிரத்தில் வேடர்களைவரச்செய்வாய் கட்டியனே.

கட்டியன் - வசனம்.

அப்படியே யழைக்கிறேன் சுவாமி

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திர னேவியமிருகங்களை அதஞ்செய்து வெகுமதிபெறவேண்டி வேடர்க ளாசலிடத்திற்குவருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.



வேடர்-தரு-தன்னியாசி-ரூபகம்

பல்லவி

வேடர்நாங்களே - ஐயேமலே-வேடர்நாங்களே.

அநுபல்லவி.

தேடரும்விநோத - சபையோரின்புகழ்
பாடுவோம்யாவருங்களிக்கவே
நினைகுத்தியே நனைவிட்டதில்
மதுவிட்டுமே அதுகெட்டிடும் (வேட)

சரணங்கள்.

ஆனைபுலிசிங்கம் - யாளிக்கூட்டத்திலே
அஞ்சாமலே பாய்ந்து குதிப்போம் - அதை
பூனைகள்போலெண்ணி - யீட்டியாற்சதையைப்
புட்டுப்புட்டெயிந்தே மிதிப்போம்.
சாணைபிடித்திட்ட சத்தியைத்தாங்கியே
சண்டாளச்சென்னாயைத் துண்டாகவோங்கியே
சாய்ந்து-காய்ந்து பாய்ந்து-மாய்த்திடும் (வேட)

காட்டுவெருமைக-ளோட்டமாய்வந்திடில்
கைக்கோலினாலதைவாட்டுவோம் - ஐயே
காடிக்கலைமான்கள் - முள்ளம்பன்றிவந்தால்
காலினாலெத்தியே மாட்டுவோம்
வீட்டுநாயைப்போல வெண்ணரிக்கூட்டத்தை
விரல்களாற்றுக்கியே யுயிருடன்தசையை
வெட்டியே-கட்டியே சுட்டியே-வெட்டிடும் (வேட)

கொக்குக்குயில்காக்கை - பக்ஷிகளைக்கண்டால்
கொக்கைகளைப்பற்றி கொளிப்போம் - ஐயே
குருவைப்பணிந்துமே-யிச்சபையோங்கிட
கும்பிட்டுடன்மனங் களிப்போம்

திக்குதிக்கெல்லாம் புகழ்பெறப்பாடியே
தீவினையெண்ணிடும் பாவியைச்சாடியே
தேய்த்திடுந்-தீய்த்திடும் மாய்த்திடும்-காய்த்திடும் (வேட)

தலைவேடன் - வசனம்.

சரணம்சரணம்ஆண்டவனே-அழைப்பித்தகாரியம் தெரியச்சொல்ல வேண்டுமகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேடனேஅடவிவாழும்-விலங்குகளொட்டிறப்பாய்ந்தே
வேடனேகுடிகளிட்ட- விலைகொளும்பயிரையெல்லாம்
வேடனேயழிப்பதாலே-விரைவினில்வேட்டையாடி
வேடனேவிரட்டயானும்- வேண்டியேயழைத்தேன்காண்பாய்

வசனம்.

கேளுமப்பாதலைவேடனே - காட்டுமிருகங்கள் நாட்டில் தலைப்பட்டுபயிர்களையதஞ்செய்வதால் வேட்டையாடவேண்டி யழைத்தேன்தெரிகுலாயப்பா.

தலைவேடன்-வசனம்.

மகாசந்தோஷமப்படியே வருகிறேன்சுவாமி.

அரி-வெண்பா.

மந்திரியேவனமதனில்வல்வேட்டையாடுதற்கே
முந்திநீதானுமுத்திமுனைவாக-சுந்தரமாய்
சேனைதளவாரந்திசைகளெட்டுந்தாங்குங்க
ஆனைபரிமற்றதுமே யமை.

வசனம்-

கேளுமப்பாமந்திரி நாம்வேட்டைக்குப்போகவேண்டும் சீஜாக்கிரதையா யுடுத்திக்கொண்டுயானைகுதிரைதள முதலானதையுஞ்சேரிகப்பாயப்பாசத்பிரத்தி;



141

மந்திரி-வசனம்.

மகாராசனே- தங்களுத்திரவின்படிக்கெல்லாஞ் சேகரிக்கின்றேன்சுவாமி.

அரிச்சந்திரன் - விருத்தம்.

தேன்மொழிமாதேகேளாய்-திகழிலாமிருகக்கூட்டம்
மான்விழியாளேவந்து-மழிக்குதாம்பயிரைநாட்டில்
தேன்மொழிபெண்ணேசென்று தொலிக்கவேவேட்டையாடி
மான்விழிகண்ணேபோறேன் மகிழ்வுடனீயும்வாராய்

வசனம்.

கேளாய்பெண்ணேசந்திரவதி-காட்டுமிருகங்கள்பயிரையழிப்பதால்வேட்டையாடப்போகிறேனீயும்வருவாய்கண்ணே.

சந்திரவதி-விருத்தம்.

கானகந்தனிலேசென்று-கருக்கவேமிருகந்தன்னை
தானரோயோட்டவேண்டி-தாம்புரிவேட்டைமற்றும்
பானரோயங்கேதோன்றும்-பலமலைவிருட்சமுஞ்சன்
மானரோயடியாள்காண-மகிழ்வுடன்வருகுவேனே

வசனம்.

கேளுமென்பிராணநாதா - தாங்களவேட்டையாடுகிற நேர்மையும் வனத்திலுள்ள வுன்னதங்களையுங்காணவேண்டிநானும் வருகிறேன் சுவாமி.

அரிச்சந்திரன் - விருத்தம்.

நாட்டினிற்குடிகளிட்ட-நல்லதோர்பயிரையெல்லாங்
காட்டில்வாழ்மிருகம்வந்தே-கலக்கியதாகக்கேட்டே
வீட்டினிலிருக்கப்போகா- வீரரோவேடமாரோ
தாட்டிகமாயென்கூட-தானியேவருகுவீரோ

வசனம்.

கேளுங்கள்வேடரோ பயிரையழிக்கும்படியான மிருகங்களைவிரட்டவேண்டியதால் சாக்கிரதையாய்வாருங்கள் போவோம்.

வேடர்-வசனம்.

புத்தி அப்படியேவருகின்றோ மகாராசனே

அரிச்சந்திரன்-வேட்டை-தரு-அடாணா- திரிபுடை.

பல்லவி.

வேட்டையாடுவோம்வாரீர்-ஒவில்லியரே-சல்லியரே - நாம்
வேட்டையாடலாம்வாரீர்

அநுபல்லவி.

காட்டைவிட்டேமிருகம் நாட்டினிலுமிதோ
காராய்-பாராய்நீயே. சோராய்போயிதோ (வே)

சரணங்கள்.

அம்பெடுத்தே யிதோவிடுத்தேன்- அந்த
யானைக்கூட்டமதைக்கெடுத்தேன்
கொம்புமுறிந்திடவடித்தேன்- பன்றிக்
கூட்டத்தையுமிதோவிடித்தேன்

தும்புவலைகளா லோடுமிருகத்தை
சுத்திவந்தேயப்பா நத்திபடக்குங்கள்
வெம்புலிசென்னாய்கள் மின்னிடுங்கூட்டத்தை
வேடாவாடா-நாயைச் சூடா-போடாவன (வேட்

கோரைப்பன்றிகளைக் கண்டே-நான்
கோணுமற்கத்தியைக்கொண்டே
வேறேயெண்ணமதை விண்டே- யிதோ
விட்டேனம்பு பன்னிரண்டே

நாரைகொக்குபக்ஷி பயிர்மேற்றாவுதே
நாட்டமாயுண்டுவில் போக்குங்கள்வலையை
தேனைத்திருப்புகிறேன் ஓங்கங்கள்போகுதே
சோராய்பாராய்சுற்றி காராய்-கோராய்வா (வேட்



எருமைக்கூட்டத்தை மாட்டினேன்-அதோ
எதிர்த்கலைகளை யோட்டினேன்
பெருமையுடனம்பை மீட்டினேன்-பொல்லா
பெரியகாண்டாவிழ நாட்டினேன்

அருமைதெரியாமல் மிச்சமைதன்னையே
அகஸ்யஞ்செய்யும்பா தோஷிகளைத்தினம்
முருகனருளதை மனதினிலெண்ணியே
முட்டு-இட்டு-பல்லை தட்டிக்கொட்டுவன (வேட்)

அரி-வசனம்.

கேளுங்கள்வேடர்களே- யென்அம்பினால்நொந்து பின்னிட்டோடும்படியான மிருகங்களைப்பின்பத்திவதைத்து வருவீர்களப்பா வேடர்களே.

வேடர்-வசனம்.

மகாசந்தோஷமப்படியே- பின்பத்திச்சென்று மதுமனங்களிக்கும்படிமிருகங்களையொடுக்கியிதோவருகின்றோமெங்கள் இராணியைப்பாருமகாராசனே.

---

வேடர்-தரு-நாதநாமக்கிரியை - ரூபகம்.

பேசாரடைய்யே பருங்கிவா பேசாரடைய்யே
வேசாரிபக்ஷி போகுதே போகுதே (பே)

நாயைச்சூழாய்யே வாய்மூரி நாங்குலோலாயே
டாலையச்சேருதுபுலி ராக்குடா அம்பித்தோ (பே)

காடியைபோரோ ராக்கியே கானையைச்சேரோ
விரட்டியேமாஞ்சதை வியலே ராக்குடோ (பே)

வலையிசுடைய்யே விசைகடீ வருகுராரொய்யே
கொலைசெய்யேமைபை கும்பத்தே ராக்குடோ (பே)

அரிச்சந்திரன் - விருத்தம்

வேடரின்முன்றாய்மந்திரி வினைவினிற்றார்களோடே
காடதைப்பற்றிச்சென்றே களிப்புறநீங்கள்தாமும்
நாடதையழிக்கவந்த நமதுயாக்கினை கடந்த
கூட்டமாமிருகமெல்லாங் கொப்பெனவதைசெய்வீரே.

வசனம்

கேளுங்கள் சேனாதிபதிகளே மந்திரிகளே வேடர்கள் முன்னே நீங்களுஞ் சென்று நமதுயாக்கினை சக்காயமாய் நடக்குமிருகங்களை வதை செய்வீர்களப்பா வில்லாளிகளே.

மந்திரி - விருத்தம்

அயலிலேயிட்டியப்பு அருக்கன்னியுங் வில்லு
கயமுடன்றுங்கிற்றும் கல்வேட்டைக்காரரோராம்
பயமின்மிருகந்தன்னைப் பற்றிப்பின்சென்றேமாய்த்தால்
ஜெபமுள்ளரசன்கண்டே செப்பொணுமகிழ்கொள்வாரே.

வசனம்

கேளுங்களப்பா நாமும் பின்பற்றி மிருகங்கள் திரும்பாதபடிக்கிவ் வைப்போமாகி லரசன்கண்டு மிகவுஞ்சந்தோஷ மடைவார் வாருங்கள், வாருங்கள்.

---

மந்திரி-தரு-நாத நாமக்கிரிகை-ரூபகம்.

பல்லவி

ஓடிவாருங்கள் - ஐயே - ஐயே - ஐயே - ஐயே -
ஐயே - பைய - ஓடிவாருங்கள்.

அநுபல்லவி

ஓடிமிருபக்கம் நாடிவலைவீசி
தேடிமிருகங்கள் கூட்ட தூண்டியே (ஓடி)



சரணங்கள்.

எதிரோநேருங்கள் - அப்பா - அப்பா - அப்பா - அப்பா
அந்தயிடிக்கில் பாருங்கள்
சதிராய் வாருங்கள் - அப்பா-மிருக
ஜாடையைக் காருங்கள்

விதிகிழிக்குதுமானுக்கே பத்துங்கள்
வீரிட்டோடுகிறயானையைக்குத்துங்கள்
வேகமாய்நோக்கிடும்புலிகளைப்பாரீர்
வெட்டினேன்-தட்டினேன்-குட்டிச்சென்றுய்களே (ஓடி)

சுத்திக் கூவுங்கள் - அப்பா - நாயைச்
சுறுக்கா யேவுங்கள்
கத்தியைப் பாவுங்கள் - கட்டையை
காடியைத் தாவுங்கள்

எத்திசையும்நோக்கும் எருமையைச்சுத்துங்கள்
யீட்டிகளினுலே பூட்டியிற்குத்துங்கள்
இறுமாப்புடன்வரும் பெரியசிங்கத்தை
எற்றுங்கள் - சொத்துங்கள் - பத்துங்கள்-ஓடாமல் (ஓடி)

வலையைப் போடுங்கள் - அப்பா-பறவை
வாட ஜாடுங்கள்
முலையை நாடுங்கள் - அப்பா-குட்டர்மலங்
கொல்லத் தேடுங்கள்

விலைமதியாத விநோதசபைதனை
வெற்றியாயோங்கிட வேண்டிவீர்வேலினை
வித்தையிரமுந்திடும் ஓதுக்கப்பிணந்தனை
வேடாமல்-காடாமல்-தேடாமல்-நீங்களும் (ஓடி)

---

மந்திரி - விருத்தம்

வேந்தனேமிருகந்தானும் வெகுவாகமாண்டுபோச்சு
வேந்தனேமிருந்ததெல்லாம் வெருண்டுகண்காணாத் தூரம்
வேந்தனேமறைந்ததாலே வில்லியன்றனை நிறுத்தி
வேந்தனேபாதத்திற்கே விளம்பிடவந்தேன்போற்றி.

வசனம்

மகாராசனே மிருகங்களனேகமாக மாண்டு போச்சுது தப்பினதுகள் மலைச்சாரலுக்கு ளோடிப்போய் விட்டது சங்கதி தங்களுக்குத் தெரிவிக்கவந்தேன் சுவாமி.

அரிச்சந்திரன் - வசனம்

அப்பாமந்திரி வேட்டையாடி மிருகக் கூட்டத்தை யதஞ்செய்துவிட்டோமானதாலினி சேனைகளுடசேருவதற்காக வொன்றுகச் சேர்ப்பிப்பாய் சத்தியகீர்த்தி,

மந்திரி- வசனம்

அப்படியே சேர்ப்பிக்கின்றேன் மகாராசனே.

மந்திரி - விருத்தம்.

தலைவேடாசொல்லக்கேளாய் தகைமையாய்நீதானோடி
தலைவேடாசேனைதன்னை தடையின்றியொன்றாய்க்கூட்டி
தலைவேடாவிங்கேதோன்றுந் தண்மைபூஞ்சோலைக்கேதான்
தலைவேடாவழைத்துநீயுந் தாவியேவருகுவாயே.

வசனம்

கேளுமப்பா தலைவேடனே நீ ஜாக்கிரதையாய்ச் சென்று சேனைகளையெல்லா மொன்றாய்க்கூட்டி யிந்தபூஞ்சோலைக்கு யழைத்துக் கொண்டு வருவாயப்பா.



பொது-விருத்தம்.

மன்னனரிச்சந்திரனும் வேடருடன்காடுறைந்து
  வன்விலங்கையெல்லாம்
சன்னபின்னமாய்வதைக்க நிலைகெட்டேவந்தவழி
  சார்ந்தேயோட
என்னரும்போர்தவமுனியும் யிதையறிந்தேயேன மொன்றை
  யேவிவிட்டான்
இன்னமுடன்கருதுபடைமேல்விழுந்தேபலபேரைச்
  சிதைத்ததன்றே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே யரிச்சந்திரமகாராசன் வேட்டையாடி மிருகங்களை வதைக்கத் தரிக்க நிலையில்லாம லோடிவந்ததை விஸ்வாமித்திரன் கண்டு ஒருபன்றியை யுண்டுசெய்து அனுப்ப வதுவந்து படைகளைவதை செய்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே,

பொது - தரு-தர்பார் - ரூபகம்.

பல்லவி

வந்ததுபார்-பன்றியிதோ-வந்ததுபார்

அநுபல்லவி

இந்தச்சபைதனை நிந்தையாய்ப்பேசிடும்
மந்திரளின்சதை தொந்தியேபேசிடும் (வந்)

சரணங்கள்

இமயமிதோவென்று எண்ணித்துடித்திட
சமயம்பார்த்தேபடை சாகயடித்திட (வந்)

கோரைபைத்நீட்டியே சோபத்மூட்டியே
தாரையாயுதிரந் தாவிடமாட்டியே (வந்)

வேடர்கள்பாளையர் வெட்டதையெண்ணுமல்
ஜாடப்படைகளுஞ் சாய்த்திடவெண்ணுமல் (வந்)

முனிவன்போதித்த மோனத்தைவாய்ந்துமே
தனிமையில்லாமற் றுண்டியும்பாய்ந்துமே (வ)

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே பன்றியின்வகையினல் சேனைகள் சின்னபின்னமாவதைக்கண்டு தலைவேடனாசனுக்குத் தெரிவிக்க வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தலைவேடன் - விருத்தம்

அரசரேசேனை தன்னை யழிக்கைசெய்தோனும்
அரசரேயழைப்பதற்கு மகோரமாம்பன்றியொன்று
அரசரேவந்தேதாக்கி யனேகமானுஜனத்தைக்கொன்றே
அரசரேநெருநோக்கி யடியேனைத்துரத்திற்றையா.

வசனம்.

கேளுஞ்சுவாமி நான் சேனைகளைக்கூட்டிக்கொண் டிருக்கும் நேரத்தி லொருபன்றி மலையைப்போல்வந்து சேனையின் பேரில் பாய்ந்தனேகரையடித்தும் என்பேரில் பாயநான் றங்கள்பாதத்தி லறிக்கை செய்ய வந்தேன்சுவாமி

அரிச்சந்திரன் - விருத்தம்.

தலைவேடாவுந்தன்வார்த்தை தைத்துதென்னெஞ்சிலப்பா
தலைவேடாமாண்டோர்போகத் தனித்தவருமினைக்காக்கத்
தலைவேடாநானேவந்து தகாதவப்பன்றிதன்னைத்
தலைவேடாவதைப்பேன்றனைத் தனியினில்வரச்செய்வாயே

வசனம்.

கேளாயப்பா தலைவேடா இறந்தவர்போக விருப்பவரைக் காக்க அந்தப்பன்றியைக்கொல்ல நானேவருகின்றேன் என்னிரதத்தைச் சீக்கிரங்கொண்டு வரச் செய்வாயப்பா.

அரிச்சந்திரன் - விருத்தம்

மந்திரிபன்றியொன்று மடித்ததாமெங்குஜனத்தை
மந்திரிநாமேசென்று மடக்கியேயதையொடுக்கி



மந்திரிசேனைதன்னை மகிழ்வுறக்காக்கவேண்டும்
மந்திரிவாராய்போவோம் மனமினித்தரிக்கிலேனே.

வசனம்

அப்பாசத்தியகீர்த்தி ஒருபன்றிவந்து நமதுசேனைகள் பேரில்விழுந்து கொல்லுகிறதாம் நாமதையொடுக்கி பாளயங்களை ரட்சிக்க வேண்டியதாலால் நீயும்வருவாயப்பா.

மந்திரி-வசனம்.

அப்படியே வருகின்றேன் சுவாமி

மந்திரி - வசனம்.

கேளுமப்பா தலைவேடனே நீ சொன்னபன்றியின் ரூபமெப்படிக் கொத்ததோ தெரியப்படச் சொல்லுவாய் வேடா.

தலைவேடன் - விருத்தம்

நாலுகால்களுமேவெள்ளை நவிலுவேன்சிரசோபச்சை
கோலமாம்விழிகளிரண்டுங் கூறுவேனுதிரத்தொக்குஞ்
சாலவேதிரேகமானுஞ் சரியிலாபொன்னாய்க்காட்டும்
ஆலமோவியமொக்குந்தொடுகொம்புமயிராமே.

வசனம்

கேளுமையா மந்திரி நாலுகாலும்வெள்ளை தலை பச்சை கண்களுதிரநிறம் தேகம் பொன்மயம் கொம்புகள் மயிர்போலிருக்கும் காத்திரமோ வியமலைக்கொப்பானதென் றறிவீர்சுவாமி.

அரிச்சந்திரன் - விருத்தம்

என்னதான்காலங்காணே னிவ்விதக்கோரமாக
உன்னதமானபன்றி யுற்பித்ததேதோபிரமன்
தன்னதுநினைவுயாதோ தயாபரகைலைவாசா
பன்னகமேற்றுங்கோவே பயந்நீரவருள்வாய்போற்றி.

வசனம்.

ஓ ஆண்டவனே கைலைவாசா இவ்விதமான விகாரரூபமுடைய பன்றியை பிரமன் யேன்படைத்தானோ வறியேனெனைக்கு மென்சேனைகளுக்கும் யாதொரு துயரமன்றிக் காப்பாய் கைலைவாசா.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே வேடன்சொன்ன பன்றியை யிதோக ண்டிக்கிறேனென்று ராஜன் காலருத்திரனைப்போல் தேரேறி தேனை யாகாயமார்க்கத்திநடத்திப் பன்றியிருக்குமிடத்தை நாடிவருகிற விதங் காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன் - தரு - தர்பார்-ரூபகம்.

பல்லவி.

எதோகாட்டடா - வந்தபன்றி - எதோகாட்டடா.

அநுபல்லவி.

இதோநீசொன்ன வேனமதுவேடா
யிப்போதேவாட்டுவேன் தப்பாமலேவாடா (எதோ)

சரணங்கள்.

தூலம்பெரிதுதான் - வுனக்குமே
தோன்றினதுமிதுதான்
காலகெதியல்லோ காட்டினில்வந்ததும்
கண்டநீபயத்தை கொண்டிடத்தந்ததும் (எதோ)

கோரரூப மாய் - சேனைபேரில்
குரூரகோபமாய்
தீரமுள்ளபடை திகைத்துவாடிட
தேகம்நடுங்கியே தேவனைநாடிட (எதோ)

தனுசுந் தாவினேன் - யிதோ சரந்
தனையுந் தாவினேன்
அணுவணுவாக வதைச்சதைத்திட்டேன்
அப்பாயிப்பாத்தை யண்டாதுதைத்திட்டேன்
அதோபோச்சுடா - பன்றியோடி (அதோ)

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யகோரமாம்ரூபத்தோடே
செப்பவேசக்யமின்றி திரியபன்றிதன்னை



சப்பவேதாக்கியம்பால் கலக்கமிட்டோடச்செய்தேன்
இப்படைதனையழைத்தே யென்பின்னேசோலைவாரும்.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி அகோரமானபன்றியென் அம்படிக்குத் தா ளாமலோடிவிட்டது இனிநாடாது நமது சேனைகளை பூஞ்சோலைக்கழை த்துவருவாயப்பா மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே வழைத்துவருகிறேன் மகாராசனே.

மந்திரி - விருத்தம்.

அரசரேநீர்தானிட்ட வாக்கினைப்படியேநானும்
அரசரேசேனைதன்னை யழைத்தேபூஞ்சோலைக்கேதன்
அரசரேயினிநடத்து மருள்தனைப்பெருகவென்றே
அரசரேயுமதுதிவ்ய வடியினைப்பணிந்தேன்போற்றி.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா உமது ஆக்கினைப்படிசேனைகளை பூஞ் சோலைக்குக் கூட்டிவந்தேன் இனிநடத்துங்காரிய மருள்செய்யவேணு ம் மகாராசனே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யடவியில்வேட்டையாடி
கப்பியமிருகக்கூட்டம் கலங்கிடவதைத்ததாலே
இப்பவுமேதோசோம்ப லினைப்பதுந்தோன்றுதப்பா
ஒப்பியசோலைதங்கி உதயந்தினம்செல்வோமே.

வசனம்.

கேளாய்மந்திரி வேட்டையாடினவிளைப்பு தீர சிரமபரிகரித்தவன் னதமான சோலையிற்றங்கியிருந்து வுதயமயோத்திக்குப் போகலாகு ச த்தியகீர்த்தி.

மந்திரி-வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திர மகாராசனும் சந்திரவதி யம்மனும் பூஞ்சோலை மருகினித்திரை செய்யும்போது அரிச்சந்திரமகாராசன் கனவுகண்டெழுந்து தன்தேவிக்குச் சொல்லுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-விருத்தம்

அன்னமேகுயிலேயென்ன வகாதமோகாலங்காணேன்
அன்னமேநித்திரை தன்னில் யான்கண்டகனவினாலே
அன்னமேயேதுவாமோ வறிகிலேன் றுயரமீதி
அன்னமேநோகலானேன் அரனடிகதிநமக்கே

வசனம்

கேளாய்பெண்ணே சந்திரவதி நான்நித்திரையிற்கண்ட கனவினால் மெத்தமனம் வருந்துகின்ற தென்னநேரிடுமோ தெரியாது யேதுக்கும் நமக்குத்துணை பரமசிவந்தான் யென்மாதே,

சந்திரமதி-விருத்தம்

நேசரோயெனதுபிராண நித்தரோதுயிலிற்கண்ட
நேசரோகனவின்சேதி நிகழ்த்துவீரெனக்குத்தோன்ற
நேசரோயெதுவந்தாலும் நிலையதுதவறப்போமோ
நேசரோவந்தாற்றுன்பம் நிற்குமோவழியிற்றுனே.

வசனம்.

கேளுமென் பிராணநாதா நீர்கண்ட கனவின் சங்கதி யெனக்குச் சொல்ல வேண்டியது;வரும்விதிவழிதங்குமோ மகாராசனே.

அரிச்சந்திரன் - வசனம்

ஆனால் சொல்லுகிறேன் கேளாய்பெண்ணே

அரிச்சந்திரன் - அகவல்

அன்னமேகேளாய் அன்றொருநாளும்
என்னருந்தையே னெழிலுறுதிரேகம்



சொர்க்கமடைந்தபின் றொருகையனைவனை
மிக்கவேனாலு யேவியேமணந்தேன்
ஐவரிலொருத்தியை யந்தணர்க்கீந்தேன்
நொய்யமற்றொருவளும் நோக்கியேசென்றனள்
மற்றொருநாரியோ மலமொளியிழந்தே
எற்றோவோர்திசைதான் யேகினள்கண்டாய்
ஒருத்திபாகாத் துணைவுடன்மற்றதும்
வெறுத்துமேசென்றனள் மெல்லியற்காசே
கடைப்பதியாதுமென் கைதனைப்பற்றியே
யிடைவிடாதிருந்தன ளென்னமோதெரியேன்

சந்திரமதி - விருத்தம்,

மன்னரோநீர்தான்கண்ட மருத்துவக்கனவின்சங்கை
மன்னரோயானேமாது மதிந்திடத்தகைமைகாணேன்
மன்னரோயெதுவந்தாலும் மங்கையோர்பாகன்காப்பான்
மன்னரோமதியுயர்ந்த மந்திரிக்குரைசெய்வீரோ.

வசனம்.

கேளுமென் பிராணநாதா நீர்கண்டகனவின் சங்கை நான்பெண்பார்த்தெரிந்து சொல்லக்கூடுமோ வருவதெல்லாம் வரட்டும் விவேகத்தினுயர்ந்த மந்திரியை யழைத்துச்சொல்ல வேண்டுகிறேன் சுவாமி.

அரிச்சந்திரன் - வசனம்

அப்பாகட்டியனே நமது புத்தியிலுயர்ந்த சத்தியகீர்த்தியை சீக்கிரமழைத்துக்கொண்டு வருவாயப்பா.

கட்டியன்-வசனம்

இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன் சுவாமி

கட்டியன் - வசனம்.

சுவாமி மகாராஜருமமை அழைத்துக் கொண்டு வரச்சொன்னாரையா.

மந்திரி - வசனம்.

அப்படியே வருகின்றேனப்பா கட்டியனே

மந்திரி - வசனம்

ஆண்டவனே யென்னை வகைமைத்த சங்கதி தெரியச்சொல்ல வேணும் மகாராஜனே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

என்னுயிர்க்குயிரதான வின்பனேசத்யகீர்த்தி
முன்செய்தப்பழியாலிங்கு முற்றனேயநித்திரைசெய்ய
பன்னுதற்கரியதான பலன்தாக்கனவுகண்டேன்
அன்னமுங்கேட்டயர்ந்தா ளறைகுவேன்கேட்டிடாயே.

வசனம்.

அப்பாமந்திரி நானிங்கே நித்திரைசெய்யும்போது காணப்போகாதகனவுகண்டேன் அதைச்சொல்லுகின்றே னறிந்து பலனைத் தெரியச் சொல்லுவாயப்பா.

மந்திரி - வசனம்

அப்படியே சொல்லுகின்றே னென்னாண்டவனே.

அரிச்சந்திரன் - கண்ணிகள் - பியாகடை - சாப்பு

என்னசொல்லுவேனப்பா - என்னசொல்லுவேனையா
  என்னசொல்லுவேன்நான்றான் மந்திரி-மந்திரி
வன்னமிச்சோலைதனில் - மாதுடன்நானுநித்திரை
  வருத்திட்டேன்கேளாயப்பா மந்திரி-மந்திரி
என்தந்தைசொர்க்கபேவி - யிருந்தவாறதுபோல
  விங்கென்முன்வேற்றக்கணடேன் மந்திரி-மந்திரி
சன்மத்தாலிவ்வுலகிற் - கன்னியவளைநான்
  கலியாணஞ்செயக்கண்டேன் மந்திரி-மந்திரி
ஐவரிலொருத்தியை - யாதுலர்க்கீந்துபின்
  அதிக்கொருத்தியுட்போனாள் மந்திரி-மந்திரி
சையிலுற்றவுமைசிற் - கண்கெட்டபொருயாது
  காட்டினிடயோடினாள் மந்திரி-மந்திரி
இருந்தவரிலொருவ - னினியபொசிப்பைவிட்டே
  யேங்கிப்பிரியக்கண்டேன் மந்திரி-மந்திரி



பெருமையாயொருமாது - பிணங்கியென்னுடனேயும்
  பிரியாதிருக்கக்கண்டேன் மந்திரி-மந்திரி
திக்கென்றெழுந்திருந்தே - திகைதப்பிமனம்வாடி
  தேவிக்குரைத்தேனப்பா மந்திரி-மந்திரி
பக்குவமறிந்துரைக்க - பதரும்மந்திரிக்கென்றே
  பன்னவுரைத்தேனப்பா மந்திரி-மந்திரி

அரிச்சந்திரன் - வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி யிந்தயிரவி லிப்படிக்கொத்த சொப்பனங்கண்டேன் இதின்பலாபலத்தை யெனக்குத்தெரியத்தீவாத்தில் சொல்வாயப்பா மந்திரி.

---

மந்திரி-கண்ணிகள் - முகாரி - சாப்பு

ஆமன்னவா யீதென்னகாலம் அமைந்ததேமன்னவா
பாவியாம்பிரமன் இவ்விதியிட பகைவைத்தனேமன்னவா
தேவேயாதுலன் கௌசிகனென்தெரிந்துக்கொள்வீர்மன்னவா
அளித்தமாதுமே நின்னுடென அறிந்திடுவீர்மன்னவா
கூடச்சென்றவனோ நின்னரிதியென குறிப்பறிவீர்மன்னவா
அன்னம்வெறுத்தவனோ நின்மாதுதான் அகன்றிடுவாள்மன்னவா
சண்ணிழுந்தவள்தானோ நின்பாலனும் சாகிறான்மன்னவா
கூடவிருந்தவனோ, சத்தியமென சொன்னடிவீர்மன்னவா
அவனாற்போனவையெலாம்பெருங்கீர்த்தி அடைந்திடுவீர் மன்னவா

சந்திரமதி-கண்ணிகள்-சஹானா-ஆதி

இந்தசெதியுமக்கே - யெய்திடலையையோ
  யென்னநான்செய்குவேன் சதியே - ஐகோ - பதியே
மந்திரிகனவுதின் - வாறுகவிடிவித்த
  வண்மைக்கெவ்விதஞ்செய்வேன் விதியே - ஐயோ-கெதியே
நாடுநகரிழந்து - நாயகாதனியாகி
  நகன்றெங்கேதவிப்பீரோ நாதனே-பதி-நீதனே

பாடுபடேயுமை - பாமன்விடவுங்காட்டில்
பலர்க்கு கைகுவிப்பீரோ — பாதனே-கலே-போதனே

அடியாளுப்பிரிவேனே - பருமகன் றனிப்பானே
அயன்விதியேதுவாமோ — ஐயனே-வாய்-மெய்யனே

படிமிசைகாவென்ன - பழிபாவஞ்செய்தனே
பத்தாவைத்தனிப்பேனே — பய்யவே-மனம்-நொய்யவே

நாட்டுமங்கையர்போல - நான்வாழுங்காலத்தில்
நாதாவுனைப்பிரிய — நாடுமோ-மனம்-கூடுமோ

காட்டிலேதிடிநுங் - கருமமேயெய்திடிநுங்
கைவிடிலேனுரிய — காடுமே-மதி-தேடுமே

பெருமையிருமையுறும்-பெண்ணூமக்கானதாற்
பிரியாதிருப்பீரோசெம் — பிரரே-தணே-வீரரே

வருமைவந்தெய்தினும் - வனங்கிடிற்கணவனை
வாய்க்குமப்பாக்கிசம் — மாரரோ-பதி-சூரரோ

அரிச்சந்திரன் - வசனம்

சுகத்தைவிட துக்கத்தை நலமாயெண்ணி நடக்கவேண்டும் என்ன காலம் நேரிட்டாலும் உன்னேயும் பாலனையும் சத்தியகீர்த்தியை மறக்கேன் நீசந்தோஷமாய் அயோத்திக்கு வருவாயடி யென் பிராணநாயகி.

சத்தியகீர்த்தி - விருத்தம்

காதகனுலேயிந்தக்கஸ்மூந்துன்பம்வந்தே
பாதகந்தோன்றிப்பின்னும் பனிபோலநீங்குமொர்க்குந்
சாதகமாவதற்கே சக்தியில்லாதகீர்த்தி
போற்வேபெறவீர்விண்ணோர் புகழ்ந்திடப்பதியாள்வீரே.

வசனம்

கேளும்.அண்ணலே விஸ்வாமித்திரனு லிப்போர்கொத்த துன்பத்தையெல்லா மனுபவித்து பின்பு இந்த பூலோகத்தின்கண் யாவருக்குங்கிட்டாதபெருங் கீர்த்தியடைந்து திவ்ய பதவியிற் சேருவீர் மகாராஜனே.



சத்தியகீர்த்தி-கண்ணிகள்-எதுகுலகாம்போதி - ஆதி

இந்தவிதிகாணவோ — அடவியில்வந்திருந்தோம்
யென்னசெதிவருமோ — ஓசிவமே-சிவமே

சந்ததமகிழ்வதாய்த் — தானிருந்தோமைத்துயர்
சாமதிதருமோ — ஓசிவமே-சிவமே

மன்னுதிமன்னர்சூழ — மகுடமாய்வீற்றிருந்தோர்
வருந்தத்தருமோநீதி — ஓசிவமே-சிவமே

என்னுலிங்காவேதது — இறையவன்வருந்தவும்
இருப்பேனோயுனையோதி — ஓசிவமே-சிவமே

என்னும்போய்வனிதா — வேந்தனுந்துயருற
எளியேன்காணவுமாமோ — ஓசிவமே-சிவமே

வென்னுவெற்றிபெருவேன் — வேற்றரசனைநீத்தால்
வினைத்தொடர்க்கேதுவாமோ — ஓசிவமே-சிவமே

தருமத்தேவனைதித்த — தாஞ்சகாயமாகவே
தாமேனுமனைத்தும்மெய்யா — ஓசிவமே-சிவமே

வறுமையினிமேலென்ன — வாய்க்குமோவேந்தனுக்கே
வஞ்சகனுலேஐயா — ஓசிவமே-சிவமே

ஆதிசிவமேநீதான் — அருள்புரிந்தேயெங்களை
யன்புடன்காக்கவேணும் — ஓசிவமே-சிவமே

சோதித்தாலுமிருமை — ஜோதியமைகிழ்ந்தே
சுயம்பெறமனம்பூணும் — ஓசிவமே-சிவமே

அரிச்சந்திரன் - விருத்தம்

வருமவிதிவந்தேதீரும் வழிதனிற்றடுக்குமோதான்
தருமமேகாக்குமென்ற தினையனே துயரம்வேண்டாம்
கருக்கனுமீங்கிப்போதை கடிகையமைநீசா
விருப்பமாய்ச்சேனையெல்லாம் வெளிப்படச்செய்வாய்மந்திரி.

வசனம்

அப்பாமந்திரி வருவதெல்லா மனுபவிக்க வேண்டியதல்லோ நீங்களுந்திருந்தின்றேனு சகிதமாய்மென்னாளுமிந்த பொழுதுமவிழ்ந்தா யாத்திக்குப் போகவேண்டி சேனைகளை சித்தப் படுத்துவாய்.

மந்திரி - வசனம்

அப்படியே சித்தப்படுத்துகின்றேன் சுவாமி

மந்திரி வசனம்.

ஆண்டவனே யுமது ஆக்கினைப்படி சேனைகளையெல்லா மொன்றா
ய்ச் சேர்த்தேன் மகாராசனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

அப்பனேசத்தியகீர்த்தி அருமையாங்குடிகள்வந்து
செப்பவேவேட்டையாடி சிதைத்ததால்விலங்கைநாமே
இப்பவேநாட்டிற்கேகு மெண்ணமும்வதைத்தவாறும்
ஒப்பவேயவர்கள்கேழ்க்க வொலிப்பிப்பாய்பேரிதானே.

வசனம்.

அப்பாமந்திரி மிருகங்களால்வருந்திய குடிகள் கேட்டு சந்தோஷி
க்கும்படிக்கு ஜெயபேரிகை அடிப்பிப்பாய்சத்தியகீர்த்தி.

மந்திரி-வசனம்.

அப்படியே யடிப்பிக் கின்றேன் மகாராஜனே

அரிச்சந்திரன்-விருத்தம்.

மந்திரிநாடுவந்தோம் மனக்குறையகன்றேயப்பா
மந்திரிசேனையெல்லா மவரவர்வீடுதிக்கேக
மந்திரிவிடைநீயீந்தே மகாபலவேடருக்கே
மந்திரிபொன்பட்டாடை மகிழ்ந்திடவளிப்பாயப்பா

வசனம்

கேளாயப்பா சத்தியகீர்த்தி காட்டுமிருகங்களை வென்று நாம்
டுவந்து சேர்ந்தோம் சேனைகளை யவாளவாள் வீடுதிபோகச்செய்து
டர்களுக்கு நல்லவெகுமதி கொடுத்தனுப்புவா யப்பாமந்திரி.

மந்திரி - வசனம்.

அப்படியே கொடுத்தனுப்பு கின்றேன் மகா



பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரன்விட்ட பன்றியான
து அரிச்சந்திரமகாராசன் அம்பினாலடிபட்டு நொந்து கவுசிகனிடம் மு
றையிடவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

பன்றி - விருத்தம்

அறமுனியேநீர்விடுத்தபடியேகியருட்பலத்தா
லடவிதன்னில்
உறமானபரிசேனைகளைக் கோட்டாவிடித்திட்டே
னுதிரமெங்கும்
பாவியதுவாரிபைப்போற்சாய்ந்துவிழபார்த்துநான்
பதைக்கக்கொன்றேன்
புரமெரித்தபரமனைப்போ லரிச்சந்திரனெனையெய்தான்
புனிதாகாப்பீர்.

வசனம்.

முனிநாதா உமது ஆக்கினைப்படி அரிச்சந்திரன் சேனையின் பேரி
ல் விழுந்து மடித்தேனதற்குள் அரசன் கால ருத்திரனைப் போலவந்
தென்னை வருத்தித் துறத்தினான் காப்பீர் சுவாமி

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியாபன்றியேயுன்னை வருந்தச்செய்த பாதகன் செருக்கை
யொடுக்கிறேன் நீசுகமா யிருப்பாய் பன்றியே.

வேட்டஞ்செய் காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன் துணை.

# சூழ்வினை காண்டம்.

பொது - விருத்தம்

ஏழுமுறையிடக்கேட்ட முனிதான்மெத்த
வெறிகடனாகிமுனை ந்திவெழும்பி
வாமனனும்பூசுருமா முனிவர்யோகர்
வாடிமன்னர்கிலேமலைந்து பயங்கிவிழ
தாமதம்போலிருந்தச் சையம்பானா
தற்செயலாயுற்பவித்துத் தானேமோடி
காமனுடைப்பெண்களை வரிச்சந்திரன்பாற்
களிப்புடனேயனுப்புவிதங் காணுவீரே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே பன்றிபட்ட துன்பங்கண்டு விஸ்வா… மித்திரன் கோபங்கொண்டு நாசிகாரத்திலிருந்து இரண்டுபுலைச்சிய… களையுண்டு பண்ணி யரிச்சந்திரனிட மேவுகிற விதங் காண்பீர்கள் கன… வான்களே.

பாணப்பெண் - விருத்தம்

திங்களுங்கங்கைபூண்டுந் திரிபுரமெரித்தோன்றன்னை
பொங்கமாய்த் துதிக்குமாதா புனிதமேயின்னருள்போற்றி
எங்களையிட்சணத்தி லெண்ணியேபடைத்ததேனோ
புங்கவாதெரியசொல்லாய்ப் புகன்றிடிற்புரிகுவோமே.

வசனம்

சுவாமி பெண்களைப்படைத்த காரியந் தெரியச் சொல்லவேணும்… னிநாதா.



விஸ்வாமித்திரன் - விருத்தம்

புலினைப்பூட்டும்பெண்களேநீங்கள் மலைகளுங் [illegible]
சனாசங்கிதம்
ஜெயம்பெறப்பாடியயோத்தியன்மனைத
சீக்கிரமுறிந்திடச்செய்தும்
பயமதுவடங்கிதபோகமு மாட்டிப் பாலவர்கள்
காதரும் மடாத்தந்
தபவுடனேப்பிரதிக்கிடிற்குடையைத்
தானமாய்வாங்கியேவருவீர்.

வசனம்.

கேளுங்கள் பெண்களே நீயரிச்சந்திரனைக்கண்டு அவன்மேசி… கூறும்படிக்கி கொட்டியாகுசெய்து பாடியுமாடி சோசிசெய்து சுவிப்பீர்க… ள் தடைசொல்லாமதில் பூர்சக்கிரகுடையை வெருமதியாகக் கொடுக்க… ச்சொல்லி வாங்கிவாருங்கள் பாணப்பெண்களே.

பாணப்பெண் - வசனம்.

சுவாமி நீர் சொன்ன படியே சென்று காரியத்தைமுடித்து… க்கொண்டு சீக்கிரத்தில் வருகிறோம் அருகாரும் முனிநாதா சரணம்… சரணம்.

விஸ்வாமித்திரன் - வசனம்

அப்படியே போய்வாருங்கள் பெண்களே

கட்டியகாரன் - விருத்தம்

புவனமெலாமொருகுடைக்கீழ் ஆளும்வீரர்
புண்ணியநெறிதவறாத அருமையாளர்
[illegible] படைத்தமுனை சிலர்களார்
காத்தசிலைகாம்பீர ஜாலையுங்காக்குந்தாரார்
தவம்புரியுமுனிவருக்கே யினியராளர்
தனமபொருமைக்கிதை புரிந்தோர்
பலமனுசாஸ்திரமுடையோர் பகைவர்க்காரர்
பரிதிகுலவரிச்சந்திரர் வருவாராமே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இராஜாதி ராஜனான அரிச்சந்திர மகாராஜன் கொலுவிற்குவருகிறார் கனவான்களே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னர்மன்னருக்கெல்லாம் மன்னனரிச்சந்திர
மஹாராஜனிதோவந்தான் கொலுவிருக்க
மகுடவர்த்தனன்வந்தான்

அநுபல்லவி.

அன்ன நடைவஞ்சிய ராடச்சவரிபோட
அந்தணர்சித்தர்யோக ராசியதனைப்பாட
நன்னகர்மாந்தர்களும் நாடிப்பணிந்திட
நாற்றிசையிலுங்கீர்த்தி யசமுடனணிந்திட
நல்லுளாந்தங்கியே நவிலொணாமகிமையாய்
அல்லும்பகலும்சிவ-னடிதுதிநேமியாய் (மன்)

சரணம்.

நெத்திப்பட்டமிலங்க நிசமுமுடியுந் துன்ன
நோய்முத்துவடமும் நீண்டவலய மின்ன
சத்தியகொடிதுலங்கச் சாமரைபேரி பன்ன
சான்றோனிவனேயெனச் சகலருந்துதி என்ன

நித்தியசருமநெறிநிலைபிசகாத நேயன்
நிகருண்டோவெவருக்கும் நினைக்கப்போகாத தூயன்
பத்தினிமாதுபாகம் பண்ணிருத்திடும் சாயன்
பலகலைநீதிபத்தி பாரில்சத்திய வாயன்

பம்பையின்றொலி பம்பம்பம்மென
ஜம்பையின்ஜாலர் ஜம்ஜம்ஜம்மென
கொம்புகள்தொனி கும்கும்கும்மென
தம்புருஇசை தொம்தொம்தொம்மென



ஜொலிக்க பகைவரா செலிக்க தவனியே
பலிக்க சத்தியம் ஒலிக்க புகழுடன்
சொல்லொணாதகீர்த்தி சூழ்ந்திட வந்தவன்
மெல்லொணாதசித்தி மேன்மைகள் தந்தவன் (மன்)

அரிச்சந்திரன் - வசனம்

அப்பா சத்தியகீர்த்தி நமது நாட்டின் ஆலயங்களில் கிரமப்படி பூஜைகள் நடந்துக்கொண்டும் மாதத்தில் மும்மாரி பெய்துக் கொண்டும் வருகின்றதா.

சத்தியகீர்த்தி - வசனம்

மகாராஜனே யாதொரு குறையின்றி நடந்துக் கொண்டு வருகின்றது மகாராஜனே.

பொது - விருத்தம்

மாதர்கள்கண்டுநாண மானுக்கள்மையல்பூண
ஆதவர்மனமும்மாட அமரருமயங்கித்தேட
நீத்றமுகத்தின்காந்தி நிரேகமெங்கெங்குங்கப்ப
பாதகன்விட்டபாணப் பறத்தையர்வருகின்றாரோ.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திர னேவிய பாணப்பெண்கள் அரிச்சந்திர மகாராசனிடம் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

பாணப்பெண்-தரு-பியாக்-ஆதி.

தந்திரமாய் - தவிர்த பாணமாதர் வந்தார்

கந்தகளபம் பூசி
கன்னியர்தமை ஏசி
சந்தமாகப் பேசி
சொருசாய் கைகளை வீசி (தந்)

கொங்கைகுலுங்க ஆட்டி
குதிப்பாய்பாதங் காட்டி
செங்கைவளையற் பூட்டி
சிவிக்கொண்டையு நாட்டி (தந்)

அண்டத்துளோர்க ணேவ
அனைவரொளிகண் மேவ
கொண்டைக்குயிலுங் கூவ
கோரிச்சபையைத் தாவ (தந்)

வானத்தமரர் வாடி
வருந்திமனங்க ளோடி
கிளைமொழிகள் பாடி
கிடத்தத்தித்தோமென் ருடி (தந்)

பாணப்பெண் - வசனம்

பராக்கு பராக்கு வீரகட்டியனே.

கட்டியன்-வசனம்

பெண்களே நீங்கள் யார் எங்கிருப்பவர்கள் இங்குவந்த காரியம் தெரியச்சொன்னால் ராஜசமுகத்தில் தெரிவிக்கின்றேன் பெண்களே.

பாணப்பெண் - விருத்தம்

இருப்பதுஇமயச்சார லிறைவாடன்புகழைக்கேட்டு
விருப்பமாய்வந்தோநாங்கள் விநோதமிகடனமாதர்
வெறுப்பதுகொண்டிடாமல் வேந்தன்பாலுரைத்தேயெங்கள்
கருத்ததைமுடிக்கச்செய்வீர் கழலடிபோற்றியையா.

வசனம்.

நாங்களிருப்பது இமோத்திரி பருவதச்சார லுங்க ளூட்டியமாதர்கள் ராஜனுக்குத் தெரிவித் தெங்கள்கோரிக்கை யீடேறச்செய்யும் கட்டியரே.



கட்டியன்-வசனம்

அப்படியே தெரிவிக்கின்றேன் பெண்களே

கட்டியன் - வசனம்.

ஆண்டவனே யிமயச்சாரலி லிருந் திரண்டு நாட்டியமாதர்கள் வந்திருக்கிறார்க ளுத்திரவாகில்வரச்செய்கிறேன்மகாராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்

வரச்சொல்லும் பிள்ளாய் கட்டியனே.

கட்டியன் - வசனம்.

அரசனுத்திரவாச்சுது கொலுமுன்போவீர்கள் பெண்களே.

பாணப்பெண் - கவி

தீரா பராக்கு மாராபராக்கு
சூரா பராக்கு துரையே பராக்கு
நேரா பராக்கு வீரா பராக்கு
காராய் பராக்கு கழலே பராக்கு

வசனம்

இராஜாதி ராஜ ராஜ பரமேஸ்வரா பராக்கு பராக்கு

அரிச்சந்திரன்-விருத்தம்.

மேகத்தைப்பழிக்குங்கூந்தன் மேவியபெண்களாரோ
நாகமங்கையரோதேவ நாட்டில்வாழ்நங்கைமாரோ
மோகமங்கையரோமாரன் மொய்த்திடுங்கன்னியாரோ
வேகமேயிங்குவந்த வினையதையுரைசெய்வீரோ.

வசனம்.

கேளுங்கள் பெண்களே நீங்கள்யார் தெய்வலோகத்துப் பெண்களோ நாகக்கன்னிகளோ ரதிமாதர்களோ விங்குவந்த காரியந் தெரியச் சொல்லுங்கள் பெண்களே.

பாணப்பெண் - வசனம்

மகாராஜனே நாங்களிருப்பது இமய மலைச்சாரல் தொழின் டனம் புரிவது குலம் நீசப்பெண்கள் உமதுகீர்த்தியைக் கேட்டு நடித்து வெகுமதி பெறவந்தோம் வேந்தனே.

அரிச்சந்திரன் - வசனம்

நல்லது நீங்கள் கற்றபதத்தையும் நாட்டியத்தையும் பார்ப்போம் நடத்துவீர்கள் பெண்களே.

பாணப்பெண் - வசனம்.

மகாபாக்கியம் மகாபாக்கிய மப்படியே பாடி நடிக்கிறோம் மகாராஜனே.

பாணப்பெண்-ஜாவளி-செஞ்சுருட்டி-ரூபகம்.

சாமியுன்முகக்காந்தி சாமர்த்தைக்குதேஜ
காமியாகிவாடவிதி கண்டேனெனைக்காருமே (சாமி)

தனியாவந்துவேண்டுமாதை தவிப்பதுமேதர்மமோ
இனிவாயெனைச்சேரவிடில் ஏதேதினித்தாளேனே (சாமி)

எங்களைப்போல்பெண்களிலேயிறைவனேகண்டதுண்டோ
கொங்கைதொட்டுப்பார்த்தாலிந்தக் குமரிசுகங்காணுமே (சாமி)

ரசமிலாநாரியுடன் சையோகம்வீணலவோ
நத்தாவெனையணைத்தால்வெல்ல கட்டிரசந்தோணுமே (சாமி)

கோபக்குறிநீக்கியெனைக் கொஞ்சிமுத்தமிடுமே
பாபமாகும்நீர்தடிக்கில் பழியேதுமில்லைதேவனே (சாமி)

அரிச்சந்திரன்-வசனம்

வெகு நேர்த்தியா யிருக்கின்றது இன்னமொருபதம் பாடி நடிப்பீர்கள் பெண்களே.



பாணப்பெண் - வசனம்

மகாபாக்கியமப்படியே பாடி நடிக்கின்றோம் ராஜபரமேஸ்வரா

பாணப்பெண்-ஜாவளி-வசந்தா-ஆதி.

வாடிநின்றேனையனே-கூட-வாராதென்னையெய்யனே.

தேடியிங்குற்றனம் திசமூடனெங்களைத்
தீண்டாதிருக்கப்போமோ தேவாவிதோ (வாடி)

பேடியோநீன்றி பெண்களிலாணோ
பிடித்தென்பெருமுலை பேணாவிதோ (வாடி)

ஆண்மையிருந்திடில் அணைந்திடுமெந்தனை
அலியாகிலெனக்கு அறையுமிதோ (வாடி)

அரிச்சந்திரன் - விருத்தம்

மந்திரிகேளாயிந்த மாதர்கள்புரிந்தநாட்டியந்
தந்தனர்செவிக்கேயின்பந் தனையவேயிவர்களுக்கே
விந்தமாம்பட்டுஆடை வெள்ளிபொன்பணியுமீந்து
சுந்தரசத்தியகீர்த்தி சுருக்கெனவிடையீவாயே,

வசனம்

கேளாயப்பா மந்திரி யிந்தப்பெண்கள் பாடிய பதங்கள்செவிகளுக்கின்பந்தந்தன நல்ல ஆடை ஆபரணங்கள் கொடுத்தனுப்புவாய் சத்தியகீர்த்தி.

பாணப்பெண் - விருத்தம்

வேந்தனேகேட்பீர்நாங்கள் வேண்டிலோம்பொன்பட்டாடை
சாந்தனேயெங்களுக்கே சம்பத்துமெத்தவுண்டு
தீந்திடவெங்களாசை தேவேபூச்சக்ரமென்னும்
காந்தியாங்குடையளித்தால் களித்துநாங்கொள்ளுவோமே.

வசனம்

சேனும் ராஜபரமேஸ்வரா நாங்கள் பொன் பொருள் பட்டுகள் வேண்டிலோம் எங்களுக்கு மெத்தவுண்டு உமதுபூச்சக்ரக் குடையைக் கொடுத்தால் சந்தோஷமடைவோம் மகாராஜனே.

சத்தியகீர்த்தி - விருத்தம்

படபடப்பின்றிச்சொன்ன பாவைகாளுனைக்கக்கேளீர்
நடன்மும்புரிந்திராஜன் நற்பணிபரிசுவிந்தால்
விடமெனத்தடுத்திர்கிட்டா விருதெனுங்குடையைக்கேட்டீர்
திடமுளபொருளைக்கேட்டாற் றிண்புயரளிப்பார்தானே.

வசனம்

சேனுங்கள்பெண்களே கிட்டும்பொருளைக் கேட்டால் கிடைக்குமேயன்றி கிட்டாதகுடையைக் கேட்டால் அகப்படாதென் றறிவீர்கள் மாதர்களே.

பாணப்பெண்-விருத்தம்

தேடியேவந்துநாட்டியந் தேவனேபுரிந்தோமெத்தப்
பாடியோர்குடையைக்கேட்டோம் பார்வேந்தேயெங்கள்தன்னை
கூடியேசுகித்தால்மெத்தக் குணமதாங்குடையும்வேண்டோம்
ஓடியேசெல்வோம்நாங்கள் உற்றமேதார்பதிக்குத்தானே.

வசனம்.

சேனும் மகாராஜனே நாங்கள்வந்துபாடியாடி சந்தோஷப்படுத்தி வெகுமதியாக ஒருசிறியகுடையைக் கேட்டோம் தடுத்தீர் எங்கள் மனசுசந்தோஷப்படும்படி பெண்களைச்சேர்ந்தா லதுவே போதும் மகாராஜனே.

சத்தியகீர்த்தி - விருத்தம்

வழுத்தியவார்த்தைகேட்ட வலுமைசேர்கட்டியக்காரா
இழுத்திவர்கரத்தைப்பற்றி யிவ்விடமின்றிடாமல்
கழுத்தினைப்பிடித்துத்தள்ளு கடோரமாம்வார்த்தைசொன்ன
கொழுத்தவர்தமைநீயே கொப்பெனநீக்குவாயே.



வசனம்.

அடா கட்டியக்காரா அடாதகாத வார்த்தையாடிய விந்தப்பெண்களை கழுத்தைப்பிடித்து கெட்டி நமது நாட்டைவிட் டப்புறந் துறத்தி விடுவாய் கட்டியனே.

கட்டியன் - வசனம்.

நடவுங்க ளடி துன்மார்க்கிகளே கழுத்தைப்பிடித் திதோ தள்ளினேன் ஓடிப்பிழைத்துப் போங்கள் இல்லாவிட்டால் கொடியதெண்டனைக் காளாவீர்களடி நீச்சப்பெண்களே.

பாணப்பெண்-இ-ம்-காபி ஆதி

அடி-வாடி போகலா மினிநாமே

நாடி நாடியே நயந்துபேசிப்
பாடி ஞானும் பாரான் தோஷி
கூடிலேது குணமாகுமடி (வாடி)

கோடிகோடியாய் குப்பிடிட்டும்
வாடிபுர்தம் வணங்கித்தொட்டும்
மோடியாக முனிந்தானடி (வாடி)

மெத்தஆடி மெலிந்தோமென்று
கத்தலிதோ கடிந்தானின்று
மத்தன்சுத்த மட்டியாமடி (வாடி)

பாணப்பெண் - காப்பி-ஆதி.

அடிபாரேனென்ன அவதிப்பட்டோமடி
அயோத்திபதிதந்திட லானதுமிப்படி (அடி)

முடிமிசைமதியணி மூர்த்தியின்பாதத்தை
முற்றுமறிந்தமித்திர முனிசொன்னபோதத்தை
படிதனிலெல்லார்களும் பணியவடித்துகர்மை
பலவாறிகழ்ந்துபேசி பதாவடிக்கலானுன் (அடி)

மண்ணினுள்வேந்தரு மமரர் முனிவர்களும்
மனமதுருகிடமை மருவுமெவர்களும்

கண்ணியமைதன்னிலும் கனிவுகாட்டாமலே
கடிந்துவைபடித்தே கட்டியன்தள்ளிட (அடி)

பேடிப்பிறப்பாயினும் பேதையேயென்மொழியால்
பிரியமீறுவான்மானை பிசைந்திடுவான்கையால்
மோடியாயிருந்தனன் மொழியொணுசத்யவான்
முனிவற்கிதையுரைத்து முறையிடுவோமடி (அடி)

பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாக பாணப்பெண்களடிபட்டு விஸ்வாமித்திரமுனியிடம் முறையிடுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

பாணப்பெண் - விருத்தம்

நீருரைத்தபடிசென்றே யரிச்சந்திரன்பா
னேர்மையுடனடித்திட்டோமகிழ்வுகொண்டே
தேருபட்டுமுத்துவடம் பொன்கொடுக்கத்
தீரனுமேதானுரைக்கக்குடையைக்கேட்டோம்
பேருபுனையந்திரிதான் றகாதுவென்றான்
பேசினேமர்சனையே சோச்சொன்றேங்
கூறுகெட்டவார்த்தையென்றேகோபங்கொண்டான்
கொப்பெனக்கட்டியன்றள்ளக்குத்தினனே.

வசனம்

கேளும் முனிநாதா அரிச்சந்திரன்முன் நாட்டியஞ்செய்தோம் சந்தோஷப்பட்டு வெகுமதிகொடுக்கச் சொன்னான் றடுத்துக் குடை கேட்டோம் மந்திரிதடுத்தான் அரசனை சோவா வென்றேங் கட்டியன் பிடித்து அடித்துத்தள்ளினான் நாங்கள் தப்பி வுயிர்பிழைத்தோடி வந்தோம் மகாரிஷியே.

விஸ்வாமித்திரன்-தரு-அட்டாணா-ஆதி

பல்லவி.

இப்படியடிப்பித்தானு - வென்பெண்களே யுங்களை
யிப்படியடிப்பித்தானு



அநுபல்லவி.

கைப்பிடித்திழுத்தேயுங்கள் காலடிபணியச்செய்வேன்
கள்ளனவனுடைய வுள்ளங்கலங்கக்கொய்வேன் (இப்)

சரணங்கள்.

கொண்டகெருவமெல்லாம்போக்கிறேன் - நீங்கள்
கோரியபடிநடக்கப்பார்க்கிறேன்

கண்டவுடனுங்களைக் கைபிடித்திட்டாலாச்சு
கருதேனென்றவன்மேற் காட்டுவேன்வெகுயேச்சு (இப்)

மாதைத்தொடவேயுண்டோ நீதியே - அவன்
வமிசத்திற்கெல்லாநானே ஆதியே

வேதைசெய்தவன்கரம் வெட்டவைக்கிறேனிங்கள்
விடுத்துத்துயரமென்பின் விரைந்துபோவோம்வாருங்கள் (இப்)

அரசன்றனக்கிதுவுந் தகுமோ - யாசித்தோரை
யடித்துத்துறத்தவியாயம்புகுமோ

சாசரவென்றேவாங்கள் சாடுவேனவனை
தாழ்ந்தாலுங்களைமணந் தான்பற்றிடச்செய்வேனினி (இப்)

விஸ்வாமித்திரன்-வசனம்

அடா கட்டியக்காரா அந்தவரிச்சந்திரனுக்கு நான்வந்தசேதியைத் தெரிவியும்பிள்ளாய்.

அரிச்சந்திரன் - வசனம்

ஏதுகாரியந் சொல்லும் பிள்ளாய்

கட்டியன் - வசனம்

சுவாமி விஸ்வாமித்திர முனி கொலுவிலிருந்து தள்ளுண்ட பெண்களின் கட்டியக்காரன் வெருகோபங்கொண்டு வந்திருக்கிறார் ஆண்டவனே.

அரிச்சந்திரன் - வசனம்.

இதோ வந்தேனப்பா கட்டியனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

தவத்தினிலுயர்ந்தவென் றன் குருவேயுன்றாள்போற்றி
பவத்தினையொழித்ததிவ்ய பண்பனேயுன்றாள்போற்றி
இவரியாதரோடி யிணையிலாக்கோபங்கொண்டே
அவதியோடிங்குவந்த தடியனுக்குரைப்பீர்போற்றி.

வசனம்.

போற்றி போற்றி யென்னாண்டவனே தாங்களிவ்வளவு கோபங் கொண்டிந்த நீச்சமாதரை யழைத்துக்கொண்டுவந்த காரிய மடியேனுக் குத் தெரிவிப்பீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

அலைகடலுளதோரிந்த வவனியையாளுமன்னர்
நிலைமையுந்தமையுநீதி நேர்மையுமுன்னிற்காணேன்
கொலைபுரிதொழிலுங்கெட்ட குணங்களுமிரப்போற்றியா
தலைமையும்புரிந்தாயன்றித் தகைமைவேறுண்டோசொல்வாய்

வசனம்

அடா அரிச்சந்திரா ஆ ஆ பளா பளா நன்றாயிருக்குது அரசர்களு க்குரிய பூதயவு பச்சாதாபம் நவநிக்கிரகம் நீதி யிவைகளி லொன்று மு ன்னிடங்காணேன் ஆனால் கொலைபுரிவதும் கெட்டநடக்கையும் ஏற்பவர் க்கில்லையெனுங்குணங்கள் மாத்திரங் கண்டேன் இவைகளுக்கு நீதான்கு ரு வேறுண்டோ சொல்லடா.

அரிச்சந்திரன் - விருத்தம்

இப்புன்மொழிகளெல்லா மேற்றிடுமுனியேநாதா
ஒப்புமைவேறுமுண்டோ வுரைக்கவுமடக்குளானேன்
தப்புரோசெலைகுஅன்பு தனையவளையிழிவதாச
செப்புவாரியேநீருஞ் சீருடன்வெளிசெய்வீரோ.



வசனம்-

சேனும் சுவாமி யுமதுவாக்குக்கு வேறுசொல்ல விவ்வுலகோரா லாகுமோ வெனதுநெறி பிசகாமோ நீரென்பேரி லிப்படிக்குக் கோபிக் குங்காரணந் தெரியச்சொல்லும் நாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

தவஞ்செய்வோர்க்குதவுமந்தத் தன்மையைநீக்கிநீதான்
பவமுறக்காட்டிலேகிப் பலமிருகத்தைக்கொன்றாய்
நவமுளசோலைவாழும் நல்லபன்றியைவதைத்தாய்
அவமதியன்றோநீயு மடித்ததுமிவளைத்தானே

வசனம்.

அடா வரிச்சந்திரா தவசிகளுக்குத் துணையாயிருக்கு மிருகங்களை க்கொன்று மெனதுசோலையில் வாழ்ந்திருந்த பன்றியை வதைத்தாய் த வி ரவென்பெண்களாகிய விவர்களையு மடித்தா யிதுநீதியோசொல்லடா மன்னா.

அரிச்சந்திரன் - விருத்தம்

நீதியாமன்னர்வேட்டை நீடித்தன்முறையேயாகும்
ஆதியிலுதித்தவேத மறைவதுமறிந்திலீரோ
கோதிலாமனத்தோய்மாதர் கூறியமொழியால்மந்திரி
ஓதினன்றள்ளச்சொல்லி யும்பனேபொறுத்திடீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நாட்டில் பிரவேசித்த மிருகங்களை வேட்டை புரி வது வேதவிதியன்றோ விம்மாதர்க ளடாதவார்த்தை புரிந்ததால் மந்திரி தள்ளச்செய்தான் பொறுத்து ரட்சிப்பீரோ ஆண்டவனே.

விஸ்வாமித்திரன் -வசனம்

அடாசண்டாளா அச்சமின்றிப் பேசலானாயடா துரோகி

அரிச்சந்திரன்-தரு-சுருட்டி-ரூபகம்.

கோபஞ்செய்குவதேனையா — என்
குருவே-மருவே-திருவே-நீர் (கோ)

பாபஞ்தீர்த்தென் தந்தைக்கேசுகம்
பலித்தேயந்தர மேலிட்டனாதா
தாபமேது அடியேனுக்கருள்
தருகவேணுஞ் சகியேன்பாதா (கோ)

சாமியாக்கினை கடந்துவொன்றும்
சாற்றசக்ய னல்லநாதா
பூமியில்நான் வந்தபோதேயுன்
பொன்னடிக்கா ளானேன்வேதா (கோ)

பார்த்துபார்த்து பட்சிகளெலாம்
அடர்ந்தவிருட்ச மடையுமேநாதா
பிறந்தநாளா யுன்றன்பாதம்
பெருமையாய்க்கொண் டிருந்தேன்பாதா (கோ)

வனத்திலுமிந்த நாட்டிலுள்ள
வகையோருக்கிடம் வேறேநாதா
எனக்குகெதி யுன்றன்பாதம்
என்றேநம்பி யிருந்தேன்வேதா (கோ)

சிறியன்செய்த பிழைகடன்னை
சிந்தைபொறுத்தல் பெரியோர்நாதா
அடியேனென்றும் புரியேன்வேறு
அடியேனுன்றன் சேயேபோதா (கோ)

---

விஸ்வாமித்திரன் - விருத்தம்

மனமதுகலங்கவுன்றன் மணிமுடியுதைத்தேன்மெத்த
சினங்கொண்டேன் தடுத்துச்சொன்னாற்செயித்திடமினவுங்கொள்வேன்
கனமுடனுனேபெற்ற கன்னிகைமாரைநீதான்
மனமுறச்செய்தவேலை மன்னிக்கலானதன்றே.



வசனம்

அடாயிதோவுன்முடியை வுதைத்துத் தள்ளினேன் வேறுசொன்னாற்சபிப்பேன் என் பெண்கள்பேரில் நீ நடாத்திய அக்கிரமம் மன்னிக்கப் படாதென்றறிவாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் - விருத்தம்.

அரசரின்சபையில்வந்தே அடாததோர்வார்த்தைசொல்ல
தாமதோயிவர்கள்தம்மை தான்மேலவுதைத்தல்நன்றே
பாபாப்புடனேவந்து பாவையர்தமக்கேபூரி
திருமுடனிந்துக்கட்டிற் நீயன்செய்மார்க்கம்யாதோ.

வசனம்

கேளுஞ்சுவாமி கொடுத்தவெகுமதியைத் தடுத்த ராஜசபையில் அடாதகாரியமானசொல்லைப் பேசிவிவர்களுக்குதகுமோமுனிநாதா

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

தானத்திலுயர்ந்தோனென்றே தான்கொண்டேன்
மனதில் தோற்றம்
மானமும்பெருமைவேண்டில் மருவுமா
மிவர்கள் தம்மை
மீனமென்றுனைப்பாயாகி லென்மனப்
படி நீ மிக்கால்
போனகான்களிப்பேனிதான் மொழிசெய்வாய்
விரைவாய்த் தானே.

வசனம்.

நீ தானங்கொடுப்பதில் தீரனென்றறிந்தேன் உனக்குப் பெருமை வேண்டிடிவர்களைக் கலியாணஞ்செய்துக் கொள்ளு இல்லாவிடில்நான் கோபம் வாறுகொடுப்பையோ சொல்லடா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் - விருத்தம்

ஏதுநீர்கேட்டிட்டாலு மீதுவொன்றமையாது
யாதினைத்தழுவெண்ணமை பனதிலிலென்றநாடேன்

வாதனையெதுவந்தாலும் வாங்கிடேன்மனம்பின்னாதா
சோதிக்கலாமோநாடிச் சொல்வதைக்கொடுப்பேன்கொள்வீர்

வசனம்

கேளுஞ்சுவாமி நீ ஏதுகேட்டாலுங் தருவேனிதா மாதனைச்சே ரோன் இவர்களெனக்குப் பிள்ளைகளாகும் யெத்துயர் வந்தாலுங் கலங் கேன் றெறிவீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

வேண்டியதேதுவோரேழ்க்க விருப்பமாய்ச்சொன்னாய் நீதான்
ஆண்டிடுமரசுநாடு மதிலுளபொருள்களெல்லாம்
தாண்டிநீநகர்ந்திடாமற் றருமவானுவாயீக்தா
லீண்டிங்குசெய்தகுற்ற மினியுடன்பொறுப்பேன்காணே

வசனம்

அடாகேட்டதைக் கொடுப்பேனென்ற துராங்காரியே யுனது செ ங்கோல் அரசு நாடு நகரமுதலான வைகளை நின்றநிலையிற்கொடுத்தா நீவேணுமென்று செய்தகுற்றத்தைப் பொறுப்பேனடா அரிச்சந்திரா

அரிச்சந்திரன்-விருத்தம்.

மன்னவனுனேயாகும் மாமுனியுரைப்பேன்கேளீர்
சொன்னதோர்வார்த்தைதப்பேன் சுறுக்கெனநீட்டுங்கையை
இன்னகாரசும்வாழ்வும் இறைவநின்றனக்கேயென்று
வன்னமாய்த்தாரைதானே வார்க்கிறேன்கொள்ளுவீரே.

வசனம்

கேளுஞ்சுவாமி நீர்கேட்டபடிக்கே யெனது அரசுநாடு நகரமு தலியதும் நான்சொன்னசொற் பிரகாமநுமக்கே, தாரைவார்க்கின்றே னைக்கொள்ளும் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

இதுநிஜமான வார்த்தைதானா சத்தியந்தானா அல்லது பொய்யோ வோ சொல்வாய் மன்னா.



அரிச்சந்திரன் - விருத்தம்

தப்பிடேன்சொன்னவாக்கை தவமுனிசத்யஞ்சத்யஞ்
செப்புவாறிதாமாதர் சேர்க்கையைவிரும்பேனானே
முப்புரமெரித்தோனுணை முனிவரேயாசையீந்தேன்
இப்புவிபுகழநாட்டை யேற்றுநீராளுவீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நான்சொன்ன வாக்கைதப்பேன் பரமசிவனறிய வெனது அரசை யுமக்கேகொடுத்தேன் நீர் சுகமாக அரசுசெய்வீர் ஆனா லிதா ஸ்திரீகளை நான்கனவிலும் விரும்பேனென் றறியும் நாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

கேடறநானுன்றுஞ்சொல்லேன் வேந்தனேசத்யனீயே
பாரையேயெனக்குஅப்பா பண்புடனளித்தேனென்றாய்
நீரைநீசையிலள்ளி நினைவதையென்மேல்வைத்தே
தாரைதான்வார்ப்பாயாகில் சத்யமென்றுணருவேனே.

வசனம்.

கேளும் ராஜனே நீநாடுநகரமெல்லாங் கொடுத்தே னென்றாய் ஆ னாலுன்மேலிருந்தி ஜலத்தையள்ளி யெனக்குத் தாரைவார்த்தா லொ ப்புவேன் வேந்தே.

அரிச்சந்திரன் - வசனம்

இதோநீர் கோரியபடி யிந்தவரைச்சார்ந்தநாடுநகரத்தி லெனக்கு இருக்குஞ் சுதந்திரத்தை தாரைவார்க்கின்றே னொப்புக் கொள்ளுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியே யொப்புக்கொண்டேன் அரசாட்சிக்குரிய வுனது கிரீட ம் புஜகிருது வாகுவலயங்கள் முதலானதும் உனதுதேவி யணிந்திருக் கும் பணிமுதலானதுகளும் கொடுப்பாயப்பா ராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்

கேளும் முனிநாதா இவைகளெல்லா முமக்கேசேர்ந்தது தான்வாங்கிக்கொள்ளும் சுவாமி ஆனாலெங்களுக்கு உடுத்திக் கொள்ள வேறுவஸ்திரமாத்திரங் கொடுப்பீராண்டவனே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

இதோவிந்தக் காவிவஸ்திரத்தை யணிந்துக்கொள்ளுங்க ளப்பா

அரிச்சந்திரன் - வசனம்

கேளாய்பெண்ணே சந்திரமதி அப்பா தேவதாசா விந்தக்காவிவஸ்திரத்தை தரித்துக்கொண்டு நீங்களுடுத்தியிருக்கும் வஸ்திரமுதல் ஆபரணமெல்லா முரிந்து மஹாமுனிவருக்குக் கொடுப்பீர்களப்பா

சந்திரமதி-வசனம்

அப்படியே கொடுக்கின்றோம் என் பிராணநாதா

அரிச்சந்திரன் - விருத்தம்

கந்தைகள் தரித்துக்கொண்டோங் கனகமுங்களைந்துவைத்தோம்
தந்தையேபெற்றுக்கொள்வீர் தயாபரராங்கள்பேக
விந்தையாய்வாக்களித்தால் வேறிடம்போறோம்நாதா
நிந்தைகள்பொறுப்பீர்நாங்கள் நிழலடிபணிந்தோம்போற்றி

வசனம்

சொலுஞ்சுவாமி நீர்கொடுத்தகந்தையையுடுத்திக் கொண்டோம்பணிகளையிதோ கட்டிவைத்தோம் நாங்கள் வேறுதேசம் போய்ப்பிழைக்க விடைகொடுப்பீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்

அநுலப்படியே போய் வாருங்க ளப்பா

சத்தியகீர்த்தி-கன்னனி-புன்னாகவராளி-ரூபகம்

மாமுனியேயுந்தனிட மனைபூஷணங்கல்லோ இந்த
வஞ்சமதைத்தேதானம்வாங்க வந்ததுநீயல்லோ (மா)



பாவிவுந்தன் மோசவெண்ணம் பாராமல்போனோ-விந்த
பஞ்சைவேடம்மன்னனைச்செய்ய பார்க்கவுமானேன் (மா)

தவமுனியென்றுதாள்பணியநீ தாக்கியவில்லெண்ணம்-நான்
தானமிந்தாற்றக்கபடி தாணடப்போமுன்னம் (மா)

என்னமோசவெண்ணங்கொண்டாய் விக்கெதியாக்க-பாவி
யிதுவோநீதான்றவஞ்செய்தகனம் இப்படிவாய்கெழுக்க (மா)

மன்னவனுங்காவிகட்ட மகிழ்ந்தாயோபாவி-சந்திர
மதியென்றுமித்துயிறுடுத்த மைத்தாயோதாவி (மா)

பாலன்றுயரக்கண்டுறன்மனம் பதைக்கவில்லையோ-மிந்த
பாதகங்களுனைவிட்டப்பால் பற்றுமோசொல்லையோ (மா)

தெய்வமுனக்குத்துணையாய்நின்ற தென்னமோமாய-மிந்த
வையகத்திலுனைப்போலவஞ்சம் வருப்போனாயம் (மா)

பாமுந்தெய்வமிக்கோலஞ்செய்ய பார்த்துதேயினைப்பே-நீ
எழுசென்மமெடுத்தாலும்பழி யேருமோவகைபே (மா)

செங்கோனீதிசெயவுனக்குச் சிறந்தோமுனிவே-பாவி
யெங்கள் தாயையிப்படிச்செய்தா லேற்றுமோவினியே (மா)

---

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

என்னடாசத்தியகீர்த்தி யெனிபேபேசுகின்றாய்
என்னடாபோகும்வாறு விளக்கினைப்புணர்வாறுகில்
என்னடாகுறைதாரு மெனக்குமிவ் ரசுவேண்டாம்
என்னடாநீதான்சொல்லி யினையவேசெய்குவாயே.

வசனம்.

அடாசத்தியகீர்த்தி யேன்டாயிகவு மென்னை யேசுகிறாய் உனதுராஜனிந்தப் பெண்களைச் சேர்ந்தா லென்ன குறைதாருமடா நீயவனுக்குத் தெரியப்படச்சொல்லி சம்மதிக்கச்செயதால் யாவற்று மிங்கனேயவனுக்கு விட்டுப்போகிறேனடா.

சத்தியகீர்த்தி-விருத்தம்

நாடதையிழந்திட்டாலும் நற்பணிதோற்றிட்டாலும்
காடதேபுகுந்திட்டாலும் கட்டமேதினிவந்தாலும்
வேடமேருவ்ன்றினுலும் வேந்தனுமிதாமாதின்
கோடதைவிரும்பார்மெய்யுங் கொள்ளுவீர்மனதிற்றுனே.

வசனம்.

கேளும் விஸ்வாமித்திர முனியே நாடு முதலானதும் போய் காடு சேர்ந்து இன்னமதிகமான துன்பங்கள் வந்துற்றலும் என்றனண்ணல் பரஸ்திரீ கவனங்கொள்ளா னென்றுணர்வீர் ரிஷியே.

அரிச்சந்திரன் - வசனம்

பெண்ணே சந்திரமதி அப்பாதேவதாசா இனிநாம்போவோம் வாருங்கள்.

தேவதாசன் - வசனம்

சீக்கிரமாய்ப் போவோம் ஒருவருக்குத் தானங் கொடுத்த வெல்லையிலிருக்கப்போகாது என்பிதாவே தோஷமாகும் அம்மணிவாராய் சீக்கிரம்போவோம்.

சந்திரமதி-வசனம்

அப்படியே வருகின்றேனப்பா

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஓய்ஓய் அரிச்சந்திர மகாராஜனே யின்னமொரு காரியமறந்துபோனீரோ ஓடிவாரும் ராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்

இதோவந்தேன் சொல்லும் முனிநாதா

விஸ்வாமித்திரன் - விருத்தம்,

நினைகொளுமன்றுயோசம் நீட்டிநீபோகப்போமோ
மறையவன்பொருளோநீதான் மறைப்பதுநீதிதானே



நிறையுளயானைமீதில் நெறிகவுண்டெறிந்ததூரம்
இறைவனேயளித்ததுண்டோ வில்லையோசொல்லுவாயே

வசனம்

கேளும்ராஜனே யிப்படியும் மோசஞ் செய்யலாமோ வேதாந்திகளின் சொத்தைமறைப்பது நீதியோ முன்னீயெனக்கு யானையின் பேரில் வாலிபனின்று கவுண்ணிடுதூரம் பொன் கொடுத்த துண்டா வில்லையா சொல்லுமப்பாவேந்தே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

யாகத்திற்களித்தபொன்னை யமிழ்த்திரான்மறைத்ததுண்டோ
யோகத்திலுயர்ந்தநாதா வுண்மைநீருணராதேனே
பாகத்தில்யாதுமுண்டோ பரிந்தெனைக்கேட்டமென்றன்
றேகத்தையன்றிவேறு நீயறுக்கிலைகாண்மீரோ.

வசனம்

கேளும் முனிநாதா வுமக்குக் கொடுத்தபொன்னை நான் மறைத்துவைத்திருக்கிறேனே வைத்தவிடத்திலேயே இருக்கிறது இதை தாங்களறியாத காரணமேதோ வெங்கள்தேகம் தவிர வேறு பொருளில்லை சுவாமி.

விஸ்வாமித்திரன் வசனம்

கேளாய்ராசனே நீயெனக்கு அரசாட்சி முதலானதுந் தானமாவார்த்தபின் உனக்கிவ்விடத்தில் பொருள் சொந்தமுண்டோ என் சொத்தி லெனக்கே கொடுப்பது நீதியோமன்னு.

அரிச்சந்திரன் - விருத்தம்

முன் தானமளித்தபொன்னை முனிவரேயெவனுமும்
பின்தானமளிப்பதோடு பேதறச்சேர்ப்பதுண்டோ
நன்மதியுடையாயெர்த நுடதைகொடுத்தேனென்றீர்
தன்மையபைமுன்பொன் தானியங்லாகத்தானே.

வசனம்

கேளுஞ்சுவாமி முன்தானங் கொடுத்தபொன் உம்மிடபொக்கிஷத்திலிருக்க பின்னமையு மதிலுள்ளதுந் தானகொண்டால் முன்னிருப்புத்தவிர வென்னுணைப் போகாதோ முனிநாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

அரசேகேள்யாகத்திற்கு அன்றளித்தபொன்னை
அரசேயிக்கித்தானா அன்புடன்வார்த்ததுண்டோ
அரசேசொல்ரவிகுலத்தோர் அறைந்தோபொய்தானென்றும்
அரசேயன்னெறியுன்பா லடுத்ததோர்விலேயோசொல்வாய்

வசனம்.

கேளும்ராஜனே நீயெனக்கு தாரைவார்த்தகாலத்தில் பொன்னைக்கித் தாரைவார்த்ததுண்டா சூரியகுலத்தரசர் பொய் சொன்னதுண்டா அந்தநெறியுனக்குண்டோ யில்லையோ சொல்வாயப்பா அரிச்சந்திரா

அரிச்சந்திரன் - விருத்தம்

தடுத்தெனைக்கேட்கவந்த தயாபராவுனக்கக்கேளீர்
தடுத்தெனைக்கேட்டபோதே தடையின்றிகொடுக்கவேணும்
தடுத்திடுங்கோபம்வேண்டாம் தனையன்வேற்நாடடைந்து
தடுத்திட்டகடனைத்தீர்ப்பேன் தானுநேவிடையிவீரோ.

வசனம்.

கேளுஞ்சுவாமிநான்சொன்ன நிலையைத்தடுத்து நீர்கேழ்க்கப்போனானு அப்படிக் கேட்டபோது கொடுப்பதேயெனக்குச்சத்ய மாகும்நீர்கொடுயபொன்னை வேறுதேசம்போய் கொடுக்கின்றேன் நிலவு தாருஞ்சுவாமி.

விஸ்வாமித்திரன்-வசனம்

மெத்தசந்தோஷம் எந்தநாட்டில் போய்க்கொடுக்கின்றாய் அதனைப்படியெனக்கு எடுத்துரைத்துச் சொல்லுவாய் அரிச்சந்திரா.



அரிச்சந்திரன் - வசனம்

கேளுஞ்சுவாமி நான்காசிபோய்ச் சேர்ந்து கொடுக்கின்றேனென்னுடன்கூட வுமது ஆளையனுப்பித்துக்கொடும் முனிநாதா.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

அப்பனேகேளுமெந்த னாளினையனுப்பிவைப்பேன்
இப்பதினிட்டேகாசி யெய்ததோர்நாள்துவக்கி
கப்புநாள்நாற்பத்தெட்டுங் கடக்குமுன்கொடுக்கவேண்டும்
தப்பிடிலேதுவாக்குத் தானுனைசெய்வாயடன்று.

வசனம்

அப்பா அரசே அப்படியே ஆளையனுப்புகிறே னிந்த நாடுவிட்டு நீ புறப்படும் நாள்துவக்கி நாற்பத் தெட்டுநாளில் கொடுக்க வேணும் கெடுவுதவறாதிருக்க கொருசத்தியஞ் சொல்வாயின்று.

அரிச்சந்திரன் - விருத்தம்

ஐயனேநீர்தான்சொன்ன அன்புள்ள தவணைதப்பேன்
ஐயனேதவறுசெய்தால் ஆண்டவன்றனை மறந்தே
ஐயனேபுலைபுன்செய்து அன்னியமாதைச்சேர்வோர்
ஐயனேபோகுமந்த அருங்கதிக்காளாவேனே,

வசனம்

கேளுஞ்சுவாமி நீரிட்ட கெடுவுதப்பேன் மீறினால் பொய் களவுசெய்து அன்னியமாதனைச் சேர்வோ ரடையுங்கதி சேர்வேனென றயும முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியா நல்லதுபோய்வாரும் எனக்குக்கொடுத்த வாக்கைத்தப்பாமல் நிலை நிறுத்தும் வேந்தனே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஓய் ராசனே யின்னமொன்று மறந்து விட்டேன் வாரும்ராஜனே

அரிச்சந்திரன் - வசனம்

இதோ வைக்கிறேன் தெரியச்சொல்லும் முனிநாதா

விஸ்வாமித்திரன் - விருத்தம்

தாரைவார்த்தநாட்டில் தனித்துநான்சென்றாலென்றன்
பேரையார்கண்டோமென்றே பேசுவார்குடிகளப்பா
ஊரைநீகொடுத்ததாக வுரைத்தவற்கெதிர்செப்பி
பாரைநானாளச்செய்திப் பதிவிட்டுநடப்பாய்வேந்தே.

வசனம்.

கேளும் ராஜனே நீயெனக்குத் தாரைவார்த்தநாட்டில் நான்தனியேபோனால் என்னைகுடிகள் மதிப்பார்களா நீயென் கூடவந்து யிந்தநாட்டிலுள்ளவர்களுக்குத் தெரியப்படச்சொல்லி திட்டஞ்செய்து வருவாய்மகாராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்.

அப்படியே திட்டஞ்செய்கிறேன் முனிநாதா

பொது-விருத்தம்.

பாவியாங்கௌசிகனு மரிச்சந்திரன்றன்
பட்டணமும்பாக்கியமும் பறித்துக்கொண்டே
தாவியேதேசமெல்லாம் பட்டங்கொள்ளத்
தான்செல்லவயோத்திமன்ன னடியிரண்டும்
நோவிடவேபூமியின்மேல் பின்னேயோட
நோக்கொணாப்பஞ்சைகளாய்ப் பஞ்சைதபோல
தாவியுமேசந்திரமதி தேவதாசன்
தானடக்கச்செங்கோலைத் தான்கொள்வானே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே நாட்டை தானொப்புக்கொள்ள விஸ்வாமித்திரன் முதமேவிச் செல்ல பஞ்சைகளைப்போல அரிச்சந்திரனும் சந்திரமதியும் தேவதாசனும் பாதங்கள் நோக பின்னாலேகட்டிக்கொண்டு நடந்து அரசாட்சியை யொப்புவிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே



அரிச்சந்திரன்-தரு-சாவேரி-ஆதி.

பல்லவி

ஒப்புக்கொள்ளும்முனியே - என்னரசதை
ஒப்புக்கொள்ளும்முனியே

அநுபல்லவி

கப்பியகரிபரி கட்டுங்கூடங்களிது
கருதிநீரோமார்ரதக் காலிடும்டமிது
தப்பிதமிலாபொக்கிஷ தலைவரிடமிது
தயாபராபொருளிடக் தனமனையாகுமிது(ஒப்புக்)

சரணங்கள்.

நீதிருக்கக்கட்டிய நிகரில்லாமாடமிது
நிகழும்பள்ளியறையாம் நீர்தூங்குமிடமிது
நாரிகள்ஜலக்கிரீடை நடத்திடுங்கூடமிது
நத்திவோமன்னரிடம் நான்போக்கும்விடமிது(ஒப்புக்)

ஆமனைமுடியிது அரிசிலப்பணியது
ஐபார்ஆயுதச்சாலை அரிமண்டசாலையிது
துரவிகள்கூடியாகக் தொகுத்திருந்சோலையது
சுத்தமனத்தோய்மாது சொருசுருசாலையிது(ஒப்புக்)

சதுரங்கசேனைகளுந் சஞ்சரிக்கிடமிது
தக்கபட்டாடைமற்றுந் தான்யமிடங்காமது
இதுவெந்தநாட்டினெல்லை யிவர்களெனவைச்சயார்
எத்துக்கொள்ளுமுனியே யெல்லாமுமக்கேசுயார்(ஒப்புக்)

குடிகளுக்கேயுரைப்பேன் கும்பிட்டுனைப்பணிவார்
கொலுச்சாவடியிதாகுங் கோதைவிலாசம்பாரீர்
அடியேனுணிவான ஆதிசிவத்தைக்கோரும்
ஐயாவென்மேற்கோப மகற்றியேபருட்பாரும்(ஒப்புக்)

அரிச்சந்திரன்-விருத்தம்

மந்திரிமார்களே குடிகளேபொருளில்
மதித்தவர்தோர்வணிகரே என்றன்
றந்திரச்சேனை பதிகளேகேளீர்
தனிவுடன்யானுமே யிவற்கே
இந்தநல்லாசுமிதிலுள பண்டா
ரிமக்களே யிந்தனன்களித்தே
முந்தியென்போலிவரை நீர்மதித்து
முறைவழுவின்றியே நடப்பீர்

வசனம்.

கேளுங்களப்பா மந்திரிமார்களே குடிகளே வர்த்தகர்களே இந்த விஸ்வாமித்திரமுனி கேட்டபடிக்கே நானெனது அரசுமதைச் சேர்ந்த பண்டபதாதிகளையுந் தானமாகக் கொடுத்து விட்டேனின்றுமுதல் இவரை யென்னைவிட அதிகமாகப் பாவித்து வரன்முறை பிசகாமல் நடந்துக்கொள்வீர்களப்பா.

குடிகள் - விருத்தம்

ஐயனேயரசேயெங்கள் அண்ணலாயாண்டதேவே
மெய்யனேயுமதுவாக்கின் தோற்றமதீதுவோமோ
பொய்யனேமுனிக்கேநீதான் பேவியின்றுடனிக்க
மையனே யுமக்கேவந்த காரணமனாசெய்வீரோ.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா நீரிந்த சத்திய ராசாங்கத்தை யிந்தமுனிக்கு தானமாக்குமபடி யுமக்குநேரிட்ட காரணத்தைத் தெரியப்படச் சொல்லவேணும் மகாராஜனே.

அரிச்சந்திரன்-தரு-கல்யாணி-சாப்பு

பல்லவி

சொல்லுவேன் கேளீர்-குடிகளே-சொல்லுவேன் கேளீர்

அநுபல்லவி.

கல்லணையிலிவ் குயர்ந்தோரானதால்
வாக்களித்திட்டேனதைக்காக்குங்கடனுங்களால் (சொல்)



சரணங்கள்.

நீச்சமாதரைப் பெத்தே - என்னிடம்
நிகழ்த்தினார்மனமொத்தே
ஆச்சர்யமாயவ ராடல்பாடல்புரிந்தார்
அடியேன்பரிசளிக்க அதைவேண்டாமலிருந்தார் (சொ)

பூச்சக்ரக்குடைகேட்டார் - சத்தியகீர்த்தி
புகழல்லவென விட்டார்
தாட்சண்யமில்லாமற் றங்களைச்சேரவென்றே
சாற்றவென்மனம்நொந்து சாடச்செய்தேனன்றே (சொ)

சென்றவர்கோளுரைக்க - விம்முனிகோபஞ்
சீறினவராயிவைக்க
கண்டென்னைதூஷித்தே கயவரைப்பற்றென்றார்
கருதிலேனுனெனக் காசினிதாவென்றார் (சொ)

சத்தியம்பொய்க்காமல் - என்னரசதை
சாதித்தேன்சிக்காமல்
நித்தியநிரமய நிருபனருளைப்பாரீர்
நீங்களென்வாக்கைப்போல் நிகழ்த்திவர்தமைக்காரீர் (சொ)

குடிகள் - விருத்தம்

ஐயையோயினுதானென்ன அடாததோர்காலங்கண்டோம்
ஐயையோசத்யபாஷ அரிச்சந்திரன்றனைவிட்டு
ஐயையோகுருக்கோப மடைந்தவிம்முனியைப்போற்ற
ஐயையோசிவமேநீதா னடைத்திட்டவிதியோநாதா

வசனம்

ஓ பாழும்தெய்வமே சத்தியம்வழுவாத அரசனைப்பிரிந்து கோபமும் பொறாமையுமுள்ள விஸ்வாமித்திரமுனியை வணங்க வெங்களைச் செய்தது முன்னுடைய திருக்கூத்தோ சிவமே.

மன

குடிகள்-கண்ணிகள். - எதுகுலகாம்போதி - ஆதி

என்னவிதிவந்தது - எங்களரசனுக்கே
  யிவ்வேடந்தரித்திட — ஓ சிவமே
மன்னனெங்களைச்சேர்ந்த - மக்களைப்போனினைத்தே
  மடிமேல்வைத்தேவளர்த்தார் — ஓ சிவமே

தாயின்றதந்தைகுரு - தாமேயென்றேமதித்து
  தாளடிக்காத்திருந்தோம் — ஓ சிவமே
செய்தனைப்பிரிந்தாவு - சொல்லுவாரிருக்குச்
  செய்தனின்னருள்டானோ — ஓ சிவமே

பாதகமுனிவன்சொற் - படிசெய்யவேமனம்
  பற்றுமோவெங்களுக்கே — ஓ சிவமே
காதகனிவனிருந்தால் - கல்மழைபொழிவதன்றிக்
  காலமழைபெய்யுமோ — ஓ சிவமே

சோலைப்புலிகடித்தே - கொண்டேருங்காலமிதோ
  கூத்தாயமைத்திட்டாயோ — ஓ சிவமே
பாலையாக்தாயினள் - பத்தினிநாட்டைவிட்டால்
  பறப்பாளோலட்சுமிதேவி — ஓ சிவமே

எத்துயர்வந்திட்டாலும் - யெங்களரசன்சத்யம்
  இழிவன்றிருக்கக்கண்பார் — ஓ சிவமே
பற்றும்மாதுடன்பாலன் - பழுதின்றிவாழ்ந்திட
  பரமேனையருள்செய்வாய் — ஓ சிவமே

---

அரிச்சந்திரன் - விருத்தம்

என்னருங்குடிகளோர் ளிப்பிடுமொழிதான்கேட்பீர்
வென்னமாய்ச்சில்நாள்சென்று வருகுவேன் துயரம்வேண்டாம்
இன்னகர்தனிலேநீங்க ளிருந்துமேசுகமதாக
தன்னயப்பயிர்களிட்டே யாளுமேவாழ்விராதி.



வசனம்

சேனுங்களப்பா குடிகளே நீங்கள் துயரத்தை விடுங்கள் நானின்னங்கொஞ்ச நாளில்லிவிடம் வருகின்றேன் சுகமானவாக்குக் கொடுங்களென்னருமை குடிகளே.

குடிகள் - வசனம்

மகாபாக்கிய மும துவாக்கின்படி நடக்கின்றோம் ஜல்தியில்வந்தெங்களை ஆதரிக்கவேண்டும் சத்யவுருவான அரிச்சந்திர மகாராஜனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

அப்பனேசத்யகீர்த்தி அறிவுள்ளசுகுணமந்திரி
அப்பனேமுனிவர்வாக்கை அசட்டையாய்மீறப்போகா
அப்பனேயிவரோமெத்த அயிந்தவர்ஞானமீதி
அப்பனேயிவர்பாலுற்றே யடிபணிந்திருந்திடாயே.

வசனம்

சேனுங்களப்பா சத்யகீர்த்தி சற்குணா நீங்கள் முனிவர் வாக்கைக் கடவாமல் பணிந்துநடந்துக் கொள்ளுங்களப்பா மந்திரிகளே.

மந்திரி-வசனம்.

கீர்த்தி கீர்த்தி யெங்கள்விதியின் பயனென்றறிந்தோம் ஆண்டவனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சேனுதிபதிகளோநான் செப்புமவாறென்றுகேளீர்
வானுதிபொய்க்கினென்றன் வாக்குஅழிந்திடாமல்
தானுதிப்பொருளேயெண்ணித் தவமுனிமகிழும்வாறு
யோனுதிபதிசொற்கேட்டே முற்றிலும்பணிந்துவாழ்வீர்

வசனம்

சேனுங்களப்பா தளபதிகளே இந்தத்தவமுனிவரி னைச்சினைகடவாமலு மெனதுவாக்குப் பொய்க்காமலும் பணிந்து நடந்துக் கொள்வீர்களப்பா தளபதிகளே.

சேனாதிபதி-வசனம்.

கேளும் ஆண்டவனே விதியைநோக்கு நீங்கள் சொல்லிய வாறே நடந்து கொள்ளுகிறோம் மகாராஜனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

இன்னகர்தனிலேநாளு மினிதுடன்வீற்றிருந்தே
உன்னதவணிபஞ்செய்யு முத்தமகுணரேகேளீர்
மன்னவனுகவிந்த மாமுனிவாய்த்ததாலே
தன்னறம்வழுவிடாமற் றுவியேநடப்பிரப்பா.

வசனம்

கேளுங்களப்பா வர்த்தகர்களே யிந்நாட்டுக்கு கௌசிக மாமுனி அரசனாகவந்தமையால் நீங்களவருக்குப் பணிந்து சத்யம்பிசகாமல் தர்மத்தைநிலைநிறுத்தி நடந்து கொள்வீர்களப்பா.

வர்த்தகர்-விருத்தம்.

எந்தவேளையுமக்குமிந்த விழிவுறக்காலத்தானும்
எந்தவேளாய்த்ததெல்லா மெங்களின்சொடுமையாகும்
எந்தவேமுனிவன்சத்ய மெவ்விதமழியப்போறான்
எந்தவேநீர்தான்கொண்ட வெண்ணத்தைக்கடக்கிடோமே.

வசனம்

கேளும்மகாராசனே யுமக்கிந்தகெதிவந்தது நாங்கள்செய்த கொடுமையாருமிந்த முனிவனும் சாந்தமும் பொறுமையைக் கைக்கொண்டு சத்தியத்தைப் பாலிப்பாரு நீர்சொன்ன வுத்திரவின்படிக்கே நடக்கின்றோமையா வெங்களாண்டவனே.

சந்திரமதி - விருத்தம்.

என்னரும்பாங்கிமாரே யிழிவிலாத்தோழிமாரே
மன்னருமாசும்நாடும் மாமுனிதனக்கேயீந்தார்
பன்னருங்காசியேக பகிமனங்கொண்டார்போறேன்
அன்னநற்சுபமாய்வாக்குத் தோகைகாள்கொடுப்பீரம்மா.



வசனம்.

கேளுங்களம்மா தோழிமார்களே அரசர் செங்கோலை விசுவாமித்திரமுனிக்குத் தாரைவார்த்து காசிக்குப்போகின்றார் நானுங்கூடப்போகின்றேனீங்கள் நல்லவுத்திரவுகொடுங்கள் தாதியர்களே!

தோழி-விருத்தம்

அம்மணிதாயேயெங்க ளரசியேபஞ்சைவேடம்
அம்மணிகொள்ளக்கால மடைந்ததோவுமக்குத்தானே.
அம்மணியினிமேலுங்க ளடிமையாயொருவருக்கே
அம்மணிபணிந்திருக்கோ மடியாருமவருருவோமே.

வசனம்.

கேளுந்தாயேயுமக்கிப்போக் கொத்தகாலம் வந்ததா யினி நாங்களொருவரைப்பணியோம நாங்களும் கூடவருகின்றோந் தாயே.

க-வது தோழி-கண்ணிகள்-பைரவி-ஆதி.

இந்தவிதிவிட்டாயோ தெய்வமே - எங்கள்
இறைவிதனைப்பிரிய தெய்வமே
வந்தகதியறியோம் தெய்வமே - யாரின்
வஞ்சமென்றுந்தெரியோம் தெய்வமே

தாயைப்போற்காத்தவளை தெய்வமே - நாங்கள்
தான்விடவும்விதியோ தெய்வமே
நாயைப்போலலைந்திட தெய்வமே - தலை
நடுவிலெழுதினையோ தெய்வமே

மாமுனிசொற்படியே தெய்வமே- நாங்கள்
வணங்கநின்னருள்தானோ தெய்வமே
தாமதமிலாததாயை தெய்வமே - யின்று
தானகலவிட்டாயோ தெய்வமே

உ-வது, தோழி-காம்போதி-ஆதி.

பல்லவி

தங்கையிதென்ன காலமோ - நமதுதேவி
தயங்கவிட்டதுங்கோலமோ

அநுபல்லவி

மங்கையுமையாள்பாகன் வஞ்சமனதில்விட்டே
வருத்தவிதிவிதுவோ மனதிலித்துயருற்றேன் (தங்கை)

சரணங்கள்.

ஆதிலட்சுமிபோல அழகினுயர்ந்ததேவி
ஐயோபரதேசியாகி அவையிற்காவியணிந்தே
நீசிவசகாமன்னன் நிருடிக்கிவ்வாசதை
நிமைக்குள்ளளித்துப்பதி நீங்கிடவும்பணிந்தே (தங்கை)

பெற்றதாயையும்விட்டுப் பெருத்தவாசையைக்காட்டி
பிரியத்துடனேகமை பேணிவளர்த்தவென்னை
உற்றவித்துயர்கண்டு மூரிலிருக்கவென்றன்
உள்ளம்படைக்கேனையோ உண்மையிதுவேமுன்னை (தங்)

வேறொருவர்பணி வேண்டிப்புரியலாகா
வீடுஞ்சுற்றமும்விட்டே விருண்டடவிபோவேன்
ஆனாயினித்தாயென்று அழைப்பேனிவ்விதியிட
அயன்பாவிகருதிய தழகோஐயோசாவேன் (தங்)

சந்திரமதி-வசனம்

சேளுங்களம்மா தோழிகளே விதத்தின் கூத்திற்கு விசனப் படுவதில் பயனென்ன நீங்கள் துயரம் விட்டிருங்கள் நான் மீக்மாத்தி வீட்டத்திற்கு வருகிறேனடி பாங்கிகளே

தோழி-விருத்தம்.

நீவருங்காலமட்டும் நிலைகளையுணர்ந்ததாயே
தாவருமடவிபுக்குத்தான்வாழ்ந்தேயிருப்பதன்றி
பாவத்திற்கஞ்சாநிந்த படுபாவிமுனிவனண்டை
சேவகம்ருக்கமாட்டோஞ் செந்திருவடிக்கேபோற்றி.

வசனம்-

கேளுந்தாயே நீவருகிறபரியந்தம் நாங்கள் காடுறைந்து வாழ்ந்திருக்கின்றோம் இந்தகாதகமுனிவனிடத்து சேவிக்கோம் சுகமாய்ப் போய்வருவாயம்மா சந்திரமதித்தாயே.



தேவதாசன் - விருத்தம்

என்னுடனுடிப்பாடு மினனுரோதோழமாரே
மன்னவனரசைமிந்த மாமுனிகவர்ந்ததாலே
இன்னகர்விட்டேகாசி யேகவேயிக்தமானார்
சின்னவன்போயிவாரேன் செலவுகொடுப்பீரப்பா.

வசனம்

கேளுமப்பா தோழர்களே விஸ்வாமித்திர முனி யுபாயத்தினால் வெங்கள் ராஜாங்கத்தைக் கைக்கொண்டதா லெனது பிதா காசிக்குப் போக வெண்ணங்கொண்டார் நானும்போகின்றேன் செலவு கொடுங்களப்பா தோழர்களே.

சிறுவர்கள் - விருத்தம்

மெய்யதாயிபங்காசி மென்செவிதனிலேசாய்த்த
வையகமுறைமைப்போல வழுத்திட்டனையப்பா
பொய்புறமெங்கள்தேகம் போவிடமுமந்நான்
மையலேயுனைத்தவார்த்தை பாவிகள்கேட்டனன்றோ

வசனம்.

அப்பா தேவதாசா நீசொன்னவார்த்தை யெங்கள்மனதைமெத்தநொருக்கிவிட்டது இதுவுமெங்கள் விதிதானப்பா.

சிறுவர்கள்-கண்ணிகள்-நாதநாமக்கிரியை-ஆதி

எப்படிப்பிரிவோமுன்னை - எப்படிப்பிரிவோம்நாங்கள்
எப்படியுயிர்தரிப்போம் தோழனே
இப்படிப்பிரமன்தானு - மெழுதிவைத்தானறியோம்
இறைவனைப்பிரியலாச்சே தோழனே

ஆண்டுமெங்களுடனே-பழகாய்க்காத்தாடிவிட்டே
அன்பாய்ப்பரிசிலாயே தோழனே
வேண்டும்பணிகளும்-விதத்தோருனைவுகளும்
வினயங்கள்செய்வாயே தோழனே

பள்ளியிலெங்களுடன்-படித்துக்கொண்டுதற்கொண்டு
பாலித்தாயெங்களையே தோழனே

துள்ளிப்பாஞ்சென்டு-ருண்டுக்கோலாட்டமெல்லாம்
தாயாமறந்திட்டாயே தோழனே

உன்னேசொன்றெங்களை பூரார்களைப்படுத்தும்
உரிமையின்றுடன்போச்சே தோழனே
நன்மைபெறலாமென்றே-நம்பியிருந்தவெங்கள்
நாட்டமகலலாச்சே தோழனே

தெய்வம்பிரிக்கப்பாவத்-தீமைசெய்தோமோவேறு
திசைகாணோம்மதிதோணோம் தோழனே
கைதவப்பலனிதோ-கண்டோம்வேறுநகதி
காணோமனமும்பூணோம் தோழனே

தேவதாசன்-விருத்தம்

அழுவதைவிடுவீரொந்த வன்பரோதோழமாரே
வழுவதுசெய்யபிரமன் வகைகொண்டானாமென்செய்வோம்
பழுததுமுனிவனாலே பலித்திடக்காலங்கண்டோம
தழுவிடக்கொஞ்சநாளிற் றன்வாறேன்மகிழ்ந்திடீரோ.

வசனம்.

அப்பா சினேகிதர்களோ பிரமன்எழுத்தை மாறப்போமா யிதற்குக் காரணம் முனிவனாயிருந்தான் நீங்கள் துயரத்தைவிடுங்கள் நான்கொஞ்சநாளில் வருகின்றேனப்பா.

சிறுவர்-வசனம்

நல்லது எங்களரசே சந்தோஷமாய்ப் போய் வருவாயப்பா தேவதாசா.

அரிச்சந்திரன் - விருத்தம்

தாதவிழ்சடையன்கோமான் தாமரைச்சரணமேற்றும்
மாதவமுனியேயுன்றன் மலரடிபணிந்தேனுநா
காதலியுடனும்பாலன் காசிக்கேயானும்போக
பேதமதன்றிசுவாமி பிரியமாய்விடையீவீரோ.

வசனம்.

கேளுஞ்சுவாமி முனிநாதா நானுமென்மனைவியுமென்பாலனுங்காசிக்குப் போகவிடைதாவேண்டுந் தேவே



விஸ்வாமித்திரன் - விருத்தம்

ஏனப்பாநீதான்மெத்த விழிவுறுந்துன்பங்கொண்டாய்
நானப்பாதவத்தாலிந்த நாரிகடனைப்படைத்தேன்
தானப்பாயிவர்கள்தம்மைத் தனிமணஞ்செய்வாயாகில்
ஈனப்பாடொன்றில்லாமலெல்லாமுன்வசஞ்செய்வேனே.

வசனம்.

அப்பா ராஜனே துயரமேன் நான்தவஞ் செய்து பெற்ற விந்தப் பெண்களை நீ கைக்கொண்டா லிவ்வளவுந்து முனக்கே கொடுத்துப் போகின்றேனப்பா.

அரிச்சந்திரன் - விருத்தம்

விழியினில்நீர்தான்சோர வேம்புறுவார்த்தைகேளேன்
அழிந்துமென்றேநக்போயி ன்னியமாதைநாடேன்
மொழிந்தவித்தானிபண்ட முள்ளதும்வேண்டேனுநா
வழிபற்றிச்செல்வேனுனை வரச்செய்வீரினிவாய்த்தானே.

வசனம்.

கேளும் சுவாமி நீர்சொல்லுங் கெட்டமொழி யென் செவிக்கோரது அழிந்தாலு முடலன்னிய மாதை நாடேன் நான் காசிக்குப் போகிறபடியா லும்முடைய ஆனையனுப்பிவையும் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-விருத்தம்

இத்தினம்நீதான்சென்றே யிருந்திடுசாயுநேர்த்தம்
நத்தியோநாளைபெந்த நவினையுன்பின்னுரப்
பத்தியேவாவிடுப்பேன் பண்புடன்கெடுவுதன்னில்
வித்தியாசங்களின்றி வினாவினிற்கொடுப்பாய்த்தானே.

வசனம்

அப்பா அரிச்சந்திர மகாராஜனே யின்றையதினம் நீசாயு நதியருகிலிரு நாளையதினமென்னுடைய ஆளையனுப்புகின்றேன் கெடுவுதப்பாமல் கடனைக் கொடுத்து விடுவாயப்பா.

அரிச்சந்திரன் - வசனம்

மகாபாக்கிய மப்படியே கொடுக்கின்றேன் சுவாமி

அரிச்சந்திரன்-விருத்தம்.

பதிமொழிபேசாமாதே பாலகா தேவதாசா
விதியிதுநமக்கேகண்டீர் வெளியுமுள்ளொத்ததாக்
சதிமனமில்லாதிவ்ய தலத்தினிலுயர்ந்தநல்ல
மதியுளமுனிவர்பாதம் மகிழ்வுடன் வணங்குவீரே.

வசனம்

கேளாய்பெண்ணே சந்திரமதி அப்பா தேவதாசா விது நமக்கு விதிப்பயனென்றறிந்து முனிவரிடத்தில் பணிந்து சிலவுபெற்றுக் கொள்ளுங்கள் நாமினிப்போவோம்,

சந்திரமதி-விருத்தம்

கனிமதிகங்கைதும்பை நாகமும்பூண்டவெந்த
தனிநிகரில்லானந்தன் தாளடிநாளும்பேற்றும்
முனிவரேநாங்கள்செய்த முப்பிழைபகற்றியின்றன்
கனிவுளமகிழ்ந்தேசெல்லக் கடையருக்கருளிவீரே.

வசனம்.

சுவாமி நாங்கள்செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்துக் காசிக்குப்போக செலவுகொடுமய்யா.

அரிச்சந்திரன்-விருத்தம்

அத்தனேயுமது திவ்யவடிவினைப்பணிந்தேனந்த
கத்தனேயேழைசெய்த சகலபிழைபொறுக்கவேண்டும்
சுத்தனேயெனக்கேவெற்றி சூழ்ந்திடவாழ்த்தியென்னை
பத்தியாய்காசிபோக பரிந்துவிடையீவீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நான்செய்த பிழைகளைப் பொறுத்து காசிக்குப் போக சிலவுகொடுப்பீ ரெத்தனுண்டவனே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியே போய்வாருங்கள் போய்வாருங்கள்

சூழ்வினை காண்டம்

முற்றுப்பெற்றது.

---

உ

169

முருகன்றுணை.

# நகர்நீங்கியகாண்டம்.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

சரியைகிரியையோகச்-சார்புஞானங்கொண்ட
தவசிகளே நாங்கள் போய்வாரோம்
வரிசையுள்ளகையாளும்-வலுமையுள்ளோரேசேனை
வதிபதியேநாங்கள் போய்வாரோம்

என்னைவிட்டகலாத-விருத்தமந்திரிகளே
யிதோதாகாசிபட்டணம் போய்வாரோம்
பொன்னைவிளைவுசெய்யும்-புனிதமாய்குடிகளே
புகழ்பெறக்காசிக்கே போய்வாரோம்

சத்தியவணிபஞ்செய்-சர்ஜனகுணத்தோரே
சாற்றுங்காசிக்கிதோ போய்வாரோம்
நத்தியின்னாட்டில்வாழ்-சனபரோனைந்தோரே
நாங்கள்காசிக்கிதோ போய்வாரோம்

நீதிவழுவுறுமல்-மின்னிவர்மொழிப்படி
நெறியுடன்வாழ்குவீர் போய்வாரோம்
பாதிமதிபுனைந்த-பரமன்வளருமந்தப்
பதிகாசிநகர்நாங்கள் போய்வாரோம்

நகர்நீங்கியகாண்டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன்றுணை.

# ஆரண்ணியகாண்டம்

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசனுமனைவியும் தேவதாசனும்நாடு விட்டுச்சென்றபின்பு மந்திரியாகிய சத்தியகீர்த்தி அரிச்சந்திர மகாராஜனிடம் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி - விருத்தம்

சற்குணமந்திரியொன்று சாற்றுவேன்கேளாயப்பா
நற்குணமுடையவேந்தன் நாடியேசரயுதீர்த்தம்
விற்பனாங்குசென்றார் விரைவினிற்கண்டுவாரேன்
தற்பராவிங்குநீதான் றனிக்கொலுபுரிகுவாயே.

வசனம்

கேளாயப்பாசற்குணா நமது அரசன் சரயுநதியருகே யிருப்பதானுன் போய்க்கண்டு வருகிறேன் நீயிவிடத்தில் தனிக்கொலுவு புரிந்துக்கொண்டிருப்பா யப்பா.

சர்க்குணன்-வசனம்.

அப்படியே போய் வாருமையா

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோரே சத்தியகீர்த்தி சரயுநதியினிட மிருக்குந் தனதரசனைக்கண்டு வாடுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி - விருத்தம்

அத்தனேவெகுநாளாக வடிமையைக்காத்தேகாத்த
கத்தனேயடியேன்றன்னைக் கைவிட்டுவருதனன்றே
சுத்தனேயுமைப்பிரிந்தே சொகுசுடனாட்டில்வாழேன்
பத்தனோடுங்கூடப் பற்றுவேன்விடையீவீரே.

வசனம்

கேளுஞ் ராஜப்பரமேஸ்வரா என்னை நாளதுவரையில் பாதுகாத்து இப்போது அடியேனைக் கைவிடுதல் நன்றோ நான் றங்களைப் பிரிந்து நாட்டில் வாழேன் நானுங்கூட காலக்ஷேபஞ் செய்யவேண்டுமே நாதனே,



அரிச்சந்திரன் - விருத்தம்

கொழுதுங்கீவிஸ்வாமித்ரன் துரைத்தனம்புரிவதாலே
பழுதன்றியமைச்சனாகப் பரிந்துமேவீற்றிருந்து
தழுவியேவாழ்ந்திடாமற் றாழ்ந்துமேயேகுமென்பின்
இழுவுறவாறேனென்றே யிசைவதுமடுக்காதப்பா.

வசனம்

கேளுமப்பா சத்யகீர்த்தி முனிவனைப்பணிந்து நீதிவழுவாமனடப்பதை விட்டு நீயென்பின் நீவருவேனென்பது சரியல்ல நான் துயரமுறுங்காலையில் நீவருவது தகுதியல்லவென் றுணராததேன் மந்திரி.

சத்தியகீர்த்தி - விருத்தம்

உந்தனைப்பணிந்தகையா லொருவரைப்பணியமாட்டேன்
எந்தனைப்போகச்சொன்னு லிறைவனேயுயிரைமாய்ப்பேன்
சொந்தமென்பெண்டீர்பிள்ளை சோறுடன்சுகமும்வேண்டேன்
இந்தநற்றுயிலைப்போக்கி யிதோகாவியணிந்திட்டேனே.

வசனம்

கேளுமென் றுண்டவனே தங்களைப்பணிந்து மினி மற்றொருவரைப் பணியமாட்டேன் நான் சோறு சுகம் பெண்டீர் பிள்ளை நாடு நகரமும் வேண்டேனிதோ நானுங் காவியணிந்துக் கொண்டே னரசர் வேந்தனே.

சத்தியகீர்த்தி-இ-ட-சுருட்டி-தாளம்-சாப்பு

பல்லவி.

எப்படி தனிப்பேன்-யுமைப்பிரிந்து-எப்படி தனிப்பேன்

அநுபல்லவி.

இப்படியுமையன் எழுதின்விதிதானோ
கைப்பிடிகிளிபோல காத்தோரைப்பிரிவேனோ (எப்)

சரணங்கள்.

பட்சியையங்காக்கும் பாலனைபத்தோட்டே
ரட்சித்திடுவோயிடுக்கி யிருந்தவண்ணாலைவிட்டே (எப்)

விழிமையிமைகாக்கும் விதமாகவிருமட்டே
இழிவன்றெனைவளர்த்த எந்தைதன்னைவிட்டே (எட

சேணுத்தாய்பாலிக்குஞ் சிறிதுபாயுற்றே
காயத்தைவளர்த்திட்ட கருணைக்கடலைவிட்டே (எ

புரவுகுஞ்சினைக்காக்கும் போஷணைதனைவிட்டே
காத்திலெந்தனைபேசிக் காத்தவனைவிட்டே (எ

உலகினிவாழ்வதை ஒ ஓ வேண்டேனையம்
அலவெனில்யாய்குவே ளாரேயுனக்கபயம் (எட

சந்திரமதி-விருத்தம்

அப்பனேசத்யகீர்த்தி யரசனைப்போற்றினாரு
பொப்பவேயிருந்தாய்நீசி லுயிருடனிருக்கமாட்டாய்
இப்பவேமக்குவந்த விடர்களுமனையில்நீதான்
கப்பியேயெங்களோடு கனமுடன்வருவாய்மந்திரி.

வசனம்.

கேளாயப்பா சத்யகீர்த்தி நாளதுபரியந்திர மாசருடன் வாழ்ந்தி
ந்தா யிப்போது பிரிந்தாலுயிர் தாளமாட்டாய் வந்தகஷ்ட மெல்லோ
மனுபவிக்கலாம் கூடவேவருவாயப்பா மந்திரி.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-சங்கராபரணம்-தாளம்-சாபு

உந்தன் செயலிதுவோ-ஓசிவயேசீ - தந்தவருளிதுவோ

வந்தகெதிகளெல்லா முந்தன்தபவென்றெண்ணி
சிந்தைமகிழ்வுகொண்டே னெந்தனையாளுமண்ணி (உ

சதிக்கனையோரங்கு சதியுடனேமகனுளம்
விதிவைகினைக்தேதனை செதிபெலப்பள்ளிகொள (உ

அவைச்சனுங்கோடென்று வழுதேதபாதேபோய்
அடுத்தெனைக்காக்கவேசீ யமைந்ததுவுஞ்சுகியா (

இன்னமெனக்கீத்துன்ப மெதுவச்செய்தாலுந்தானே
யென்னைக்காப்பதுநீயே யேந்துமானகாத்தோனே (



பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே அரசனுந்தேவியும் பாலனும் சத்திய கீர்த்தியும் சாயுஙிக் கரையருகிலிருக்க விஸ்வாமித்திரமுனி சுக்கிர பகவானை நட்சத்திர த்தாகனை வருவிக்கும்விதம் காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-இ-ம-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

சமயமிதுவேவருவீர்-சுக்கிரமூர்த்தி-சமய மிதுவே வருவீர்

அநுபல்லவி.

இமையாதேவர்கள்முன்னே-யெனக்குவாக்களித்ததேவே. (௧)

சரணங்கள்

வேதியனுக்கேபட்டு வேட்டியனையிற்கட்டி
சாதுர்யவார்த்தைகளாடி சமர்த்துடன்குதித்தோடி (௧)

இரிசங்கின்பாலகாடு இகழும்பணிகளெல்லாம்
பறித்துமேகாசிவழி பற்றச்செய்தேனெல்லாம் (௨)

கைகழிந்திட்டியுந்தானும் கனத்தமிசம்புங்கொண்டு
ஒயிலாகடைநடந்து ஒப்புந்தாகனென்று (௩)

விஸ்வாமித்திரன் வசனம்

போற்றி போற்றி சுக்கிரபகவானே போற்றி

சுக்கிரபகவான் - வசனம்

கேளும் கௌசிகமாமுனியே நீயென்னை யிந்தவேடங் கொண்டுவ ரும்படி கோரினதை தெரியச்சொல்ல வேணும் ரிஷியே

விஸ்வாமித்திரன் - விருத்தம்

சுக்கிரமூர்த்தியேகேளாய் சொல்லரிச்சந்திரன்றன்பால்
உக்கிரமுடனேகாசியுடன் சென்றுன் றிறத்தினாலே

கஷ்டப்படுத்திப்பொய்யைக் கதறிடச்செய்யவேண்டும்
புக்கிலேனென்றால்பொன்னைப் போடெனவருத்துவாயே.

வசனம்

கேளுஞ் சுக்கிரமூர்த்தியே அரிச்சந்திரனுடன் காசிக்குத் தாகனை யச் சென்று அதிக கஷ்டப்படுத்தி அவனைப் பொய்சொல்லச்செய்யவேண்டியது அப்படிக்கிச் சொல்லாவிடில் - ௪௮ - நாள் கெடுவில்பொன்னை வாங்கவேண்டுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

இன்னமுஞ்சொல்வேன்கேளா யிவனவன் குருமேலாணை
வின்னமாந்தானுங்கிட்டி வேந்தனுக்கணிந்துய்நல்லே
பன்னரும்துகலில்லைத்தே பலுக்கடாபொய்யென்றேது
மன்னவனுரைப்பானுகில் மகிழ்வுடனழைத்தேவாராய்.

வசனம்

இன்னமும் கேளுஞ்சுவாமி அவன்குருவாகிய வசிஷ்டன்மேலாணையிடும் அண்ணுந்தானுங் கிட்டியுமாட்டும் நெற்றியிலே கல்லைத்தாங்கச்செய்யும் பொய்சொல்லச் செய்யும் சொன்னால் சந்தோஷமாயிவட மைத்துவாரு மில்லாவிடில் பொன்னைவாங்கி வருவீர் பகவானே.

சுக்கிரபகவான் - விருத்தம்

பொய்யதும்பேசச்செய்வேன் பூபனைபுலைச்சிமானை
மையலால்புணரச்செய்வேன் மறுத்திடில்வருத்தெடுப்பேன்
துய்யனையரசன்மெத்த துடித்திடவியவனைத்தன்னில்
பொய்பவேயிறுத்திப்பொன்னை நொடிக்குள்ளேவாங்குவேனே.

வசனம்.

கேளும் முனியேபொய்பேசச் செய்வேன் நீச்சமாதைப் புணரச் செய்வேன் அனேகவிதமான கோரங்களுஞ்செய்து அவனையுமவன் தேவியையும் பாலனையும் வருத்தப்படச்செய்து பொன்னைக்கொண்டு வருகின்றேன்பாரும் அவனெங்கே யெனக்குக்காட்டும் விஸ்வாமித்திர முனிவரே.



விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியே காட்டுகின்றேன் வாரும்பகவானே

சுக்கிரபகவான் - வசனம்

மெத்தசந்தோஷமிதோவந்தேன்

நட்சத்திரேசன்-தரு-இ-ம்-கல்யாணி - தாளம்-ஆதி

பல்லவி

நட்சத்ரத்தரகன்வந்தான் -நற்குணம் போக்கியே
துற்குணமேவிய (நட்ச)

அநுபல்லவி.

அட்சயமின்னா ரனைவருங்நடுங்கிட
தட்சணத்தோன்கூடத் தான்கண்டுஓடிங்கிட (நட்ச)

சரணம்

கவடுஞ்சூதும்பொய்யும் கற்றவனிந்திரஜாலன்
கல்வியும்வாருரியக் கருதிக்கிழிக்குஞ்சீலன்
தவிடுபொடிபோனெஞ்சம் தகைத்திடுமெய்காலன்
தாழ்ந்திடினுந்தயவு தன்னைக்காட்டாதகோலன்

சாட்ட துன்பமதைக்
காட்ட நிலையதனை
ஓட்ட அரசனையும்
வாட்ட விதோ

தக தக தக தக திருதிருவெனவே
தத்தளிக்கவனல் கொப்பளிக்கவிழி
தாண்டிவரிச்சந்திரனை வேண்டிதுடித்தேஓடி
ஆண்டிதுடருவாரும் நோண்டிவசையைப்பாடி (நட்ச)

விஸ்வாமித்திரன்-வசனம்.

இதோவிருக்கின்றானே யிவன்றான் சடன் கொடுக்கவேண்டியவன் இவன்றா னரிச்சந்திரனென்று சொல்லப்பட்டவன் தெரிந்துக்கொள்ளுமையா நாரதரே.

தாரகன்-வசனம்

இவ்வளவ்வாவு பொன்கொடுக்க வேணும் விஸ்வாமித்திர முனியே!

விஸ்வாமித்திரன்-வசனம்.

கேளுமையா நட்சத்திரேசரே ஓர்வாலிபன் ஆனையின் பேரினின்று கவண்டெறிந்தவுயரம் பொன்கொடுக்க வேணுஞ்சுவாமி.

விஸ்வாமித்திரன் - விருத்தம்

அரசனேகேளாயிந்த ஆதவர்தாகர்கண்டாய்
வரிசையாய்பொன்னைநீதான் வழுவின்றிக்கொடுக்கவேண்டும்.
சரசனேயன்னந்தண்ணீர் சார்ந்துபளிக்கவேண்டும்
பிறகிவர்வருகும்போது பெருமைசெய்தனுப்புவாயே.

வசனம்-

கேளாய் ராஜனே யிவர்தான் என்னுடையஆள் இவரையுன்னுடன் தாகராய்க் காசிக்கனுப்புகிறேன் இவருக்கு வேளைவேளைக்கி யன்னங் கொடுக்கத் தடைசெய்யப்போகாது கெடுவில் பொன்னைக் கொடுத்து அவருக்குஞ் சந்தோஷஞ்செய்து யனுப்பவேண்டும் அரிச்சந்திரனே.

அரிச்சந்திரன் - வசனம்

அப்படியே நடந்துக் கொள்ளுகிறேன் முனிநாதா

தாரகன்-தரு-இ-ட-ஆரபி-தாளம்-ஆதி

பல்லவி

நீதானுஅரிச்சந்திரன்-அந்தவிருடியின் பொருளதை
தருபவனுகிய நீதானு

அநுபல்லவி

தருகக்கூடுமோ மன்னா - முனி
சாத்தியபடிப்பணம்-நேத்திபதாகவே (நீதானு)



சரணங்கள்.

எப்போதளிப்பாய்ரொக்கம்-அடா
இயம்பிடுசடுதியில்-நயமுடன்றெரிய (நீதானு)

எந்தநாட்டினில்கொடுப்பாய்-அடா
என்மனங்களித்திடப்-பன்னுவாய்மன்னா (நீதானு)

துலைதூரநடக்கலாகேன்-என்
ஆலமும்மெலித்திடுங்-கால்களுங்வலித்திடும் (நீதானு)

பசிபொறுத்திடமாட்டேன்-என்னால்
பாக்கியமில்லையோ-அதற்கேதுசொல்லையே (நீதானு)

நம்பிவாரேனுன்னை-அடா
நட்டாற்றில்கைவிட்டிடுவாயோசொல் (நீதானு)

தாரகன்-வசனம்

ஓய் ஓய் ராஜனே நீதானுஅரிச்சந்திரன் நானுன்பின் வரட்டுமா கடனைக்கொடுப்பையா எவ்விடங்கொடுக்கிறாய் சொல்லும் பிள்ளாய் ராஜனே.

அரிச்சந்திரன் - விருத்தம்

ஐயனே தாரகனேகேள் யானையின்மீதிலேதான்
ஐயனேவீரனேறி அரிசவுண்டெறியுமுச்சம்
ஐயனேபொன்தான்நானே அருமுனிக்களிக்கவேண்டும்
ஐயனேகாசிசேர்ந்தே யடியனுங்கொடுப்பேன்வாரீர்.

வசனம்.

சேளுமையா தாரகரே ஒருவாலிபன் யானையின் பேரிலேறி கவண்டெறிந்தவுயரம் பொன்கொடுக்கவேண்டுங் காசிக்கிச்சென்று தடையின்றிகொடுக்கின்றேன் கூடவாருமையா.

தாரகன் - விருத்தம்

என்னை நீயழைக்கவேண்டு மிகுதியன்றிகாக்கவேண்டும்
அன்னை போல்பேசவேண்டு மதிமெதனைப்புகழவேண்டும்

பொன்னை நீ கெடுவு தன்னிற் பொட்டெனக் கொட்டவேண்டும்
பின்னை வேறுரைப்பாயாகில் பேசினான் பொய்யென்பேனே.

வசனம்

கேளும் ராஜனே என்னை நீயெயணுக்க வேண்டும் வெகு ஜாக்கிரதையாய்க் காக்கவேண்டும் சந்தோஷமாய்ப் பேசவேண்டும் என்பெருமையைக் கொண்டாடவேண்டும் கெடுவில் ரொக்கத்தைக் கொடுக்கவேண்டும் வேறு சொன்னால் பொய்பேசினானென்பேன் ராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

பொன்னையுங் கெடுவிற்குள்ளே பொட்டெனக் கொட்டுதற்கும்
என்னை தெண்டிப்பதற்கு மெக்கையே யுமக்கே சொந்தம்
உன்னையென் குலத்திலேற்றி யோதிடுந் தெய்வம்போலுன்
தன்னையே பணிந்து நிற்பேன் தயாபரா போவோம் வாரீர்.

வசனம்

கேளுஞ்சுவாமி தாசனோ யுண்மையென் குல தெய்வத்தைப் போலெண்ணி நடப்பேன் கெடுவில் பொன்னைக்கொடுப்பேன் அதற்காகவென்னை தண்டிக்கும்படியான பாத்தியதை யுமக்கேயுண்டு வாரும் காசிக்குப்போவோம் சுவாமி.

விஸ்வாமித்திரன் - விருத்தம்.

இன்னமோர் சேதி சொல்வே னிதையு மந்தனிலே வைப்பீர்
நன்னயக் கறியுஞ் சாதம் நல்லொரு நெய்யும் பாலும்
என்னமாயளிக்கச் சேனும் வழங்கியும் பொன்னையெல்லாம்
மன்னவன் கொடுத்தால் வந்த வழிக்கூலி வாங்குவீரோ.

வசனம்

கேளும் சத்திரேசரோ இன்னமொரு சேதி சொல்லுவேன் நல்ல கறியுஞ் சாதமும் நெய்யும் பாலுங் கேளும் கொடுத்தால் தாகும் கூலியையுங் கேட்டுவாங்குவையோ.

தாசன்-விருத்தம்

இதுதானோ செய்கேனென் சொல்லே யிரும்புபோற் கெக்கசர்ச்சி
பதைத்து துடிக்கான் போலவனை துயவத்தக்கச் சொல்வேன்



தரும்பியே குழையும்போது தாவெனப் பொன்னைக் கேட்பேன்
பதுமனே பொய்மையெள்ள பகன்றிடப் புரிவேன் பாரீர்.

வசனம்

கேளும் விஸ்வாமித்திர முனியே யிதுதானோ செய்வேனென்றிருக்கிறீர் பேசுகின்ற வார்த்தைகளை விக்கக்காசிய யிரும்பைப் போலாக்கி கள்ளுகுடிப்பவனுடல் நடுங்குவதைப்போல் நடுங்கவுரைத்து மனந்தளர்ந்து நிற்கும் வேளை ரொக்கத்தைக் கொட்டா வென்பேன் யதார்த்தமும் யதார்த்தம்பேசினால் பொய்சொன்னானென்பேன் எப்படியாகிலு முன்முடைய பந்தயம் வெல்லிக்கச் செய்வேன் முனிநாதா.

தாசன்-விருத்தம்

தருகுவேனென்றாய்ப் பொன்னை தயவுடன் மனமகிழ்ந்தேன்
ஒருநவுஞ் சொன்னாயென்னை வழிபற்றினாலே பாலன்
கருகவுமென்றாலாகா கனப்பசி தாவுமன்னே
தருகவே வேண்டுமன்னம் தானுரை செய்வாய் மன்னா

வசனம்.

கேளாய் ராஜனே பொன்கொடுக்கிறேனென்றாய் சந்தோஷம் நானோ சிறுவன் பசிபொறுக்கேன் பசிக்குமுன் அன்னங்கொடுக்கவேண்டுமிதில் தடையுண்டோ சொல்வாய் மன்னா.

அரிச்சந்திரன் - விருத்தம்

உன்பசி முன்னே தீர்த்து வுணவது யானே கொள்வேன்
ஒன்றுமுஞ் செய்யேனுந்தன் வாக்குக்கே யிடையூறு சொல்லேன்
தன்மனங் கொண்டுபோனேன் காத்துயே யுபயோகம்
தன்மதங் கொண்டிடாதா தாவுமே யொட்காவீரீர்.

வசனம்.

கேளுஞ்சுவாமி உம்மை முன் போஜனஞ்செய்யப்பார்ப்பேன் உம்முடைய வாக்கையே மீறேன் பெட்டகமுடன் நடக்கேனே தவிர இரோசத்தை குறைவின்றி பாதுகாப்பேன் காசிக்குப் போகலாம் வாருஞ்சுவாமி.

அரிச்சந்திரன் - தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

போவோம்வாரீர்-போவோம்வாரீர்-புகழுங்காசி
பகிழ்வதாக போவோம்வாரீர்

நாடுவிட்டேவந்தோமிங்கு காடுதாண்டிச்செல்வோமங்கு
கோடுமெனும்பொன்னைத்தேடிகொப்பெனவளிக்கவேண்டி (போ)

நாணமென்பதையும்போக்கி நாமிருந்தஸ்திதியும்நீக்கி
வானவர்களேற்றுங்காசி வாசனைப்பணிவோம்நாமே (போ)

கவுசிகன்செய்மாயைக்கண்டோம் கணமதில்லதுன்பமுண்டோம்
பவுசுளக்காசிசேர்ந்தே பாதகன்கடனைத்தீர்க்க (போ)

சந்திரமதி-தரு-செஞ்சுருட்டி-ஆதி.

பல்லவி

நடந்துவாடாயெந்தன்-நற்றவத்தாலுற்றபாலா

அநுபல்லவி

கடைந்தவெண்ணை பேகனியே
கணுவிலாச்செங் கரும்பேதேனே (நட)

சரணங்கள்.

மல்லிகைமுல்லையேவாசம் மருவியமருக்கொழுந்தேகுமிழே
சொல்லிறந்தியேதாழை சொர்ணமேசுறுக்கதாக (நட)

முப்பழமேகனிந்த மொழியொணாவாத்தினமே
கற்பகமேகதலிபலா மூகேகதிர்ப்பச்சையே (நட)

இருவாட்சிசெண்பகமே பெங்குங்கிட்டாமாணிக்கமே
அருமையாய்வளர்த்தவெந்தன் ஆசைமிகுந்தேவதாசா (நட)

தேவதாசன்-தரு-துஜாவந்தி-ஆதி.

பல்லவி

எப்படிநான்நடப்பேன்-இம்மணல்மீதில்
எப்படிநான்நடப்பேன்



அநுபல்லவி.

அப்பப்பாவெந்தனுட மடிநுணியெரியுதே
அருமையாயெனைப்பெற்ற அன்னைதந்தையேவாரீர் (எப்)

சரணம்

கொப்பளிக்குதேயெந்தன் குளிர்ந்தபாதங்கள்வாரீர்
கொடுமையினைச்சகிக்க கூடவில்லையேபாரீர் (எப்)

நாவுமுலர்ந்துளந்தன் நடையுஞ்சோருதுவம்மா
நடக்கவினியேலென்றால் நாட்டம்போதாதுசும்மா (எப்)

கோவுமிருந்துநன்றை குழைப்பார்ப்பதுமுண்டோ
கிருபைபுரிந்துளன்மேல் கிட்டவருவீர்கண்டோ (எப்)

மாருந்துடிக்குதெந்தன் மனமுமடங்குதையா
மயக்கமாகுதேபசி மாறுதென்னவிவையா (எப்)

வேறுதடைகளொன்றும் வெளியேனுக்கிலையெந்தன்
வேதனைநீக்கவாரும் வேர்வையேயென்னையா (எப்)

உச்சியெரியுதெந்தன் உலவுகாலெரியுதே
ஓடியென்னிட்டவாராய் உத்தமாசரியுதே (எப்)

அரிச்சந்திரன்-கன்னணி-சாமா-சாப்பு.

ஐயோவைத்தனே-அடவிதன்னிலே
அலைபவும்விதியோ
அயன்சதியோ-காலகெதியோ-அடாமகனே
அப்பனே அழுகாதேடா-மகனே

என்னசெய்குவேன்-எந்தனற்பாலனே
ஏங்கவும்விதியோ
ஏமன்சதியோ-காலகெதியோ-அடாமகனே
இன்பனே இழையாதேடா-மகனே

பாரில்காரியும் - பதைக்கவும்நம்மையே
பற்றவும்விதியோ
பான்சதியோ-காலகெதியோ-அடாமகனே
பாலனே பதைக்காதேடா-மகனே

மன்றாடுவாயென்ற-மகனேயென்மனம்
மாறவும் விதியோ
மாயன்சதியோ-காலகதியோ-அடாமகனே
மைந்தனே மயங்காதேடா-மகனே

சத்தியகீர்த்தி - வசனம்

அப்பா தேவதாசா இந்தமணல்மீதில்வைத்ததா லுனதுபாதங்கள் நோகுதோ பயப்படாதே என்றோளின்பேரிலேறிக் கொள்ளுங் கண்மணியே.

அரிச்சந்திரன் - விருத்தம்

பஞ்சணைமெத்தைதாக்கின் பாதமுநோகுதென்பாய்
கொஞ்சருங்கிளியேதேனே கொதிமணல்மிதிக்கலாச்சே
நஞ்சதுவுடையபாம்பு நாடியேதுரத்தவெந்தன்
கெஞ்சியேகளைத்தாய்தோள்மேல் வருந்தாயேறிக்கொள்ளே.

வசனம்.

பெண்ணே சந்திரமதி பஞ்சணைமெத்தை மிதிக்க பாதம் நோகு தென்பாயே கிளியே யிப்போது மணலின்மீது நடக்கவும் பாம்புமுதலா னஅசனுந்துரத்த ஓடினதாலுங் களைத்தாய் யென்றோளின்பேரிலேறிக்கொள்ளும் பெண்ணே.

சந்திரமதி - விருத்தம்.

தவமுனியுமைஞ்சசத்தை மனதில்நாட்டித்
தானிரக்கத்தயாபரனே தடைகளின்றி
அவமதித்தேதுரசெனவே யாகும்நாடு
பதியுள்ளாரவமணியுந் தனமும்நாதா
அவப்பலவுமுமையேற்றப் பூம்கொண்டாட
வுத்தமனே சுமைபெனவே மனித்ததேவே
பவமடைவேனோ குருவே னடியாளேரின்
பதிவிரதையெனுநெறியும் பலிக்காதன்றோ.

வசனம்.

பேருமென் பிராணநாதா உஞ்சாமினுடைய விஸ்வாமித்திர ம காரிஷி யாசித்ததற்கு வுமது நாடு நகரமுதலானதும் லட்சுமியில்லாமல் கொடுத்துவிட்ட தயாநிதியே யுமதுதோளில் நானேறுவேனாகில் பாவ த்துடன் பதிவிரதையெனும் நெறிமாறும் மன்னிப்பீர் பிராணநாதா.



அரிச்சந்திரன் - விருத்தம்.

மட்டிலாமதிதயேந்திரன் மகிழ்பெறுந்தவத்தில்வந்து
மட்டிலாமதிவகுத்த மாதேயுன்கற்பினேர்மை
மட்டிலாத்துயர்வந்தாலும் மாறியேபனிபோல்நீங்கும்
மட்டிலாநெறியாளான மங்கையேநடந்துவாராய்.

வசனம்.

பெண்ணே சந்திரமதி யுன்னுடைய கற்பின்பலத்தினால் நமக்குயேது துயர்வந்தாலும் பனிபோல் நீங்குமாதலால் நடந்து வருவாயென் ம னோரஞ்சிதமே.

தாகன் - விருத்தம்.

சுடுமணல்மிதிக்கச்செய்தாய் சொக்கிடமேனிசெய்யான்
கடுமனத்தேளுங்கொட்ட கருதிடஜலமிலாமல்
நெடுவழிவந்தேனுன்பின் கேட்டுதேதுயரம்போரும்
விடுவிடுபோவென்பொன்னை வேண்டிலேனரசேநானே.

வசனம்.

ஓய் ஓய் ராஜனே கேக்கு இந்தவெய்யலில் நடப்பதினாலும் விஷப்பூ ச்சிகள் கடித்ததாலும் குடிக்கஜலங்கிட்டாதபடியினாலும் மெத்தவருத் தமானேனினிநடக்கமாட்டேன் ரொக்கமும் வேண்டேன் போகிறேனை ப்பாவேந்தே.

அரி - வசனம்.

சுவாமி தாங்கள் வேதநெறி பிசகாதிருக்கிற பக்ஷத்திலிந்தப் பூச்சி கள் தங்களைத்தீண்டுமோவேதியரே.

தாகன் - வசனம்.

ஓய் ஓய் ராஜனே அதுஇருக்கட்டுங்காணு மென்னுயிரையெடுத்து ஒ ரடிவைக்கலாகாதுவேந்தனே.

அரி - வசனம்.

நானெடுத்துக்கொண்டு நடக்கின்றே னென்றோளின்பேரில் தயவு செய்து யேறிக்கொள்ளுஞ்சுவாமி.

தாரகன் - வசனம்.

வெகுசந்தோஷம் வெகுசந்தோஷமிப்போது தெரிந்தேனீசத்தியவன்றான் காணும்ராஜனே.

அரி - தரு - இ - ம் - உசேனி - தாளம் - சாப்பு.

பல்லவி.

நடந்தேனீவாராய் - பெண்ணே பெண்ணே
தொடர்ந்தேனீவாராய் - கண்ணே கண்ணே.

அநுபல்லவி.

நடந்ததாற்பாதம் - நாயகிவனத்தினில்
படர்ந்தகல்முள்ளதினால் - பதைத்தடிநொந்ததோ (நட)

சரணங்கள்.

தடத்திற்றங்காதே - ரவிபோய் - தங்கும்பொழுதே
படத்திலெழுதொணாப் பாவையென்னலிந்தப்
பாடுபடவயன் பதித்தவிதியாமுந்த (நட)

துக்கங்கொள்ளாதே-பின்னேபின்னே-துயராய்கில்லாதே
அக்கிரமமென்ன யவனியிற்செய்தோமோ
விக்கெதிரமக்கே யீசனிடப்போமோ (நட)

விலங்குவாழிடம்-பெண்ணேபவை-வெறுண்டுமோடிடம்
ஜலங்கண்டவிடம் சங்கரனைப்போற்றிக்
கலங்கலில்லாமல் களைநீங்கிடத்தேற்றி (நட)

அரி - விருத்தம்.

சுடுமணல்படர்ந்திருந்த சுரந்தனைக்கடந்தேஐயா
கொடுமையாம்பவத்தைப்போக்குங் கோமதியாற்றைக்கண்டோம்
படுமென்றன்றுயரைப்பார்த்த பரிதியுமஸ்தமானன்
கடுத்திடுமிரவுதங்கிக் காலையில்முன்செல்வோமே.

வசனம்.

கேளுஞ்சுவாமி தாரகரோ யிதோ கோமதியாற்றருகில்வந்தோம் சூரியனுமறைந்தான் பாவிகள்நெஞ்சம்போன்ற விருள்கப்பியது இந்தயிரவையிவிடத்திலேயே போக்கியுதயத்திலெழுந்து முன்னுக்குநடப்போம் சுவாமி.



தாரகன் - வசனம்.

அப்படியே செய்யலாமகாராஜனே ஆனாலெனக்கு மெத்தவும் பசியாயிருக்கின்றதே யென்னசெய்வேன்ராஜனே.

அரி - வசனம்.

சுவாமி தங்கள்பசியைத்தீர்க்கவேண்டியவைவழைக்கின்றேன் வேதியரே.

அரி - விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யந்தணர்பசியைப்போக்க
அப்பனேநடந்தலுத்த வருந்துயரதைமறந்து
அப்பனேசென்றுகொஞ்ச மருங்கனியிருக்குதன்னை
அப்பனேநீவர்த்தி லறிந்துபேகொணருவாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நடந்துவந்த அலுப்பைமறந்து நமதுவேதியரின் பசிதீரவேண்டி நல்லகனிவர்க்கங்கள் பறித்து வருவாய்மந்திரி.

சத்தியகீர்த்தி - வசனம்.

ஆண்டவனே அப்படியேநான் போய்க்கொண்டு வருகிறேன் வேந்தனே.

அரி - வசனம்.

அப்பா மந்திரி விஷப்பூச்சிகள் மிருகங்கள் முதலானதுகண்ணிற்றிக்காமல் பத்திரமாய்ப் போய்வருவா யப்பா.

மந்திரி - வசனம்.

அப்படியே போய்வருகின்றேன் வேந்தனே.

சந்திரமதி - விருத்தம்.

நஞ்சதுவுடையபாம்புநாடிடாச்செய்யான்பூரான்
நெஞ்சகிலிரக்கமில்லாக்கொடுமிருகக்காட்டில்
பஞ்சைபோல்மந்திரிதானும் பலகனிபறிக்கச்சென்றான்
அஞ்சலென்றழுதேன்காசி ஐயனேயவனைக்காரோ.

வசனம்.

ஓகாசிவாழும் விஸ்வநாதனே பலமிருகங்களும் விஷப்பூச்சிகளுலாவு

ம் படியான காட்டில் வேதியர் பரிந்ர்க்க மந்திரி கனிபறிக்கச் சென்றுளி
ருளோகப்பிரது என்முறைக்கிரங்கி அவனுக்கு யாதொரு துன்பம்வா
ராமல் காப்பாய் காசிநாதா.

பொது - விருத்தம்.

மந்திரியுள்ளிடைபெற்று நெடுந்தூரந்தாண்டி
படவிலவ்விருள்கப்பானந்தன்னாட
சந்திரமதிமுறை செட்டைகேலாதன்
சாராமல்விஷப்பூச்சிமிருகம்யாதும்
வந்திடாதிருக்கவருள் செய்தேகாந்தி
வருவிக்கசோலைபொன்றவைச்சன்கண்டே
சுந்தரன்றன்பதந்துதித்தே புள்ளேபுக்குச்
சொருசானபழம்பறிக்கும்விதங்காண்பீரே.

வசனம்.

சேனுங்கள் சபையோர்களே பதிவிரதாசிரோன்மணியாகிய சந்திரம
தி முறைக்கிரங்கி பாமனிருளைப்போக்கி மிருகங்களும்விஷப்பூச்சிகளு
ம் வழியில்லாடாமல் செய்யவும் மந்திரி ஒருபழவர்க்கச் சோலையைக்கண்
டு கனிகள்பறிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி - கண்ணிகள் - இ - ம் - பிலஹரி - தாளம் - ஆதி.

கனிகள்பறிக்கிறேனே - அந்தகலை-முற்றிலுமுணா
நிலைக்குரியதோர் தலைவேந்தனிட களையதுபோக்கிட (க)

பலவின்கனிபறித்தேன்-இதோ
பற்றியேமாங்கனி நற்றியேதேங்கனி
சுற்றியகளைதனை முற்றிலும்நீங்கிட (கனி)

சோலைக்கனிபறித்தேன் - எந்தன்
கொற்றவன்மகிழ்ந்திட அத்தனும்புகழ்ந்திட
சித்தநான்மகிழ்ந்திதோ வுத்தமாம்வாழை (கனி)

இலந்தைப்பறித்தேன் என்
எந்தைபின்பின்வருந் சாந்தமுள்ள அரும்
நிந்தைபுரியவென் தந்திடப்பரியதோ (கனி)

காட்டின்விளாப்பறித்தேன்-என்னை
சருதியேயாண்டிட்ட பருதிபன்கொண்டிட்ட
சருமகுணமாதும் பெருமையாய்ப்புசித்திட (கனி)



இச்சிலியும்பறித்தேன்-இதோ
இளமொருமிலந்தையும் தளமொருநெல்லியுந்
பலமுள திராட்சியும் குலமகனருந்திட (கனி)

சத்தியகீர்த்தி - விருத்தம்.

எந்தையேயெனதுகோவே பெளிபருக்கிரங்குந்தேவே
சொந்தமாயடியேன்சென்று சொகுசுளகனிகொணர்ந்தேன்
வந்தவிவ்வடவிதன்னில் வருந்தியகளைப்போக்க
விந்தமாவிதைப்புசித்தே விடாய்தணித்திடுவீர்போற்றி

வசனம்.

கேளும்மகாராஜனே நடந்துவந்த அலுப்பினாலுண்டாகிய பசியைத்
தணிக்கவேண்டி கனிவர்க்கங்கள் கொண்டுவந்தேன் புசித்து நீருந்தி
டில் களைப்புநீங்கும் மகாராஜனே

அரி - வசனம்.

வெகுசந்தோஷமப்படியே செய்யலாமப்பா மந்திரி

அரி - விருத்தம்.

ஐயகோசசத்திரோச வன்பரோயுனைப்பேன்கேளீர்
வெய்யலில்நடந்தேவந்த வெம்பசிதீரவேண்டி
துய்யநாமந்திரிசென்று தோணவேசனிகொணர்ந்தான்
மெய்யரோபுசித்தேசித்திரா மேவுவீர்காப்பேன்சுவாமி.

வசனம்.

சுவாமிதாகரே யுமதுபசிநீங்க மந்திரிசென்று இவ்வமதுரமுள்ளபல்வ
கையான கனிகள்கொண்டுவந்தான் தேவரீர்களிப்புடன் சாப்பிட்டு நித்
திரைசெய்வீர் தங்களை நான்காத்துக்கொண்டிருப்பேன் வேதியரே.

தாகன் - விருத்தம்.

பாலன்னந்தயிருவெண்ணெய் பசிக்குண்டதல்லால்வேறு
சீலமில்லாதவிந்த செங்கனிபுசித்ததில்லை
காலமும்வந்ததோமின் கருமத்திற்கென்னசெய்வேன்
ஆலமுட்கொண்டநாத னருளிதென்றயிந்தேன்வேந்தே.

வசனம்.

ஓய் ஓய் ராஜனே நாம்பசித்தகாலத்தில் பால்தயிர் வெண்ணை சாதம் பச்சடிகள் சாப்பிட்டதேயன்றி யிப்போர்க்கொத்த குரங்குகள் பட்சிகள் இன்னும்படியான காய்களைபுசித்ததில்லை யிப்படிக்கிவாய்த்தது விதிதான்வேந்தனே.

அரி-விருத்தம்.

காய்பழமுமக்களித்தே காதகனுகொன்றுன்
தோயுறுதயிருஞ்சோறுந் துன்னனேவுனைப்பிளையா
நோய்பெறக்கால்கள்சோர முனிதயாங்கண்பஞ்சாட
நாய்படாத்துன்பங்கண்டு நவில்வதுசரியோநாதா.

வசனம்.

சுவாமி யுமக்குக்கனிகள் கொடுத்து நான்வேறுபுசித்தேனு நாம்வழியிற்பட்டபாடு பார்த்திருந்து மிப்படிக்குரைப்பது தர்மமோ ஐயரே.

சந்திரமதி - விருத்தம்.

அரசராயுலகையாண்ட வண்ணலும்வருந்திக்கேட்க
பிரசவமொழியுரைத்தே பிரியமதகற்றலானீர்
சுரந்தனிற்றயிரும்பாலுஞ் சோறுண்டோவுமதடிக்கே
காமதுருசித்தேனையா கனிப்புடன்புசித்திடீரே.

வசனம்.

சுவாமி காட்டில் தயிரும்பாலுங்கிட்டுமாவிந்தக்கனிகளைப் புசித்துநித்திரைசெய்யும் வேதியரே.

தாரகன் - வசனம்.

ஓய் ஓய் ராஜனே உன்னையிடவுன்பெண்சாதி மெத்தபசப்பிகாணும் உன்னுடைய பிள்ளைவாய்திறந்தா லின்னமெப்படியாகுமோஆகட்டுமாகட்டுமென் காமவசந்தான் வேந்தனே.

அரி - வசனம்.

சுவாமி சற்றேசயனித்துக்கொள்ளும் மிவாளுங்கொஞ்சம் நித்திரைகொள்ளட்டும் வேதியரே.

தாரகன் - வசனம்.

ஓய் ராஜனே நீயெனக்கடங்கி நடக்கும்போது உன்னைச்சார்ந்தவாளுமெனக்கடங்கி நடக்கவேண்டியதா யில்லையா சொல்லும்பிள்ளாய்.



அரி - வசனம்.

சுவாமி யிவாளெல்லோரு முமக்கடங்கினவாளென்றறிவீர்நாதா.

தாரகன் - வசனம்.

ஆம் ஆம் எனக்கும் நித்திரைவருகிறது சயனித்துக்கொள்ளுகிறேன் ஆனால்நீருமும்மிட ஆம்பிடையாளும் எனக்குநித்திரை வருமட்டுந் தாலாட்டவேணும் யிந்தப்பயல் கால்பிடிக்கவேண்டும் இந்தசடியன் வாதொரு மிருகமுமென்னருகில் வாராதபடிக்கி காவல் செய்யவேண்டும் பிள்ளாய்.

அரி - வசனம்.

அப்படியேசெய்கின்றோம் சுவாமி வேதியரே.

தாரகன் - வசனம்.

ஓய் ஓய் ராஜனே நீகால்மாட்டிலேயும் உன்னுடையஆம்பிடையாள்தலைமாட்டிலேயுமிருந்து தாலாட்டவேணும் வேந்தனே.

அரி - வசனம்.

அப்படியே செய்கின்றோம்சுவாமி.

சந்திரவதி - தாலாட்டல் - இ - ம் - நீலாம்புரி.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ. (ஆரா)
சீரார்ரவிகுலத்து - செம்மலரிச்சந்திரனை
பாராதேதூக்கவைத்த பண்பினரோகண்வளரீர் (ஆரா)
சூதுங்களவுடனே - சொல்லொணப்பொய்மொழியும்
வாதுகளுமேயுணர்ந்த மறையவரோகண்வளரீர் (ஆரா)
பட்டபாடெல்லாம் - பார்த்திருந்துங்கானகத்தில்
சட்டமுடன்பால்கேட்ட சகலகுணகண்வளரீர் (ஆரா)
வேதமுணைக்கும் - விதியறிந்துவெங்கடனை
சோதனைசெய்யுஞ் சுந்தரனேகண்வளரீர் (ஆரா)
அப்பப்பாவென்றே - அபிநயத்தேமன்னவர்மேல்
ஒப்பித்தானேறிவந்த வுத்தமனேகண்வளரீர் (ஆரா
பாலகனழுதாலும் - பைங்கொடியாள்நொந்தாலும்
காலனைப்போல்வருத்துங் கருத்துடையோய்கண்வளரீர்( ஆ

கனியருந்தேனென்றே - காட்டிக்கொணர்ந்ததெலாம்
இனிப்புடனேதான்புசித்த விதக்கமிலோய்கண்வளரீர் (ஆரா)

பொது - விருத்தம்.

மாதுயில்வார்தாலாட்டத்தாகனுனை
யாபாவிவிழித்திருக்கவமைச்சன்காக்க
சாதுவுறுகுணமுடையபாலன்காலைச்
சருவிவாழ்காம்போலசக்கிரவர்த்தி
ஏதிந்தவிதியகச்சேயிட்டாயென்று
மீசனடிதனைநினைந்தேயிருக்கும்வேளை
வாதுமெத்தப்புரிந்திடவேயெண்ணியந்த
வஞ்சகனுமுனிவன்செயும்வகைகாண்பீரோ,

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிவ்விதமாய் சந்திரமதி தாலாட்டத்தர் கண் விழித்துக்கொண்டே யிருக்கமந்திரிகாவல்செய்ய தேவதாசன் கால்பிடிக்க யிவைகளைக்கண்ட அரசன் விதியைநொந்துக் கொண்டிருக்க பாதகத்திற்கஞ்சாத விஸ்வாமித்திரன் யாகஞ்செய்யும் விதங்காண்பீர்கள் கவான்களே.

விஸ்வாமி - அகவல்.

ஆதிபராசத்தி யம்மணிரேணுகா
கோதிலாக்குணத்தி குமரிநீகௌரி
உம்பர்க்குவீரி யுலகர்க்குமாரி
அம்புறுகாத்தி யடங்காப்பிடாரி
நீலியமலி நிகழ்த்தொணுச்சூலி
பாலியென்னுளம் பணிந்திடுங்கோமளி
பேச்சிபிணத்தி பிங்களிஜகத்தி
ஆச்சியைரவி யபிபொனுமாதவி
பேய்ப்படையாளே பெரும்பூதத்துணைச்சி
வாய்க்கவுன்னருளிதோ வருந்தினேனடியேன்
இரிசிகாட்டேரி யெக்காளிருத்திரி
சரிவுனக்கெவரையுஞ் சாற்றிடப்போமோ
சய்யாதய்யா சாய்ப்பியெனக்குன்



அபயமேதருக வருள்புரிவாயே
பூதகணத்தில் பொல்லாததுஷ்ட
வேதாளமொன்றை விடையதுவளித்தே
யென்முனோவருக விரைவியேபுரிவாய்
நன்மையாபுன்றியும் நானதிற்களிப்பேன்
தவிர்க்காதென்முறைதயாபரிபோற்றி
அவிர்ப்பாகமிதோ வளித்தனன்சரணம்.

பொது - விருத்தம்.

பாம்புபோற்சீறிச்சீறி பற்களைமிகக்கடித்தே
தேம்புறுசுடலைவாயால் தேக்கியேவிகாரரூபம்
கோம்புளப்பல்லைக்காட்டி குமமுனிமுன்னதாக
வீம்புகள்பலவாய்ப்பேசி வேதாளந்தோன்றிற்றன்றே

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிவ்விதம் விஸ்வாமித்திரன் தோத்திரஞ்செய்ய அம்பிகைமனமகிழ்ந்து தன்னுடைய பூதப்படைத்தலைவரிலொருவனையனுப்ப அவன்முனிவன் முன்தோன்றுகிற விதங்காண்பீர்கள்கனவான்களே.

வேதாளம் - வசனம்.

சுவாமி என்னையழைத்தகாரியந்தெரியச்சொல்லவேண்டும் ரிஷியே.

விஸ் - விருத்தம்.

புவனமதைக்கட்டிச்செய்யுமஇவ்வைபூண்ட
பூதமேகோமதையின்கரையிற்காண்ப
புவனமதையாண்டவர்ச்சந்திரன்பாலன்
பூதேவிக்கொப்பானமதிதேனும்
புவனமதிற்றுக்குநிகரில்லாமந்திரி
பூசனுஞ்சயனிக்கக்காத்திருக்கள்
புவனமெலாமிங்கவரைமிரட்டிமன்னன்
பொரிகலக்கிப்பொய்புகலக்கப்புரிகுவாயே.

வசனம்.

கேளாய்வேதாளமே கோமதை ஆற்றின்கரையருகில் நட்சத்திரேசர் சயனிக்க அவருக்குக்காவலாக சந்திரமதியா அரிச்சந்திரனும் சந்திரம

தி தேவதாசன் சத்தியகீர்த்தி யிவாள்காவல் புரிகிறார்கள் நீசென்று உன்திராணியெல்லாங்காட்டி வேதியனைமிரட்டி மன்னனால் பொய்பேசும்படியான விதஞ்செய்வாயப்பா வேதாளமே.

பொது - தரு - இ - ம் - போகனம் - தாளம் ஆதி.

பல்லவி.

வேதாளம்வந்ததே முனிவிடுத்த வேதாளம்வந்ததே

அநுபல்லவி.

பாதாளத்தினில் பதுங்கிமறைந்திடினும்
பத்திகிழுத்துதிரம் பரிவாய்க்குடிப்பேனென்று (வே)

சரணம்.

புவனமெங்கும்புகழ் போன்றவர்செயுனை
பொடிப்பொடியாக்கி பேவிசுவேன்என்
கவனமறந்தேவென்முன் கருதிவந்திடினுனை
கண்டித்துதிரமென் மேல்பூசுவேன்
சவமாயுனைவதைத்தே சனதவேறெலும்பாக்கி
சாதித்தென்பசிதீர சாங்கமாய்க்கொள்வேனென்றே (வே)

வேதாளம் - விருத்தம்.

ஆரட விவ்வனத்தி லச்சமும்பயமில்லாமல்
சீதாய்வரவுமானாய் சிரிக்கிபார்பயலார்ரளார்
வீரமாய்ப்படுத்திருக்கும் வேதியக்கள்ளனோரா
கூரடாயவனைநானுங் கொப்பெனவிழுங்கத்தானே

வசனம்.

அடா சற்றுமஞ்சாம லிந்தவனத்தில் நீயார அவன்யார பயலார் ஆளார் பார்ப்பானார் சொல்லடாசொல்லு நானதோபடுத்துக்கொண்டிருக்கிற வேதியனைத்தின்று யென்பசிதீருவேனடாபயலே.

தாரகன் - வசனம்.

ஓய் ஓய ராஜனே அப்பாமந்திரி அம்மாசந்திரமதியிதென்னயிதென்ன ஐயோ ஐயோ யெப்படியெனக்கு அந்தவார்த்தைகேட்டே பாதிபிராணன்போய்விட்டது என்னைக்காவுங்கள் காவுங்கள்



அரி - வசனம்.

சுவாமி வேதியரே நீரொன்றுக்கும் பயப்படவேண்டாம் நானிருக்கின்றேன் பொறும் அந்தவேதாளத்தை நான்விசாரிக்கின்றேன்ஐயரே

அரி - விருத்தம்.

உரமுடனென்னைக்கேட்ட வுத்தமாகேள்வேதாளா
அரசானயோத்தியாண்டோ னவனொந்தன்தேவிபாலன்
திரமுடனித்தினைசெய்வோர் திகழ்பெருந்தாரகாகும்
கரமதுபணிவோன்மந்திரி காணுவாயப்பாநீயே.

வசனம்.

கேளாய் வேதாளமே நானயோத்திராஜன் இவளென்பத்தினிஇவனென்குமாரன் இவனென்மந்திரியிவரோ கௌசிகராலே வைப்பட்டதாரகரென்றறிவாயப்பா.

வேதா - வசனம்.

அடாராஜனே நீமெய்பேசினாய் சந்தோஷமானால் என்பசிதீரக்கமாமிஷத்தாரகன் தேகமென்றறிவாய்ராஜனே

தாரகன் - வசனம்.

சத்தியசந்தரூத அரிச்சந்திரமகாராஜனே வேதாளமென்னை தின்னுவேனென்கிறான் ஆவிசோருது அடியேனுன்னுடையவாக்கைநம்பி யின்வந்தேன் ரக்ஷியுமையாவேந்தனே.

அரி - வசனம்.

சுவாமி அடியேனிருக்கின்றேன் நீரொன்றுக்கும் பயப்படவேண்டாந்தாரகரே

அரி - வசனம்.

கேளாய்வேதாளமே யுன்பசிதணிக்க விந்தவேதியா மாத்திரமுதவாரொன்றறிந்துக்கொள்வாயப்பா

வேதாளம் - வசனம்.

அடா ஆ ஆ வென்ன ஆங்காரமாய்த்தாக்கனைக் கொடுக்கேனென்றுபுன்னையிந்தவாளினால்வெட்டிந்து அந்தக்கொழுத்தவேதியனைப் புசிக்கிறேன் பாரடாபார

தாசன் - வசனம்.

ஐயையோ வேதாளங்கிட்டவருகிறதே என்ன செய்வேன் யென்ன செய்வேன்.

தேவதாசன் - வசனம்.

சுவாமி யிந்தவுருவேதாளத்தைக்கண்டா யெப்படிக்கிங்குறீர் பயப்படாதிரும் அந்தவேதாளமாகுங் கெடுவயைப்பாரும் தாசனே யுமக்குமுன்னிதோ நானிருக்கிறேன்

சத்தி - வசனம்.

சுவாமி யிதோ தேவதாசனுக்குமுன் அடியாள்நிற்கின்றேன்

சத்தியகீர்த்தி - வசனம்.

வேதியரே பயப்படாதேயும் யிதோநானென்தாயாருக்கு முன்னிற்கின்றேன் திடமாயிருஞ்சுவாமி

அரி - விருத்தம்.

அடவிபூதத்தின்மிக்க வங்கபாரம்படைத்தோய்
அடவியிலென்மின்பற்றி அய்பருவந்தாரகண்டாய்
அடவியிற்றடமழித்தே யடஞ்செயத்தருமோநீதான்
அடவியிலவைனாகீக்கி யடியனைப்புசிப்பாயப்பா

வசனம்.

கேளாயப்பா வேதாளமே என்னைநம்பிவந்த வய்யனை மாத்திரம் விட்டு யென்னைப்புசித்துப்பசிதீருமாயப்பா

தாசன் - வசனம்.

அப்படியே செய்பச்சொல்லும் சத்தியந்தவறுவேக்குரோ.

வேதாளம் - விருத்தம்.

உங்களைக்கொல்லவென்ன பொல்லேனன்றுகேளாய்
தங்கமாய்ஜொலிக்குந்திரேகத் தானைப்புசிப்பேன்மின்னும்
எங்களினெஜமானுக்கே யிவன்தலைகொண்டேபோய்
பொங்கமாய்ப்பார்த்திட்டே போற்றிடுலப்புகழுவாரே

வசனம்.

கேளாய்யரசனே உங்களைநான்புசிக்கமாட்டேன் தாசனையே புசிப்பே



னவனுடையசிரசை யென்னெஜமான் முன்கொண்டுபோய்வைத்தால் மெச்சுவசெகுசியடைவார்மன்னவனே

தாசன் - விருத்தம்.

அரசனே கோவேயுன்னை யண்டிரோர்தன்னைக்காத்தாய்
அரசனேயென்னைநீயி யடவியிற்கைவிடாதே
அரசனேயிங்கேயென்னை யருந்திடப்பூதத்தன்னை
அரசனேவாக்கைச்செய்தாயா ஆதாரிநானன்றோ.

வசனம்.

கேளாய்ராஜனேயுன்னைநம்பிநேனென்னையெல்லாங்காத்தாய் அதைத்தேட்டநானுன்னைநம்பிவந்தேன் என்பேரிலேதோகவுமின்னைத்து என்னைப்புசிக்கயிந்தபூதத்தைவரவிட்டாய் சரிசரி வெந்தனே.

அரி - விருத்தம்,

நான்வரவிட்டேனென்று சினம்பிடேனையாகேளும்
தான்முன்சத்தியகீர்த்தி தன்னையுமயிக்கேதூரீசோ
ஏனித்தவெண்ணைக்கொண்ட மோவேமற்கேட்பார்வீர்
மானமுழுதீக்கேதாறனேன மாயமதுயியேன்போற்றி

வசனம்.

சுவாமி நான்வரவிட்டேனென்பதுதருமமா சினமடைவெனக்கு இந்தபூதம்வந்ததுமாயத் தெரியாதுவேதியரே

தாசன் - விருத்தம்.

அறியேனென்றுசொன்ன வாசகேயுனக்குகேளாய்
வீரனைமுனிவன்பொன்னை வேண்டிடாதிருக்கவல்லோ
சாமொழிசொல்லிப்பூதத்தை சார்ந்திடவிட்டாயென்மேல்
தெரிந்ததுவுனதுசூத்தியம் இன்றியாகோட்டுமையே

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நீகொடுக்கவேண்டிய பொன்னைத் தப்பிக்கக் கொள்ளவிந்தபூதத்தை வரவிட்டாய் நான்பொன்னை வேண்டேன் போய்விடுகிறேன் இல்லையென்றுலிந்தபூதத்தைத்தடைசெய்வாய்ராஜனே

சந்திரமதி - விருத்தம்.

தன்னாருபோரவென்றும் கருதிரேபவன்னை தன்னை
தீன்னலென்றுமனைத்திடாதுஞ் சந்தகன்றுசொன்னீர்

கொல்லைக்கருவோபூதங் கொடுமைதான்செய்ததேது
நல்லதோவுமக்கேநீதி நாதரேயிருப்பீரைய்யா

வசனம்.

சுவாமி கள்ளங்கபடதெரியாத அரசனைவஞ்சகமென்று சொல்லுவதுதகு
யோ வேதியரே.

சத்தியகீர்த்தி - விருத்தம்.

வேந்தனேயடியேன்செப்பும் விண்ணப்பமொன்றுகேளீர்
சந்தமதென்னைப்போசா சண்டாளன்றுதிதாகும்
பாந்தரோவேதாளத்தைப் பதைத்திடவதைப்பீரானும்
சேர்ந்திடகாசிகாலை சீக்கிரப்படுவோம்நாதா.

வசனம்.

சுவாமி யினித்தடைசெய்வதினால் பிரயோசனமில்லை யிந்தப்பூதம்வி
ஸ்வாமித்திரனுடைய மாய்கையாகுமிதைத்திவரத்தில் வதைத்து நாம்மு
ன்னுக்குப்போக வெத்தனப்படுவீர்வேந்தே

அரி-வசனம்.

அப்படியேசெய்கின்றேனப்பாசத்தியகீர்த்தி.

வேதாளம்-விருத்தம்.

ஆயுதமில்லாப்பேயா ஆண்மைகள்படைத்தேயென்னைப்
பேயென்றும்பூதமென்றும் பேசுறாய்தகுதியன்றே
நாயதுதோலைப்பற்றி கடிக்கிடுமாறுபோல
செய்கிறேன்பாப்பான்றன்னை சிக்கிரம்பாராய்மன்னா

வசனம்.

கேளாய்ப்ராசனே நீமெத்த ஆங்காரமாயென்னைப்பூதமென்றும் பேயெ
ன்றும் பேசுகின்றாய் நாய்தோலை மென்றுவதுபோல அந்தத் தாசனை
மென்று தின்கிறேன்பாராய்

பொது-விருத்தம்.

இவ்விதம்பேசிப்பூத மெரியன்றுடனேகிட்டி
கவ்விடத்தங்கள்தன்னை கருதிபேயர்வேகண்ட



செவ்விளமுலையாள்தானுஞ் சினந்தோறுபுல்லைத்தாங்கி
ஒவ்வியேசணைநதிய வொடுங்கும்வாறறிகுவீரோ

வசனம்.

சேளுங்கள் சபையோர்களே பூதமானது தாசனைப்பிடிக்க அருகில்
வரக்கண்ட சந்திரமதி ஒருதுரும்பையெடுத்து அரிச்சந்திரமகாராஜன்
கையிற்கொடுக்க யதினால்பூதம்படியும் விதங்காண்பீர்கள் கனவான்களே

சந்திரமதி-விருத்தம்

மன்னிப்பீர்சேயந்த மாமுனிவிடுத்தபூதம்
இன்னிமைதனிலழிக்க யெந்தியிந்துரும்பைநீரும்
உன்னதமெழுத்தையோதி யுருவேத்திற்றுக்கில்நாதா
சென்னியும்பிளந்தேவந்த செருக்கெலாமழியுந்தானே

வசனம்

சேளுமென்பிராணநாதா ஆயுதமில்லையென்று இகழ்ந்துபேசியமிருக
த்தனமைபூண்ட பூதத்தின்பேரிலடியாள் தருமித்துரும்பை தங்கள்
கையாற்றுங்கி பிரணவத்தைஓதித்தாக்கில்மடிந்து போகுஞ்சுவாமி

அரி-வசனம்

அப்படியேசெய்கின்றேனென்பிராணநாயகி

அரி-விருத்தம்.

பூதபேயுனக்கேபுத்தி புகலுவேனினைவாய்க்கேளு
காதகமுள்ளவுந்தன் கருத்தைமாற்றிநீயிப்
போதகிகாலமோடில் புத்தியுமிலைக்கலாகும்
வேதனைபுரிவேனென்றால் வீசுவேன்துரும்பாற்பாரே

வசனம்.

கேளாய் துஷ்டவேதாளனே யுன்னுடையவுயிர் பிழைக்கவேண்டு
மாகில் வந்தவழியைப்பார்த் தோடிப்போவாயில்லாவிடி லுன்னையிந்
த்துரும்பினால் வீசுவேன்கண்டாய் துஷ்டனே

வேதாளம்-வசனம்

அடாமயலே யுங்களைநான் அற்பமாய்மதித்திருக்கும் என்னைத்துரு
ம்பால் வீசுகிறேனென்று யிந்தாபாரந்த வேதியனை நறநறவென்று மெ
ன்றுதின்கிறேன்.

தாகன்-வசனம்.

அரிச்சந்திரமகாராஜனே நீர் செய்வதைப்பார்த்தா லெனக்குப் பயமாயிருக்கின்றது வேதாளத்தின்கையில் வாளாயுதமிருக்கின்றது ஒருபுல்லைத்தாக்கிஜெயிக்கப் போகிறாய்நீயிறப்பதுடனென்னையுங்கொல்லப்போகிறாய் ஐயையோ என்னசெய்வேன்சிவமே

சந்தி-வசனம்

ஐயரே நீர்பயப்படவேண்டாம் வல்லவருக்குப் புல்லேஆயுதமென்பது தெரியாதா பயப்படாமலிரும் வேதியரே.

சத்தியகீர்த்தி வசனம்

சேளுமகாராஜனே தன்னைக்கொல்லவந்த பசுவைக் கொல்லவிதியிருக்கத்தாகன் வேதாளன்பேரில் தயவுகாட்டுவதில் குணங்காணேன் சீக்கிரத்தில் வதைப்பீரென்றுண்டவனே.

அரி-வசனம்

அப்படியானுலிதோ தாக்கினேனப்பா சத்தியகீர்த்தி

பொது-வசனம்.

சேளுங்கள் சபையோர்களே வேதாளமான து வேதியன்பேரில் பாயக்கண்ட அரசன் ஒருபுல்லுக்குமந்திரமோதித் தாக்கினவுடன் பூதமானதுமடிந்ததென் றறிவீர்களானவான்களே

அரி-விருத்தம்.

தாகரேயுள்ளமோடித் தானிவேயிங்குவந்த
பயபாப்புடையபூதம் பதைக்கமேதலையற்றாய்ந்தே
அரவுடமடங்கிப்பிரேத மானதேபருக்கன்றுங்
கிரமுடனிந்தான் சிவப திருக்காசிபோவோம்வாரீர்

வசனம்.

சேளுங்சுவாமி தாகரே யுள்ளைக்கோறிவந்த பூதமுமடிந்தது பொழுதும்விடிந்தது நாமினிமுன்னுக்குச்செல்வோம் வாருமய்யரே

தாகன்-வசனம்.

அப்படியா பார்த்தீரா நான்ஒரேஒருமந்திரத்தைமன தில்சொன்னேன் வேதாளமடிந்ததுமன்னனே



அரி-வசனம்

ஆம் ஆம் எல்லாந்தங்களால் நடந்தமகிமைதான்சுவாமி

தாகன்-வசனம்.

அடாராஜனே யினிமுன்னுக்கு நடக்கமாட்டேன் பொன்னைக்கொடும்பின்னாய்கொடும்

அரி-வசனம்

சுவாமி இந்தஆரணியத்தில்பொன்கிட்டுமா நான்முனிக்குச்சொன்ன வாக்கின்படியே காசிக்குப்போய்த் தருகிறேன் வேதியரே

தாகன்-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-சாப்பு

பல்லவி.

தாரோன்தாரோனென்று சாதிக்கிறாயல்லால்
தரும்வழியேதுசொல்லடா அடாசந்தாய் தரும்
வழியேதுசொல்லடா

அநுபல்லவி.

வீரமாகப்பேசி நேர்மாய்க்கைவீசி
காடவியிலோசி கோரஞ்செய்திரு யோசி (தா)

சரணங்கள்.

நரிகளும்பதருதே-அடாசந்தா
நாய்களும்வதறுதே
கரிகாயும்வருகுதே காக்கையுங்கதறுதே
சரீமனம்வெறுக்குதே சங்கட்டம்பெருகுதே (தா)

இன்னமெங்குபோரா-யிக்காட்டினில்
யேதுசெய்வையோகூராய்
பொன்னைக்கொடுத்தாலாச்சு போவென்றுவொருபேச்சு
என்னையிழுப்பதேச்சு என்சேவிசுகம்போச்சு (தா)

அரி - வசனம்.

சுவாமி யிதுதான்காசிக்குப் போகும்வழி யிந்தபகற்காலத்திலேன்தி

இல்லைகிநீர் காசிசேர்ந்து பொன்னைக்கொடுக்கிறேன் வேதியரே.

பொது-வசனம்.

சேனுங்கள் சபைபோரகளே இந்தப்பிரகாரம் தாசன்பேசியதைக்கேட்ட அரிச்சந்திரன் முதலானவர்கள் இயங்கிநிற்கும் சமயத்தில் விஸ்வாமித்திரமுனிவருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வா-தரு-இ-ம்-காகாப்பிரியா-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னசெய்வேன்நானே யினியினியேதுசெய்வேன்தானே

அநுபல்லவி.

முன்னமேயிவன்சேதி முழுதுந்தெரிந்திருந்தும்
மூர்க்கத்தால்தேவர்முன் மோடாயாடிக்கெட்டேன் (எ)

சரணங்கள்

தேளும்பூரான்விடுத்தேன்-விதவித
நீண்டபாம்புந்தொடுத்தேன்
வாழும்பாலன்தேவி வகைச்சனுங்கூடவே
வண்ணமாய்மனதினில் வாக்குக்கெட்டியாடவே. (எ)

பூதந்தன்னை விட்டேன்-வதைத்திட
பொடிமணல்சுடவிட்டேன்
காதகமியாதான் கைபிற்றுரும்பதால்
வேதாளந்தன்னையே வீசினன்மரித்ததால் (எ)

இப்பவனேதிர்செல்வேன்-தேவிமந்திரி
யிணங்கமுறைசொல்வேன்
எப்படியாகிலு மிவர்கடனைப்பிரிப்பேன்
அப்போவரசனும்பொய் யறைந்திடவுஞ்செய்ப்பேன். (எ)

அரி-விருத்தம்.

படபடத்திடவேமேனி பனிநீர்போல்வேர்வைசோர
தடமதில்கிடந்ததாலே தாளடிமெத்தநோவ
அடவியில்என்னைநாடி ஐயனேகோபமிஞ்சில்
விடமதுவந்தவென்னம் விளம்புவீரெனக்குத்தானே



வசனம்.

சுவாமிமுனிநாதரே தாங்கள் பாதம்நோகயிந்தக்காட்டில் அடியேனைக்காணகோபமுடன்வந்தவார் தெரியச்சொல்லுமுனிநாதரே

விஸ்வா-விருத்தம்.

மன்னனேசத்யமோங்க மகிழ்ந்துநீயாசுசெய்வாய்
கன்னநன்னடவிசார்ந்து கனிந்துபஞ்சாக்னிமத்யே
நன்னருந்தவத்திநின்றுநாதனைப்பணியப்போறேன்
என்னவுன்கருத்தென்க்கே யெடுத்துரைசெய்வாயப்பா

வசனம்.

சேனாய் அரிச்சந்திரமகாராஜனே நான்தவஞ்செய்யப்போகிறேன் உனது நாடுசேர்ந்து அரசு செலுத்தி சுகமுடன்வாழ்ந்திருப்பா யிதற்குன்கருத்தென்னதெரியச்சொல்வாய் வேந்தனே

அரி-விருத்தம்.

உனக்குநானளித்தநாட்டை யுத்தமாகருதிடேனே
தனக்குமேவேண்டுமானால் தாரணியையாள்வீரல்லால்
எனக்கிந்தருதுசெப்பி லேற்றிடேனெறியுமாறேன்
மனத்திடமிதைக்கனிந்தே மாதவாநடப்பீர்போற்றி

வசனம்

சேனும் முனிநாதரே நான்தங்களுக்குத்தாரைவார்த்த நாட்டைஒருகாலும்விரும்பேன் நீர்வ்விதருது செய்வதற்குடன்படேன் தங்களாசிரமத்திற்கு எழுந்தருளுஞ்சுவாமி.

விஸ்வா-வசனம்.

அப்படியா அரிச்சந்திரமகாராஜனே கொஞ்சமிப்படிவாருந்தாகரே

விஸ்வா-விருத்தம்

தாகரேநீர்தான்செய்த நாடகமேதுங்காணேன்
மாவாபலத்துக்கொண்டான் வாய்மிஞ்சிப்பேசவானன்
இரதிரவென்றேசுத்தி கிளிமொழியாளும்வாட
உரமுடனேகோரஞ்செய்தா லுன்னிப்பொய்சொல்லுவானே

வசனம்.

கேளுஞ்சுக்கிரரே நீரொன்பேரில் மெத்தவுந்தயவுவைத்திருப்பதாகத்தெரிகின்றது அரசன் மிகவுந்தைரியசாலியாகிவிட்டான் இவன்பெண்ஜாதியின் வெளாடும்படிசெய்வீராகில் பொய்சொல்லுவானல்லது வேறில்லைபகவானே

தாகன்-வசனம்

முனியேநீரொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை நான்வேண்டிய சித்திரவித்தைகள்செய்து பொய்பேசச்செய்கிறேன்முனிநாதா

விஸ்வா-வசனம்

எனக்கு மெத்தவிசனமாயிருக்கிறது இனியென்னசெய்யப்போறேனுமால் பந்தயங்செலிக்கவிருந்தேனென்னெண்ணம்வீணுவிட்டது சுக்கிர மூர்த்தியே.

தாகன்-விருத்தம்

உரல்தனிற்றலையையிட்டு உலக்கைக்குநடுங்கப்போமோ
இராமுனைதைரியத்தைத் திட்டாமற்றியங்கலாமோ
அரசனைநீயேகோரு மருப்பொய்யைபேசச்செய்வேன்
பரமனையறிந்தோயுன்றன் பதியினுக்கேகுவாயே

வசனம்

கேளும்விஸ்வாமித்திரரே தைரியத்தைவிடப்போமோ வுமதுமனம்நாநான்வேண்டிய வித்தைகள்யாகிசேர்ந்தவுடனடத்திபொய் பேசச்செய்வேன் நீருப்பிடஞ்சேருஞ்சுவாமி

விஸ்-வசனம்

மெத்தசந்தோஷம் உம்முடையவார்த்தையைநம்பிப்போகின்றேன் எப்படியாகிலும் அரிச்சந்திரவாயிலொருபொய்வரவழைத்து என்னைக்காப்பாற்றவேண்டும் சுக்கிரமூர்த்தியே

விஸ்-வசனம்.

அப்பா அரிச்சந்திரமகாராஜனே கொஞ்சம்போகிப்படிக்கி வருவாயப்பாராஜனே



அரி-வசனம்

அப்படியேவருகின்றேன்குருவே

விஸ்-விருத்தம்

நான்சொன்னபுத்திகேட்க நாட்டாமற்போனுயென்னைக்
தான்செய்தபலனையெல்லாந் தனையனைமறந்துவிட்டாய் (ன்
வானென்னவங்கொள்ளப்போகாவள்ளலேபொதுவாய்ச்சொன்னே
நினைனேநீதானிந்தத் திருவெலாந்தைக்கொள்வாயே

வசனம்

அப்பா அரிச்சந்திரமகாராஜனே நானுன்தங்களுக்குச்செய்த வுபகாரத்தைமறந்தாயென்வார்த்தையுங்கடந்தாய்நான்ஒருவருக்கும்வெளியிடுகிறதில்லை நீமுன் எனக்குக்கொடுத்த அரசச்செல்வத்தைவாங்கிக் கொள்ளுவேந்தனே

அரி-விருத்தம்.

அந்தணர்குடிகள்வேந்த ரியபுவேயளித்நாட்டை
பிந்தநான்வாங்கினுலென் பெருமையுஞ்சத்யமுண்டோ
வந்தறங்கேட்போர்க்கிந்த வன்பொருளடைகேளுறி
வந்தனுலிந்தனுன்ப முறுவனேகேளவாய்நாதா

வசனம்.

கேளும்முனிநாதரே ஒருவருக்குகொடுத்த பொருளைமறுபடியும் கேட்குமென்னையெனக்கிருக்குமாகிலிந்த துன்பமனுபவிப்பேனு அதுவென்றுமொருகாலமுமாகா தென்றறிகுவீர்சுவாமி

விஸ்வா-விருத்தம்

அயனரியுந்தேவர்களுமென்றன்சொல்லை
மணுவளவுமபிசகார்களன்றிச்செய்தால்
தயவன்றிசபித்திடுவேன்பொல்லாங்கெல்லாந்
தான்வரவேவிடுவேன் தாரணிதன்னில்
பயமறந்தவசர்களைப்பஞ்சுபோல
பறக்கவைப்பேனியவேபதட்டமின்றி

நயம்விடுத்தேயெதிர்த்துரைக்கவுமாயானும்
நன்றுநன்றிப்பார்த்தனைகாட்டுவாயே.

வசனம்

கேளாய் அரிச்சந்திர மன்னர்மண்டலீகர்முதலானவர்களு மென்வார்த்தைக்குத்தடைபேசார் அப்படிப்பேசினுலுடனேஅவாளையதோகெதியிலாழ்ந்தச்செய்வேன் அப்படிக்கிருக்க நீயென்னுடனெதிர்வார்த்தையாடத்துணிந்தாயாகிலுஞ் சிந்தையில்லை நீசெய்தகுற்றம்பொறுப்பேனிந்தப்பெண்களைக்கூடுவாயப்பா வேந்தனே

அரி-விருத்தம்.

தேவர்களுமுனிவர்களும்பாலர்தாமுந்
தெய்வமெனவெனைப்பணிதல்மெய்யாகுமும்
பாவமிலாச்சத்தியத்தைப்பிடித்தநாளும்
பணிந்தன்றோநாடளித்தேன்பகன்றவாற்போல்
தாவமுடனக்கிரமப்பிரியச்சொன்னால்
தாவியுமான்செயத்தகுமோதனையன்றனைக்
கோவமுடன்சபித்திடினுஞ்சகிப்பேன்காசி
கொண்டவுடன்பொன்கொடுப்பேன்குருவேபோற்றி

வசனம்

சுவாமி தங்களையெல்லோரும் பணிவதுசரியே யடியேனும்பணிந்தன்றோ நாட்டையுமரசையுங்கொடுத்தேன சத்தியத்திற்கொவ்வாத செய்கைசெய்யசொன்னு லெப்படிஒப்புவேன் முனிநாதா

விஸ்வா-விருத்தம்

காசியிற்சென்றுநீதான் கைதனிலோட்டையேந்தி
யாசித்தேபொன்னைவாங்கி யளிப்பதேயன்றிவேறு
யோசிப்பதுண்டோவன்று வுலகத்தார்வசைபேசாரோ
பேசிப்பேசைக்கேபிராணமை யெடுத்தலும்நீதியன்றே

வசனம்

அப்பாஅரசே நீகாசிக்குப்போய் பொன்னையாசகஞ்செய்து தானே கொடுக்கவேண்டும் கேட்போருக்கு கொடுக்கத்தகுந்தவன் போயிரப்பதுயிகட்டியென்றுவினையன்றவா



அரி-விருத்தம்

அருந்தொழிற்புரிந்தேயங்கு அய்யனேயுமதுபொன்னை
வருந்திடாதளிப்பேனன்றி வறியனாயிரக்கமாட்டேன்
தருமமுமழிந்தோவென்னை தகாததோர்செய்கைசெய்ய
கருதிடுமுனியேபோற்றி காசிக்கேயேகுவேனே

வசனம்

சுவாமி யேதாகிலுந்தொழிற்புரிந்து உமதுகடனைத்தீர்க்கின்றேனேயொழிய சத்தியத்திற்கடுக்காதகாரியஞ்செய்யேன் தாங்களிருப்பிடஞ்சேருவீர்நான் காசிக்குப்போகின்றேன்முனியே

விஸ்வா-வசனம்

அம்மாபதிவிரதாசிரோன்மணியாகிய சந்திரமதிகொஞ்ச மிப்படிக்கி வருவாய்தாயே

சந்தி-வசனம்

அப்படியேவருகின்றேன்முனிநாதா

விஸ்வா-விருத்தம்

மதிதயன்றவத்தில்வந்தமாதேயித்துயரங்கொள்ள
விதியதோதந்தைநாட்டை விரும்பியேசேர்ந்தாலல்ல
பதியினிலிருந்திடாமற் பரதேசிவேந்தன்பின்னே
கதிதப்பித்திரியுமுன்றன்காரியந்தகையையன்றே

வசனம்

அம்மாசந்திரமதி மதிதயமகாராஜனுன்னைப்பெற்று வளர்த்தபெருமையென்ன நீயிந்ததரித்திரவரசன் பின்போகுங்கெதியென்ன இவையோவிதவுமுனக்குயெழுத்தா நீயுன்தாய்வீடுசென்று சுகத்திலிருப்பாம் அம்மணி

சந்திரமதி-விருத்தம்

தந்தைதாய்குருவுந்தெய்வங் கையவர்தமக்கோநாதா
விந்தையாங்கணவனன்றி வேறுண்டோகருதப்போமோ
வந்தையோமதியமக்க வழிதனைமறித்துமேதான்
நிந்தைவிவார்த்தைகேட்டால் நிருபனுமுகிழான்போவீர்

வசனம்

கேளுமுனிநாதரே கற்புடையமாதருக்குக்கணவனே தாய்தந்தைகுருதெய்வமெனும் நெறிதெரிந்திருந்தவருமிப்படிபேசுவது தகுதியல்லவெனக்கு விடைகொடுப்பீர்முனிநாதா

விஸ்வா-வசனம்

அப்படியானால்போய்வருவாயம்மாசந்திரமதி

விஸ் வசனம்

அப்பாமந்திரிசத்தியகீர்த்தி கொஞ்சமிப்படிவருவாயப்பா

விஸ்வா-விருத்தம்

அரசதைநானேகொண்டேனதைச்சகீதானெனக்கு
வரசையாய்நீதிசொல்லி வாழாமல்வம்பனுகி
சரகதுபுசித்தேகாட்டிற் சாருதல்தகுமோவப்பா
காமதுருவித்தேயென்பின் கனம்பெறவருகுவாயே

வசனம்

அப்பாசத்தியகீர்த்தி நீயென்னுடன்கூட விருந்து அரசுக்குரியநெறிகளைசெலுத்தாயலிப்படி காட்டில்சஞ்சரிப்பது தகுதியல்ல வென்பின்னேயோத்திக்குவருவாயப்பா )

சத்தியகீர்த்தி-விருத்தம்

சீரனேமுனிபேசீதான் செப்பியவுரைகளெல்லாம்
வீரனேநிலையிலின்பம் விரும்பினோர்க்கல்லால்வேவின்
யானைப்பழிக்குமென்றன் மன்னனைவிடுத்தேவாழ
சாரவேமாட்டேன்வேறு சாற்றுதலொழிப்பீர்போற்றி

வசனம்

கேளும்முனிநாதரே நீர்சொல்வதெல்லாம் அனித்தியவுடலை போஷிப்பவனுக்கேவேண்டியதாகும் நானெனது அரசனைப் பிரியமன்கொள்ளே னென்றறிவீர்ஷியே

விஸ்-வசனம்

அப்படியானால் போய்வருவாயப்பாசத்தியகீர்த்தி

விஸ்-வசனம்

ஐயாதாரகரே இப்படிவாருஞ்சுவாமி



தாரகன்-வசனம்

இதோவருகிறேன் விஸ்வாமித்திரமுனியே

விஸ்-வசனம்

ஐயாசுக்கிரபகவானே நான்போய்வருகிறேன் எப்படியாகிலும் அரிச்சந்திரன்வாயில் பொய்வரும்படியாகச்செய்வீர்பகவானே

தாரகன்-வசனம்

அப்படியேசெய்கின்றேன் நீர்விசனத்தை விட்டிருந்தவமுனியே

விஸ்வா-கண்ணிகள் - இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்

மோசம்வந்துதையே -பழி-மூட்டையாச்சேவிதியே
நேசம்விண்டேசெய்த-மொழி-நீங்கிடுமோவிதியே
இந்திரன்முன்புநிச்-சொன்ன-வென்றன்மொழிவிதியே
மிந்திப்போகுமோதான்-காணேன்-பிரபஞ்சத்தில்விதியே
துயரம்வந்தாலுமே-தளராமல்-தூஷிக்கிறான்விதியே
அபரவென்னபுரிவே-இன்ன-மரியேன்யாதும்விதியே
மன்னன்மந்திரிமனைவி-பாலன்-மதியொன்றுளார்விதியே
என்னவிதங்கெலிப்பே-னினி-யென்செய்குவேன்விதியே

பொது-வசனம்

கேளுங்கள்சபையோர்களே கோமதையாற்றைவிட்டு கொஞ்சதூரம் வந்து ஐம்புலனையடக்கி ருத்திரமந்திரத்தைஜெயித்து விஸ்வாமித்திரன் அக்கினியையெழுப்பி அரிச்சந்திரனைதகிக்க யனுப்புகிற விதங்காணீர்கள் கனவான்களே

விஸ்வா-அகவல்

அம்பிநீர்ப்ருபா ஆனந்தமூர்த்தி
சப்தீயதேவே சரணமுன்வருவாய்
சிகிசியென்றேன் சித்தங்குளிர்வாய்
ரிஷிதூகாலம் சாமியேயிங்கனே
கோபினேனுன்னை கொப்யெனவருவாய்
வீரியம்படைத்த வெந்தனல்சுடரோ

உரு

சமயமீதையா சம்புவேகாத்திடும்
அபயமிட்டோ மக்கினிதேவே
வேண்டினேன்மெத்த விரும்பியேபணிந்தேன்

அக்கினிபகவான்-வசனம்

விஸ்வாமித்திராமுனியே என்னைவரவழைத்தகாரியந்தெரியச் சொ
வேண்டும்ரிஷியே

விஸ்வா-விருத்தம்

தேயுவேயிந்தக்காட்டை திக்கெனவெரித்துக்கொண்டே
கோயுறவரசன்றேவி நுண்ணியடந்திரிபாலன்
காயுறவனலால்சுட்டு கருக்கியேசாம்பலாக்கி
வாயுறவெனக்கேசொல்ல வார்த்தைவந்தியம்புவாயே

வசனம்.

கேளும்அக்கினியே கோமதையாற்றங்கரையிலிருக்கிறசெடிகளில்
ம்ந்து அண்டமளாவத்தனலெழுப்பி அரிச்சந்திரன் சந்திரமதி தேவ
சன் சத்தியகீர்த்தி யிவர்களைக்கிட்டிசுட்டு சாம்பலாக்கியெனக்குத் தெ
ரிவிப்பாய் அக்கினியே

அக்கினி-விருத்தம்

அரசனேவமுவாசத்திய னணங்கையோபத்னிகண்டாய்
சரசமாயெரிக்கவென்றால் சக்யமோயவள்நெருப்போ
சுமதியிலெவர்களைத்தே சுட்டிடும்லோகமெல்லாம்
வரசையாய்சூழ்ந்தேகொஞ்சம் வருத்துவேனுனக்காய்த்தானே

வசனம்

கேளும்விஸ்வாமித்திராமுனியே அரசனேசத்தியவான் சந்திரமதி
யோ மகாபதிவிரதை அவள்நெருப்போயென்னைச்சுடும் அவர்களைத்தகி
க்கவென்றாலாகாது ஆனாலுமக்காக அவர்களைவளைத்துகொஞ்சம்பயங்கா
ட்டிவருகிறேன்முனியே

விஸ்-வசனம்

ஆனாலப்படியே செய்வீரக்கினிபகவானே



பொது-விருத்தம்

பூதத்தைவென்றுமப்பால் பூமியாண்டரசன்மற்றோர்
வேதனைதாகன்செய்ய வெறுப்பின்றிடக்கக்காட்டில்
காதகமுனிவன்றானும் கனலினால்வருத்தவெண்ணி
போதவேயேவஅக்னி பொருமியேசூழ்ந்ததன்றே

வசனம்

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் வேதாளத்தை வதைத்தபி
ன் தாகன்பேசும்வேதனைமொழிக்குள்ளாகி காட்டில்நடந்து வருவதை
க்கண்டவிஸ்வாமித்திரனவர்கள்பேரில் அக்கினியையேவ அக்கினிசூழ்ந்
து கொண்டதென்றறிவீர்கள் கனவான்களே

தாகன்-வசனம்

ஓய் ஓய் ராஜனே யிதென்னகாணும காடெல்லாம் பற்றிக்கொண்டு
நெருப்புஇந்தமுகம் நோக்கிவருகின்றது ஐயையோ நானென்னசெய்வே
ன் யென்னசெய்வேன்ராஜனே

அரி-வசனம்

பொறும்பொறும்நீயொன்றுக்கு மஞ்சவேண்டாம்வேதியனே

அரி-விருத்தம்

அண்டகோளத்தையெல்லா மளாவியேபொறிகள்வீச
கண்டவர்மனங்கலங்க காற்றுடன்சேர்ந்தேதடந்திரி
கொண்டல்போல்வருந்தீயின்குறிப்பெதோவறிந்தேநீதான்
விண்டிடவேண்டுமேனி வியப்புறாமுன்னமப்பா

வசனம்

கேளாயப்பாமந்திரி யிதேதுவிபரீதமானபுகையுடன்நெருப்புகாட்டை
வளைத்துக்கொண்டு வருகின்றது இதின்விபரமறிந்து சொல்லுவாய்சத்
தியகீர்த்தி

சத்தியகீர்த்தி-விருத்தம்

அடவியில்விஸ்வாமித்திர னுனைத்தவிப்புறுமையாகும்
இடம்விடவேண்டாம்போர் நீயினால்மடிந்திட்டாலும்

படபதாயெரித்திட்டாலும் பொய்யுரைபுகலாச்சத்யம்
படமதாயெழுதிவைப்பீர் பண்புடன்மனதிற்றுனே

வசனம்

கேளுஞ்சுவாமி நீர் அதையிரியப் படப்போமோ விந்தஅக்கினியி லெரிந்து சாம்பலாய்ப்போய்விட்டாலுஞ்சத்தியம்பிசகாதென்னைமறிலே யாகக்கொள்வீரரசே

அரி-வசனம்

இப்படி அராவிறந்ததுன்பம்வந்தாலு மென்சத்தியம் பிசகாதென்றறி வாயப்பாசத்தியகீர்த்தி

தாசன்-விருத்தம்

மன்னனேசுவாலைவீசுமக்கினிபுவியாள்மாந்தர்
வன்னமாய்க்காப்போர்தம்மை வதைத்திடுமுனக்கேன் துக்கம்
முன்னதாய்நெருப்பில்நானே மூழ்கிறேனுனக்குவேதை
இன்னமாய்நீங்குமென்றே தெளிவுடனிருப்பாயப்பா

வசனம்.

கேளும்ராஜனே யிந்தநெருப்பானது அரசனைநம்பிக்காட்டில் வந்த வரை யேதகிக்கும் நானெரிந்து போவேனுனக்குத்தொந்திரவும் நீங்கிப் போகும்விசனப்படாதேயப்பாராஜனே

அரி-வசனம்

கேளுஞ்சுவாமி தாங்களடிக்கடியிப்படிக்கி சுட்டுக்காட்டுதறடியேன் மனதிற்கு மெத்தவும்வருத்தமாயிருக்கின்றது இனியிப்படிப்பேசாதிரு க்கவேண்டுகிறேன் வேதியரே

அரி-விருத்தம்

எந்தனற்பெண்ணேமானே யீணையிலாமந்திரிபாலா
வந்ததோரனலில்நானே வருந்தாமல்முன்னேசெல்வேன்



வெந்தபின்நீங்கள்தானும் வெறுப்பின்றிசுடன்கழித்தே
இந்தவேதியனைக்கூட்டி யேகுவீர்காசிதானே

வசனம்

அடிபெண்ணே சந்திரவதி அப்பாமந்திரி அப்பாமகனே இந்தகாட்டி ன்நெருப்பில் நான்முன்சென்றுவிழ்வேன் நீங்களவேதியனை யழைத்து க்கொண்டு காசிசேர்ந்து முயற்சிசெய்து முனிவன்கடனைத் தீர்ப்பீர் களப்பா

சத்தியகீர்த்தி-விருத்தம்

மன்னருக்கிடுக்கம்வந்தால் மந்திரிகாக்கவென்றே
சொன்னதோர்நீதியான சுருதியையுணர்ந்தநாதா
முன்னமேவனையுந்தீயில் மூந்திநான்பாய்ந்துவிழ்வேன்
அன்னையேகாசிசென்று அருங்கடன்தீர்ப்பீர்நாதா

வசனம்

கேளுஞ்சுவாமி நீதியில் சொன்னபிரகாரம் நான்மந்திரியானதால்வரு கிறதீயில் நானேவிழ்வேன்சுவாமி காசிசேர்ந்து முனியின் கடனைத்தீ ர்ப்பீர்வேந்தனே

அரி-தரு-தேசியதோடி-ரூபகம்

பல்லவி

என்னமாயமோ-மாதே-என்னமாயமோ

அநுபல்லவி

அன்னவாகனமீதேறும்-ஐயன்சாபமோமாதே (என்)

சரணங்கள்

நாடுவிட்டு
நல்லபாம்பு

காடடைந்து
தேளும்பூரான்

சோடுகோ டென்றழுங்கமை
கொத்தவக் ததுங்கோதே (என்)

பூத்தொன்று நம்மைக்கண்டு
பொழிகலங்க வானைக்கொண்டு
வேதனைசெய் தனைமீண்டு
வேகமாய்வத் ததுங்கோதே (எ)

டைமுகைக் கிளிபோல
வணையுடனெதி ரெதிர்த்து
அடவியில் நம்மைதனிக்க
ஐயோவருகு தேகோதே (என்)

சந்திரவதி விருத்தம்

கற்புடையமாதராகில் கணவனுயிறத்தல்மேன்மை
முற்பிறவியனேயநீயகு மொழிந்திடநாவிற்கண்டேன்
சற்பனைசெய்யவெண்ணிச் சண்டாளன்விட்டதீயில்
தற்பரானடைப்பேன் நயாநிதிசத்தியங்காப்பீர்

வசனம்

கேளுமென்பிராணநாதா கணவனுக்காகபெண்சாதியானவள் பிராணனை விடுவது கற்புடையமாதற்கழகென்றுசொல்லுஞ்சுருதியைபயில்வேன் முனிவிட்டதீயில் நானே முந்திவிழ்வேன் தாங்கள்சத்தியத்தைக்காப்பீர் ஆண்டவனே

தேவதாசன்-விருத்தம்

தந்தைதாயொருகாலத்தில் தான்மனத்தளர்வாகில்
மைந்தனுயுகித்தோன்சத்ய மறிந்துளனுநிற்றனே
முந்தாய்சென்றுவந்த மெய்த்துதோர்துயரைத்தீர்ப்பன்.
எந்தையேனான்போய்விழ்வே னினியசத்தியங்காப்பீரே

வசனம்

கேளுமென்பிதாவே தந்தைக்குவருந்துயரை நீக்கவல்லவோ தனையன் ஆகையாலிந்தத்தீயில் நானேவிழுகிறேன் நீர்சத்தியத்தைக் காப்பீரே



சந்திரமதி-விருத்தம்

என்றவப்பொருளேயப்பா வென்குலக்கொழுந்தேபாலா
உன்மனந்தியங்கவேண்டா முத்தகுணனேகேளாய்
வன்மமுஞ்சூதும்பொய்யும் வழுத்துவர்தமையல்லாது
நன்மையுள்ளோரைக்கொல்ல நாடாதித்தீதானப்பா

வசனம்

கேளாயப்பாவென்கண்மணியே இந்தத்தீயானது அசத்தியரைக்கொல்லுமேதவிர நம்மையொன்றும் செய்யாதுமகனே

தேவதாசன்-விருத்தம்

தாயேநீயத்திற்றுங்கி தயவுடன்போஷித்தென்னை
நேயமாய்வளர்த்தவம்மா நீவிழாமுன்னம்யானே
தீயதிற்செல்வேன்பாராய் தெளிவுளதந்தைவாக்யம்
ஞாயமாய்நிறுத்திநானும் நாட்டுவேன்கீர்த்திதானே

வசனம்.

கேளாயென்னைப்பெற்று வளர்த்ததாயே நானிந்தத்தீயில்விழுந்து என்தந்தையின் வாக்கியம் பிசகாதிருக்கும்படி கீர்த்தியை நாட்டுவேனம்மணி

சந்திரமதி-சந்தவிருத்தம்

அப்பாமகனேகண்மணியே யமிர்தாசமேசெழுந்தேனே
இப்பேறவியுந்திருமே யென்னுனக்குவாய்த்ததடா
செப்பாய்பால்வாய்மாறலையே சிறுந்தணலில்விழ்வேனென்று
யொப்பாருமோடாகுலத்திற்கே யொளிவாய்வந்தவிளக்கே

வசனம்.

அப்பாமகனே யிந்தத்துணிவுனக்குஎந்தநாளில் வந்ததடா நீயிந்தத்தீயில் விழ்வேனென்பது தகுமோடாகண்மணியே

தாசன்-விருத்தம்

ஜாலங்கள்செய்தேமெத்த சமத்துகள்பேசிநீங்கள்
கோலங்கள்புரிந்தெல்லாங் கொல்லவேயன்றியென்னை

ஞாலமேலிருந்தச்செய்யுஞ் ஞாயமோகாணுங்கண்டேன்
கூலனேகூடகூடபொன்னை கோரிலேன்போறேனப்பா

வசனம்

ஓய்ராஜனே நீங்கள்சாமர்த்தியம் பேசுவதைப்பார்த்தால் யென்னை நெருப்பில்தள்ள நினைப்பதன்றிலே றல்ல யெனக்குப்பொன்னு வேண்டாம் காணேடிப்போறேன்கூடகூட

சந்திரமதி-விருத்தம்

வேதவிதிகடந்தவருநீதிதப்பிவித்தகனைமறந்தவரும்பதியின் வார்த்தை, காதலின்றிப்புரிந்தகுருமதிவுள்ளோனைக் கனிவின்றியிகழ்ந்தவருங்கருணையற்றோ,நீதயிலாவிலங்குகளைவதை செய்தோருக்கிக்கில்லார் தாம்வருந்தநிங்குசெய்த, பாதகரைதகிக்குமன்றிமித்திரம்மேற்படாது யென்பின்னேபற்றிவாரீர்

வசனம்

கேளுஞ்சுவாமித்தாகரோ எஜமான்வாக்கை மீறிநடப்பவர்களையுங் கொலைபுன்புலைபுரிபவர்களையு மிந்தத்தீவருத்துமேயன்றி நம்மையொன்றுஞ்செய்யாதாகையால் யென்பின்னேதொடர்ந்துவாரும் வேதியரே

தாகன்-வசனம்

ஆனால்வருகின்றேனம்மாசந்திரமதி

சந்திரமதி-தரு-இ-ம்-முகாரி-தாளம்-சாப்பு

பல்லவி

தேயுவேவழிவிடுவீ ரெங்களுக்கு
இக்குநீவாங்கொடுப்பீர்

அநுபல்லவி

ஆயுள்காரகனுட அவதிதனிலேசிக்கி
தாயில்லாப்பிள்ளையைப்போற் றவிக்கின்றேமேநெங்கி (தே)

சரணங்கள்

சுவாலாசுவாஹாகரு-மிருபாஞ்-ஜோலிக்கவேதான்மகிழும்
தேவாகாணுமேசத்திய-தேசன்மனைவியானால்
ஆவாகனத்தைவிட்டு யடங்குவீர்முன்செல (தே)



மெத்தத்துயரடைந்தோம்-ஓதேவே-மெழிலுமரசிழந்தோம்
சத்தியம்வழுவாதோன் சருவேந்தேவிதானானால்
நித்தங்குளிர்ந்துநீதான் செல்லயெங்களுக்கானால் (தே

அரி-வசனம்

சுவாமிதாகரோ அக்கினியைக்கடந்துவந்தோ முமது திருக்கண்களை திறந்துநடப்பீர்வேதியரே

தாகன்-வசனம்

அடாசந்தாய் பார்த்திபோ நமதுமந்திரத்தின்பலத்தை பாதிசுலோகமுடிவதற்குளக்கினியடங்கிவிட்டதுநீங்களினி இகிலேவிடுவீர்கள் விடுவீர்களா

அரி-வசனம்

சுவாமியெல்லாந்தங்களனுக்கிரகந்தான் நடந்துவாரும்வேதியரே

விஸ்வா-தரு-கேதாரகவுளம்-அடதாள-சாப்பு.

பல்லவி

வருணேவந்திடுவா யுன்னைக்கோரினேன்
வருணனேவந்திடுவாய்

அநுபல்லவி

கருணைகோரியகாலங் கனிவாக்களித்தநாதா
தாக்கவேவடியேனை கடிதிகொடியேயிங்கு (வரு)

சரணம்

மேகத்திற்கதிகாரி-வலகிலே-மேவுக்குறுமபகாரி
பாகத்திற்கதிபதி-முனிவர்பற்ற-படியவற்குங்கெதி
தேகத்தைபோஷிக்குந் தேவேயுனையழைத்தேன்
திவாத்தினிலென்முன் தெரிசனமளித்திட (வரு)

பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரமுனியானவன் செய்தப்பத்திக்கிரங்கி வருணபகவான் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

வருணன்-தரு-தன்யாசி-ஆதி

பல்லவி

மேகநாதன்வந்தான் முனியைக்காணமேகநாதன்வந்தான்

அநுபல்லவி

ஆகமவேதத்துறை அறிஞர்கட்கெல்லாமேட்டி
அனைத்துயிர்களுக்குமே அமுதமளிக்குங்கெட்டி (மே)

சரணம்

தவமுனிமுறைகேட்டு-ஓடோடியே-தங்காமற்றிசையெட்டு
புவனமூன்றுஞ்சூழவிட்டு - பூலோகத்தில்-போகுமன்பனைத்தொட்டு
நவகுணனயோத்தியாம் நாட்டையரசுசெய்தோன்
தவங்கெடச்செய்வோர்களிற் றுறுமொருவனாக (மே)

வருணன்-வசனம்

சேளும்விஸ்வாமித்திரமுனியே என்னையழைத்தகாரணந் தெரியச்சொல்லும்ரிஷியே

விஸ்வா-விருத்தம்

திடமுடனேவரிச்சந்திரன்தேவிபாலன்
திரம்பெருகுமந்திரியுந்தாசனோடு
தடம்பற்றிக்காசிக்கருகில்போறார்
தயாபரனேவுன்மாயைதன்னைக்காட்டி
படபடென்றிடியுடனேயிடியுமின்னல்
பார்மீதில்கீர்சொரிந்தேநடுகானகத்தில்
கடந்திடவேயரியங்கினால்வர்தமை
காணவிட்டுநெடுந்தூரங்கடத்துவீரே



வசனம்

கேளுஞ்சுவாமி அரிச்சந்திரன் சந்திரமதிதேவதாசன் சத்தியகீர்த்தி தாசன் ஆகஐவரும்காசிக்கருகில்போகிறார்கள் உன்மாயையினால் பேரிடிமின்னலுடன் மழைசொரிந்து அவர்கள்நடக்கும்வழிமத்தியிலொருகாட்டாறுமுண்டாக்கி மதிலவாளிருங்க தாசன்தவிரமற்றநால்வரையுங் காணவிட்டுநெடுந்தூரங்கொண்டுபோகச்செய்வாய்வருணபகவானே

வருணன்-விருத்தம்

முனிவனேயுனக்காய்நானு முன்னிருள்கப்பச்செய்தே
பனிமழைபெய்யவைப்பேன் பகரிடிமின்னல்காட்டி
தனிமைசேர்பெருக்கியாறும் தானோடச்செய்வேனென்றே
கனிவுடன்பத்தினிவாக்கைக் கடந்திடச்சகியனன்றே

வசனம்

கேளும்முனியே வுமக்காக யிடிமின்னலுடன் மழையைப்பெய்யச்செய்வேன் காட்டாறுமுண்டாக்குவேனானால் பத்தினியாகிய சந்திரமதிவாக்கைக்கடக்க வென்னாலாகாது ரிஷியே

விஸ்-வசனம்

சுவாமிவருணபகவானே நீரிவ்வளவு செய்வதேபோதுமானது அதற்குள் தாசன் அரிச்சந்திரனை பொய்பேசச்செய்வான் வும்மாலெனக்குங்கீர்த்திகிடைக்கும்

வருணன்-வசனம்

அப்படியே செய்கின்றேன் போய்வருகிறேன் விஸ்வாமித்திரமுனியேவாழிவாழி

தாசன்-விருத்தம்

அப்பப்பாயிதேதுகால மடாதவின்னிருள்தான்வந்து
சப்பவேசண்கள் சென்றிங் காண்பதுமருமையாய்சே
செப்புமுன்னிடியுமின்னல் சீறுதேதுநிக்கைபோல
கொப்பவேவானதிரும் கொட்டுதேஐயோமன்று

வசனம்

ஓய்ராஜனே இடிமின்னலிருளுடன் ஆனைத்துதிக்கைபோல மழை கொட்டுகின்றதே திரேகம்நடுங்குகிறதே யென்னசெய்வேன் ஐயையோ

அரி-விருத்தம்

அருமையிலுயர்ந்தபெண்ணே அக்கினிகடந்துவந்தோம்
கருமேகங்கவிழ்ந்தேயிங்கு கலங்கிடமழையுந்தூவ
வறுமையுமுயர்ந்தமின்னல் வாட்டிடயிடியிடிக்க
சிறுமையேகொண்டாளையர் செய்யுவாரறிகிலேனே

வசனம்

கேளாய்பெண்ணே சந்திரமதி இடியுமின்னல்பெருமழை யடிப்பதால் அய்யர்கலங்குகின்ற ரிதற்குயென்னசெய்வேனடியயிலே

சந்திரமதி-விருத்தம்

ஐயரேட்கூந்த்திரேச யன்பரேயஞ்சவேண்டா
மையரேயென்னைக்கிட்டி ஆலத்தின்கீழேநிற்பீர்
ஐயரேமழையின்வேக மடங்கிடத்துதிப்போனு
மையரேதணிந்தபின்புபயப்பாஞ்செல்வோம்சுவாமி

வசனம்

சேளுஞ்சுவாமிதாசரோ இந்த ஆலமரத்தின்கீழென்னருகில் நிற்பீர் மழையடங்கவேண்டி நான்வருணனைத்துதிப்பேன் நின்றபின்பு அப்புறம்சொல்வோம்வேதியரே

தாசன்-வசனம்

ஐயோஒருமைஜலங்கொட்டுகிறதே ஐயோயிடியிடிக்கிறதே மின்னுகிறதே நான்நிற்கமாட்டேன் பொன்னையுங்கேட்கிறதில்லை ஓய்ராஜனே நானோடிப்போரேனப்பா விட்டுவிடுவாய்



அரி-வசனம்

சுவாமி பயப்படாதேயும் ஒருநொடிக்குள்ளே மழையும் மப்பும் நீங்கிவிடும் என்னுடனே

தாசன்-வசனம்

அடாய் அடாய் ராஜனே நீயென்முன்னேநில்லடா அடாமந்திரி நீபின்னேநில்லடா அடாபயலே நீயிடதுபாரிசத்திலில்லடா அம்மாசந்திரமதி நீயெனது வலதுபாரிசத்தில் நிற்பாய் சேக்குமெத்தகுளிலாயிருக்கின்றதுஊஊ ஓ ஊஊ ஊஊ ஊஊ

சந்திரமதி-தரு-இ-ம்-உசேனி-தா-அடதாளசாபு

பல்லவி

வாமருள்வாய்வருண வருண கருண-வா

அநுபல்லவி

வாமருள்வாயுன்னைபா மெனநான்துதித்தேன் (வா)

சரணங்கள்

காலமல்லவேயிதுவே - நீர்சொரிய
கோலம்வந்ததுமேதுவே
சீலமுனிவன்செய்யுஞ் செய்கைக்குநீயுள்ளாகி
பாலனுடனோநாங்கள் பதைக்கவருந்தலாமோ (வா)

உத்தமிநானுமானால் - ஓஜசுவாமி
சித்தமுமப்பானால்
பெத்தவாநான்சொலும் பிரிதிமொழிக்கிரங்கி
கத்தனேயெங்களுக்கு கருணையொளிவைக்காட்ட (வா)

காசிக்குப்போகவே - ஐயனே
கோசிகன்கடனையீகவே
ஆசித்துனைப்பணிந்தே னடியாள்முறையகல
நேசித்திங்கனேவந்து நின்முன்பணிபடக்க (வா)

அரி-வசனம்

கேளுஞ்சுவாமிதாசரே யிதோமழைநின்றுவிட்டது இனிமுன்னுக்கு நடக்கலாம்வருவீர்வேதியரே

தாசன்-வசனம்

இடாசக்ராய் பார்த்தையா நானுங்கள் மத்தியிலிருந்தே ஓமமந்திரஞ்ஜெபித்தேன் மழையுமிடியும் பறந்துபோய்விட்டது பார்த்தையா நம்முடைய வல்லமை ஆ ஆ ஆ

அரி-வசனம்

ஆம் ஆம் சுவாமி எல்லாமும்முடைய அருள்தான் அதற்குயாதொரு சந்தேகமுமில்லை நட்சத்திரேசரே

பொது-வசனம்

கேளுங்கள்சபையோர்களே இவ்விதமாய்மழைநின்றுமுன்னுக்கு நடக்கும்வழியில் விஸ்வாமித்திரனுக்கு வாக்களித்தபிரகாரம்வருணன்பெருக்கச்செய்த காட்டாற்றைக்கண்டு அரசன்மனங்கலங்கத் தாசன் பயப்படுகிறவிதங்காண்பீர்கள் சுவான்களே

தாசன்-விருத்தம்

அரசனேபோதும்போது மப்பப்பாவென்னலாகா
தாசனும்வந்துகண்ட தாபங்கடன்னைப்பார்க்கில்
சரையதுபிரண்டேயோடுங் காட்டாற்றைக்கடக்கப்போமோ
விரைவுடனோடிப்போவேன் வேண்டிலேன்பொன்னைத்தானே

வசனம்

ஐயராஜனே நான்தாசனும்வந்து அநுபவித்ததுன்பம்போதும் இந்தக்காட்டாற்றைக்கடக்கவென்னலாகாது பொன்னும்வேண்டாம் பாரோடிப்போகின்றேன வேந்தனே

அரி-வசனம்



கேளுஞ்சுவாமி தாசரே எவ்விப்படிப்பயப் படுகிறீர் நான்முன்னே போகின்றேன் நீரென்பின்பற்றிவாரும்வேதியரே

சந்தி-வசனம்

கேளும் ஆண்டவனே யிப்பெரியகாட்டாற்றி லாழந்தெரியாமல் நடக்கப்போகாது இதிலுழுத்தையாளைதெரிந்துகொள்ளுகிறவழியில் சற்றுபொறுப்பீர்மகாராஜனே

சந்தி-வசனம்

ஒருசிறியகல்லைப்போட்டேன் அதாபடிபோய்ச்சேரஇன்னங்காணேன் இதிலுழப்பாலே யைவிட வயரம்போறதானுகிறதுவேந்தே

சந்திரமதி-விருத்தம்

அப்பனேசத்தியகீர்த்தி யாண்டவனருளிருந்தால்
அப்பனேயிதுதானென்ன அதாதபோதான்முன்போறேன்
அப்பனேசீயர்பாலன் அன்னை அமையர்தானும்
அப்பனேயென்னைத்தொடர்ந்தே யன்புடன்வருவீரோ

வசனம்

அப்பாசத்தியகீர்த்தி ஆண்டவனருளிருந்தாலிந்த ஆற்றைக்கடப்பது ஒருபெரிதா நான்முன்செல்லுகிறேன் யென்பின்னாலெல்லோருந் தொடர்ந்துவாருங்களப்பாமாதிரி

சந்திரமதி-தரு-இ-ம-ஆபி-தா-ஆதி

பல்லவி

வழிவிடுசெங்கா நான்போக
வழிவிடுசெங்கா

அநுபல்லவி

அதிபுனிதெய்வநதியேகங்கைதன்னாகிநீ
பழியதுப்புரிவது பக்தியிலிக்கொல்லாது (வழி)

சரணங்கள்

நாளுமுனைத்துதித்தே - காட்டில்- நவமுடன்வீற்றிருந்தேன்
கோளுமுனிவன்செய் குறையாலிங்கேயுற்றேன்
கோமளிசாமலி கிருபைசெய்தோங்கிநீ (வழி)

உன்னைப்பணிந்தேனே-பெண்ணுளும்-வனைப்பதைதடுக்காதே
கண்ணைமூடிப்பின் காணப்படாற்குள்ளாக
கங்காயிருபுரங் கால்செலநல்லாக (வழி)

பத்திவிசியாச்சே - அம்மா- பாமுகங்காட்டாதே
எத்திசையிலுமுனை யேத்திப்பணிந்தேனே
யீஸ்வரிபொய்க்காமல் மெய்நலைக்காப்பானே (வழி)

அரி-வசனம்

ஐயாநட்சத்திரேசரே காட்டாற்றைக்கடந்துவந்தோம் யிதோகாசிபட்டணந்தெரிகின்றது யினிபயமின்றி வாருஞ்சுவாமி

நாகன்-வசனம்

ஓய்ராஜனே நான்சுருதி சுலோகத்தில் ஒன்றிற்பாதிதான் சொன்னேன் கங்கையைத்தாண்டியிருபிளவாய்விட்டது பார்த்தியோ நானொருவனில்லாவிட்டால நீங்களெல்லோரு மிந்தஜலத்திற்கே யிரையாய்விடுவீர்கள் வேந்தனே

---

அரி-வசனம்

சுவாமி எங்களுக்குநேரிட்டதுன்பமெல்லாந் தங்களநுக்கிரகத்தினால் நிவர்த்தியாயிவ்வளவு தூரம்வந்தோமன்றிவேறில்லை வேதியரே

பொது-விருத்தம்.

பனியுடனெருப்பதனைக்கடந்துகாட்டில்
பைங்கொடியாள்பின்பற்றிகாட்டார்தாண்டி
முனிவனிடந்துயரமெலாம்நன்மைக்கென்றே
முகத்தெளிவாய்மன்னவனுமனமகிழ்ந்து
கனிவுடனேகாசிநகர்தோற்றக்கண்டு



கண்ணேருக்கிக்காங்குவித்தேகரும்பேநீதான்
இனியபான்வாழ்நகரைத்தெரிசியென்றே
யியம்பியிருவரும்பணிந்தேற்றுவாரே

வசனம்

கேளுங்கள் சபையோர்களே காசிக்கெரும்வழியிலனேகதுயரமடைந்த அரிச்சந்திரமகாராஜன் காசிநகர்க்கோபுரந் தோற்றக்கண்டு தன்பத்தினிக்குத் தெரிவித்து கரங்கூப்பித் தொழுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே

அரி-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

கரங்குவிப்பாய்மயிலே-யிதோகாசி-காணுதுபார்குயிலே

அநுபல்லவி

பிரமனெழுதிய பெருவிதிகருமங்கள்
பிந்தித்தொடராதாளும் பெருமான்வாழ்நகர் (கரங்)

சரணங்கள்

நால்வகையோனிகளில் நாட்டிலெழுதோற்றமாய்
நமன்வாதைக்காளாக நாடிப்பிறந்ததுன்பம்
கால்மேற்றலைகிறாய்க் கருதினின்றுழலாக்க
கயவர்தமக்கேதுயர் கடக்கவருமோவின்பம்
கண்டவர்மகிழ்வுற அண்டர்பதவிபெற
கொண்டவர்துணையுற எண்டிசையுஞ்சூழ்ந்துற
கொற்றவன்பிரானவ முற்றவனிதமும்
பெற்றவன்தெரிவை சுற்றவன்வாழ்நகரிதோ (கரங்)

அரனடியினையாம் அங்கத்தையொடுக்கியே
அண்டியமாதினையே யகற்றிநீவிடுத்தே
சரியினையேபிக்க சார்ந்துமடவிபுக்குச்ச

சாற்றுங்குருமொழிபைச் சாராநெறிவெறுத்தே
தன்னுளேவாணவம் என்னதெனும்பவம்
முன்னமதின்கனம் வன்னதாகுந்தவம்
வேறுபடாமலே நேருவிடாமலே
பேருகெடாமலே சாறும்பாமன்னகரி (௧௨)

தீராத்துயர்கள்போக்குந் திவ்யபதவிவாய்க்கும்
தேஜோன்மயத்தைக்காண தெரியுமருளைத்தாக்கும்
ஆரானபவமது வகற்றியேயடிமானே
அன்பர்கள்வாழுமந்த வருஞ்சபைதன்னில்சேர்க்கும்
அடவியிற்சென்றதும் திடமுடனின்றதும்
படமிரைவிண்டதும் மிடாதுகொண்டதும்
அற்றிடபலதுயர் பெற்றிடசற்கதி
உற்றிடநற்பெயர் நற்றிதேர்சிவநகர் (௧௩)

பொது-வசனம்

கேளுங்கள்சபையோர்களே இவ்வாறுகாசிநகர் கோபுரத்தைக்கண்டு அரிச்சந்திரன் சந்திரமதி முதலானவர்கள் சந்தோஷித்தாராய் நாட்டுக்குள்நடந்தனர் இப்பால் அயோத்தியாபுரியிலரசுநடத்திவந்த சற்குணமந்திரிதன்னரசனுக்குநேரிட்டகால கெதியைமதிநயமகாராஜனுக்குத் தெரிவிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே

சற்குணமந்திரி-விருத்தம்

ஆரடாகட்டியக்காரா யரிச்சந்திரமகிபன்றனும்
பாரடாயாகும்பாக்கியம் பண்புடன்முனிக்களித்தே
தாரடாமந்திரியோடுந் திகழ்பெருங்காசிக்குப்போ
னாடாசேதிபோக்க நற்றூதன்வரச்செய்வாயே

வசனம்

அடாகட்டியனே நமதுராஜன்காசிக்கிப்போன சங்கதியைமதிநயராஜனுக்குத்தெரிவிக்கவேண்டியதால் தூதனையழைத்துவருவாயடா கட்டியனே



கட்டியன்-வசனம்

அப்படியேயழைத்துக்கொண்டு வருகின்றேன்சுவாமி

தூதன்-வசனம்

அடியேனையழைப்பித்தகாரியந் தெரியச்சொல்லவேண்டுமையா

சற்குணன்-விருத்தம்

தூதனேநமதுவேந்தன் றன்மதிகவுசிகற்கே
தூதனேயரசையீந்தே துலையாதகடனைத்தாங்கி
தூதனேகுடும்பத்தோடு துணைவனுஞ்சத்தியகீர்த்தி
தூதனேகாசிசென்றார் தொடாவேதாகன்றனே

வசனம்

அடாதூதனே நமதுராஜன் விஸ்வாமித்திரனுக்குராஜியத்தைக்கொடுத்ததுமன்றியவனுக்குக்கடன்காரனுகி குடும்பத்தோடு கடனைத்தீர்க்க நாற்பத்தெட்டுநாள்தவணையிட்டுக்கொண்டு தாகனையழைத்துக்கொண்டு காசிக்கிப்போனார்கேளடா தூதா

சற்குணன்விருத்தம்

ஆனதாற்றூதாகேளா யவைமொடிபோக்கிடாமல்
மானனுமதிநயேந்திர மகாராஜன்கொலுமுன்சென்று
நானுணாத்ததாகவிங்குநாதனுக்குற்றதெல்லாம்
நீனனுமின்றுசெப்பித் திவாம்வருகுவாயே

வசனம்

ஆனதாலடா தூதனே யிந்தசங்கதிகளுனக்குத்தெரிந்ததானதால்நமதுராஜாவின் மாமனுராகிய மதிநயராஜனுக்கு விபரமாகநான் சொல்லியனுப்பினதாகத்தெரிவித்து விஸ்வாமித்திரர்வருவதற்கு முன்பேயிவ்விடம் வந்துசேருவாயடா தூதனே

தூதன் வசனம்

அப்படியேதெரிவித்துவருகின்றேன் சுவாமி

பொது-வசனம்

கேளுங்கள்சபையோர்களே சற்குணமந்திரியெவ்வாறுரைக்கத் தூதனோட்டமும் நடையாய்நடந்து சன்னமாபுரியையாளும் மதிதயமகாராஜன் கொலுமுன்சேர்ந்து அயோத்தியில் நடந்தவாறுரைக்கின்ற விதங்காண்பீர்கள் கனவான்களே

தூத-வசனம்

கேளுமையாகட்டியனே அரிச்சந்திரமகாராஜாவின் தூதனேதோ தெரிவிக்கவேண்டி கொலுச்சாவடிவாயலில் வந்திருக்கிறேனென்று ராஜாவுக்குத்தெரிவியுமையாகட்டியனே

கட்டியன்-வசனம்

அப்படியேதெரிவிக்கின்றேனப்பா தூதனே

கட்டியன்-வசனம்

வரும்படியுத்திரவு ஆச்சுதப்பா தூதனே

தூதன்-வசனம்

போற்றிபோற்றிகன்னியாபுரியாளுமாண்டவனேபோற்றி

மதிதயன்-விருத்தம்

என்னடாதூதாநீதா னிரங்கியமுகத்தினோடு
என்னடாயிளைப்புமிற பேச்சுமாய்நாவுலர்ந்து
என்னடாவோடிவந்தா யென்மகள்மருகன்சேதி
என்னடாவெனக்குத்தோன்ற வெடுத்துநீயுரைசெய்வாயே

வசனம்

அடாதூதனேநீமுகவாட்டத்தோடு பேய்பெருமூச்சாயிங்கோடி வந்ததென்ன வென்மகள் மருகன்போனவாள் சுகமாயலதேதாவதுண்டாயிருக்கிறதுஞ்சொல்லுவாயடாதூதனே



தூதன்-விருத்தம்

மன்னவனேகௌசிகமுனியயோத்திவந்தே
மகாராஜன்றனைமயக்கிமாயமாக
வன்னமுறையாகமது புரியப்பொன்னை
வாங்கியவர்பாலிருத்திவருவேனென்று
சொன்னவனும்விலங்கைவிட்டுப்பழிபாரிக்க
சுரமேவிவதைபுரியக்கண்டபாவி
என்னசொல்வேனிருதீச்சமாதர்தம்மை
பேசினனினிடத்திலுற்றதைகேளீர்

வசனம்.

கேளும்மகாராஜனே விஸ்வாமித்திரமுனி அரிச்சந்திரமகாராஜனிடம்வந்து யாகஞ்செய்வதற்காக ஆனையின்பேரில் ஒருவர்லிபனைபுருஷம்வந்து யாகஞ்செய்வதற்காக கவுண்டெறியுமுபரம் பொன்கேட்டான் வேந்தனவ்வாறேகொடுக்கவுமதிடமவைத்து வைவேண்டிய போதுவருகிறேனென்று சொல்லிப்போயிருக்கக்கேள் பெலியப்பழியாயறிக்கச்செய்தான் அரசன்வேட்டையாடியவைகளை நாசஞ்செய்யக்கண்டபோவி யிரண்டிச்சமாதனாயுப்பிறனின்னஞ்சேளும்வேந்தனே

தூத-விருத்தம்

இருமாதுமாசனிடம்மடிக்கப்பூரி
யீந்தாலுக்கடுத்தாசையினங்கவென்றார்
கருமமெனக்கிடவுமவன்சென்றேதக்
கௌசிகனுங்கோவமுடனோட்டில்வைத்து
கருமமதைமனதில்விட்டுவாசம்மோடும்
வாங்கினான்மன்னவனையாண்டியாக்கி
தருமமிட்டபொருளாதனைக்கடன்சமத்தித்
தாகத்துடன்காசிசெலத்தான்விட்டானே

வசனம்

ஆண்டவனே கவுசிகனனுப்பிய நீச்சஸ்திரீகளரசன்முன்போந்தியான ஆடல்பாடல்புரிய அவர்களுக்குவேண்டியவெகுமதிகள்கொடுக்கச்சொன்னார் அவைகளைமறுத்து பூச்சக்ரக்கொடையைக் கொடுமில்லாவிடிலெங்களைச்சேருமென்றார் அரசன்சபையைவிட்டு வெளியாக்கவுடனே விஸ்வாமித்திரன் அரசனை மிரட்டிநாடுநகர் முதலாகியதும் தன்வசமாக்கிக்கொண்டு வேந்தனைப்பரதேசியாக்கிதானம்வாங்கியிருந்திப்போன பொன்னை கடனாகசுமத்தினான் கடனைத்தீர்க்ககுடும்பத்தோடு தாகன்தொடரகாசிக்குப்போன சங்கதிதெரிவிக்கவந்தேன்சுவாமி

மதிதயன்-விருத்தம்

என்னநான்செய்வேன்மந்திரி யெப்படிதரிப்பேனினி
மன்னவர்மன்னனுக்கே மருவியதுயரைப்போக்க
இன்னகர்விடுத்தேயிப்போ தேகிறேனயோத்தியப்பா
உன்னதயரசைநீதா னுரிமையாய்நடத்துவாயே

வசனம்

அப்பாமதிமந்திரி தூதன்சொன்னவாரெல்லாங்கேட்டாயோ நான்அயோத்திககிப்போய்வருகின்றேன் நீயரசைபாதுகாப்பாயப்பாமந்திரி

மந்திரி-வசனம்

மகாபாக்கியமப்படியே போய்வாருந்தங்களுடைய ஆக்கினைப்படிக்கு நீதிவழுவாமலரசைப்பாதுகாத்துக்கொண்டுவருகிறேன்மகாராஜனே

மதிதயன்-ஆசிரியவிருத்தம்

அன்னையேயென்பிராணநாயகியேயயோத்திய
னனகெதிதூதன்வந்தே
அறைந்தனன்கவுசிகன்சூதினாலரசதை
யளித்துமேகடன்காரனாய்



மன்னவன்மாதுடன்பாலனுமந்திரியும்
மாமுனிதாசனைவ
மாநிதிதரித்துமேகாசிநகர்போய்க்கடன்
மாற்றவேசென்றசேதி
உன்னதசற்குணன்தெரிவித்தனன்சென்று
ஆடாடநிக்குவாரேன்
உத்தமிநீயிங்குபத்திரமாயிரு
யொருவேளைசயமாகில்
பன்னருங்கடனடைத்துமென்மருகனை
பற்றியேயிங்குவாரேன்
பாவையேநீயுமாளடிகளைத்துதித்திடு
பண்புடன்வாழிவாழி

வசனம்

கேளாயென் பிராணநாயகி நமதுமருகன்செங்கோலைகௌசிகனுக்குக் கொடுத்துவிட்டுயவனுக்குத்தானங்கொடுத்த பொன்னை கடன்சுமத்திக்கொண்டு காசிக்கித்தாரகனோடுபோனதாகத் தெரிந்தேன் நான்போய் கடனைத்தீர்த்துயழைத்துக்கொண்டுவருகிறேனடிமானே

சந்திரரேகை-வசனம்

அப்படியேசெய்து சீக்கிரத்திலழைத்துவாருமென்பிராணநாதா

பொது-வசனம்

கேளுங்கள்சபையோர்களேமதிதயமகாராஜனதிசீக்கிரத்திலயோத்தியாபுரி கொலுச்சாவடிவரக்கண்டசற்குணனெழுந்து வணங்கியாதரித்து அரிச்சந்திரமகாராஜனுடைய வரலாறுவிசாரிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே

மதிதயன்-விருத்தம்

மின்னிலங்கூர்வேலாளன் மெழிற்றிணிமொய்ம்புயத்தோன்
மன்னர்கள்மன்னன்மானன் மாநிலம்புரக்கொற்றவன்
என்னருமருகன்மற்று மென்றனைப்புதல்விதானும்
பொன்னன்னதுரைசொற்பாலன் போனவாறுரைசெய்வாயே

வசனம்

அப்பாசற்குணமந்திரி வலுமைதங்கிய வென்மருகனாகிய அரிச்சந்திரனுமழகுபொருந்தியமகளானசந்திரமதியுமினிய வசனமுள்ளபோதும் போனமார்க்கந்தெரியச்சொல்வாயப்பா மந்திரி

சற்குணன்-விருத்தம்

ஆதாரமுடையவெந்த னண்ணலும்விந்தியன்றன்
போதனைக்குள்ளாகாமற் பொன்மலற்றுஞ்சுமந்தாட்டை
யேதறிவிலமொழிக்கே யிணையவமைனற்றுறந்து
ஓதறப்பெரிதென்றுள்ளி யொளிர்கருற்றார்வேந்தே

வசனம்

கேளும்மகாராஜனே சத்தியப்பிரகவிஸ்வாமித்திரன் செயதலைகர்களுக்குடன் படாமலரசுமுதலான யாவத்துஞ் சத்தியத்திற்கிடல்லவெனத்துறந்து கவுசிகன்கடனைத்தீர்க்கக்காசிக்குப்போனானொன்றுண்டவனே

மதிதயன்-விருத்தம்

நல்லதுவவைச்சாணாளும் நாடிப்போய்காசியப்பா
வல்லவன்றனை நான்கண்டு வண்பொருளீந்துமீட்டு
எல்லவமெனச்சிறோற்ற யேந்திழைப்பாலனோடு
சொல்லருங்களிப்பாய்வாரேன் சுருக்கினிலறிகுவாயே

வசனம்

நல்லதப்பாசற்குணா நான்காசிக்குப்போய் அரசனைக்கண்டு கடனைத்தீர்த்து யழைத்துக்கொண்டு சீக்கிரம்வருகின்றேன் மந்திரி

சற்குணன்-வசனம்

மகாபாக்கியமப்படியே சீக்கிரஞ்செய்யக்கோருகின்றேனாண்டவனே

பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே யிந்தப்பிரகாரஞ் சொல்லிவிட்டு அரிச்சந்திரமகாராஜனைப்பார்க்க மதிதயராஜன் காசிக்குச்சென்றானென் றறிவீர்கள் கனவான்களே

ஆரணியகாண்டம் முற்றிற்று.



கடவுள் துணை.

# சத்தியபாஷா அரிச்சந்திரவிலாசம்.

# காசிகாண்டம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

புவனத்திற்பெருங்கீர்த்தி பொருந்தியமதிதயேந்திரன்......... *
தவமதால்சற்குணங்கள் தக்கியேயுதித்தமாதே.................. *
அவனியிற்பிறந்தமாந்த ரனைத்தும்பாவமெல்லாம்............ *
கவனிக்கிறோடச்செய்யுங் காசிகாமடைந்தோம்பாராய்.......... *

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரமதி, லோகத்திலுள்ளவர்கள் செய்யும்படியான சகலபாவங்களையும் போக்கத்தக்கதாகிய திவ்யமகிமைபூண்ட விந்தக் காசிநகர்வந்தோம் பாராய்பெண்ணே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம-பைரவி-தாளம்-ஆதி.

பூலோகத்திலென்றும் புகழ்கொண்டோங்கிநின்றிவ்வ
புண்ணியம்விளைக்குங்காசி பாராய்பெண்ணே
சாலோகசாமீப சாரூபசாயுச்யஞ்
சாரவிக்குங்காசி பாராய்கண்ணே (௧)
அயனரியறியாத வண்ணல்விஸ்வநாதனு
மாச்சியுடன்வாழ்காசி பாராய்பெண்ணே
ஜெயம்பெறமுனிவர்கள் சின்மயானந்தங்கோரி
சிவயோகஞ்செய்யுங்காசி பாராய்கண்ணே (௨)
கொலையுடன்புலையதைக் கோரிச்செய்தவர்வந்தே
குப்பிடத்துலைக்குங்காசி பாராய்பெண்ணே
கலையுணர்ந்தவர்களைக் கருதாமூடர்களின்
கன்மம்விலக்குங்காசி பாராய்கண்ணே (௩)
பஞ்சமாபாதகங்கள் பறந்தேபுரிந்தவர்கள்
பணிந்தேறநிற்குங்காசி பாராய்பெண்ணே

நெஞ்சில்நினைக்கப்பாவம் நீக்கிப்போடிடச்செயும்
　　நேர்மைதங்கியகாசி　　　　பாராய்கண்ணே(௪)
தீனதயாளாவென்றே தினமுந்தொழுவேகிருபை
　　கிட்டாதளிக்குங்காசி　　　　பாராய்பெண்ணே
மோனநிலையறிந்தோர் மூலக்கனலெழுப்பி
　　முத்தியடையுங்காசி　　　　பாராய்கண்ணே(௫)
பெண்ணேநமைச்சார்ந்த பெருங்கடன்போக்கிடப்
　　பேணக்கிடைத்தகாசி　　　　பாராய்பெண்ணே
கண்ணேயினிமேற்கே காசிபனருளாகக்
　　கருதிக்கரங்குவிப்பாய்　　　　பாராய்கண்ணே(௬)

அரிச்சந்திரன்-விருத்தம்.

பத்தினிநாமுன்செய்த பலத்தினாற்காசிவந்தோஞ்
சத்தியவுலகுமந்தச் சுரர்பதியிதற்கீடாமோ
நத்தியதுயரைவிட்டே நாதனைமனதில்நாட்டி
இந்நிசைதனின்வளப்பை யினிப்புடன்பார்ப்போம்வாராய்.

வசனம்.

கேளாய்பெண்ணேசந்திரமதி, நாமுன்செய்த தபோபலத்தினா லிந்தக் காசிவந்தோமானதா லிந்தக் காசிப்பட்டணத்திலுள்ள வளப்பத்தைப்பார்ப்போம் வாராய் மாதே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தனாசரி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்துவாடியன்னமே யடிபெண்ணே
தொடர்ந்துவாடிசொன்னமே.

அநுபல்லவி.

படர்ந்தவிக்காசியுறும் பதிகளைதெரிசிப்போம்　　(நட)

சரணங்கள்.

வந்ததுயரைப்போக்க அடிகண்ணே
தந்தமாய்கையைநீக்க
பிந்துமாதவனிது　　சந்திரமதிகாண்பாய்　　(நட)



வசனம்.

பெண்ணே நமக்குவந்ததுயரைநீக்கவேண்டியிந்தபிந்துமாதவத்தை தெரிசிப்பாயடிமாதே.

அண்டினோரைக் காக்கும்-அடியேமன்
தெண்டனை வராமற்றேக்கும்
துண்டிகணபதியைக் கண்டிதோசேவித்தேமுன்(நட)

வசனம்.

பெண்ணே அண்டினவரைக்காத்து காலனுடைய பாதையணுகாமற்காக்குந்துண்டிகணபதியைத்தெரிசிப்பாயடிமாதே.

சந்தேகத்தைப் போக்கும்-அடிபெண்ணே
வந்தவறுமை　　நீக்கும்
ஓங்தேகாசியாமிது　　சந்திரவதிபாராய்　　(நட)

வசனம்.

பெண்ணே நமது மனக்குறைகளையெல்லாம் நீக்கும்படிக்கிந்த ஓங்தேகாசியெனுமிடத்தைத் தெரிசிப்பாயடிமாதே.

நேமமுயர்ந்த　　மாதே-அடிவேத
சாமமுணர்ப்ப　　நீதே
சாமிபயிரவனைக்　　காமினிதொழுதேமுன்　　(நட)

வசனம்.

பெண்ணேசாமமுதற் சதுர்மறையும் புகழாநின்ற நலம்படும் வழித்துணைவனாகிய வயிரவனைத் தெரிசிப்பாயடிமாதே.

அண்டமெலாம்　　மிகழ-பெண்ணேநாம்
கொண்டசிறுமை　　யகல
தண்டபாணீஸ்வரனைக்　　கண்டுபணிந்தேமுன்　　(நட)

வசனம்.

பெண்ணே நம்மைப்பார்த்து இந்தலோகத்தாரிகழும்படிக்குற்ற சிறுமையை யகற்றும்படிக் கிந்த தண்டபாணீசனைப் பணிவாயடிமாதே.

கருமமனைத்தும் நீங்கி-பெண்ணேநாம்
பெருமையுறவே யோங்கி
க்ருகைவருந்தவாசற் கருணித்தேநோக்கியேமுன்(கட)

வசனம்.

பெண்ணே நமது துன்ப மகலவிந்த சுவர்க்கவாயலெனுங் குகையைத் தெரிசிப்பாயடி மாதே.

திங்களணிந்தோன்தாக்கும்-அடிபெண்ணே
பங்கமகற்றிக் காக்கும்
கங்கையாடியேவிஸ்வ சங்கரனைப்பணிவோம்(கட)

வசனம்.

பெண்ணே பரமசிவன் சிரசிற்றங்கி லோகத்தில் பிரவேசித்தடியர்கள் பாவம் போக்காநின்ற விந்த கங்கைநதியாடி விஸ்வேசனைத் தெரிசிப்போம் வருவாயடிமாதே.

அரிச்சந்திரன் - விருத்தம்.

என்னருங்கிளியேமானே யியம்புவேஙகனியேகேளாய்.........*
வன்னமாங்காசிவந்தோம் வளம்பெறுபதிகள்கண்டோங்... ...*
சின்னமாய்வினைகளோடச் செய்யுமிக்கங்கையாடி..............*
இன்னகரோற்றும்விஸ்வ ஈசனைப்பணிவோம்வாராய்... ...... ...*

வசனம்.

கேளாய்பெண்ணே யிந்த கங்கையில் ஸ்நானஞ்செய்து காசிவிஸ்வலிங்கத்தைத் தெரிசிப்போமடி பிராணநாயகி.

சந்திரமதி-வசனம்.

மகாபாக்கிய மப்படியே செய்யலாமென் பிராணநாதா.

அரிச்சந்திரன்-தரு.

பல்லவி.

ஆடவாராய் கங்கையென் கூடவாராய் - மாதே

அநுபல்லவி.

தேடரியசிவத்தோடின் னுடதனிலேமேவுந்
திவ்யபலந்தத்தரு மொவ்வமாயோங்குநதி (ஆட)



சரணங்கள்.

செய்தபாவங்களெலாங் கொய்திடுங்கங்கையிது
செப்பும்வேதங்களெலா மொப்பிப் புகழ்வதிது
சித்தங்களிப்புட னுத்தமியென்னுடன் (ஆட)

ஜெனனமரண துன்பந் தனையறுத்திடு மாதே
சீறுங்கோரங்களெலாங் குறைவிடுமேகோதே
சீரிலுயர்ந்ததாம் பாரிலமர்ந்ததாம் (ஆட)

தேவர்முனிவர்சித்தர் மூவர்பணியு மந்தத்
திகழாய்ப்பரசிவந்தான் திங்களுடனணிந்தப்
பாசவினையிருந்தாற் நாசம்புரியும்பார் (ஆட)

அரிச்சந்திரன்-விருத்தம்.

பேருறவயோத்திவிட்டே பெண்ணேயிக்காசியுற்றே...........*
சீருறுகங்கையாடி சித்தமுங்குளிர்ந்தோமாதே.......... ......*
ஆருறுங்கண்ணேநீயு மமைச்சனுஞ்சுதனுங்கூட...............*
நேருறுவாகக்காசி நேயனைப்பணிவோம்நாமே............ ......*

வசனம்.

பெண்ணே சந்திரமதி நாமயோத்தியைவிட்டு காசிவந்து இவ்வகங்கையுமாடினோ மினி நாமெல்லோருஞ் சென்று மறைவியையுதைத்த மகானுபாவனாகிய காசிவிஸ்வநாதனை தெரிசிப்போமடி பெண்ணே.

சந்திரமதி-வசனம்.

அப்படியே தெரிசிக்கலா மென் பிராணநாதா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-உசேனி-தா-ருபகம்.

காசிலிங்கமின் இருக்குதாம்-கேளாய்பெண்ணே
கண்டவர்மனக்கவலை போக்குதாம்-போவோம்வாராய் (கா)

வாசிநுனியோகந் தாக்குதாம்-தெரிசிப்போர்கரு
வறுமையெல்லாமகல நோக்குதாம்-போவோம்வாராய் (கா)

அண்டமெல்லாமொன்றாய் நின்றதாம்-கேளாய்பெண்ணே
அடியர்களிடரைக் கொன்றதாம்-போவோமவாராய் (கா)

ஒன்றிரண்டுமூன்றைக் கொய்வதாம்-கேளாய்பெண்ணே
உறுதிகொண்டோருளக் களிப்பதாம்-போவோம்வாராய் (கா)

மார்க்கண்டேயனன்று காத்ததாம்-கேளாய்பெண்ணே
மடிபணிந்தோரின்மாய்கை தீர்த்ததாம்-போவோம்வாராய் (கா)

காலனைக்காலாலுதைத்த தேவனாம்-கேளாய்பெண்ணே
கண்டவர்கருத்தருளும் பாவனாம்-போவோம்வாராய் (கா)

அமரர்க்காய்நஞ்சையன்று வுண்டதாம்-கேளாய்பெண்ணே
அபயமென்போர்க்கருளாய் நின்றதாம்-போவோம்வாராய் (கா)

ஆதியில்ஜோதியகண்ட மானதாம்-கேளாய்பெண்ணே
அந்தகவரிண்டுக்கம் போனதாம்-போவோம்வாராய் (கா)

திக்கில்லார்க்குத்தெய்வ மாகுதாம்-கேளாய்பெண்ணே
தெரிசித்தோர்மனக்குறைகள்போகுதாம்-போவோம்வாராய் (கா)

கௌசிகன்கடன்திர வேண்டியே-கேளாய்பெண்ணே
கழலடிகளைப்பணிவோந் தாண்டியே-போவோம்வாராய் (கா)

அரிச்சந்திரன்-வசனம்.

இதுதான் காசிவிஸ்வலிங்கமடி பிராணநாயகி.

அரிச்சந்திரன்-தரு-இந்துஸ்தான்பியாக்-ஆதி.

பல்லவி.

அம்பாபணியாதியே யருள்செய் த்திஜோதியே

அநுபல்லவி.

வெம்பியுடல்வருந்த வென்சதிவாடவே
வேதனைமுனிவனால் விளைந்ததுமோடவே (அ)

சரணங்கள்.

எங்குமிறை தேவனே யெளியோர்க்கருள்நாவனே
மங்கையிடப் பாகனே மாய்கைகொயுங்கோவனே
லொங்கமனம் வாட வோரமுமிலைசொலத்
அங்கவாமுனி செயுந் அபாரதவருளருள் (அ)

தக்கன்சாபம் போக்கியே தனிமதியைத்தேக்கியே
அக்கந்தயா ஞோக்கியே யடங்காபபுலிதாக்கியே



பக்கிடைத் துயிலாகப் பற்றியபொருளே
இக்கண மடியேனை யேந்தியாளருளருள் (அ)

மாயன்மதம் போகவே வயிரவனையேகவே
பாயமச்சஞ் சாகவே பற்றிமணியாகவே
நேயதேவனைக் காதத நிர்மலப்பொருளே
காயமுனைக் கடிமை காத்தருளருளருள் (அ)

முனிவன்கடன் நாடியே முனைந்திங்குற்றேன்தேடியே
தனியாய்வசை பாடியே தாகன்வாரானோடியே
இனிவேறொருவர் துணை யிங்கிலைப்பொருளே
பனிமதிசடை யாளா பாத்தருளருளருள் (அ)

அரிச்சந்திரன்-விருத்தம்.

காரணமெதென்றறிகிலேனந்தக் கவுசிகன்வலையதிற்றோய... ...*
வாரணமுலையாளிப்புறமேவ வழைவிடைமேலுறுபவனே... ...*
நாரணனயனுங்கண்டிடாவுருவே நல்லுளமெனக்குநீகனிந்தே...*
பூரணமயனேமுனிகடன்றீர்த்தெனைப்புனிதனாக்கிடவருள்புரியே.

வசனம்.

ஓபரமசிவமே நான் விஸ்வாமித்திர முனிமாய்கையிற் சிக்கிய காரணமறியேனந்த முனிநாதனின் கடனைத் தீர்த்தென்னைப் பவித்திரனாகச் செய்யும்தேவே.

சந்திரமதி-சஹானா-ரூபகம்.

அண்டபிண்டமொன்றாய் நின்றவா-ஓமஹரோஹரோஹரா
அடியார்களையடிமை கொண்டவா
குண்டலிநுனிவாசி யுத்தவா
கோறிநேருக்கரு ளளித்தவா
இரவும்பகலுமேக மானவா
எங்கண்மீதிற்கருணை யாகவா
[illegible]யர்கலின்சிர மணிந்தவா
அரவிகளாநாளும் பணிந்தவா-ஓமஹரோஹரோஹரா (அ)

தேவதாசன்-தன்யாசி-ரூபகம்.

அணுவிலணுவாக நின்றவா-ஓங்குருபரசிவா
அருமறைநாலும் புகழைக் கொண்டவா
மனுமுதலோரு மகிழ்ந்திடுஞ் சிவமே

மடியோர்க்குகின்றுநிபெருந் தவமே
ஆலவமுதாக வுண்டவா
அன்புடனிடர்திர்க்க வின்தேவா
ஜாலஞ்செய்தாளியு மையனே
சகிக்கவைமில்லை மெய்யனே-ஓங்குருபரசிவா (அ)

சத்தியகீர்த்தி-சாவேரி-ரூபகம்.

எதுக்குக்கானியென்று வந்தோம்-ஓந்திகமொளிபவா
எங்கள்குறைதீர்த்திடப் பணிந்தோம்
பாதுகாத்தெர்கலை நீயுமே
பக்ஷம்வைத்துன்னருளே யியுமே
உன்றனைவிடவேறு யெங்குமே
உற்றதுணையடியோ மிக்குமே
சந்திரனைச்சடையி லிட்டவா
சரணமெங்களையின்று கிட்டவா-ஓந்திகமொளிபவா (ஏ)

அரிச்சந்திரன்-தேவாரம்.

ஆதியாயருநாகி யடிமுடிநடுவுமாகிச்
சோதியாயக்கினிக்கெண்றே சோரமலெங்குமாகி
வேதியாய்விரும்புவோரின் வினைதீர்க்கவோனுனைக்
கோதிலாவிஸ்வநாதா குறைதீரவருள்செய்வாயே.

சந்திரமதி-தேவாரம்.

நாகபூஷணனேயோக நாதனேஉமையாள்மேவும்
போகநாயகனேஞானப் புநிதனேகாசிநாதா
ஆகமவிதியாலின் றடிதொழுவதியேவிப்போ
வேகமேயெனையாட்கொண்டே வினைதீரவருள்செய்வாயே.

தேவதாசன்-தேவாரம்.

அரிஅயன்தேடிக்காணு வன்பனேகைலவாசா
கரியுரித்தோனேயர்நக் காலனையுதைத்தபாதா
விரிசடைமதியுங்கங்கை விளங்கிடத்தரித்தோய்நின்பால்
ஆரியநூல்விஸ்வநாதா வுன்னைப்வைத்தருள்செய்வாயே

சத்தியகீர்த்தி-தேவாரம்.

அமரர்கள்வாழவன்று ஆலத்தைவமுதாய்க்கொண்டோய்
குமரனையளித்தேதேவர் கொடுந்துறைபறக்கச்செய்தோய்

அரிச்சந்திரவிலாசம்.

சமரச்சராசரத்திற சார்ந்துமேபரவினின்றோய்
தமாகன்விஸ்வாமித்ரன் தன்குறைவிலக்குவாயே.

அரிச்சந்திரன்- தேவாரம்.

முப்புரமெரித்தகண்ணு முனிவர்கள்பணியுமன்னு
இப்பிறப்பதனிற்கொண்ட விடாகன்றிடவேநான்றுன்
கைப்பொருளியாதுங்காணேன் கடன்திரவகைகாட்டிச்
செப்பிடவேண்டுங்காசி சிலனேநமசிவாயா

அரிச்சந்திரன்-அகவல்.

சிவசிவசிவமே சீருட்தவமே
தவமுனிவோர்பணி தனிமன்றுகவே
அம்புலிகங்கைய மணிசடையாளா
சம்புவேதின சர்ச்சனத்தாளா
திரிபுரதகனு தெளியுளவேதா
அரியயனறியா யழகுளபாதா
மான்மழுவேந்தும் மலர்காத்தயா
தேன்மொழியுமைசேர் இன்புயநேயா
எமனையுதைத்த யென்றுணைபாதா
காமனைக்களிக்க நாடினேனிதா
பேதைநான்கொண்ட பெருந்துயர்கேட்பாய்க்
கோதையும்பாலனுங் கோனிடாமந்திரியும்
மனமதுகனிந்தே மாமுனிதனக்கே
கனமுளவாசை களிப்புடனளித்தோங்
தானமாயிந்த தனிப்பொருடாவென
மோனனுங்கேட்க முதையேயடியேன்
கடனைத்தீர்க்கக் காசியாயிங்கே
தடமதுவைத்தேன் தயாபராநங்கை
வருகிறவழியில் வருத்திடவிஷங்கள்
உருகுமண்மீதில் உறுத்திடப்பதங்கள்
பூதமுந்தூரத்த பொரியனல்மிரட்ட
வேதனைமிருகம் விஷப்புழுவிரட்ட
பனியதுபெய்யப் பதரிடவிடிகான்
இனிவிலாக்காட்டா றொய்திடமனந்தான்
மெத்தவும்பயந்தே மேவியுங்குறுகி

அந்தணனேயுன்னடி யண்டினேமறுகி
இக்கடன்றீர்க்கவே யென்னுவாய்நீயே
கஷ்திஷத்தாகனுல் களிப்புறேன்சேயே
முனியவன்மெத்த முஷ்கரம்புரிந்தால்
கனிவுளமனத்தோய் காருமுன்னருளால்
சத்தியம்விலக்க சம்புவேசரணம்
நத்திபேயுன்மனம் நாட்டுவாய்சரணம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

மான்மழுதரித்தோய்காசி மகாநகர்விஸ்வநாதா
வேன்புறுவடிக்கேதொண்டு விரும்பியேவந்தோம்வேதா
நான்முகன்களிக்கப்பாவி நாடியேமுனிதான்செய்யுந்
தேனடாத்துயர்தவிர்த்தே திருவருள்தந்தாள்வாயே.

வசனம்.

ஓ காசிநாதனே, எங்களுக்கிந்த விதிவிதித்த பிரமன் மனமகிழ கௌசிகமுனிசெய்யுந் துன்பத்தைநீக்கி ரட்சிக்கவேண்டும் விஸ்வநாதா.

சந்திரமதி-விருத்தம்.

எப்புவித்துறுக்களெல்லா மீன்றதோரம்பர்போற்றி
செப்புறுஞ்சுடலைதன்னில் சிறுநடிநடித்தாய்போற்றி
முப்புரமன்றெரித்த முக்கணன்மகிழ்வேபோற்றி
வெப்புறுங்கவலைநீக்கி வேணதையளிப்பாய்தாயே.

வசனம்.

அம்பாதிரிபுராந்தகத்தாண்டவி, அரம்பாலொக்குந்தேவி அடியாள்கோரிக்கையை யளித்தருள்வா யம்மணி.

தேவதாசன்-விருத்தம்.

காலனையுதைத்தபாதா கைலைவாழ்மருவேபோற்றி
வேலனையளித்தகோவே வெமவிபின்பாகாபோற்றி
சீலமேதரியேனிதா சேவடிபணிந்தேன்போற்றி
பாலனைவருத்தமின்றி பாலிப்பாய்தேவேபோற்றி.



வசனம்.

சுவாமி காலனையுதைத்தபாதனே பாலனைக்காருந்தேவனே.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

மதிசடையணிந்தேகையில் மான்மழுதரித்தோய்போற்றி
சதிபுரிவிஸ்வாமித்திரன் சார்படையறுப்பாய்போற்றி
விதிதனைத்தடுக்கவன்று வேண்டியேபாலனுக்காய்
ததிம்பிடவுதிரங்காலன் றன்னையேயுதைத்தோய்போற்றி.

வசனம்.

ஓபரமசிவமே யாதொரு துன்பமும் விஸ்வாமித்திரனுல் வாராதபடிக்கு யாண்டருள்வாய்நாதனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எந்திளமயிலேபாலா வினிவுளசத்தியகீர்த்தி
நந்தியைத்தொழுவீர்ஞானம் நாடிடவையனின்றத்
தந்திமாமுகனுமந்த தயாபரன்குகனையேற்றிச்
செந்திருமாலுமற்ற சிததரைப்பணிவீர்தாமே.

வசனம்.

பெண்மணி சந்திரமதி, அப்பாமகனே, மந்திரிசத்தியகீர்த்தி முதல்நந்தியைத்தொழுது மூலாதாரனுகிய கணபதியையும் ஞானமூர்த்தியாகிய வேலாயுதக்கடவுளையும் திருப்பாற்கடலிற்றுயின்றமாயனையும் மற்று மிங்குள வடியார்களையும் பணிவீர்கள்.

பொது-வசனம்.

அப்படியே பணிந்தோ மெங்கள் கோவே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தன்னிகருவமையில்லாத் தாளுவைப்பணிந்தோமாதே
நன்னகரிருக்குமநேர்ப்பும் நாட்டில்கீர்வளமுங்காண்போம்
உன்னதமாகவாழு முத்தமர்தமையுங்கண்டே
என்னருங்கருமந்திர வேற்பாடுஞ்செய்வோம்வாராய்.

வசனம்.

பெண்ணேசந்திரமதி, காசிநகரனைத்தெரிசித்தோமினிநாட்டைப்பார்த்து நாம்வந்தகருத்திதே தவென்றுபயேவம்பாடுபுரிவோம் வாராய்மாதே.

சந்திரமதி-வசனம்.

அப்படியேவருகின்றேனென்பிராணநாதா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-கெண்டா-சாப்பு.

வித்தைபுத்திதருஞ் சித்திவிநாயகன் விதியிதுபெண்ணே
வேண்டிநம்மையாளும் காசியில் வேசன்வாழ் விதியதுபெண்ணே
அத்திசிவகாமி காளியம்மையின் விதியதுபெண்ணே
அருமையுளவேதமோதும் மந்தணர் விதியிதுபெண்ணே(௧)

வெற்றியா யறங்கடத்தும் வேளாளர் விதியிதுபெண்ணே
வென்றடக் குரனைவதைத்த வேலவன் விதியதுபெண்ணே
எத்திசையும் புகழ்கொண்ட விறையவா விதியிதுபெண்ணே
எழிலுறுங்வைசியர்வாழு மின்புள விதியதுபெண்ணே(௨)

பற்றறப் பணிகள்செயும் பஞ்சமர் விதியிதுபெண்ணே
பாரினில்பான் மக்களும் பாமரர் விதியதுபெண்ணே
நற்றவேசர்களை புரியும் நாயக்கர்கள் விதியிதுபெண்ணே
நாட்டியஞ்செய் வேசியர்கள் நாளும்வாழ் விதியதுபெண்ணே(௩)

சச்சையிலே சேணியர்கள் காயிடும் விதியிதுபெண்ணே
சங்கரர்க்கு ... கைத்தொழில் விதியதுபெண்ணே
பச்சைக்கிளி மேவுமெழில் பதினாறு பாரபெண்ணே
பண்புடன்நம்நோக்கொண்டபதிதிப்போம்வாராய்பெண்ணே()

அரிச்சந்திரன்-விருத்தம்.

இதமிலதான்கும் தெரிசிக்கும்பெயுணர்ந்தாய்... ...... ..... *
போதமினிதாகமேகான் புகழுமெனவார்த்தைகேளாய்................*
வேதமோப்பதிதனிக்க வேண்டியிம்மண்டபத்தில்......... .......*
நாதனைச்சரண பற்செய்வோம் வருந்தியேயுனதிசைவ்வே........*



வசனம்.

நமதுபரியைப்போக்க விந்தச் சத்திரத்தில் தங்கி சமையல் செய்ய வுமது கருத்தை வெளியிடுவீர்சுவாமி.

தாகன்-வசனம்.

மகாசந்தோஷ மப்படியே செய்யலாமப்பா வேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்றுடனியுந்நுவப யேத்திட வென்னைவந்த...... ..........*
பன்னருங்குணந்தோய்மந்திரி பகருவெனினிவாய்க்கேளாய்... *
இன்னகர்வாழ்வோர்தம்பா லீர்ந்துநீவெனவிதல்லாம்..........*
நன்னலாய்க்கொணர்வையாகி லும்பசிதனி ப்பேர்மப்பா... ...*

வசனம்.

கேளாயப்பா சத்தியகீர்த்தி நமது யுயாரின் பசிதீருமபடி இந்த நாட்டிலுள்ளவர்களிடஞ் சென்று யெதாகிலு மிரந்துகொண்டு வருவாய்மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஐயனேயாசேசீரு மடியனைக்கருதியிங்கு.......... ...... ......*
மெய்யனேயன்பாய்ச்சொன்ன மொழியுமொழிபோலசென்று*
துய்யனேநகரிலுள்ள தூய்மையாமனத்தோர்தம்பால்... ... ...*
கையலதீட்டித்தாளய் கடிதியேவாரங்கிலாயோன்... ...... ......*

வசனம்.

சுவாமி தங்களுத்திரவின்படி யாசித்து சீக்கிரம் வருகின்றேன் தாகனே பத்திரமாய்ப் பாதுகாத்துக்கொள்வீர் வேந்தே.

சத்தியகீர்த்தி-தரு-முகாரி-ஆதி.

பல்லவி.

என்னைவிதிவிதித்தாய் மெய்யா-என்
னிறையவன்வாழ்வைக் கெடுத்தாய் ஐயயா

அநுபல்லவி.

மன்னனாகிமுந்து மாமுனிகடனேத்தாங்கி
மாதுடன்பாலனு மறையோன்றுயராலேங்கி (எ)

சரணங்கள்.

பத்தினிமுகம்வாடிப் பதறியயர்ந்தேசோர
பாலன்பசியால்வெம்பி பருவாய்மனம்வேசார
நத்தித்தர்காய்வந்த நயமிலான்வருத்திட
நாயன்மனங்குழைய நான்பாவிகருத்திட (எ)

அண்டமூரடிமட்டும் யாசன்றன்கீர்த்திபொங்க
ஆதலர்வேதியர்க்கு மளித்தார்திகழ்தக்க
கொண்டபெருமையாவுங் குலையவிடுத்தாயுன்றன்
கூற்றுமுசலியஞ்செயுங் கோனோவறியேனெந்தன் (எ)

என்னமிடிவந்தாலு மிசாசீகதிவென்று
எண்ணமிசங்குற்றேமே மிரங்குவாய்மனமின்று
பன்னகபூஷணுப் பார்வதிகளிலோலா
பாவந்துலைத்தெங்களை பாலிப்பாய்குணசீலா (எ)

பொது-விருத்தம்.

மந்திரியரசன்சொன்ன வாக்கினைசிரமேற்கொண்டு... ... ......*
நந்தியைவிடையாய்க்கொண்ட நாதனைநோக்கிநொந்து... ... ...*
கந்திகள்சோகுமூலை கப்பியகாசிநாட்டில்...... ...... ........*
புந்தியிலுயர்ந்தோர்தம்பால் போயினனிரக்கத்தானே...... ...*

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரமாக சத்தியகீர்த்தி தன்னுடைய அரசனுக்கு நேரிட்ட மிடியைக்குறித்து மெத்தவும் கிலேசப்பட்டுக்கொண்டு காசியில்வாழுஞ் சதாபர்த்திகளிடம் வந்து யாசகங்கேட்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

காசியில்வாழுந்தர்மக் கையனேயுனைப்பேணியத்
தேசிகாஙிங்குவந்தோம் திவ்வியாபசிதணிக்க



யோசித்தோமானுற்கையி லுதவிடப்பொருளுமில்லோம்.
தேசிகாகளையைப்போ தீர்த்திடவருள்செய்வாயே.

வசனம்.

சுவாமி நாங்களன்னிய தேசவாசிக ளிங்குவந்தோம் மெத்தவும் பசியால் வாடினோந் தணிக்க யேதாகிலு முதவிசெய்யவேண்டுந் தர்மவானே.

சோமாஜி-விருத்தம்.

ஆரப்பாநீதானிங்கு யடைந்திடவிதிதானேதோ
கூரப்பாநாடுன்பேருங் கூடவந்தவர்களியாரோ
நேரவேயெனக்கேசொன்னால் தெளிவுடனளிப்பேனுண்டி
தீரவேகூறிபாதைத் தீவரமதனிற்றானே.

வசனம்.

அப்பாநீயார் ஊரென்ன வெந்தனைபோர்வந்திர்க ளிங்குவரக்காரணமென்ன தெரியச்சொன்னால் போஜனத்திற்கு வேண்டியதைக் கொடுக்கிறேனப்பா.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

இதற்குவடமூலை நானிருக்குந்தேச
மெளியோனு மெஜமானுந் தேவிபாலன்
சதற்கொளரசதனையுமே தாரைவார்த்தே
சாமிமுனி கடன்தீர்க்கப் பொருளைவேண்டி
விதற்பருள வின்னகரி லடையவேதான்
விரும்பியே தாகனுடன் விளங்கிவந்தோம்
கதிர்குலனை மண்டபத்தே யிருத்தித்தானக்
கையனேயிங்குற்றேன் காண்பாய்போற்றி.

வசனம்.

சுவாமி நாங்களிருப்பது இதற்குவடக்கு ரவிகுலத்தார் கஜனுமெஜமானு மவர்தேவியும் பாலனுந் தாகனும் வந்தோம் அவாகள் சத்திரத்திலிருக்கிறார்கள் முனிவன் கடனைத்தீர்க்க விங்குவந்தேனுஞ்சுவாமி.

### சோமாஜி-விருத்தம்.

இன்னைகர்தனிலேமெத்த விருக்கிறார்தனத்தில்மிக்கோர்
தன்னிடஞ்செல்லவையாகிற் றனிவார்தடையிராது
உன்னிடபசியுமற்று முனாநால்வர்களிக்கப்பாறு
அன்னியநெய்யும்வெல்லக் கோதுமைசமையுங்கொள்ளே.

### வசனம்.

அப்பாவிந்தக்காசியி லனேகதனவான்களிருக்கிறார்கள் வேண்டிய பொருளுதவி செய்வார்க ளிதோ வுங்களாக்கு பெருக்கும் வேண்டிய கோதுமை நெய்யும் பாலும் வெல்லம் நெய்முதலானதுங் கொள்வாயப்பா.

### சோமாஜி-வசனம்.

அப்பா சமயல் வர்க்கத்துக்குரிய வெரிகரும்பு இலை பாத்திரங்கள் முதலானதுங் கொடுத்தேன் நீங்கள் போசனஞ்செய்த பின்பிந்த ஆளின்வசங் கொடுத்தனுப்பினு லெனக்கு வந்துசேருமறிவாயப்பா.

### சத்தியகீர்த்தி- வசனம்.

வாழிவாழி நான்போய்வருகின்றேன் சுவாமி.

### சத்தியகீர்த்தி- வசனம்.

இந்தக்காசியில் வாழுஞ் சோமாஜியிடத்தில் சமயலுக்குரியதைப் பெற்றுவந்தேனாண்டவனே.

### அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி மந்திரிகொண்டுவந்ததையெல்லாஞ் சீக்கிரத்தில் சமயல்செய்து தாகர் திருப்தியாகும்படி சாதிப்பாயடிமானே.

### சந்திரமதி-வசனம்.

இதோ யடியாளுஞ் சீக்கிரத்தில் சமைத்து தங்களுத்திரவின்படி ஐயருக்குச் சாதிக்கின்றேன் பிராணநாதா.



### சந்திரமதி-தரு-நாதநாமக்கிரியை-சாப்பு.

### பல்லவி.

சமையல்செய்கின்றேன்-தாதியைப்போல
சமையல்செய்கின்றேன்.

### அநுபல்லவி.

நிலைதனிற்றாகன்றன் நீள்பசிதணித்திட (ச)

### சரணங்கள்.

அடுப்பைக்கூட்டித்தீயிட்டு யக்கினிபூஜைபண்ணி
துடுப்புக்கைக்கோலத்தாங்கி தோகைவிதியைநண்ணி (ச)

உலைதான்கொதியெழும்ப வோங்கிநொய்யதைத்தூவி
நிலைதான்றெரிந்தேபாலை நேராயதினுள்பாவி (ச)

பாலுநும்பாயசத்தைப் பண்பாய்முடித்தேனுனே
மேலுமப்பங்கடனை மெதுவாய்சமைத்திட்டேனே (ச)

### சந்திரமதி-கவி.

ஐயரோநக்ஷத்திரேச அன்பரேசமையலாச்சு
வெய்யமுன்பசியைநீக்க வேண்டினேன்வருகுவீரே.

### வசனம்.

சுவாமி தாகரே, சமையலாச்சுது போஜனத்திற் கெழுந்து வாருந்தேவனே.

### தாகன்-வசனம்.

மகாசந்தோஷம் இராஜனையும் பாலையுந் தடியனையு மொருமிக்க யழைப்பாயம்மா சந்திரமதி.

### சந்திரமதி-விருத்தம்.

என்னருங்கோவேபாலா வினிமொழிமந்திரிகேளாய்
நன்னியபடியேபாகம் நானுமேவிரைவிற்செய்தேன்
உன்னதவையர்தானு முங்களைவழைக்கச்சொன்னார்
வன்னமாயெழுந்திருந்தே வருகுவீர்புசிக்கத்தானே.

வசனம்.

கேளுமென்பிராணநாதா சமையலாச்சுது பசிதீர்க்க ஐய ரழைக்கிறார் நீரும்பாலனும் மந்திரியும் வருவீர்கள்.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேவருகின்றே னென்பிராணநாயகி.

சந்திரமதி-வசனம்.

சுவாமி தாகரே இதோவெல்லோருமவாந்தாகள தங்களு க்குவேண்டியவைகள் வட்டித்திருக்கிறேன் புசிப்பீர் வேதியரே.

தாகன்-விருத்தம்.

இவ்விதவுண்வையானு மெப்பவுங்கண்டதில்லை
செவ்விளவதனுள்மெத்த தீக்கிரந்தனிலேபாவில்
கொவ்வையுமடைபாயாசங்கொப்பெனமுடித்தாளுண்டே
கவ்வியபசிதணிந்தேன் காசிவாழ்விஸ்வநாதா.

வசனம்.

காசிநாதனே, இவ்விதமானவுண்டி நானெப்பவும்புசித்த யேன்வெகுநேத்தி வெகுநேத்தி சமையல்செய்வதில்சந்திரமதிய மனே தெளிந்தவளென்றறிந்தேன்.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி யெங்கள் பசிதீர்ந்தது நீயும் போ ஊஞ்செய்து மீந்ததையிந்த ஆளுக்கிட்டுயனுப்புவாய்மாதரசே.

சந்திரமதி-வசனம்.

அப்படியே செய்கின்றே னென்பிராணநாதா.

சந்திரமதி-வசனம்.

அப்பாயிதில் மீந்திருப்பதை நீபுசித்து பாக்கிரங்… வய ல்லா முனதுயெஜமானிட மெங்கள் வந்தனத்துடன் செலுத்துவா யப்பா சேவகனே.

சேவகன்-வசனம்.

மகாபாக்கிய மப்படியே செய்கின்றேன் தாயே.